# நெபோலியன்

OFFICE OF THE ...
2 FEB 1954

இஃது

சேலம் காலேஜ் பிரின்சிபால்

அ. இராமசுவாமி கவுண்டர், M. A., L. T.,

அவர்களால் இயற்றப்பட்டது.

தருமபுரி

சஞ்சீவி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1934

All Rights Reserved.]

[விலை ரூ. 1

77382
+7382
V52
N34
3498
922.945

# முகவுரை.

பெரியோர்களின் சரித்திரங்களைப் படிப்பதன் மூலமாக அரும்பெரும் விஷயங்களை எளிதில் அறியக்கூடும் என்பது எல்லோராலும் ஒப்பமுடிந்த தொன்றாம். ஆதலால், சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவின் முடிமன்னர்களை நடுங்கச் செய்தவனும், சுயாட்சி உணர்ச்சியையும் சமத்துவக் கொள்கையினையும் உலகெங்கும் பரவச் செய்தவனுமாகிய நெபோலியனது சரித்திரத்தை எழுதலானேன். மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படுமாறு எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இப்புத்தகத்தைத் தமிழ்மக்கள் ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன். அச்சுப்பிரதிகளை அவ்வப்போது திருத்தித் தந்த நண்பர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

சேலம்,
7—1—34.

அ. இ.

# பொருளடக்கம்.


| அத்தி யாயம் | விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | இளமையும் கல்வியும் | ... | ... | 1 |
| 2. | புகழின் தொடக்கம் | ... | ... | 14 |
| 3. | குடியரசும் கடிமணமும் | ... | ... | 30 |
| 4. | இதாலிய வெற்றி | ... | ... | 37 |
| 5. | எகிப்து யாத்திரை | ... | ... | 52 |
| 6. | புதிய அரசாங்கம் | ... | ... | 67 |
| 7. | நாட்டின் அமைதி | ... | ... | 79 |
| 8. | போப்லான் பாசறை | ... | ... | 88 |
| 9. | பகைவரின் சீற்றமும் பிரான்சின் ஏற்றமும் | | ... | 101 |
| 10. | மனைவியைப் பிரிதலும் மறுமணம் புரிதலும் | | ... | 115 |
| 11. | ருஷியா யுத்தமும் லீப்சிக் தோல்வியும் | | ... | 127 |
| 12. | வீழ்வலி ... | ... | ... | 138 |
| 13. | எல்பா வாசமும் பாரிஸ் பிரவேசமும் | | ... | 159 |
| 14. | வாடர்லூ யுத்தம் ... | ... | ... | 174 |
| 15. | செண்ட் ஹெலினா | ... | ... | 186 |
| 16. | முடிவு ... | ... | ... | 204 |

## புகைப் படங்கள்.


| | | |
|---|---|---|
| ~~நெப்போலியன்~~ | ... | ~~முகப்புப்படம் (Frontispiece)~~ |
| ஜோஸப்பைன் | ... | பக்கம் 33 |
| மேரி லூயிஸா | ... | ,, 115 |

# நெபோலியன்.

## அத்தியாயம்—1

### இளமையும் கல்வியும்.

நீர்வளமும் நிலவளமும் இயற்கை வனப்பும் பொருந்திய கார்ஸிகா என்னும் தீவு மத்திய தரைக்கடலின் நடுவிலும் பிரான்சு தேசத்திற்குச் சுமார் நூறு மைல் தூரத்திலும் உள்ளது. இத்தீவு நெடுங்காலமாய் இதாலி தேசத்து மாகாணமாய் இருந்து வந்தமையால் கார்ஸிகத் தீவினர் பழக்க வழக்கங்களிலும், நடை உடை பாவனையிலும், மொழியிலும், உருவிலும் பெரும்பாலும் இதாலியரை ஒத்திருந்தனர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த அத்தீவின் தலைநகராகிய அஜேஷியாவில் சார்லஸ் போனபார்ட்டி என்னும் வக்கீலொருவர் வசித்து வந்தார். அவர் இளமையும், அழகும், கல்வியும், சீரிய ஒழுக்கமும், மனோதிடமும் வாய்ந்தவர். பேரழகும், நற்குணமும், கல்வியும், உயர்ந்த அறிவும் வாய்ந்த லதீதா ரமோலினி என்னும் நங்கையை அவர் மணந்து உடலால் இருவரும் மனத்தால் ஒருவருமாகி இல்லறம் நடத்தி வந்தனர். கணவனது குறைந்த வருவாய்க்குத் தக்கவாறு குடும்பத்தை மேன்மையாய் நடத்தி வந்தனள். லதீதாவுக்குப் பிறந்த முதற் குழந்தைகளிரண்டும் இறந்தன. 1768-ம் ஆண்டில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஜோஸப் என்ற பெயரிட்டனர்.

இப்படியிருக்க, இத்தீவின்மீது பிரான்சுக்காரர்கள் படையெடுத்தனர். வேற்று நாட்டுப் படையெழுச்சியினின்றும் தன் தேயத்தைக் காக்கும் பொருட்டு ஜெனரல் பயோலி என்பவர் ஒரு படையைத் திரட்டினார். தேசப்பற்றும், வீரமும் வாய்ந்த பல வீரர்கள் அப்படையிற் சேர்ந்தனர். சார்லஸ் போனபார்ட்டியும் அப்படையிற் சேர்ந்து போருக்குப் புறப்பட்டனர். அப்போது கருவுற்றிருந்த லதீதாவும் கணவனுடன் காடும் மலையும் கடந்து சென்றனள். ஜெனரல் பயோலியும் சார்லஸும் சிறிய படையுடன் பல இடங்களில் போர்புரிந்தும் இறுதியில் தோல்வியுற்றனர். வேறுவழியின்மையால் கார்சிகர் பிரஞ்ச் ஆட்சிக்கு உட்பட்டனர்.

பயோலியும், அவரைச் சார்ந்த மூந்நூற்று நாற்பது தேசாபிமானிகளும் கார்சிகாவினின்றும் தப்பி இங்கிலாந்திற் குடியேறினர். ஆனால், சார்லஸ் போனபார்ட்டியோ கார்சிகாவிலேயே தங்கி பிரஞ்சு ஆட்சிக்கு அடங்கி வாழ நிச்சயித்துத் தன் மனைவியுடன் இல்லத்திற்குத் திரும்பி வந்தனர்.

1769-ம் ஆண்டில் ஆகஸ்டு மாதம் 15-தேதியன்று லதீதா கோயிலுக்குச் சென்றனள். அங்கே தெய்வ வழிபாடு நடந்து கொண்டிருந்தபோதே லதீதா வீட்டுக்குத் திரும்பிவரவேண்டியதாயிற்று. வந்த சிறிது நேரத்தில் நெப்போலியனை ஈன்றனள்.

கார்சிகத்தீவு பிரஞ்சாட்சிக்கு உட்பட்டவுடனே கவுண்ட் மார்பூ என்பவர் அதற்குக் கவர்னராக நியமிக்கப்பட்டனர். சார்லஸ் போனபார்டிக்கு வக்கீல்-தலைவர் உத்தியோகம் அளிக்கப்பட்டது. அவர் தமது திறமையினால் கவர்னரது அன்பையும் ஆதரவையும் அதி விரைவில் பெற்றனர்.

சிறு வயது முதற்கொண்டே நெப்போலியன் மௌனமாயும் தனித்திருப்பதற்குப் பிரியனாயுமிருந்தான். கட்டுக்கடங்காமையும், மனவுறுதியும், எத்தகைய துன்பங்களையும் பொறுமையாகச் சகிக்கும் தன்மையும் நெப்போலியனுக்கு இயற்கையில் அமைந்



திருந்தன. ஆயினும், நெப்போலியன் சற்று முன்கோபி. ஆனால் அக்கோபம் மனத்தில் பற்றாது கணத்திற்போம் தன்மையது.

ஐயாட்டைப் பருவத்தில் நெப்போலியனைப் பள்ளியில் வைத்தனர். இவனது அரிய குணங்கள் எல்லாருள்ளத்தையும் கவரச்செய்தன. இவனது மனவன்மையையும், வாக்கின் திறத்தையும், ஆழ்ந்த கருத்தையும் கண்ணுற்ற கவர்னர் வியப்படைந்து ஆசி கூறினர். "வயதில் இளையவன் எனினும் இவனே குடும்பத் தலைவனாகுவன்" என்றனர் ஒருவர். இவனிடத்துத் தாய் தந்தையர்களுக்கு மிக்க அன்பு இருந்தது.

மற்றைப் பிள்ளைகள் விளையாடும்போது இவன் தனியிடம் சென்று ஆழ்ந்து சிந்தித்திருப்பான். பரந்த கடலையும், அகன்ற ஆகாயத்தையும் கண்டு ஆழ்ந்த சிந்தையில் அமர்ந்திருப்பான். எப்போதும் புத்தகமும் கையுமாக இருப்பான். தாய் தந்தையர்கள் சொல்லும் கதைகளை முழுக் கவனத்தோடு கேட்டு ஆனந்திப்பான். கார்சிகர்கள் பிரான்சுக்காரர்களுடன் போர்புரிந்ததையும், தகப்பன்பின் தாய் சென்றதையும், அக்காலத்தில் தன் தாய் தந்தையர்கள் அடைந்த துன்பத்தையும் கேட்டுப் பெருமூச்சு விட்டு மனக்கொதிப்பு அடைவான்.

ஒருநாள் உபாத்தியாயர் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை இரு பிரிவுகளாக்கி ஒன்றற்கு ரோமர்களென்றும், மற்றொன்றற்குக் கார்த்தீஜினியரென்றும் பெயரிட்டு ஓர் போலிச்சண்டையை நடத்திக்காட்டுமாறு கட்டளையிட்டனர். ஜோஸப் ரோமர் கட்சியிலும், நெப்போலியன் மற்றொரு கட்சியிலும் வகுக்கப்பட்டனர். தோல்வியுறும் கட்சியில் தான் நடிக்க நேர்ந்ததை யுணர்ந்த நெப்போலியன் பெருமூச்செறிந்து, துன்பமுற்றுப் புலம்பினான். இதைக்கண்ட ஜோஸப்புக்கு மனமிரங்கிற்று. உடனே இருவரும் கட்சி மாறிக் கதையை நடித்தனர்.

பிள்ளைகளை வளர்ப்பதில் லிதிசா மிகவும் தேர்ச்சி பெற்றவள். சிறந்த ஒழுக்கத்தையும், உயர்ந்த நோக்கத்தையும் பிள்ளைகட்கு ஊட்டிவந்தனள். உண்மையுரைத்தல், பெரியோர்க்குக் கீழ்ப்படிதல், நன்னடக்கை, எளியார்மாட்டிரக்கம் முதலிய குணங்களைப் பிள்ளைகளின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிய வைத்தனள். தவறிழைத்தவர்களைத் தக்கவாறு ஒறுத்தலில் சிறிதும் தவறாதவள். நெபோலியனது அரிய குணங்களுக்கும், அவன் பின்னால் அடைந்த பதவிக்கும் அவனது தாயே முதற் காரணம் எனினும் மிகையன்று.

நெபோலியனுக்குத் தாய்மாமன் ஒருவர் இருந்தார். அவர் செல்வரெனினும் உலோபகுணமுடையவர். நெபோலியனும், அவனது உடன் பிறந்தார்களும் அவரிடத்துச் செலவுக்குப் பணம் கேட்பது வழக்கம். அதற்கு அவர், "பிள்ளைகளே, எனக்கு நிலமும், ஆடு மாடுகளும் அதிகமிருப்பினும் என்னிடம் பணம் என்பதே கிடையாது" எனப் பதிலளித்து வந்தார். ஒருநாள் ஓரிடத்தில் பணமூட்டை யொன்று மறைத்து வைத்திருந்ததைக் கண்ட பிள்ளைகள் ஒன்றுசேர்ந்து ஒரு சூழ்ச்சி புரியத் தீர்மானித்தனர். நெபோலியனது தங்கை பாலின் என்பவள் சிறு குழந்தையாதலால் அச்சூழ்ச்சியின் கருத்தை அறிந்திலள் எனினும் நெபோலியன் கட்டளைப்படியே நடக்கச் சம்மதித்தாள். மறுநாள் நெபோலியனும் ஜோஸப்பும் மாமனிடம் சென்று பணம் சிறிது வேண்டினர். அக்கிழவர் வழக்கம் போல் தமது வறுமையைக் கூறினர். அத்தருணத்தில் பாலின் என்னும் சிறுமி அப்பண மூட்டையைக் கீழே தள்ளவே அதிலுள்ள நாணயங்களெல்லாம் தரையில் உருண்டு சென்றன. கிழவர்க்கு ஆற்றொணாச்சீற்றம் பிறந்தது. அச்சமயம் நெபோலியனது தாயார் அவ்விடம் வந்தாள். நடந்தவற்றை யுடனே யுணர்ந்து சிதறிய நாணயங்களை யெடுத்துப் பைக்குள் போடும்படி பிள்ளைகட்குக் கட்டளையிட்டனள்.

கூந்தல் வனப்புள்ள ஒரு சிறுமி நெபோலியனுடன் கல்வி பயின்று வந்தாள். இருவரும் ஒருவரையொருவர் மெய்யன்புடன்



நேசித்தனர். இச்சிறுமியின் மீதிருந்த அன்பினால் நெபோலியன் ஏனைய பிள்ளைகளுடன் விளையாடுவதையும் விடுத்தான். பள்ளிக்குச் செல்லும்போதும், திரும்பி வரும்போதும் இருவரும் கைகோர்த்து இணைபிரியாதிருந்தமையால் மற்றைப் பிள்ளைகள் இவர்களை ஏளனம் செய்ய ஆரம்பித்தனர். நெபோலியன் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது அப்பாலிகையுடன் அளவளாவி வந்தான். ஏளனம் வரம்பு கடந்து போகுங்கால் கைக்குக் கிடைத்ததனைப் பகைவர்மேலெறிந்து அவர்களைத் துணிவொடும் தாக்குவான். உருவினும், வயதினும் பெரிய பிள்ளைகள் அஞ்சி ஓடிய பிறகு நெபோலியன் அச்சிறுமியின் கையைப் பிடித்துக் கொண்டு வெற்றியுற்ற வீரன்போல் இறுமாந்து செல்வான்.

நெபோலியனுக்கு வயது பத்தாயிற்று. இவனை இராணுவத்தில் அமர்த்தவேண்டுமெனத் தகப்பனார் தீர்மானித்தார். தாயாரும் அதற்கு இசைந்தனள். கவர்னரது உதவியால் பாரிஸ் நகருக்கடுத்த ப்ரையன் என்னும் ஊரிலுள்ள இராணுவக் கலாசாலையில் நெபோலியனுக்கு இடங் கிடைத்தது. நெபோலியன் ப்ரையனுக்குப் புறப்படும்போது தாயின் பிரிவாற்றாது குழந்தைபோல் கண்ணீர் பெருக்கினான். தாயும் பல அறிவுரைகள் கூறி வழியனுப்பினாள். இதாலி மார்க்கமாய் நெபோலியன் பாரிஸ் நகரம் சென்று, வானளாவிய மாளிகைகளையும், அகன்ற வீதிகளையுங் கண்ணுற்று இராணுவக்கலாசாலை சேர்ந்தனன்.

நெபோலியனுக்குப் பிரான்சுமொழி தெரியாது. இதாலி மொழி பேசும் இவனை மற்றைப் பிள்ளைகள் அயலானென ஒதுக்கி வைத்தனர். செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும், செல்வர்களின் மைந்தர்களும், தொன்றுதொட்டு இராணுவ வம்சத்தைச் சேர்ந்தவர்களின் மக்களுமே அச்சாலையிற் பயின்று வந்தனர். அப்பிள்ளைகள், பணத்தை வீண்வழியில் செலவு செய்து வந்ததுமல்லாமல் தம்மினும் தாழ்ந்தவரை ஏளனம் செய்தும் வந்தனர். நெபோலியனது சிறப்பினை

ஆடையையும், வறுமையையுங்கண்டு மற்றவர்கள் நகைத்தார்கள். நெபோலியனது மனம் புண்பட்டது. ஆனால் பொறுமையோடு சகித்துவந்தான். இது முதற்கொண்டே செல்வர்கள்மீது நெபோலியற்கு ஒருவித மனவேற்றுமையுண்டாயது. மனிதரது நிறத்தைக் கவனியாது அற்பமாகிய பிறப்பின் காரணமாகவே பதவிகள் அளிக்கப்பட்டு வந்த அக்காலத்து வழக்கினை அடியோடு ஒழித்தலையே தனது நோக்கமாகக் கொண்டான். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா அவரவர் திறமையினால் என்பதே அவனது வாழ்க்கைக்குரிய கொள்கைகளிற் சிறந்ததாயிற்று.

இத்தகைய வுணர்ச்சி யுண்டாயபின் ஏனைய மாணவர்களுடன் கலந்துகொள்ளாமல் இரவும் பகலும் புத்தகமுங் கையுமாயிருக்கத் தொடங்கினான். மற்ற மாணவர்கள் விளையாட்டிலும் அற்ப விநோதங்களிலும் காலத்தை வீணாக்கி வருகையில் நெபோலியன் மிகுந்த முயற்சியுடன் இளைப்பின்றி உழைத்து வந்தான். சிறிது காலத்திற்குள் படிப்பில் முதன்மை பெற்று விளங்கினான். அவனது திறமையை எல்லாரும் பாராட்டினார்கள். கணிதம், சரித்திரம், விஞ்ஞான சாத்திரம், பூகோளம், இலக்கியம், அரசியல்சாத்திரம் முதலிய பல துறைகளிலும் அறிவுடையானென மதிக்கப்பட்டான். மிகு விரைவாகக் கல்வி கற்றனன். ஒழிந்த நேரங்களில் புத்தகாலயஞ்சென்று வீர புருடரின் சரித்திரத்தையும், அவர்களது திறமைகளையும் படித்து அகமகிழ்ந்தான். இராஜ்யங்களின் உயர்ச்சியையுந் தாழ்ச்சியையும் எண்ணியெண்ணிப் பெருமூச்செறிந்தான். புத்தகாலயத்துள்ள பல அரிய புத்தகங்களைப் படித்துணர்ந்தான். கல்லாத நாளெல்லாம் பிறவா நாளே என்னும் கொள்கையோடு சிறந்த கவிஞர்களின் பாடல்களைப் பன்முறையும் படித்துவந்தான். "கத்தியின் துணையாலும், ஹோமர் காவியத்தின் தெளிவாலும் உலகத்தை யான் ஆட்டவல்லேன்" என்று தாயாருக்குக் கடிதம் எழுதினான்.



ஜெர்மன் மொழியில் மாத்திரம் நெபோலியனுக்குப் போதிய ஞானம் உண்டாகவேயில்லை. ஆதலால் அப்பண்டிதர்க்கு நெபோலியன்மீது நன்மதிப்பில்லாமலிருந்தது. ஒரு நாள் பண்டிதரது வகுப்புக்கு நெபோலியன் போகவில்லை. அதையுணர்ந்த பண்டிதர் "நெபோலியன் எங்கே!" என வினவினர். "நெபோலியன் கணித வகுப்பில் இருக்கிறான்" என்றனன் ஒரு மாணவன். "ஆ, அப்படியா! கணிதமாவது படிக்கிறானே!" என்றனர் அப்பண்டிதர். "ஐயா! கணிதத்தில் எல்லாரினும் மேம்பட்டு விளங்கும் நெபோலியனை நீவிர் இவ்வாறிழித்துக் கூறுவது நியாயமன்று" என்று கூறினன் மற்றொரு மாணவன். "அறிவிலியும் கணிதம் கற்கக்கூடும் என்பதே எமது அநுபவ சித்தாந்தம்" என்றுரைத்தனர் பண்டித சிகாமணி.

அக்கலாசாலையில் ஒவ்வொரு மாணவனுக்கும் சிறிது வெறு நிலம் ஒதுக்கிவைப்பது வழக்கம். அந்நிலத்தைப் பண்படுத்தலும் அல்லது காம்பாக வைத்தலும் அவனவன் பிரியத்தின் பாற்படும். ஆனால் நெபோலியன் தனது பாகத்தை ஒரு நந்தவனமாக்கிச் சுற்றிலும் முட்செடிகளையும், மரங்களையும் வேலியாக வளர்த்து நடுவே ஒரு கொடிவீடமைத்தனன். தனது தோழர்களின் தொந்தரவில்லாத வேளைகளில் அவ்விடத்தில் படித்துந் தியானித்தும் வந்தான்.

அக்காலத்தில் பிரான்சுதேசம் நாத்திகத்தில் மூழ்கியிருந்தது. கிறிஸ்துவமதம் என்பது ஒரு கட்டுக்கதையாகக் கருதப்பட்டது. பாபம், புண்ணியமென்பன மூட நம்பிக்கைகளெனவும், மரணத்திற்குப்பின் சூன்யமே மனிதன் நிலையெனவும், வாழ்க்கையென்பது நோக்கமற்றதெனவும் போதிக்கப்பட்டன. குடி மயக்கமும் சங்கீதக் கச்சேரியுமே தேசமெங்கும் தலைவிரித்தாடின. கடவுள், மதம், வாழ்க்கையென்பன பொருளற்ற புன்மொழிகளென நாத்திகம் பேசி நாத்தழும்பேறிய அக்காலத்திற்பயின்ற நெபோலியனுக்குமாத்திரம் ஜீவகாருண்யமும்

நல்லனவற்றில் விருப்பும் அல்லனவற்றில் வெறுப்பும் எவ்வாறு தோன்றினவென்பது விந்தையினும் விந்தையே. ஆனால், நெபோலியன் தன்னுயிரையும், மன்னுயிரையும் துரும்பெனவே மதித்துவந்தான். "மக்கள் தின்றும், குடித்தும், களித்தும் இன்னும் சில வாண்டுகள் உயிர்வாழ்தலினும் தேசத்தின் முன்னேற்றத்துக்காக இன்றே உயிர் நீத்தல் சாலச் சிறந்தது" என நெபோலியன் கருதினன்.

1784-ம் ஆண்டில் மழைக்காலத்தில் அதிகமான பனிக்கட்டிகள் விழுந்தன. கலாசாலையைச் சுற்றிலும் பனிக்கட்டிகள் பாறை பாறையாக உறைந்து நிறைந்தமையால் பிள்ளைகள் வெளிச்சென்று விளையாடற்கும் முடியாமற் போயிற்று. இதைக் கண்ட நெபோலியன் பனிக்கட்டிகளால் அரண் ஒன்று அமைக்க வெண்ணித் தனது தோழர்களனைவரையுந் தூண்டினன். அரணமைக்கும் ஆற்றலில் நெபோலியன் வல்லுநனாதலால் அவனது கட்டளைப்படியே முழு அரணும் முடிவுபெற்றது. அகழியும், கொத்தளமும், கைப்பிடிச் சுவரும், பாசறையும் மிக அழகாக நான்முறைப்படி அமைக்கப்பட்டமையால் அவ்வூரினர் அதைப் பார்க்குமாறு திரள் திரளாய்க் கலாசாலைக்குச் சென்றனர். பிறகு, மாணவர்களை இரு பிரிவுகளாக்கி ஒரு பிரிவினர் அரணைத் தாக்குமாறும் மற்றொரு பிரிவினர் அதனைக் காக்குமாறும் நெபோலியன் உத்தரவிட்டனன். போலிப் போர் நடந்தது. நெபோலியன் இருதிறத்தார்க்கும் அவ்வப்போது போர் முறைகளைப் புகட்டி யுதவினன். அத்தருணத்தில் சேனைத்தலைவற்குக் கீழ்ப்படியாத ஒரு மாணவனை நெபோலியன் அடித்ததனால் அம் மாணவனுக்கு நெற்றியில் உண்டாய புண்ணின் வடு அவன் ஆயுள் வரையிலும் மறையவில்லை. நெடுநாட் பின்னர் நெபோலியன் பிரான்சுதேசத்து அரசனாயிருந்தபோது அவ்வடுவுண்ட நெற்றியன் வறுமைவாய்ப்பட்டு அரசனைக் காணச் சென்றான். வாயில் காப்போன் அவனது வருகையை அரசற்குத் தெரிவித்தனன். தன்னுடன் படித்தவனென்றும், தன்னாலடிபட்டவனென்றும், வடுவுண்ட நெற்றியனென்றும் வாயில் காப்போனால் அறிந்தவுடன்



அவனை வரவேற்று, அவன் வேண்டிய வனைத்துந் தந்து அவனது வறுமைப் பிணியை நெபோலியன் அகற்றினனெனச் சொல்லப்படுகிறது.

விடுமுறைக் காலங்களில் தாயாரைப் பார்க்க நெபோலியன் கார்சிகாவுக்குப் போவது வழக்கம். அப்போது, நெபோலியன் குன்றுகளிலும் மலைச்சாரல்களிலும் காலம் கழிப்பான். பயோலியின் வீரத்தையும், ஆண்மையையும் கிராமவாசிகள் கூறப் பன்முறையும் கேட்டுவந்தமையால் நெபோலியனுக்குப் பயோலியின் மீது மிகுதியான அன்பும் மரியாதையும் உண்டாயின. ஒருநாள் மாணவர்களையெல்லாம் கலாசாலைத் தலைவர் விருந்துக்கழைத்தனர். எல்லோரும் உணவருந்துகையில் ஒரு உபாத்தியாயர் பயோலியை வெளிப்படையாய் இகழ்ந்து கூறினர். நெபோலியன் உடனே எழுந்து நின்று, "ஐயா, பயோலி என்பவர் ஒரு உத்தம புருடர். அவர் தம்நாட்டை நேசித்தவர். கார்சிகாவைப் பிரான்சு தேயத்தின் ஆட்சிக்கு உட்படுத்த இணங்கிய எனது தந்தையின் குற்றத்தை எந்நாளும் மறவேன். அஃது மன்னித்தற் பாலதுமன்று. எனது தந்தையும் அப்பெரியாரோடு இங்கிலாந்து சென்றிருக்கவேண்டும்" என்று சினத்துடன் மறுமொழி புகன்றனன்.

நெபோலியனது கையெழுத்துப் பிறரால் எளிதில் வாசிக்க முடியாதவாறு மிகவும் சிக்கலாயிருக்கும். எழுத்தாசிரியர் தம் மாலியன்றவரையிற் பாடுபட்டும் பயனின்றி முடிந்தது. நெடுங்காலம் சென்ற பிறகு, நெபோலியனும் அவனது மனைவியும் மந்திராலயத்தில் வீற்றிருந்தபோது கிழிந்த ஆடை தரித்த வயோதிகர் ஒருவர் வந்தனர். அவர், தாம் ப்ரையன் சாலையில் எழுத்தாசிரியராயிருந்தவரெனத் தெரிவித்துத் தமக்குக் கிழப்பருவத்தில் உபகாரச் சம்பளம் கொடுத்தருளவேண்டினர். நெபோலியன் கோபித்தவன்போல் பாசாங்கு செய்து, "ஆம். என்னை எழுத்துவித்தையில் வல்லுநனாக்கியதும் நீவிரன்றோ? என் எழுத்தைக் (letter) குறித்து என் மனைவியின் அபிப்பிராயத்தை நீரே கேட்டுத் தெளிவீர்" என்றனன். அருகிருந்த அன்பிற்

கிணியாள் அவ்வாசிரியரைப் பார்த்து, "ஐயா, அவர் எனக்கு எழுதும் கடிதங்கள் (letters) மகிழ்ச்சி தரத் தக்கவை என்பதை யான் உறுதியாய்ச் சொல்லுவேன்" என்றுரைத்தனள். இந்தச் சமயோசித விடையைக் கேட்டு நெபோலியன் புன்னகை காட்டி ஆசிரியர்க்கு ஆயுள் அளவும் போதுமான நன்கொடை உதவினன்.

இப்பள்ளியில் கல்வி பயின்றபோது வழக்கமாகத் தனக்குப் பாலும் பழமும் விற்றுவந்த ஒரு கிழவியை நெபோலியன் நெடுநாட்குப்பிறகு சந்தித்து, "அம்மா, பலவாண்டுகளுக்குமுன் இப்பள்ளியில் வாசித்துவந்த நெபோலியன் என்னும் சிறுவனைப் பற்றித் தங்கட்கு ஞாபகம் இருக்கிறதா?" என்றான். "ஆம்" என்றனள் அக்கிழவி. "உம்மிடம் வாங்கியவைகளுக்கு அவன் பணம் கொடுத்துவிட்டானா" என்றனன் நெபோலியன். அதற்கு அக்கிழவி, "ஆமாம். முழுப்பணத்தையும் பாக்கியில்லாது கொடுத்துவிட்டான். அதுவுமன்றி, என்னை ஏமாற்ற வெண்ணிய சிறுவர்களுக்கும் நல்லறிவு புகட்டி எனது பணத்தைக் கொடுக்கச் செய்தனன்" என்றாள். அதைக்கேட்ட நெபோலியன், "அம்மா! ஏதேனும் சிறிது பாக்கியை நெபோலியன் ஒருகால் கொடுக்க மறந்திருக்கலாம். அதற்குப் பதிலாக இதோ இப்பணமூட்டையைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்லி அக்கிழவிக் கீந்தான்.

ஒருநாள் நெபோலியன் ஒரு வியாசம் எழுதினன். அதில் குடியரசின் உண்மைகளையும், அரசவம்சத்தார் புரியும் தீமைகளையும் விளக்கி எழுதியிருந்தான். இதனைப் படித்த ஆசிரியர் நெபோலியனைத் தனிப்பட அழைத்துப் பெரிதும் கண்டித்து அவ்வியாசத்தைக் கிழித்துத் தீயிலெறிந்தனர். பலவாண்டுகட்குப்பின்னர் நெபோலியன் அரசனாயிருந்தபோது அவ்வாசிரியரைச் சந்திக்க நேர்ந்தது. ஆசிரியரோடு அன்புடனும் மரியாதையுடனும் பேசிக் கடைசியில் "ஐயா, நீவிர் எனது வியாசத்தைத்



தீக்கிரையாக்கின காலமெல்லாம் மாறிப்போயிற்று" என்று புன்சிரிப்புடன் பழைய நிகழ்ச்சியை ஆசிரியர்க்கு நினைவூட்டினான்.

நெபோலியனுக்கு வயது பதினைந்தாயிற்று. ப்ரையன் சாலையில் முதன்மையாகப் பரீட்சையில் தேறினன். பிரான்சு தேசத்துப் பன்னிரண்டு மாகாணங்களிலுமுள்ள ஒவ்வொரு இராணுவக் கலாசாலையினின்றும் முதன்மையாகத் தேறிய மூன்று பிள்ளைகளைப் பாரிஸ் நகரிலுள்ள உயர்தர இராணுவக் கலாசாலைக்கு அனுப்புவது வழக்கமாகையால் நெபோலியன் பாரிஸ் கலாசாலைக்கு அனுப்பப்பட்டான். யுத்த மந்திரியும், ப்ரையன்சாலை யாசிரியர்களும் பாரிஸ் கலாசாலைத் தலைவர்க்கு நெபோலியனைப் புகழ்ந்து பல சிபார்சுக் கடிதங்களனுப்பினார்கள்.

பாரிஸ் நகரக் கல்லூரியில் நெபோலியன் சேர்ந்தான். அக்கல்லூரியில் முந்நூறு பிள்ளைகள் கற்றுவந்தனர். ஒவ்வொரு மாணவற்கும் பணியாட்கள் இருந்தனர். அறுசுவை யுண்டியும், மெதுவான படுக்கையும் அளிக்கப்பட்டன. அத்தகைய இன்ப வாழ்க்கையில் மாணவர்கள் மகிழ்ந்து களித்தனர். போர் முனைக்குத் தயாரிக்கப்படும் மாணவர்களுக்கு அத்தகைய உயர்தர வாழ்க்கை பொருத்தமற்றதென்றுணர்ந்த நெபோலியன் உடனே கவர்னருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினன். போர்முனையில் மழை, பனி, பசி, தாகம் முதலிய அல்லல்கள் இயற்கையாதலால் அத்தகைய வாழ்க்கைக்குரிய பழக்கங்களே இராணுவச்சாலை மாணவர்க்குப் பொருத்தமானவையென்றும், போர்க்களத்தில் எங்ஙனம் போர்வீரன் தன் வேலைகளைத் தானே செய்வானோ அங்ஙனமே இராணுவச்சாலை மாணவர்களும் பல வேலைகளையுந் தாங்களே பழகவேண்டுமென்றும் அவ்விண்ணப்பத்தில் நெபோலியன் வற்புறுத்தினான்.

இவனது அரிய குணங்களும், வாக்கின் திறமும், அளவில்லாத ஞானமும் எல்லாரையுங் கவரச் செய்தன. இவனது நிபுணத் தன்மை எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது. அற்ப வேடிக்கைகளிலும், ஆடல் பாடல்களிலும் தான் கலந்துகொள்

ளாமல் ஓய்வின்றி உழைக்கும் ஆற்றலைப் பெருக்கிக்கொண்டான். ஒருநாள் மிகக் கடினமான கணக்கு ஒன்று இவன் வகுப்புக்குக் கொடுக்கப்பட்டது. அதனை ஒருவரும் சரிவரச் செய்யவில்லை. ஆனால், நெபோலியன் தன் அறைக்குள் சென்று, 72 மணி நேரம் தனித்து முயன்று கடைசியில் அக்கணக்கைப் போட்டு முடித்தானென்று சொல்லப்படுகிறது. இக்கணக்கிற்கு நெபோலியன் கணக்கு எனப் பிற்காலத்தில் பேர் வழங்கியது. இடைவிடாது நெடுநேரம் முனைந்து உழைக்கக்கூடிய அரிய வன்மை அவனுக்குண்டாயிற்று. மனமும், உடலும் அவன் ஏவற்படி இயங்கின. பசி நோக்காதும், கண் துஞ்சாதும், கருமமே கண்ணாயிருந்தான். இவன் பிற்காலத்திலடைந்த பதவியும் புகழும் தற்செயலாலாவது, கோள் வலியாலாவது, திடீரென்று வந்தனவல்ல. நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தும்படியாக இடைவிடாதுழைத்த மெய்வருத்தத்தால் கிடைத்தனவென்க. நெபோலியனுக்கு இயற்கையாகவேயிருந்த பேரறிவின் ஒளி அவனது முயற்சியால் சாலவும் விரிந்து திகழ்வதாயிற்று.

பெரியோர் யாண்டும் பெற்ற பதவிகள்
அரிதின் முயலா தடைந்தன வல்ல
பிரியா நண்பர் பிரிந்துதுயி லிரவிலும்
பெரிதும் உழைத்த பெற்றியா லென்க.

சாத்திர நிபுணர்களின் கூட்டத்துக்கு நெபோலியனைக் கலாசாலைத் தலைவர் அழைத்துப்போதல் வழக்கம். அந்நிபுணர்களுடன் நெபோலியன் வாதம் செய்தலும் வழக்கம். நெபோலியனது பரந்த ஞானத்தையும், வாக்கின் திறத்தையும், அமைதியையும், விழுமிய கருத்தையும் கண்ட நிபுணர்கள் வியப்புற்று நெபோலியனை "வாதகேசரி" என்று அழைத்தனர்.

இங்ஙனம் சிறப்புப்பெற்ற இவ்வாண்டில் நெபோலியனது தகப்பனார் இறந்தனர். அவர் இறக்கும்போது அவருக்கு ஜோஸப், நெபோலியன், லூஸியன், லூயி, ஜெரோமி, எலிஸா, பாலைன், கரோலைன் ஆகிய எட்டு மக்கள் இருந்தனர்.



அம்மக்கள் எண்மரையுங் காப்பாற்றும் சுமை லிதீஸாவின்மேல் விழுந்தது. கணவன் வைத்துப் போன பொருளும் போதுமானதன்று. இங்ஙனம் நேர்ந்த வறுமையிலும் மக்களைச் செவ்வனே வளர்த்துக் கடவுள் பக்தியையும், நல்லொழுக்கத்தையும் போதித்து அவர்களை நன்னடையிற் பழக்கி வந்தனள் அந்நங்கை. நெபோலியனுக்குத் தாயாரிடத்தில் அதிக மரியாதையும் அன்பும் இருந்தன. "சிறுவயதில் கணவனை யிழந்த என் தாய் வேறு ஆதரவில்லாமலிருந்தும் குடும்ப காரியங்களையும், மற்ற வேலைகளையும் ஒழுங்காகவும் சிக்கனமாகவும் செய்துவந்தாள். அவளுக்கு நிகரான மங்கையை உலகில் காணுதலரிது. அவளைத் தாயாகப் பெற்ற எனது பாக்கியமே பாக்கியம். பொய் வெறுத்தல், மெய்யுரைத்தல், பெரியோர்க்குக் கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்களை எமக்குக் கற்பித்து வந்தாள். சுகதுக்கங்களைச் சமமாக வெண்ணும் மனப்பான்மையு முடையவள். பல துன்பங்களையும் அமைதியோடு பொறுக்கக்கூடிய போர்வீரனைப் போன்றவள். உத்தம மங்கையர்க்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களும் அவளிடத்திருந்தன" என்று நெபோலியன் தன் தாயினைப் புகழ்ந்து பிற்காலத்தில் கூறியுள்ளான்.

# 2-வது அத்தியாயம்.

## புகழின் தொடக்கம்.

1785-ஆம் செப்டம்பர் மாதத்தில் கணிதம், பூகோளம், சரித்திரம் முதலிய பரீட்சைகளில் நெபோலியன் முதன்மை பெற்றுத் தேறினமையால் சேனையில் உபசேனாதிபதியாக நியமிக்கப்பட்டான். பதினாறாட்டைப் பருவத்திலேயே இப்பொறுப்பு வாய்ந்த பதவி பெற்றமையால் நெபோலியன் பெரிதும் மகிழ்வுற்றான். உடனே வாலன்ஸ் என்னும் நகருக்குப் புறப்பட்டு அன்றே சேனைக்குழுவிற் சேர்ந்தான். அவனது மெலிந்த உடலையும், சிறிய உருவத்தையும், இராணுவ உடுப்பையுங் கண்டு மாதர் பலர் நகைத்தனர் ஆனால், அவனது அழகிய உருவமும் மாதர் வதனமும், கூரிய கண்களும், வசீகரப் பார்வையும் இராணுவத் துள்ளவர்களைக் கவர்ந்தன.

அத்தருணத்தில் லையன்ஸ் என்னும் நகரில் கலகம் உண்டானமையால் நெபோலியன் தன் சேனையுடன் அவ்வூர்க்குச் சென்றான். நெபோலியனுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் தன்னையும், தனது விதவைத் தாயையும், அவளது ஏழு குழந்தைகளையும் காப்பாற்றுதற்குப் போதுமானதாயில்லை. வறுமைப் பிணியால் நெபோலியன் பன்முறையும் மனச் சோர்வடைந்தான். 'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்பதை நெபோலியன் உணர்ந்தான். ஆனால் விதியின் வலியினும், தனது பேராற்றலினும் நம்பிக்கையுடையவனாய்க் கற்கவேண்டியவைகளைக் கசடறக் கற்றும் கற்றவா றொழுகியும் வந்தான். இத்தகைய வறுமை நிலையில் உடல்நலங் குறைந்து நெபோலியன் பிணிவாய்ப்





பட்டு உற்றார் உறவினரின்றி ஒரு உணவுச்சாலையின் சிற்றறையிற் றங்கி இடர்ப்பட்டு வருந்தினான். அங்ஙனம் வருந்துகையில், அங்கே வந்த சீமாட்டி யொருத்தி நோயால் துன்புறும் நெபோலியனைக்கண்டு மனமிரங்கி அவனுக்குச் சிகிச்சை செய்ய முன்வந்தனள். அம்மாதின் உதவியால் சின்னாளில் சுகமெய்தினான். பின்பு, அச்சீமாட்டிக்குத் தனது நன்றியறிவைப் பலபடச் சொல்லி அவளிடம் விடைபெற்று மீண்டும் சேனையிற் சேர்ந்தான். பலவாண்டுகட்குப் பின்னர், நெபோலியன் பிரான்சு தேசத்துக்கு அரசனானதையறிந்த அவ்வுத்தமி நெபோலியனுக்கு வாழ்த்துக் கடிதம் அனுப்பினாள். அந்நிருபத்தில் அவளது வறுமை நிலைமையுங் குறிக்கப்பட்டிருந்தது. அதனைப் படித்த நெபோலியன் உடனே பதினாயிரம் பிராங்கு நாணயங்களை அவளுக்கு அனுப்பி மற்றும் வேண்டிய உதவிகளைத் தான் என்றுஞ் செய்யக் கடமைப்பட்டுள்ளதையுந் தெரிவித்தனன்.

"மனித வாழ்க்கையின் இன்பத்தைப் பெருக்கக்கூடிய இயக்கங்கள் யாவை?" என்னும் பொருளைக் குறித்துச் சிறந்ததோர் வியாசம் எழுதுவார்க்குத் தக்க பரிசளிப்பதாக லையன்ஸ் கல்லூரியார் அறிக்கை செய்தனர். பல விடங்களினின்றும் வியாசங்கள் வந்து குவிந்தன. நெபோலியனும் வியாசமொன்றெழுதியனுப்பினான். நெபோலியனது வியாசமே எல்லாவற்றினும் சிறந்ததென்று ஆன்றோரால் மதிக்கப்பட்டதனால் அவனுக்குப் பரிசு அளிக்கப்பட்டது. நெபோலியன் அரசனானபின்பு அவனை மகிழ்விக்கக் கருதிய அமைச்சன் தாலிரேண்ட் என்பவன் அவ்வியாசத்தை வரவழைத்து அரசற்குத் தந்தான். நெபோலியன் அதைப் படித்துப் பார்த்துச் "சிறு வயதில் எழுதினமையால், சாதிக்க வியலாத பல யுக்திகள் இதில் அடங்கியிருக்கின்றன" என்று சொல்லிக்கொண்டே அவ்வியாசத்தைக் கிழித்துத் தீக்கிரையாக்கினான். மேலும், கார்சிகாவின் சரித்திரம் ஒன்றை நெபோலியன் எழுதினான். அது கால வித்தியாசத்தால் அச்சுவாகன மேறிற்றில்லை. பல தேசங்களின் சரித்திரம், பூகோளம், மதம், பழக்க வழக்கங்கள் முதலியனவற்றைப் படித்துக் குறிப்பு

கள் எழுதியுள்ள நெபோலியனது கைப்பிரதிகளை இன்றும் காணலாம்.

பிரான்சுதேசத்தில் ஜனக்கட்சி, பிரபுக்கட்சியென இரண்டு கட்சிகள் உண்டாயின. பிரபுவம்சத்தினர், செல்வர்கள், தொன்றுதொட்ட பட்டதாரிகள் முதலியோர் சேர்ந்த கட்சி பிரபுகட்சியாகும். சாதாரண ஜனங்கள், விவசாயிகள், தொழிலாளர் முதலியோர் சேர்ந்த கட்சி ஜனக்கட்சியாகும். பிரான்சு தேசத்தில் இருக்கவேண்டுவது பிரபுக்கள் அதிகாரமா அல்லது பிரஜைகள் அதிகாரமா என்பதைக் குறித்துக் கலகம் பலமாக ஏற்பட்டது. நெபோலியனோ ஜனக்கட்சியை வெளிப்படையாய் ஆதரித்துவந்தான். இராணுவ உத்தியோகத்தர் பலரும் பிரபுவம்சத்தினராதலால் பிரபுக்கட்சியை ஆதரித்துவந்தனர். இதனால் இராணுவ அதிகாரிகள் பலராலும் நெபோலியன் இகழப்பட்டும், வெறுக்கப்பட்டும் வந்தான். ஆனால் சிறிதும் அஞ்சா நெஞ்சினனாகிய நெபோலியன் இக்கட்சிகளின் நிலைமைகளைக் கவனித்த வண்ணமாகவேயிருந்தான்.

ஆக்ஸோன் என்னுமிடத்தில் ஜனங்களுக்குள் பெரிய குழப்பமுண்டானமையால் அதனையடக்கும் பொருட்டு அவ்விடத்துக்குத் தனது சேனையுடன் போகுமாறு நெபோலியனுக்கு உத்தரவு கிடைத்தது. அவ்வூரில் நெபோலியனும் அவனது நண்பர்களும் ஒரு நாவிதன் வீட்டில் தங்கினார்கள். ஓய்வு நேரங்களில் நெபோலியன் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்தான். மற்றவர்கள் வீதிதோறும் அலைந்துகொண்டும், அந்நாவிதன் மனைவியினிடம் கேலி பேசிக்கொண்டும் காலங் கழித்தனர். தன்னுடன் உறவாடாத நெபோலியன்மீது அம்பட்டன் மனைவிக்கு அருவருப்புண்டாயிற்று. சிலவாண்டுகள் கழிந்த பின்னர், நெபோலியன் ஒரு பெரிய சேனையுடன் அவ்வழிச்செல்கையில் அம்பட்டன் மனைவியைக்கண்டு, "அம்மா, சிலவாண்டுகட்கு முன்னர், தங்கள் வீட்டில் சின்னாள் தங்கியிருந்த போனபார்ட்டியைப்பற்றி உமக்கு ஞாபகமிருக்கிறதா?" என்று



வினவினான். அவ்வுரை கேட்ட அம்பட்டன் மனைவி "ஆம், ஞாபக மிருக்கிறது. அவன் நட்புக்குரியவனன்று. ஓய்வு வேளைகளிலும் அறையிலமர்ந்து புத்தகமும் கையுமாக விருந்தான். ஒருவரோடும் வாயாரப் பேசும் வழக்கமில்லான்" என்றனள். இதனைக் கேட்டு நெபோலியன் புன்னகை செய்து, "தாயே, தங்களது விருப்பப்படி, எனது ஓய்வு நேரங்களை வீணாக்கியிருப்பின் இவ்வளவு சீக்கிரத்தில் இதாலிதேசத்துச் சேனைக்கு நான் தலைவனாதல் கூடுமா" என்று பதிலிறுத்தனன்.

1786-ம் வருடம் செப்டம்பர் மாதம் நெபோலியன் 21 மாதம் விடுமுறை பெற்றுக் கார்சிகாவுக்குச் சென்றான். விடுமுறை கழிந்த பின்னர் ஆக்ஸோனுக்கு வந்து இராணுவத்தில் 15 மாத காலம் வேலை பார்த்தான். மீண்டும் 18 மாத விடுமுறை பெற்றுக் கார்சிகாவுக்குச் சென்றான். அவ்விடுமுறை கழிந்தபின் மீண்டும் ஆக்ஸோனுக்குச் சென்று இராணுவத்திலமர்ந்தான். அப்போது நெபோலியன் சேனாபதியாக நியமிக்கப்பட்டான். சுமார் ஆறுமாதங் கழித்து மீண்டும் 24 மாத விடுமுறை பெற்றுக் கார்சிகாவுக்குச் சென்றான். குடும்பக் கவலைகளாலும், உடல் நலக்குறைவாலும், கட்சிக்குழப்பங்களாலும் நெபோலியன் அடிக்கடி விடுமுறை பெற்றுக் கார்சிகாவில் தங்கி வந்தான். இங்ஙனம் வருடங்கள் ஏழு கழிந்தன.

மேற்சொல்லிய ஏழு வருடங்கட்குள் பிரான்சு தேசத்தில் அரசியற் புரட்சி ஏற்பட்டுப் படிப்படியாக முடியரசழியக் குடியரசு நிறுவப்பட்டது. நெடுநாளாகப் புகைந்துகொண்டிருந்த எரிமலை 1789-ம் ஆண்டினில் அனல் கக்க ஆரம்பித்தது. அதற்குப் பல காரணங்களிருந்தன. பிரான்சுதேசத்து அரசாங்கம் ஜனங்களைப் பலவகையில் துன்புறுத்தி வந்தது. பிரபு வம்சத்தினர்களே எல்லா உரிமைகளையும் பெற்று இன்பம் துய்த்து வந்தனர். உயர்ந்த பதவிகள் உயர்குடி மக்கட்கே வாழையடி வாழையாய் வழங்கப்பட்டு வந்தன. தேச நிலமெல்லாம் பிரபுக்களுக்கே

சொந்தமாயிருந்தது. பிரபுக்களுக்கு வரி என்பதே கிடையாது. பயிரிடுங் குடிகள் பிரபுக்களுக்குப் பண்டமும் பணமுங் கொடுத்ததுமல்லாமல் அரசாங்கத்துக்கு அதிக வரியுங் கொடுக்கவேண்டியிருந்தது. இதுவுந் தவிர, இன்றியமையாத உணவுப் பொருள்களுக்கும் தீர்வைகள் விதிக்கப்பட்டன. உப்பு வரியும் விதிக்கப்பட்டது. கொடுத்த வரிகளை அதிகாரிகள் மீண்டும் வசூலித்துக் குடிமக்களைத் துன்புறுத்தினார்கள். வரிகளைக் கொடுக்கத் தவறினவரும், அரசன் உத்தரவை மீறினவரும் இரக்கமின்றித் தண்டிக்கப்பட்டனர். நிலக்காரர்களுக்கும், அரசாங்கத்திற்கும் கொடுக்கவேண்டியன கொடுத்தபின்னர் எஞ்சி நின்றது கொஞ்சமேயாதலால் பாடுபட்டுழைத்தும் பசிப்பிணியகலாது ஏழைமக்கள் வருந்தினர். தேசத்துப் பெரும்பான்மையான மக்கள் இவ்வாறு வருந்தச் சிறுபான்மையோர் அவர்களைத் தாழ்த்தியும் நசுக்கியும் இந்திரபோகம் துய்த்து வந்தனர். இதனால் வால்டேர், ரூஸோ முதலிய சுதந்தரவாதிகள் முன்வந்து, மனிதர்களனைவருக்கும் சம உரிமை உண்டென்றும், பொது ஜனங்களின் நம்பிக்கைக்குத் தகுதியான அரசாட்சியே நியாயமானதென்றும், அரசன் என்பவன் ஜனங்களின் ஊழியனென்றும், ஜனங்களே தேசத்தின் பரிபாலர்களென்றும் கூறி மக்களுக்குப் பல வகைகளில் அறிவுச் சுடர் கொளுத்தி வந்தனர். இவ்வுபதேசங்களால் அறிவு முதிர்ந்த மக்கள் அரசாங்கத்தின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் தமது உரிமைகளைப் பெறும் பொருட்டுப் புரட்சியில் இறங்கினார்.

1789-ம் ஆண்டில் ஜனங்கள் பெருங் கூட்டமாய்ச்சென்று பாஸ்டைல் சிறைச்சாலையைத் தாக்கித் தகர்த்தனர். பிரதிநிதி சபையொன்று கூடிற்று. அதில் அங்கத்தினராயிருந்தவர்களெல்லாம் அரசியல் சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தனர். பாரிஸ் நகரமெங்கும் களவும் கொலையும் மலிந்தன. அதையறிந்த கிராமவாசிகளும் தத்தம் ஊரிலுள்ள பிரபுக்களைத் தாக்கினார்கள். பாரிஸ் நகரப் பிரபுக்கள் பலர் பிரான்சினின்றும் தப்பி ஓடினர். கடைசியாக, ஜனக்கட்சியார் சொற்படியே அரசன் நடக்கச் சம்



மதித்தான். உடனே, பிரஜா உரிமைப் பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டது. சமத்துவம், சுதந்தரம், சகோதரத்துவம், முதலியவைகளை யடிப்படையாகக் கொண்ட பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பிறகு, ஜனக்கட்சியினர் சட்டசபையைக் கைப்பற்றிக் கொண்டு ஜனங்களுக்குச் சாதகமான பல திருத்தங்களையுஞ் செய்து வந்தனர்.

கோயில்களின் மானியங்களெல்லாம் அரசாங்கத்துக்குச் சேர்க்கப்பட்டன. குருமார்களுக்கும் அர்ச்சகர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட்டது. மத போதகர்களெல்லாம் அரசாங்கத்துக்கு அடங்கியவர்கள் என்ற சட்டம் ஒன்று செய்யப்பட்டது. பழைய மாகாணங்கள் கலைக்கப்பட்டுப் புதிய மாகாணங்கள் ஆக்கப்பட்டன. மாகாணங்களுக்கு முழுச் சுதந்தரம் அளிக்கப்பட்டது. கார்சிகாவுக்கும் மாகாண சுயாட்சி வழங்கப்பட்டது. இம் மாறுதல்களாலும், கார்சிகாக் கவர்னரின் பெருமுயற்சியாலும், இங்கிலாந்தில் குடியேறின பயோலியும் அவரது தோழர்களும் கார்சிகாவுக்குத் திரும்பிவந்து எல்லாச் சுதந்தரத்தோடும் வாழலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலைமையில், பயோலியும் அவரது தோழர்களும் பிரான்சுக்குச் சென்று லூயி அரசனிடம் விடைபெற்றுக் கார்சிகாவுக்குச் சென்றனர். பயோலியின் வருகையைக்கண்ட கார்சிகா தேசத்து மலைவாசிகளும் செம்படவர்களும் களிப்பெய்தினரெனினும் அவர்களுக்குப் பிரான்சுதேசத்தின்மீதிருந்த பகை முற்றிலுந் தணிந்தபாடில்லை. கார்சிகாவுக்குத் தலசுயாட்சி வழங்கப்பட்டமையால் பாஸ்டியா, அஜேஷியா என்னும் அதனது இரண்டு முக்கிய பட்டணங்களில் ஒன்றைத் தலைநகராகத் தேர்ந்தெடுக்கவேண்டியதாயிற்று. நெபோலியன் அஜேஷியாவைப் பிரேரேபித்தான். ஆனால் பயோலியோ பாஸ்டியாவின் சார்பாக வாதாடினார். இந்த அபிப்பிராய பேதத்தால் இருவர்க்கும் மனவருத்தம் உண்டாயிற்று. மேலும், தங்களது அதிக்கத்தை

முற்றிலுமிழந்த மதக்குருக்கள் கார்சிகாவில் கிளர்ச்சியை உண்டு பண்ணிவந்தனர். கட்சிகளும் கலகங்களும் மிகுதியாயின. பயோலியும் அவரது தோழர்களும் குடியரசின் கொள்கைகளை எதிர்த்துவந்தனர். ஜனக்கட்சியை ஆதரித்தவர்களையெல்லாம் சந்தேகித்தனர். ஜனக்கட்சியின் வீரனாகிய நெபோலியனைப் பலர் தாக்கினார்கள். அத்தருணத்தில் கார்சிகாவில் தங்கியிருப்பது அபாயகரமென்றெண்ணி நெபோலியன் பாரிஸ் நகரம் சென்றான்.

பிரான்சுதேசத்தின் அரசனது நிர்வாக அதிகாரங்கள் பலவற்றையும் ஜனங்கள் தங்கட்கே உரிமையாக்கிக் கொண்டனர். அதனால் அநேக தீமைகள் உண்டாயின. சட்டங்கள் மீறப் பட்டன. வரிகள் வசூலிக்கப்படவில்லை. உள்நாட்டுக் கலகங்களால் சேனைகள் ஆங்காங்கு சிதறியிருந்தன. பாரிஸ் நகரத்திலும், மற்ற முக்கிய பட்டணங்களிலும் நாள்தோறும் கலகங்கள் நிகழ்ந்தன.

பழைய ஆதிக்கங்களையெல்லாமிழந்து மனமுடைந்த அரசனும் அரசியும் ஒருவரும் அறியாவாறு ஆஸ்திரியாவுக்குத் தப்பிப்போக ஓர் நள்ளிரவில் உருமாறிப் புறப்பட்டனர். வேடமாறிய இவரை வழியிலின்னாரென்று அறிந்த ஒருவன் ஜனங்களுக்கு உடனே தெரிவித்தனன். ஜனங்கள் அரசனையும் அரசியையும் சிறைப்படுத்திப் பாரிஸ் நகருக்குக் கொண்டுவந்தனர். அரசனை வைத்துக்கொண்டு பல திருத்தங்கள் செய்யப் பல கட்சிகள் முன் வந்தும், சட்ட சபையைச் சீர்திருத்தி நாட்டில் சமாதானத்தை யுண்டுபண்ண எந்தக் கட்சியாலும் முடியவில்லை. பிரான்சு தேசம் மிகவும் நெருக்கடியான நிலையில் அரசனற்ற தேசம்போல் அல்லலுற்றது.

இப்படியிருக்க, நெபோலியன் பாரிஸ் நகரத்துப் புத்தகாலயங்கட்குச் சென்று சரித்திரம், பூகோளம் முதலிய நூல்களைப் படித்து வந்ததுடன் ஐரோப்பாவிலுள்ள தேசங்களின் அரசியல் நிலைமைகளையுங் கவனித்து வந்தான். ஒருநாள் பாரிஸ்



நகரத்தின் நதிக்கரையில் நெபோலியன் உலாவிக்கொண்டிருக்கையில் ஆண், பெண், பாலர் முதலியோரடங்கிய ஒரு பெருங்கூட்டத்தார் வெறிகொண்டார்போல் ஆரவாரித்துப் பற்பல ஆயுதங்களைக் கையிலேந்திச் சிறைப்பட்டிருக்கும் அரசனது மாளிகை நோக்கிச் சென்றனர். நெபோலியனும் இக்கூட்டத்துக்கு முன்னே விரைந்து சென்று அரண்மனைக்கருகிருந்த ஒருயர்ந்த கட்டடத்தின்மீதேறி நிகழ்வதையறிய ஆவலோடிருந்தான். முப்பதாயிரம் ஜனங்களும் அரண்மனைத் தோட்டத்துக்குட்புகுந்து அம்மாளிகையின் கதவுகளையும், சாளரங்களையும் உடைத்து, உட்சென்று, ஜனாதிபத்தியக் குல்லாவை யணியும்படி அரசனை வற்புறுத்தினார்கள். இதைக் கண்ணுற்ற நெபோலியற்கு அளவிலாக் கோபம் உண்டாயிற்று. இக்காட்சியைப் பார்க்கச் சகியாமல் நெபோலியன் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு "இந்தத் துன்மார்க்கரை அரண்மனைக்குள் நுழையவிட்ட பாவிகள் யார்? முதலில் நுழைந்த ஐந்நூறு பேரைத் துப்பாக்கிக் குண்டுகளால் யமனுலகு அனுப்பியிருந்தால் மற்றவர்கள் உயிர்க்கஞ்சி ஓடியிருப்பரே" என்று மனங் கொதித்துரைத்தான்.

பாரிஸ்மாநகரில் நடந்த அட்டூழியங்களை நெபோலியன் நாடோறும் கண்டான். அரச வம்சத்தாரின் மாளிகைகள் தகர்க்கப் பட்டன. பிரபுக்களும், அரசவம்சத்தாரும் பயந்து தத்தம் மாளிகையினின்றும் ஓடுவதைக் கண்டு ஜனங்கள் ஆனந்தம் கொண்டனர். அரசனுடைய காவலாளர்கள் கொல்லப் பட்டனர். அக்காவலாளரது முண்டங்களைக் கையிலேந்தித் தெருவழியே ஜனங்கள் ஊர்வலம் வந்தார்கள். அந்தோ! பாவம். இவையெல்லாம் கண்ணுற்ற நெபோலியனது மனதில் ஒரு பெருத்த மாறுதல் உண்டாயது.

இங்கிலாந்து தேசத்துச் சட்ட நிர்ணய அரசாங்கத்தையும், அமெரிக்காவின் குடியரசினையும் நெபோலியன் வியந்து மெச்சினான். ஆனால், பிரான்சு மக்கள் குடியரசுக்குத் தகுதியற்றவர்களென்றும், ஜனங்களை நல்வழிப்படுத்தி நாட்டைச்

சீர்திருத்தக்கூடிய அரசன் ஒருவன் அவசியமென்பதையும், நெபோலியன் உணர்ந்தான். முடியுடை மன்னர்களது கொடுங்கோன்மையையும், யோக்கியதை தகுதி முதலியன புறக்கணிக்கப்பட்டு அற்பமாகிய பிறப்பின் காரணமாகவே பதவிகள் அளிக்கப்படும் வழக்கத்தையும், சாமானிய ஜனங்களை நசுக்கியும் தாழ்த்தியும் தாங்கள் இந்திரபோகம் அனுபவித்து வந்த பிரபுக்களின் ஆதிக்கத்தையும் நெபோலியன் வெறுத்தான். ஆனால், தங்களது உரிமைகளைப் பெறும்பொருட்டுப் பாமர மக்கள் செய்துவரும் அட்டூழியங்கள் நெபோலியனது மனதைப் புண்படுத்தின. ஜனங்களின் அட்டூழியங்களைப் பார்க்கினும் பிரபுக்களின் ஆணவமும் ஆதிக்கமுமே சிறந்தன என நெபோலியன் நினைத்தான். அறிவும், அடக்கமும், கல்வியும், தெய்வபக்தியும், இரக்கமுமில்லாத பிரஞ்சு மாந்தர்கள் குடியரசுக்குத் தகுதியற்றவர்களென்றும், இங்கிலாந்து தேசத்துச் சட்ட நிர்ணய அரசியல் திட்டமே பிரான்சுதேசத்துக்கும் பொருத்தமானது என்றும் சபைகளிலும், நண்பர்களிடத்தும், விரோதிகளிடத்தும் நெபோலியன் அஞ்சாது சொல்லிவந்தான். நெபோலியனது குடியரசுக் கொள்கைகள் இவ்வாறு மாறியதற்குக் காரணம் ஜனங்கள் தெரிவிலாதியற்றிய அக்கிரமங்களே யாகும். எனினும் பிரஜாதிபத்திய உணர்ச்சியே இவனுடைய இரத்தத்தில் கலந்திருந்தது. அறிவின்றி அட்டூழியங்களைப் புரிந்துவரும் அறிவிலாதிகளை நல்வழிப்படுத்தி எந்தத் தேசத்தாராலும் வெல்லுதற்கரிய அரசொன்றைப் பிரான்சுதேசத்தில் நிலைக்கச் செய்து, அதன் மூலமாக மக்களின் உரிமைகளையும், சுதந்தரங்களையும் காப்பாற்றிப் பிரான்சு தேசத்தில் கல்வியையும், நீதியையும், தொழிலையும் பெருக்குமாறு நெபோலியன் தீர்மானித்தான். நிற்க,

நெபோலியன் மீண்டும் கார்சிகாவுக்குப் போக நேர்ந்தது. அச்சமயம், பயோலி என்பவர் பிரான்சுதேசத்து ஜனங்களின் அக்கிரமத்தையும் அட்டூழியங்களையும் கேட்டு வெறுப்புற்றுக் கார்சிகாவில் ஆங்கிலேய அரசாட்சியை ஏற்படுத்தச் சூழ்ச்சிகள் பலவும் செய்துவந்தனர். கார்சிகர்களில் பலர் பயோலியைப்



பின்பற்றினார்கள். நெபோலியனது அறிவின் உயர்வையும் போர்த்திறத்தையும் நன்குணர்ந்த பயோலி ஒருநாள் நெபோலியனைக்கண்டு அவனைத் தன்னுடன் சேருமாறு பெரிதும் தூண்டினார். தூரதிருஷ்டி வாய்ந்த நெபோலியன் பயோலியைப் பார்த்து, "ஐயா, இத்தகைய வெண்ணம் உமக்கு உதித்ததேன்? தயை புரிந்து இதனை ஒழிமின். பிரான்சு ஜனங்களின் அட்டூழியங்கள் எனக்கும் வெறுப்பையே தருகின்றன. ஆனால், மிகு விரைவில் அமைதிபெற்று எல்லாம் ஒழுங்குபெறும் என்பதே எனது நம்பிக்கை. ஐரோப்பாவின் வல்லரசுகளுக்கிடையே இச்சிறிய கார்சிகத்தீவு சுயேச்சையோடிருத்தல் முடியாத காரியமாகும். மொழியிலும், மதத்திலும், பழக்க வழக்கங்களிலும் நமக்கும் ஆங்கிலேயர்க்கும் வேற்றுமை அதிகம் உண்டு. ஆகையால் நமது தேசம் இங்கிலாந்தோடு இணைக்கப்படினும் நெடுநாள் ஒற்றுமையோடு இருத்தல் முடியாது. பிரான்சு தேசத்துக்கும் கார்சிகாவுக்கும் இயற்கைச் சம்பந்தங்கள் பல உள. பிரான்சு தேசத்தின் ஆட்சியே நமக்குப் பெருமையையும் நலத்தையும் தரவல்லது. மேலும், இந்நெருக்கடியான நிலையில் தேசத்துக்கு உண்மையாய் உழைத்து, ஒழுங்கீனங்களைத் தகர்த்து அறத்தினைக் காத்தலன்றோ நமது கருமமும் தருமமுமாகும்" என்று அமைதியோடுரைத்தான். பயோலி பதில் சொல்லாது வாளாவிருந்தனர். இருவரும் உத்தம வீரர்கள். ஆங்கிலேயரது ஆட்சியைக் கார்சிகாவில் நிலைநாட்டத் துணிந்தவர் பயோலி. தேசச் சேவையினின்று எக்காரணத்தாலும் பின் வாங்காதவன் நெபோலியன். இருவரும் அபிப்பிராய பேதத்தோடு பிரிந்தனர்.

பயோலி ஆங்கிலேயரை வரவழைத்துக் கார்சிகாத்தீவை அவர்கள் கையில் ஒப்புவித்தனர். ஆங்கிலேயர்களும் அத்தீவை உடனே கைப்பற்றிக்கொண்டார்கள். சிறிய சேனையுடன் நெபோலியன் ஐந்துநாள் மும்முரமாய்ப் போர் செய்தும் தோல்வியுற்றனன். பயோலியின் பலம் நாள்தோறும் பெருகிவந்தது. ஆங்கிலேயரது சேனை மேன்மேலும் வந்துகொண்டேயிருந்தது. இனி எதிர்ப்பதில் பயனில்லையென்று நெபோலியன் உணர்ந்து

தனது சேனையைக் கலைத்துவிட்டான். ஒருநாள் பயோலி லதீதாவைக் கண்டு, "அம்மா! நும் மகன் என்னுடன் சேர்ந்துழைக்க மறுக்கிறான். அவனுக்குப் புத்தி புகட்டுமாறு தங்களை வேண்டுகிறேன். ஆங்கிலேயரை இனி எதிர்ப்பதால் உங்கள் குடும்பத்துக்குத் துன்பம் நேரிடும்" என்றனர். இதனைச் செவியுற்ற அம்மங்கையர்க்கரசி, "ஐயா! நீதி, கடமை என்பன இரண்டையும் ஒவ்வொருவனும் அனுசரிக்கவேண்டும் என்பதே எனது கொள்கை" என்று உரைத்தனள். பிறகு, போனபார்ட்டி குடும்பத்தார் கார்சிகாவினின்றும் வெளியேறும்படி உத்தரவு பிறந்தது. அன்றிரவே நெபோலியன் தாயையும், உடன் பிறந்தார்களையும் அழைத்துக்கொண்டு கடற்கரை சென்று ஒரு சிறிய படகிலேறி நள்ளிரவில் புறப்பட்டுப் பொழுது புலர்ந்ததும் நைஸ் துறைமுகம் சேர்ந்தனன். அங்கே கொஞ்சநாள் தங்கியிருந்து, பின்னர் மார்சேல்ஸ் நகரத்துக்குச் சென்றனன். நெபோலியனது குடும்பம் சிலகாலம் வறுமையால் வருந்தியது. நிற்க,

கார்சிகாவில் ஆங்கிலேயர் இரண்டு வருடகாலம் அரசு புரிந்தனர். திட புத்தியில்லாத கார்சிகர்களுக்கு ஆங்கிலேயரது ஆட்சியில் வெறுப்புத் தோன்றியது. உள்நாட்டுக் குழப்பம் உண்டாயிற்று. இதையறிந்த நெபோலியன் ஒரு சேனையுடன் கார்சிகாமீது படையெடுத்து ஆங்கிலேயரை அடித்துத் துரத்தினான். கார்சிகாத்தீவு மீண்டும் பிரான்சுக்காரரின் ஆதீனத்துக்குட்பட்டது. பயோலி ஆங்கிலேயரைப் பின்தொடர்ந்து மீண்டும் இங்கிலாந்து சென்றனர்.

பிரான்சு தேசத்து அரசர், (16-வது லூயி) தமது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டக்கருதி அன்னிய அரசாங்கத்தின் துணையை நாடினரென்றும், பிரான்சு தேசத்தை அன்னியர் வசம் ஒப்புவிக்க ஏற்பாடு செய்தனரென்றும் குற்றஞ் சாட்டப்பட்டுத் தூக்கி லிடப்பட்டார். சின்னாட் கழிந்தபின் அரசியும் தூக்கிலிடப்பட்டாள். பிரான்சு தேசத்தில் குழப்பம் அடங் கிற்றில்லை. நாள்தொறும் புதிய கட்சிகள் உண்டாயின.



இவ்வாறு, முடியா முடி மன்னன் முடிந்திடவும் ஏகாதிபத்தியம் தொலைக்கப்பட்டு, சுயாட்சி நிறுவப்பட்டது. இதனைக் கண்ட ஐரோப்பாவின் முடியரசர்களெல்லாம் நடு நடுங்கினர். இப்புரட்சி யியக்கம் ஐரோப்பாவெங்கும் பரவுமாயின் தங்கட்கும் கேடு விளைவது திண்ணமென வுணர்ந்த வல்லரசுகள் அவ்வியக்கத்தை அடியோடொழிக்க முனைந்து நின்றனர். ஆயிரக்கணக்கான பிரபுக்களும், அரச வம்சத்தினரும் அம்மன்னர்களோடு சேர்ந்தனர்.

தவுலன் என்பது பிரான்சு தேசத்தின் சிறந்த துறைமுகப்பட்டணமாகும். அப்பட்டினத்தில் கப்பற் படையும், பீரங்கிப் படையும், ஆயுதச் சாலையுமிருந்தன. சுமார் 25 ஆயிரம் ஜனங்கள் அதில் வசித்துவந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் பிரபுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். பிரான்சுதேசத்தின் தென்பாகத்துள்ள நகரங்களிலிருந்த பிரபுக்கட்சியினர்கள் தவுலனில் குடியேறி அவ்வூர் வாசிகளோடு கலந்து கோட்டையையும், படைவீட்டையும், கப்பல்களையும், அவ்வூரையும் ஆங்கிலேயரிடம் ஒப்புவித்தனர். ஆங்கிலேயரும உள்நுழைந்து அனைத்தையும் கைப்பற்றினர்.

இதையறிந்த ஜனாதிபத்திய அரசாங்கத்தார் மிகுந்த கோபங்கொண்டு தவுலன் பட்டினத்தை உடனே கைப்பற்றி ஆங்கிலேயரைத் துரத்தியடிக்கத் தீர்மானித்தார்கள். இரண்டு சேனைகள் உடனே அனுப்பப்பட்டன. முற்றுகை யாரம்பித்துத் திங்கள் மூன்றாகியும் வெற்றிக்குறிகள் காணப்படவில்லை. ஆங்கிலேயர்கள் பெருமுயற்சி செய்து தற்காப்பைப் பலப்படுத்திக்கொண்டனர். அத்தருணத்தில் நெபோலியன் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டுத் தவுலனுக்கு அனுப்பப்பட்டான். நெபோலியன் போர்க்களஞ் சென்று பார்வையிட்டான். முற்றுகை தகுந்த வழியில் நடத்தப்படாமையைக்கண்டு மனம் நொந்து, "இம்முறையில் யுத்தம் செய்தால் உலகத்துள்ள மனிதர்களும், ஆயுதப் படையும் காணாதுப் போதா. சிறிய ஜிப்ரால்டரை முதலில் கைப்

பற்றிக்கொண்டு அக்குன்றின்மேல் பீரங்கிப் படையை யணிவகுத்துக் கீழேயுள்ள பட்டினத்தைத் தாக்கினால் ஆங்கிலேயர் பஞ்சு போல் பறந்தோடுவர். இஃதொன்றே வெற்றிக்குரிய வழி" என்று சொல்லிக்கொண்டே தனது சேனையோடு ஜிப்ரால்டரை நோக்கிச் சென்றான்.

ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்
கருதி யிடத்தாற் செயின்.
அருவினை யென்ப உளவோ கருவியாற்
கால மறிந்து செயின்

—திருக்குறள்

சேனையை மூன்று பிரிவாகப் பிரித்து மூன்று பக்கங்களிலும் நிறுத்திவைத்தான். விரைவில் பீரங்கிகள் வரவழைக்கப்பட்டுத் தகுந்த இடங்களில் அமைக்கப்பட்டன. நெபோலியன் ஊண் உறக்கமின்றி உழைத்துவந்தான். எதிரிகளது குண்டுகள் தன்னைச் சுற்றிலும் விழுந்துகொண்டிருந்தன. அக்குண்டுகள் பட்டுத் தான் சவாரி செய்துகொண்டிருந்த குதிரைகள் பல இறந்தன. இவ்வாபத்துக்கிடையில் விடாமுயற்சியுடன் செய்ய வேண்டுவன வனைத்தும் செய்து முடித்தான். 1793-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-உ இரவு யுத்தம் ஆரம்பித்தது. நாலைந்துமணி நேரத்திற்குள் எண்ணாயிரம் குண்டுகள் கோட்டைமீது போடப் பட்டன. கோட்டை நாசமாயிற்று. பிணக் குவியல்கள் எங்கும் நிறைந்தன. ஆங்கிலேயர் பறந்தோடினர். தவுலன் நகர் மீண்டும் பிரான்சுக்குச் சொந்தமாயிற்று.

1794-ம் வருடம் மார்ச்சு மாதம் இத்தாலியிலிருந்த பீரங்கிப் படைக்குச் சேனாதிபதியாக நெபோலியன் நியமிக்கப் பட்டான். நெபோலியன் உடனே நைஸ் பட்டணம் சென்று வேலையிலமர்ந்தான். பிரான்சு சேனைகள், ஆஸ்டிரியச் சேனைகளால் சூழப்பட்டிருந்தும், சோம்பித்திரிந்து கொண்டிருந்ததைக்கண்ட நெபோலியன் உடனே தேசப்படத்தை யெடுத்து ஆராய்ச்சி செய்தனன். பிறகு மலைகளையும், கணவாய்களையும், நதிகளையும்



சுற்றிப்பார்த்து அவற்றின் விவரங்களையும், எதிரிகளின் பலத்தையும், தன் பலத்தையும் சரிவர உணர்ந்து போருக்குரிய வனைத்தையும் தயாரித்துக்கொண்டான். அவ்வமயம் ஆஸ்டிரியச்சேனை ரோஜா நதிக்கரையில் பயமின்றித் தங்கியிருந்தது. எதிரிகளைத் திடீரென்று தாக்கி வெற்றிகொள்ள வெண்ணிய நெபோலியன் யுத்த ஆலோசனை சபையைக் கூட்டித் தனது எண்ணத்தைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறினான். எல்லோரும் அதனை அங்கீகரித்தனர்.

எதிரிகளைக் கருதியவாறே திடீரென்று தாக்கினார்கள். ஆஸ்டிரியர் பயந்து சுழல்காற்றுற்ற செத்தைபோல் பறந்தனர். ஆல்ப்ஸ் மலையும், ரோஜா நதிக்கரையிலுள்ள நாடுகளும் பிரான்சுக் குச் சொந்தமாயின. பிரான்சு முழுதும் ஆரவாரித்தது. தலைமைத் தளகர்த்தரைப் பிரான்சுமக்கள் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

அத்தருணத்தில் ஓர் குற்றஞ் சாட்டப்பட்டு நெபோலியன் சிறை செய்யப்பட்டான். அக்குற்றம் பின்வருமாறு. தவுலன் யுத்தத்துக்குப் பிறகு, மார்சேல்ஸ் நகரிலுள்ள சிறைச்சாலை, வெடிமருந்து சேகரித்து வைத்தற்குத் தகுதியானதென்றெண்ணி நெபோலியன் அதனைப் பழுது பார்த்து வந்தான். நெபோலியன் இத்தாலிக்குச் சென்றபின்பு அவனுடைய பதவியில் நியமிக்கப் பட்ட மற்றொருவர் அவ்வேலையைப் பார்த்து வந்தார். தேசாபிமானிகளைச் சிறை செய்தற்கே அச்சிறைச்சாலை பழுது பார்க்கப்பட்டு வருவதாகச் சிலர் அரசாங்கத்துக்குத் தெரிவித்தனர். உடனே அவ்வுத்தியோகத்தர் சிறை செய்யப்பட்டனர். சிறைச்சாலையின் சீர்திருத்த வேலை தம்மாலாயதன்றென்றும், தமக்கு முன்னிருந்த நெபோலியனே அவ்வேலையைத் தொடங்கினனென்றும், நெபோலியனது யுக்திகளின்படியே தாம் அவ்வேலையை நடத்திவந்ததாகவும் அவ்வுத்தியோகத்தர் மொழிந்தனர். அதனால் அவர் விடுதலை செய்யப்பட்டார். உடனே நெபோலியனைச் சிறை செய்யும்படி அரசாங்கத்தார் உத்தரவிட்

டனர். பதினைந்துநாள் நெபோலியன் சிறையிலிருந்தான். பின்னர், அரசாங்கத்தார் உண்மையையறிந்து நெபோலியனை விடுதலை செய்யுமாறு உத்தரவு அனுப்பினர். நெபோலியன் விடுதலை செய்யப்பட்டான். ஆனால், அவன்மீது சந்தேகங்கொண்ட இராணுவ அதிகாரிகள் நெபோலியனைப் பீரங்கிப்படையினின்றும் மாற்றிக் காலாட் படைக்குத் தலைவனாக நியமித்தனர். இதை யேற்றுக்கொள்ளச் சம்மதியாத நெபோலியன் தனது தாயைக் காண மார்சேல்ஸ் நகரம் சென்று அங்கே சில மாதங்கள் தங்கியிருந்தான்.

பிறகு, ஏதேனும் உத்தியோகம் தேடும்பொருட்டுப் பாரிஸ் நகரம் சென்றான். பலநாள் முயன்றும் வேலை கிடைத்திலது. கையிலிருந்த சிறிது பணமும் செலவாகிவிட்டமையால் அவனது நிலைமை பெரிதும் வருந்தத்தக்கதாயிற்று. இச்சமயத்தில் தாயாரிடமிருந்து நிருபம் வந்தது. மார்சேல்ஸ் நகரில் தாயும் மக்களும் வறுமையில் வருந்துவதைக் கடிதமூலமாயறிந்து மனந்தளர்ந்தான். வருமானமுமில்லை; கையில் பணமுமில்லை; என் செய்வான் நெபோலியன்? தன் துயரத்தைக் குறித்து நெபோலியன் வருந்தினானில்லை; தனது அருமைத் தாயின் துக்கமோ அவனைப் பெரிதும் வருத்தியது. அன்று ஆற்றங்கரையில் தனியே உலாவிக்கொண்டு, "தற்கொலை செய்துகொள்ளலா மென்றால் அஃது ஆண்மையன்றே. ஆனால் இவ்வறுமைத் துன்பத்தினின்றுந் தப்புதற்குரிய வேறு உபாயமும் இல்லையே" என்று ஆழ்ந்து சிந்தித்த வண்ணமாயிருந்தான். அந்தத் தருணத்தில் திடீரென்று அங்குவந்த நெபோலியனது பழைய நண்பனாகிய டெமாஸிஸ் என்பவன் நெபோலியனை மார்புறத்தழுவி "நண்ப! உன்னைக் கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கினேன்" என்று அன்பு பாராட்டினான். நெபோலியன் ஒன்றும் பேசாது வாளா விருந்ததைப் பார்த்துப் பின்னரும், "நெபோலியா! விஷயம் யாது? நான் சொல்வது உன் காதில் விழவில்லையா? பழைய நண்பனாகிய என்னைப் பார்த்தும் உன் முகத்தில் மகிழ்ச்சிக்குறி ஒன்றுந் தோன்றவில்லையே. உனக்கு நேர்ந்த துக்கம் யாது? தற்கொலை



செய்ய முயலும் வெறியனைப்போல் தோன்றுகின்றாய். உண்மையை என்னிடம் கரவா துரை" என்று நிகழ்த்தினான். இதைக்கேட்டு நெபோலியன் உள்ளதை உள்ளவாறு உரைத்தனன். உடனே அந்நண்பன் தன்னிடுப்பில் வைத்திருந்த ஆறுயிரம் டாலர்கள் அடங்கிய ஒரு பணப்பையை நெபோலியன் கையில் தந்து, "இதைக் கொண்டு உன் தாயின் துயரினை நீக்குக" என்றான். நெபோலியன் மெய்ம்மறந்து அதனைப் பெற்றுத் தாயிடம் சென்று அவள் துயரத்தை நீக்கினான். ஆபத்துக்காலத்தில் உதவிய அந்நண்பனை நெபோலியன் பன்முறை தேடியும் பார்க்கமுடியவில்லை. பதினைந்தாண்டுகளுக்குப் பின்னர் அந்நண்பனைத் தற்செயலாய் நெபோலியன் சந்தித்தான். நெபோலியன் அந்நண்பனை அன்புடன் வரவேற்று அவனுக்கு அறுபதினாயிரம் டாலர்களைக் கொடுத்து அதனை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தினான். தவிர, ஆறுயிரம் டாலர்கள் வருமானமுள்ள உத்தியோகத்தையும் அவனுக்கு நெபோலியன் அளித்தனனென்று சொல்லப்படுகிறது.

காலத்தாற் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

—திருக்குறள்.

# 3-வது அத்தியாயம்.

## குடியரசும் கடிமணமும்.

நெபோலியன் இதாலியாவை விட்டு வந்தபின்னர், பிரான்சு சேனைகள் தக்க தலைவனும் கட்டுப்பாடுமில்லாது பல விடங்களில் தோல்வியுற்றன. நெபோலியனாற் கைப்பற்றப்பட்ட இடங்களெல்லாம் ஆஸ்டிரியர்களால் மீண்டும் கைப்பற்றப்பட்டன. பாரிஸ் அரசாங்கத்தார் திகில் கொண்டனர். செய்வதின்னதெனத் தெரியாது திகைத்தனர். அப்போது அவர்களுக்கு நெபோலியனது ஞாபகம் வந்தது. உடனே அவனை வரவழைத்து ஆலோசனை கேட்டனர். ஆல்ப்ஸ் மலையின் பிரதேசத்தை நன்குணர்ந்த நெபோலியன் தனக்குத் தோன்றிய யுத்த தந்திரங்களையும் நாட்டின் அமைப்பையுங் கூறினன். நெபோலியனது ஆலோசனைப்படியே இதாலியாவில் யுத்தம் செய்யப்பட்டதால் பிரான்சுசேனை வெற்றியுற்று இழந்த விடங்களை மீண்டும் கைப்பற்றியது.

இந்நிலையில், தேசசபையார் புதியதொரு அரசியல் திட்டம் வகுத்தனர். அரசற்குப் பதிலாக அரசாங்க நிர்வாகத்தை நடத்துதற்கு ஐந்து டைரக்டர்கள் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்காவிலிருந்ததுபோல் இரண்டு சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. இருநூற்றைம்பது அங்கத்தினர்களைக்கொண்ட முதல் சபைக்குப் பிராசீனர் சபை (council of ancients) என்று பெயர். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களும், விவாகமானவர்களுமே அச்சபையில் அங்கத்தினராதற்குத் தகுதியுடையவரெனத் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாவது சபைக்கு ஐந்நூற்றுவர் சபை என்று பெயர். முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களே அதில் பிரதிநிதி





களாதற்குத் தகுதியுடையாரென வகுக்கப்பட்டது. அதுவரையிலும் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் பலவற்றினும் அதுவே சிறந்ததெனப் பலாலும் மதிக்கப்பட்டது. போர்பன் குடும்பத்தாரில் ஒருவனை மீண்டும் அரசனாக்கக் கருதிய பிரபுக்கட்சியினரது சூழ்ச்சிகளினின்றும், அமிதக்கட்சியினரது தீமைகளினின்றும் பிரான்சுதேசத்தைக் காத்தற்பொருட்டு மிதவாதிகளால் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. பிரான்சுதேசத்துக் குடிமக்களும் இராணுவ வீரர்களும் இதனை ஆமோதித்தனர். ஆனால், பாரிஸ் நகரில் பிரபுக்கட்சியாரும், அமிதக் கட்சியாரும் இதனை எதிர்த்தனர். எனினும், பாரிஸ் நகரத்துத் தொண்ணூற்று நான்கு பிரிவுகளில் நாற்பத்தெட்டுப் பிரிவுகள் சாதகமாயும், ஏனைய நாற்பத்தாறு பிரிவுகள் பாதகமாயும் அபிப்பிராயம் தந்தன. தேசமெங்கும் பெரும்பான்மையோர் இத்திட்டத்தை அங்கீகரித்தமையால் இத்திட்டமே அமுலுக்கு வருமெனப் பறைசாற்றப்பட்டது.

உடனே, பிரபுக்கட்சியினரும் அமிதவாதிகளும் ஒன்று சேர்ந்து திட்டத்தைத் தயாரித்த டைரக்டர்களைத் தா[illegible] ஆரம்பித்தனர். பாரிஸ் நகரம் பெரிய யுத்தகளமாக [illegible] ஏனெனி[illegible] டைரக்டர்களும் தேசசபையாரும் நடுநடுங்கின[illegible] மனிதா[illegible] அக்காலத்தில் இரத்தவெள்ளம் ஆறாகப் பெரு[illegible]ம் ஜனங்கள் உயிர் உயர்வாகக் கருதப்படவில்லை. நாற்ப[illegible]ரக்கியுமேந்தித் வெற்றிகொண்டார்போல் கையில் வாளும், [illegible] நம் ஐயாயிரம் தேசசபையை நெருங்கினர். தேச சபையா[illegible]. அச்சேனைத் வீரர்கள் அடங்கிய ஒரு சிறு சேனையே யிரு[illegible]தைப் பார்த்துப் தலைவனும் நெருங்கிவரும் திரண்ட கூட்ட[illegible]ரர்கள் தைரிய பயந்து பறந்தனன். [illegible] தயறிந்த கலைக[illegible]த்தனர். பாரிஸ் மெய்த்தி அதிக உற்சாகத்[illegible] ன் காக்க வாரம்பி[illegible] குழந்தைகளும் நகரில் குருதிவெள்ளம் [illegible] பது. மாதர்களும் விளங்கவில்லை. கதறினர். புரிவதின்ன[illegible] ச் சபையார்க்கு[illegible]ள் நுழைந்து, இவற்றைக் கண்ட [illegible] யன் தேச சபைக்[illegible]யைப் வாளா சபையார் படிக்[illegible] [illegible]டு ஆழ்ந்த சிந்த

32A

நின்றான். அப்போது பாராஸ் என்பவர் எழுந்து நின்று, "சபையோர்களே! இத்தருணத்தில் நம்மைக் காத்தற்குரிய வீரன் ஒருவனே உளன். அவனது வீரத்தையும், துணிவையும், அறிவின் மாட்சிமையும் நான் தவுலன் யுத்தத்தில் கண்குளிரக் கண்டுள்ளேன். அவன் பெயர் நெபோலியன்" என்று சபையார்க்குச் சொன்னான்.

எல்லோருடைய கண்களும் நெபோலியனை நோக்கின. ச[illegible]த்தலைவர் நெபோலியனை அருகேயழைத்து, "வீரரே இச் ச[illegible]க் காப்பாற்ற நீர் பிரியப்படுகிறீரா" என்று வினவினர். நெபோலியன், "ஆம்" என்று அமைதியாய் விடையளித்தான். சிறிது [illegible] கழித்து, சபைத்தலைவர் நெபோலியனைப் பார்த்து, "இது [illegible] பொறுப்புள்ள காரியமென்பதை நீவிர் அறிவீரோ?" [illegible]னர். அதைக்கேட்ட நெபோலியன் தலைவரை உற்று நோ[illegible], "ஐயா, அறிவேன். எடுத்த காரியங்களை இனிதே முடிக்கும் [illegible]க்கமுமுடையேன்." என்றான். நெபோலியனது அமைதி[illegible]யும் உறுதியையும் கண்ட சபையோர்கள் உவகை பூத்த[illegible] உடனே கலகக் கூட்டத்தாரைத் தாக்குதற்கு [illegible]சப்பட [illegible] முழு அதிகாரம் கொடுக்கப்பட்டது. [illegible]ண்டும் கை [illegible]

[illegible]ாக்கிகள் உடனே கொண்டுவரப்பட்டன. இந்நிலைமை[illegible] நெபோலியன் [illegible]க்கமின்றி உற்சாகத்துடன் திட்டம் வகுத்தனர் [illegible] [illegible]லையைச் சுற்றிலும் தகுந்த நடத்துதற்கு ஐந்து [illegible] [illegible] நாள் காலையில் கலகக் படுத்தப்பட்டது. [illegible] நெபோலியன [illegible] சேனையைத் தாக்கினார் சபைகள் ஏற்படுத்திபாலியன் [illegible] வீரர்களை [illegible] னர்களைக்கொண்ட [illegible] குழுவினை. வழ (council of anc[illegible] [illegible] நெபோலியனது [illegible] மேற்பட்டவர்கள் [illegible] [illegible]காரர்கள் [illegible] சந்தியும் அங்கத்தினராதற் [illegible] [illegible] டது. இரண்[illegible] [illegible] இந்திர [illegible] பதைக்க பெயர். மூப்ப[illegible] [illegible] நாம் நெபோ [illegible]

[illegible]க்கட [illegible] மா[illegible] ஏனெனி [illegible] மணிகா[illegible] [illegible]ம் ஜனங்கள [illegible]ரக்கியுமோந்தித் [illegible] நம் ஐயாயிரம் [illegible] அச்சேனைத் [illegible]த்தைப் பார்த்துப் [illegible]க்காரர்கள் தைரிய [illegible]க்கனர். பாரில் குழந்தைகளும் விளங்கவில்லை. [illegible]குள் நுழைந்து, [illegible] நயனைப் வாளா

தட [illegible] டிை [illegible] தெ [illegible] போ [illegible] [illegible]ரிக்கவை



ஜோஸபைன் சக்கரவர்த்தினி



பாரிஸ் நகரத்தின் கலகத்தை யடக்கிப் புதிய அரசியல் திட்டத்தை நெபோலியன் ஸ்தாபித்தான். நெபோலியனது நண்பராகிய பாராஸ் என்பவர் ஐந்து டைரக்டர்களிலொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாரிஸ் சேனைக்குத் தலைவனாக நெபோலியன் நியமிக்கப்பட்டான். நெபோலியனது நிலைமை சிறிது உயர்வுற்றது. வருமானமும் அதிகமாயிற்று. நெபோலியன் உடனே மார்சேல்ஸ் சென்று தனது தாய்க்குப் பல சௌகரியங்களையுஞ் செய்தபின் பாரிஸ் நகர்க்குச் சென்றான்.

கலகம் தணிந்தும் கலகக்காரர்களின் கோபம் தணியவில்லை. அடிக்கடி நேர்ந்த குழப்பங்களினால் ஆயிரக்கணக்கான மக்கள் தொழிலின்றித் தவித்தனர். பாரிஸ் நகரில் பஞ்சம் தோன்றியது. பசியால் பலர் உயிர் துறந்தனர். தனவந்தர்கள் தங்கள் தனத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு வேற்று நாடேகினர். நாட்டில் குழப்பங்கள் பெருகின. நெபோலியன் திறமையுடன் அக்குழப்பங்களை யடக்கிவந்தான். சில வேளைகளில், நெபோலியனது பரிகாசமான வார்த்தைகளாலேயே கலகக் கூட்டங்கள் கலைந்துபோயின. எளியவர்களுக்கு ரொட்டியும் விறகும் கொடுக்கும்படி நெபோலியன் கட்டளையிட்டான். தனது வருமானத்திலிருந்து அநேக குடும்பங்களைக் காப்பாற்றியும் வந்தான்.

ஒருநாள் பருத்துப் பெருத்த ஒரு மாது கலகக் கூட்டத்தில் நின்று, "அன்பர்களே, நீங்கள் கலையாதீர்கள். இப்போர்வீரர்கள் பேசும் இனிய சொல்லைக் கேட்டு மயங்கற்க. வயிறார தின்று கொழுத்திருக்கும் இவ்வீரர்கள், பசியால் மெலிந்து வாடும் நம்போன்றாரைக் கவனிக்கின்றார்களா?" என்று பிரசங்கித்தனள். அதைக் கேட்ட நெபோலியன் எழுந்து நின்று, "அம்மா, என்னைப் பாருங்கள். நம்மிருவரில் கொழுத்தவர் யார் என்பதை நீரே சொல்லுங்கள்" என்றனன். அதைக்கேட்டு அம்மாது திகைப்புற்று நின்றாள். கூட்டம் சிரித்துக்கொண்டே கலைந்துவிட்டது.

ஒருநாள் நெபோலியன் தனது நண்பர் வீட்டிற்கு விருந்துண்ணச் சென்றான். நண்பரது வீட்டின்முன் வண்டி நின்றது. நெபோலியன் வண்டியினின்றும் இறங்கினான். அப்போது ஒரு மாது இறந்துபோன குழந்தையைக் கையிலேந்தியவளாய் நெபோலியனைப்பார்த்து, “ஐயா, உண்ண உணவின்றி உடல் நலங்குன்றி மெலிந்துபோயினேன். ஆதலால், பருகவும் பாலின்றி இக்குழந்தை இறந்தது. எனது கணவரும் இறந்து போயினர். இன்னும் ஐந்து குழந்தைகள் பசிப்பிணியால் பதைபதைத்து உயிரற்ற பிணம்போல் உணர்வற்றிருக்கின்றனர். இச்சமயம் யாதேனும் உதவி இல்லையேல் அவ்வைந்து மக்களையும், இறந்த இம்மகவையும் கிணற்றில் தள்ளி நானும் விழுந்து உயிர் துறக்க நிச்சயித்துள்ளேன்” என்று புலம்பினாள். இதைக் கேட்ட நெபோலியனது நெஞ்சம் நெக்குருகியது. உடனே நெபோலியன் அவட்கு அப்போதைக்குப் போதுமான சிறிது பணத்தை உதவியபின் அவளது இருப்பிடத்தை விசாரித்தறிந்து நண்பர் வீட்டில் நுழைந்தான். விருந்துக்குப் பலபேர் வந்திருந்தனர். நெபோலியன் அவர்களுடன் அளவளாவிக் கலவாமல் ஆழ்ந்த கருத்தொடு கவலைகொண்டிருந்தான். சற்றுமுன் தான் கண்ட காட்சியை மறக்க வியலாது மனச்சோர்வடைந்தான். விருந்து முடிந்தபின், அவ்வேழைமாது சொல்லிய வெல்லாம் உண்மையென விசாரித்தறிந்து அன்று முதல் அக்குடும்பத்தைத் தானே காப்பாற்றி வந்தான். அக்குடும்பத்துப் பெண்களைத் தையல் வேலையில் தனது நண்பர்களது வீடுகளிலமர்த்தினான். நெபோலியனை அக்குடும்பத்தார் தெய்வம்போல் போற்றிப் புகழ்ந்தனர்.

பாரிஸ் நகரில் மீண்டும் கலகங்கள் நேராவண்ணம் ஜனங்களிடத்திருந்த போர்க் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டன. அப்போது, பிரபு வம்சத்தைச் சேர்ந்தவனும், கலகக்காரர்களால் கொல்லப்பட்டிறந்தவனுமாகிய ஒரு போர்வீரனது வாளும் பறிமுதல் செய்யப்பட்டது. சிலநாட் கழிந்தபின்னர் அவ்வீரனது மகனாகிய யூஜன் என்னும் பன்னீராட்டைப் பருவத்துப் பையன்



நெபோலியனைக்கண்டு, “ஐயா, எனது தந்தையால் போற்றப்பட்டதும், அவரது ஞாபகார்த்தமாக எங்களால் காப்பாற்றப்பட்டதுமாகிய அவ்வாளினைத் தயைகூர்ந்து கொடுத்தருள வேண்டுகின்றேன்” என்று அழுத கண்ணொடும் சிந்திய மூக்கொடும் மன்றாடினான். அச்சிறுவனது வேண்டுகோளுக்கிணங்கிய நெபோலியன் அவ்வாளினைச் சிறுவற்குத் தந்து ஆசி கூறினான். பழந்தன மிழந்ததைப் படைத்த வச்சிறுவன் கண்கணீர் மல்கப் பேச்சொன்றும் எழாதவனாய், அவ்வாளை மார்புறத்தழுவி நெபோலியனைத் தலையால் வணங்கித் திரும்பி வீடு சென்றனன். அச்சிறுவனது பிதுர் பக்தியைக் கண்ட நெபோலியன் வியப்புற்று அவனைப் பெற்ற மாது உயர்ந்த உத்தமியாயிருத்தல் வேண்டும் என்று யூகித்தான்.

அச்சிறுவனது தாயார் ஜோஸப்பைன் என்னும் பெயரினள். இருபத்தெட்டு வயதினள். அழகிலும், குணத்திலும் நடக்கையிலும் பல்லோராலும் புகழப்பெற்றவள். யூஜன், ஹார்டென்ஸ் என்னும் தனது இரு குழந்தைகளின் நன்மையைக் கருதிக் கணவனிறந்தும் அவள் உயிர் தரித்திருந்தாள்.

தந்தையற்ற மகற்குக் காட்டிய அன்பிற்காகவும், அவனது வேண்டுகோளுக்கிணங்கி ஆதரித்தமைக்காகவும் தனது நன்றியறிவைத் தெரிவித்தற்காக ஜோஸப்பைன் மறுநாள் நெபோலியனைத் தேடிச்சென்று அவனிருந்த அறைக்குள் நுழைந்தாள். ஐயனும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன.
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் மனத்திற் றைத்தவே.

பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை ஒருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்.

—கம்பர்.

தனது மனமார்ந்த வந்தனங்களை இனிய குரலில் மதுரமான மொழிகளால் ஜோஸப்பைன் நெபோலியற்குத் தெரிவித்தனள். இருவரும் காதலித்தனர். 1796-௵ மார்ச்சு-௴ 6-௳ இருவர்க்கும் காந்தருவ விவாகம் நடந்தது.

மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினர்

— கம்ப!

# அத்தியாயம்—4

## இதாலிய வெற்றி.

பிரான்சு தேசத்தில் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. முடிமன்னன் மாண்டதையும் குடியரசியக்கம் பிரான்சு தேசத்தில் பரவியதையும் கண்ட ஐரோப்பாவின் பலதேசமன்னர்களும் மனம் கசிந்தனர். குடியரசு உணர்ச்சி ஐரோப்பா முழுதும் காட்டுத் தீப்போல் பரவியது. இவ்வுணர்ச்சியை யழிக்க முடிமன்னர்களும் பிரபு வம்சத்தினர்களும் முன் வந்தனர். இங்கிலாந்து தேசத்தின் இணையற்ற கடற்படையானது பிரான்சு தேசத்துத் துறைமுகங்களைத் தாக்கிவந்தது. ரைன் நதி தீரத்தில் இரண்டு லட்சம் ஆஸ்டிரியச் சேனை தருணம் வாய்த்தபோது பிரான்சுதேசத்தைத் தாக்குதற்குத் தயாராயிருந்தது. ஆஸ்டிரியச் சேனையும், சர்டீனியத் தானையும், நேப்பில்ஸ் சேனையும், ஆங்கிலேயப் படையும் ஆல்ப்ஸ் மலைத்தொடர்களில் அணிவகுத்து நின்றன. பிரான்சு தேசம் இவ்வாறு நான்கு பக்கங்களிலும் எதிரிகளால் சூழப்பெற்று நெருக்கடியான நிலைமையிலிருந்தது.

இதாலியா தேசத்திலிருந்த பிரன்சு சேனைக்குத் தலைவனாக நெபோலியன் நியமிக்கப்பட்டான். நெபோலியன் உடனே புறப்பட்டு மார்ச்சு மாதம் 27-தேதி நைஸ்நகரம் சென்று அன்றே இராணுவத்தில் சேர்ந்தான். பிரன்சு வீரர்கள் வளம்பொருந்திய விடங்களினின்றுந் துரத்தப்பட்டு ஆல்ப்ஸ் மலையின் கோட்டைகளில் பனியாலும் பசியாலும் வருந்தி அலமந்திருந்ததையும், பீரங்கிப் படையின் குதிரைகள் குளிர் மிகுதியாலிறந்துபட்டதையும் அறிந்த நெபோலியன் எல்லா வீரர்களையும் உடனே

வரவழைத்து அவர்களைப் பார்த்து, "வீரர்களே, நீங்கள் ஆடையும் உணவுமின்றி இருப்பதை நான் அறிவேன். நம் அரசாங்கம் உமக்கு ஒருவித உதவியும் செய்யச் சக்தியற்றுளது. உமது பொறுமையும் வீரமும் மெச்சத்தக்கன. வளம் பொருந்திய கீழ்ப்பிரதேசங்கட்கு உம்மை அழைத்துச் செல்ல நினைத்துள்ளேன். உணவுகளும், ஆடைகளும், பொருள்களுமலிந்த வளநாடுகளை உமக்குச் சொந்தமாக்குவேன். உமக்கு அளவிலாக் கீர்த்தி வந்தெய்தும் காலமும் இதுவே, இடமும் அதுவே. வீரர்களே! விழிமின்!! எழுமின்!!!" என்று ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினான். அதனைச் செவியுற்ற வீரர்கள் புத்துயிரும் புதிய வாற்றலும் பெற்றுப் போருக்கெழுந்தனர்.

நெபோலியனோடு போருக்கெழுந்த வீரர்கள் பனியிலும் மழையிலும் நனைந்து மலைகளைக் கடந்து சென்றனர். மறுநாட் காலையில் மாண்டிநாட்டி என்னுமிடத்தில் எதிரிகளை நாற்புறமும் சூழ்ந்து புயற்காற்றெனத் தாக்கினார்கள். நெடுநேரம் யுத்தம் நடந்தது. வீரர்களின் கூச்சலும், புண்பட்டார் அழுகையும், யுத்தகளமெங்கும் நிறைந்தன. முடிவில், ஆஸ்டிரியச் சேனையொரு புறமும் சர்டீனியத் தானை மற்றொரு புறமும் புறங்காட்டியோடின. இவ்வாறு பிரிந்து ஓடும் சேனைகளைத் தனித்தனியே தாக்குமாறு நெபோலியன் தனது வீரர்களை ஏவினான். அவ்வாறே, டீகோ என்னுமிடத்தில் ஆஸ்டிரியச் சேனையும், மில்லஸிமோ என்னுமிடத்தில் சர்டீனியச் சேனையும் தாக்கப்பட்டுத் தோல்வியுற்றன. மூன்று நாட்களில் நடந்த மூன்று யுத்தங்களிலும் நெபோலியன் வெற்றியடைந்தான்.

தோல்வியுற்றோடிய சர்டீனியர்களை நெபோலியன் மீண்டும் பின்றொடர்ந்து சென்று டூரின் நகரை நெருங்கினான். சர்டீனிய வரசன் பயந்து சமாதானச் செய்தியனுப்பினான். நெபோலியனும் இசைந்தமையாற் சமாதானம் நிறைவேறியது. அச்சமாதானப்படி, சர்டீனிய வரசனது முக்கிய கோட்டைகள் மூன்றும் பிரான்சுக்காரருக்குச் சொந்தமாயின. பிறகு கீழ்க்கண்ட



அறிக்கையை நெபோலியன் வெளியிட்டான். "இதாலிய மக்களே! உங்களது இருப்புச் சங்கிலியை அறுத்து உம்மை விடுவிக்கவே நாங்கள் இந்நாட்டுக்கு வந்துள்ளோம். பிரான்சுக்காரர்கள் உமது நண்பர்கள் என்பதை நம்புங்கள். உமது பொருளும், மதமும், பழக்கவழக்கங்களும் எம்மால் காப்பாற்றப்படும். உம்மை அடிமைகளாக்கிய கொடுங்கோல் மன்னரே எமது சத்துருக்கள்."

நெபோலியனது வெற்றிகளைக் கேள்வியுற்ற பிரான்சுமாந்தர்கள் பெருமகிழ்வெய்தி வெற்றிவிழாக் கொண்டாடினார்கள். நெபோலியனது புகழ் ஐரோப்பா முழுதும் பரவியது.

சர்டீனியாவோடு சமாதான மாற்றிய பின்னர், புறங்காட்டியோடிய ஆஸ்டிரியச் சேனையைப் பின்றொடர்ந்து மீண்டுந் தாக்குமாறு நெபோலியன் புறப்பட்டான். வழியில், பார்மா தேசத்தைத் தாக்கி அவ்விறைமகனுடனும் சமாதானம் ஆற்றிய பின்னர், போ என்னும் நதிக்கரை யணுகினான். அந்நதியின் அக்கரையில் ஐம்பதினாயிரம் ஆஸ்டிரியச் சேனை தங்கியிருந்தது. நதியைக் கடப்பது அசாத்தியமான காரியமாயிருந்தது. நெபோலியன் ஒரு தந்திரஞ் செய்தான். கரையோரமாய்ச் சேனையையழைத்துச் சென்று எண்பது மைல் தூரத்துக்கப்புரம் படகுகளைக்கொண்டு நதியைக்கடந்து லம்பார்டியின் மைதானத்தில் நள்ளிரவில் இறங்கினான். பிரான்சுசேனை ஆற்றைக்கடந்த செய்தியைச் செவியுற்ற எதிரிகள் நெபோலியனைத் தாக்க விரைந்தனர். பாம்பியோ என்னுமிடத்தில் இரண்டு சேனைகளும் சந்தித்துப் பெரும்போர் நிகழ்த்தின. ஆஸ்டிரியர்கள் இறுதியில் தோல்வியுற்றுக் கால்கொண்டோடினர்.

நெபோலியன் ஆஸ்டிரியர்களைத் துரத்திக்கொண்டே சென்றான். ஆஸ்டிரியர்கள் லோடி எனும் நகருள் நுழைந்து அட்டா எனும் நதியைக் கடந்து அக்கரையில் தங்கி மீண்டும் அணிவகுத்து நின்றனர். நெபோலியனும் அந்நதியின் இக்கரை யணுகினான்; உடனே கொடும்போர் ஒன்று நிகழ்ந்தது.

போருக்காற்றாது ஆஸ்டிரியர்கள் பறந்தோடி யொளித்தனர். லம்பார்டி கோமான் நகரை நீத்து ஓடி மறைந்தான். லம்பார்டி பிரதேசம் பிரான்சுக்காரர்களுக்குச் சொந்தமாயிற்று. நெபோலியன் வெற்றிமாலையணிந்து மிலான் நகர் புகுந்தான். குடிமக்கள் நல்வரவு கூறினர். பிரான்சுசேனை அவ்விடம் ஆறு நாட்கள் தங்கிக் களைப்பாறியது.

“வீரர்களே! எதிர்த்தவர்களை வென்றீர்கள். பைட்மாண்ட், மிலான், லம்பார்டி முதலியவைகளைப் பிரான்சுக்குச் சொந்தமாக்கினீர். போ, அட்டா முதலிய நதிகளைக் கடந்தீர். இவ்வெற்றிகளால் நம் தேசமக்கள் அளவிலா மகிழ்வுற்றனர். நுமது மனைவியும், மக்களும், மற்றுள சுற்றமும் நும் வீரத்தைக் கருதி இறுமாப்படைகின்றனர். மாற்றலரை அடக்கினீர். தீங்கிழைத்தவரைப் பழிவாங்கினீர். பகைவர்களை வெங்கள் செய்தீர். நும்மாற் செயற்பாலன இன்னும் பல உள. ஜனங்கள் எப்போதும் நமது நண்பர்களே. அவர்களை அடிமைத்தனத்தினின்றும் விடுதலை செய்வதே நமது நோக்கமாதலால் குடிமக்களை ஆதரித்தலே நுமது கடமையாகுக” என்றதோர் அறிக்கையை நெபோலியன் வெளியிட்டான்.

பிரான்சு சேனையின் பாதுகாப்புக்காக அவ்வரசாங்கத்தார் பொருள் சிறிதும் அனுப்பவில்லை. ஆகையால் சமாதான நிபந்தனைப்படி மிலான் பிரஜைகளிடமிருந்து நாற்பது லட்சம் டாலர்களை நெபோலியன் பெற்றுத் தன் சேனையைக் காப்பாற்றி வந்தான். தோல்வியுற்ற மக்களின் பொருளைக் கவர்வது நெபோலியற்கு வருத்தத்தைத் தந்தது எனினும் தன் சேனையைக் காத்தற் பொருட்டும், பரிவாரங்கள் உணவின்றி இறவா திருத்தற் பொருட்டும் தன் விருப்பத்துக்கு மாறாக எதிரிகளிடமிருந்து பொருள் பறிக்க வேண்டியதாயிற்று. மிலான் நகரப் பிரஜைகள் கேட்ட பொருளை விருப்பமுடன் கொடுத்ததுமல்லாமல் நெபோலியற்கு வாழ்த்தும் கூறினர். அப்பொருளைக்கொண்டு வேண்டிய உணவுகளும், புதிய அடைகளும், போர்க்கருவிகளும்



வாங்கப்பட்டன. வைத்தியசாலைகள் ஆங்காங்கு அமைக்கப் பட்டன. பிரான்சு அரசாங்கத்துக்குப் பத்து லட்சம் டாலர்களும், ரைன்நதி தீரத்தில் ஆஸ்டிரியச்சேனையுடன் அப்பொழுது சண்டை செய்துகொண்டிருந்த பிரான்சுசேனைக்கு இரண்டரைலட்சம் டாலர்களும் அனுப்பப்பட்டன.

மிலான் நகரத்தில் குடியரசுக்கு அடிப்படையான ஸ்தல சுய ஆட்சி நகரசபை யொன்று ஏற்படுத்தப்பட்டது. லம்பார்டி இராணுவம் சீர்திருத்தப்பட்டுப் புதியமாதிரியில் அணி வகுக்கப் பட்டது. இராணுவ வீரர்களை மிகுந்த அன்போடு நெபோலியன் ஆதரித்துவந்தான். ஐந்து நாட்களில் இவ்வளவும் முடிந்தன. நெபோலியனது அற்புதமான மனோசக்தியே அவனது இடைவிடாப் பெரு முயற்சிக்கு ஏதுவாயிருந்தது. இரண்டுமணி நேரந்தான் நெபோலியன் தூங்குதல் வழக்கம்; மற்ற இருபத்திரண்டு மணி நேரமெல்லாம் மெய்வருந்தி உழைத்து வந்தான். “எனது மூளையில் பல அலுவல்கள் ஒழுங்காகவும் கிரமமாகவும் தனித்தனியே புறக்கூண்டின் அறைகள்போல் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஓர் அலுவலை மறந்து மற்றொன்றைச் சிந்திக்க வேண்டின் முந்திய அறையினை மூடிப் பிந்திய அறையினைத் திறந்து கொள்வேன். இவையிரண்டும் ஒன்றோடொன்று கலப்பதுமில்லை; எனக்கு இளைப்பைத் தருவதுமில்லை. வீண் சிந்தனைக்கு எனது மூளையில் இடமே கிடையாது. உறங்க விரும்புங்கால் எல்லா அறைகளையும் மூடிவிடுவேன். உடனே அயர்ந்து தூங்குவேன். வேண்டும்போதே எனக்கு நித்திரை வரும்” என்பது நெபோலியன் திருவாக்கு.

அத்தருணத்தில், பிரான்சு சேனையை இரு பிரிவாக்கி ஒரு பகுதியார் கெல்லர்மன் என்னும் போர்வீரனது தலைமையின்கீழ் ஆஸ்டிரியர்களைப் பின்தொடர்ந்து தாக்குமாறும், மற்றொரு பிரிவினர் நெபோலியன் தலைமையின்கீழ்ப் போப் என்னும் மதக் குருவின் பிரதேசங்களைத் தாக்குமாறும் டைரக்டர்கள் நெபோலியனுக்கு உத்தரவிட்டனர். அதற்கு நெபோலியன் விடுத்த

பதில் நிருபம் பின்வருமாறு: "நம் சேனையை இத்தருணம் இருபிரிவாக்குதலும், அதை இரண்டு தலைவரின்கீழ் ஒப்புவித்தலும் அறியாமையாகும். போப்பின்மீது படையெடுத்து வெற்றிபெற விரும்பின் முழுச்சேனையும் ஒரு தலைவரின்கீழ் இருத்தல் அத்தியாவசியமாகும். என்மீது நுமக்கு முழு நம்பிக்கையில்லையேல் இதுவே எனது இராஜினாமா வாகுக. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் போர்புரியும் வழக்கமுடையவர். கெல்லர்மன் என்பவர் என்னைக் காட்டிலும் அதிக அநுபவமுள்ளவாதலால் என்னினும் சாமர்த்தியமாக அவர் போர்புரியக் கூடும். ஆனால், அவரும் நானும் ஒன்று சேர்ந்தால் துன்பமே விளையும் என்பது எனது நம்பிக்கை." இதைக்கண்ட டைரக்டர்கள் தங்கள் உத்தரவை ரத்து செய்து நெபோலியனுக்கு முழு அதிகாரத்தை மீண்டும் தந்தனர்.

அந்நகரின் பேர்வாய்ந்த கலாசாலையை நெபோலியன் காணச்சென்றான். ஒவ்வொரு வகுப்புக்குஞ் சென்று ஆசிரியர்களும் மாணவர்களும் திகைக்கும்படியான பல வினாக்கள் எழுப்பினான். ஒரு மாணவனைப் பார்த்து, "மரணத்திற்கும் உறக்கத்திற்கும் உள்ள பேதம் என்ன?" என்று கேட்டான். மாணவன் ஆசிரியர் முகத்தைப் பார்த்தான். அவ்வாசிரியர் மரணத்தைப் பற்றி நீண்டதோர் பிரசங்கம் செய்யலுற்றார். அவ்வதிகப் பிரசங்கம் முடிவதற்குள் நெபோலியன் வேறொரு வகுப்பிற்குச் சென்றனன். அஃது கணித வகுப்பெனவறிந்து நெபோலியன் புன்னகை காட்டினான். ஒரு மாணவனது புத்தகத்தை வாங்கி அதனிதழ்களைத் திருப்பி ஒரு கடினமான கணக்கை வகுப்புக்குத் தந்தான். அதனை ஒரு மாணவன் சரிபெறச் செய்து நெபோலியனுக்குக் காட்டினான். நெபோலியன் அதனைப் பார்த்து, "பிழைபடச்செய்தனை" என்றான். அதற்கு அம்மாணவன், "அறியாதுரைத்தீர். சரியுறச் செய்துளேன்" என்று சாதித்தான். நெபோலியன் ஆசனத்தமர்ந்து அக்கணக்கைத் தானே செய்தான். தனது தவற்றை உடனே யறிந்த நெபோலியன் அம்மாணவனைப் பார்த்து, "சிறுவா! நீ செய்தது சரி. நான்



சொல்லியது தவறு." என்றனன். இங்ஙனமிருக்க, நெபோலியனது வெற்றிகளைக் கண்ட நேப்பில்ஸ் அரசனும், வெனிஸ் நகரத்தாரும், போப்பும் அச்சமுற்றுச் சமாதானச் செய்தி யனுப்பினர். நெபோலியனும் உடனே இணங்கியமையால் சமாதானம் நிறைவேறியது. அச்சமாதானப்படி, அன்கோனா, பொலோக்னா, பெர்ரரா, டஸ்கனி என்னும் மாகாணங்கள் பிரான்சுக்குச் சொந்தமாயின.

இப்படியிருக்க, மாண்டுவா கோட்டையில் பதினையாயிரம் ஆஸ்டிரியச் சேனை தங்கியிருந்தது. புதிய சேனையொன்றைத் திரட்டிச் சென்று நெபோலியனைத் தாக்கி நசுக்க ஆஸ்டிரியர்கள் முயன்று வந்தனர். அதையுணர்ந்த நெபோலியன் முப்பதினாயிரம் சேனையோடு சென்று மாண்டுவாவை முற்றுகையிட்டான்.

அத்தருணத்தில் வர்ம்சர் என்னும் ஆஸ்டிரியப் போர்வீரர் அறுபதினாயிரம் சேனையுடன் டைரலினின்றும் புறப்பட்டு மாண்டுவா நோக்கி வந்தனர். நெபோலியனுடன் சமாதானம் செய்துகொண்ட வெனிஸ், ரோம், நேப்பில்ஸ் முதலிய அரசாங்கத்தினர் தகுந்த தருணத்தில் ஆஸ்டிரியர்களுடன் ஒன்று சேர்ந்து நெபோலியனை நசுக்கத் தீர்மானித்திருந்தனர். வர்ம்சருடைய சேனை மூன்று பிரிவுகளாகத் தனித்தனியே மாண்டுவா நோக்கி வந்து கொண்டிருந்தன. எதிரிகளுடைய சேனை இவ்வாறு சிதறியிருந்த செய்தி நெபோலியனுக் கெட்டியது. மாண்டுவா முற்றுகையை உடனே கலைத்துவிட்டு எதிரிகளைத் தனித்தனியே தாக்குமாறு தனது முழுச் சேனையுடன் நெபோலியன் புறப்பட்டான். முதலில் ஒரு பிரிவினரைத் தாக்கி முறியடித்தான். போரின் முழக்கத்தைக் கேட்ட மற்ற இரு பிரிவினர்களும் ஒன்று சேர்ந்தனர். அவர்களையும் நெபோலியன் தாக்கினான். ஆஸ்டிரியச் சேனை சிதறுண்டு நாசமாயிற்று. சுமார் நாற்பதாயிரம் ஆஸ்டிரிய வீரர்கள் மாண்டனர். நெபோலியன் ஒப்பிலா வெற்றி யடைந்தான். தன்னை வஞ்சிக்க எண்ணிய வெனிஸ், ரோம், நேப்பில்ஸ் முதலிய தேச மன்னர்களை வரவழைத்துப்

பெருந்தகை நெபோலியன் மன்னித்தருளினான். உடன்படிக்கையின்படி ஒரு பக்கமும் சேராமல் உண்மையோடிருந்த லம்பார்டியாது குணநிசயத்தை நெபோலியன் பெரிதும் புகழ்ந்து பாராட்டினான். நெபோலியன் தனது சேனையுடன் மீண்டும் மாண்டுவாவுக்குத் திரும்பிச் சென்றான்.

மூன்று வாரங்கள் கழிந்தன. வர்ம்சர் மீண்டும் ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு இருபத்தையாயிரம் வீரர்களை டிரெண்டு என்னுமிடத்தில் நிறுத்திவிட்டு எஞ்சிய முப்பதாயிரம் வீரர்களுடன் மாண்டுவா நோக்கி வந்தனர். எதிரிகள் சேனை மறுபடியும் பிரிக்கப்பட்டதைக் கேட்ட நெபோலியன் உடனே தன் சேனையுடன் டிரெண்டுக்குப் போய் எதிரிகளைத் தாக்கி நாசஞ் செய்தான். மறுநாட்காலை, நெபோலியன் வெற்றியுடன் டிரெண்டில் புகுந்து அவ்வூர் வாசிகளை ஒன்று சேர்த்து அவர்களுக்குச் சுதந்தரத்தையும் குடியரசையும் அளித்தான். இரவு கழியு முன்னரே நெபோலியன் சேனையைத் திரட்டிக்கொண்டு, விரைந்து சென்று, வர்ம்சரைத் தாக்கினான். கடும்போர் நிகழ்ந்தது. பிணங்கள் மலைபோற் குவிந்தன. புண்பட்டார் அழுகையும், பீரங்கிகளின் ஒலியும் ஆகாயத்தை நிரப்பின. ஐம்பத்தையாயிரம் ஆஸ்டிரிய வீரர்களில் பதினையாயிரம் வீரர்களே உயிர்தப்பினர். வர்ம்சர் அவர்களைத் திரட்டிக்கொண்டு புறங்கொண்டோடி மாண்டுவா கோட்டைக்குள் நுழைந்து கொண்டனர். நெபோலியன் மாண்டுவா சென்று மீண்டும் முற்றுகை செய்தனன்.

மேற்கண்ட யுத்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்களில் சில ஈண்டுக் குறிக்கத்தக்கன. ஒருநாள் ஒரு சிப்பாய் நெபோலியனைப் பார்த்து, "ஐயா, கந்தைகளை உடுத்துக் காலங்கழிக்கின்றோம். வெற்றிகள் பல பெற்றும் பயனென்னை?" என்றான். அதைக்கேட்டு நெபோலியன், "நண்பரே! நம் மார்பிற் றோன்றும் போர்த் தழும்புகளை உலகோர்க்குக் காட்டத்தகுந்தது அக்கந்தையேயாகும். புதிய வாடைகள் அத் தழும்புகளை மறைக்குமென்பதை மறந்தீரோ?" எனப் பதிலுரைத்தான்.



ஒருநாள் உணவின்றி நெடுநேரம் உழைத்துவந்தமையால் நெபோலியன் களைப்புற்று ஒரு போர்வீரன் அருகே சாய்ந்தான். அதைக் கண்ணுற்ற அவ்வீரன் தனது பையிலிருந்த ரொட்டியை உடனே எடுத்துப் பாதியை நெபோலியற்குக் கொடுத்தான். நெபோலியன் அதை யருந்திக் களைப்பாறிச் சென்றனன். நெபோலியன் அரசனானபின் ஒருநாள் பெல்ஜியத்தின் வழியாகப் போகையில் அவ்வீரன் அரசனைப் பார்த்து, "அரசே! நீவிர் ஒரு நாள் பசியால் வருந்தியபோது எனது ரொட்டியில் உமக்குப் பாதி தந்து உதவினேன். இப்போது பசியால் வருந்தும் என் தந்தைக்கு உணவளித்தருள உம்மை வேண்டுகின்றேன்" என்றிரந்தான். உடனே அவ்வீரற்கு ஒரு உயர்ந்த உத்தியோகமும் அவனது தந்தைக்கு உபகாரச் சம்பளமும் நெபோலியன் கொடுத்தருளினன்.

ஒரு நாள் கொடிய போர் நிகழ்ந்தது. அன்றிரவு பால் போல் நிலாவொளி வீசியது. நெபோலியன் யுத்தகளம் சென்று பார்வையிட்டான். அப்பொழுது ஒரு நாய், இறந்துபோன தனது யஜமானனிடமிருந்து நெபோலியனிடம் ஓடிவந்து உதவி வேண்டுவதுபோற் பாவனை காட்டி, மீண்டும் தன் யஜமானனிடஞ் சென்று அவனது முகத்தில் முத்தமிட்டுப் பெருத்த குரலுடன் அழுதது. அதனைக்கண்ட நெபோலியன் மனந்தளர்ந்து புலம்பினான். பலவாண்டுகட்குப் பின்னர் இதைக் குறித்துத் தனது நண்பரிடத்துப் பேசுங்கால், "நான் புரிந்த யுத்தங்களில் நேர்ந்த சம்பவங்கள் பலவற்றுள் இஃதொன்றே என்னைப் பெரிதும் வருத்தியது. உற்றார் உறவினர் பலராலும் கைவிடப்பட்டுத் தனியே உயிர் துறக்கும் வேளையில் அந்நாய் ஒன்றே அவ்வீரர்க்கு உற்ற துணையாயது. நிலையிலா மானிட வாழ்க்கையின் அதிசயம் என்னே! அநேக யுத்தங்கள் புரிந்தேன். ஆயிரக்கணக்கான மக்கள் இறந்ததையும் என் கண்கள் கண்டுள்ளன. ஆனால் நன்றியறிவுள்ள அந்நாயின் புலம்பலைக் கண்டு என் கண்கள் நீர் வடித்தனவே" என்று நெபோலியன் சொன்னான்.

ஓர் இரவு நெபோலியன் சாதாரண உடை தரித்துச் சேனைகளைப் பார்வையிடச் சென்றான். ஓரிடத்தில் காவற்காரன் ஒருவன் நெபோலியனைப் போகவிடாமற்றடுத்து நின்றான். அப்போது நெபோலியன், "இராணுவ உத்தியோகத்தரில் நான் ஒருவன். மேற்பார்வைக்காக வந்துளேன். என்னைப் போக விடுக" என்று சொன்னான். அதற்குக் காவற்காரன், "எவரையும் உள்ளே விடலாகாது என்னும் உத்தரவைத் தாங்கி நிற்கின்றேன். நீ உள்ளே செல்வையேல் எனது குண்டுபட்டிறப்பாய்" என்று மறுமொழி கூறினான். நெபோலியன் பெருமகிழ்ச்சியுற்று மறுதினமே அக்காவற்காரனுக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுத்துதவினன்.

தன் மனைவியின் சிறிய உருவப்படம் ஒன்று நெபோலியனுக்கு விவாக காலத்தில் கிடைத்தது. அதனை ஒரு நாணிற் கோத்து அவ்வுருவின் உதடுகள் தனது இருதயத்தின்மீது தங்குமாறு கழுத்தில் தரித்திருந்தான். யுத்த முழக்கத்திலும் நித்திரைக்கு முன்னும் அவ்வுருவத்தைக் கண்டு களிப்பது வழக்கம். ஒருநாள் அவ்வுருவப் படத்தின் கண்ணாடி உடைந்துவிட்டது. அதைக் கெடுகுறியாக ஓர்ந்து தனது மனைவிக்கு ஏதோ தீங்கு நேர்ந்ததென் றேங்கி அவளது உடல் நலத்தை யுடனே யறிந்து வரும்படி ஆள் அனுப்பினான்.

நெபோலியன் எப்போதும் விதிவசத்தில் நம்பிக்கை கொண்டிருந்தான். தன்னைக்காட்டிலும் உயர்ந்த சக்தியொன்று தனக்கு வழிகாட்டுவதாயும் அச்சக்தியின் விதிப்படியே சகலமும் இயங்குகின்றன வென்றும் சொல்லிவந்தான். "மரணத்தைப் பற்றிய கவலையே எனக்குக் கிடையாது. வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமின் என்றாற் போகா. ஊழிற் பெருவலி யாவுள? அதனைத் தடுத்தற்கும் வெல்லற்கும் எவராலும் இயலாது" என்று நெபோலியன் அடிக்கடி கூறுவான்.

அந்தச் சமயத்தில் கணவருகிருந்து குற்றேவற் செய்ய ஜோஸப்பைன் நெபோலியனிடம் வந்து சேர்ந்தாள். அவளது



பணிவிடையால் நெபோலியனது உடல் சிறிது நலமெய்தியது. வேண்டிய பொருளிருந்தும் நெபோலியன் சாதாரணமாகவும் சிக்கனமாகவும் வசித்துவந்தான். ஆனால், அவனது போர்வீரர்கள் அதிக ஆடம்பரத்துடன் வாழ்ந்துவந்தனர்.

இப்படியிருக்க 1797-ம் வருடம் ஜனவரி மாதம் ஆல்வின்ஜி என்னும் ஆஸ்டிரியச் சேனைத் தலைவர் ஐம்பதினாயிரம் சேனையைத் திரட்டிக்கொண்டு மாண்டுவா நோக்கி வந்துகொண்டிருந்தனர். போப்பும் ஆஸ்டிரியர்களோடு ஒன்று சேர்ந்து நெபோலியனைத் தொலைக்க வெண்ணி ஒரு பெரிய சேனையைத் தயாரித்து வந்தனர். அதனையறிந்த நெபோலியன் தன் சேனையோடு எதிர் நோக்கிச் சென்று ரிவோலி என்னுமிடத்தில் ஆஸ்டிரியர்களை முறியடித்து நாசஞ் செய்தான். ஆஸ்டிரியர்கள் வழக்கம்போல் தோல்வியுற்றுப் புறங்காட்டி யோடினர். நெபோலியன் மாண்டுவாவுக்குத் திரும்பிச் சென்றான்.

மாண்டுவா கோட்டைக்குள் தங்கியிருந்த வர்ம்சர் கடைசியாக நெபோலியற்குக் கீழ்ப்படியலாயினர். வர்ம்சரை நெபோலியன் அன்போடு வரவழைத்து இனிய வார்த்தைகளால் உபசரித்து இருநூறு குதிரைகளையும், ஐந்நூறு சிப்பாய்களையும், ஆறு பீரங்கிகளையும் அவர்க்குத் தந்து, பயமின்றித் தம்மூர் செல்லும்படி உத்தரவளித்தான். இத்தகைய பெருந்தன்மையைக் கண்ட வர்ம்சர் பெரிதும் மகிழ்வுற்று நெபோலியனைப் பார்த்து, "ஐயா, போப் தேசத்தார் உம்மை நஞ்சிட்டுக் கொல்லச் சூழ்ச்சி புரிகின்றனர். நீவிர் ஜாக்கிரதையா யிருப்பீராக" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார். மாண்டுவா கோட்டை அன்றே பிரான்சுக்குச் சொந்தமாயிற்று. இவ்வெற்றியைக் கேள்வியுற்ற ஐரோப்பாவின் தேசமன்னர்கள் பலரும் திகில் கொண்டனர்.

வர்ம்சர் கூறியபடியே, போப் இராஜ்யத்தின் ஜனங்கள் போப்பின் தூண்டுதலால் கலகம் விளைத்தனர்; இதையறிந்த நெபோலியன் உடனே படை யெடுத்துச் சென்று கலகக்காரர்களையும் போப்பையும் சிறைப்படுத்தினான். ஒரு மாதாகோயிலில்

மேரியம்மையின் பெரிய விக்கிரகம் ஒன்றிருந்தது. அந்தச் சிலையின் கண்களினின்றும் நீர் வடிவதுபோற் றோன்றிற்று. போப் இராஜ்யத்தின் நெருக்கடியான நிலைமையைக் கண்டு மேரியம்மன் கண்ணீர் பெருக்குவதாக மதக்குருக்கள் கட்டிய கதை ஊரெங்கும் கிளர்ச்சியை உண்டாக்கியது. இதையறிந்த நெபோலியன் அவ்விக்கிரகத்தை உடனே வரவழைத்துச் சோதித்தான். மதக்குருக்களின் சூழ்ச்சியை நொடிப்பொழுதில் உணர்ந்தான். அதன் கண்களில் காணப்படும் நீர் உண்மையன்றென்றும், அஃது கானல் நீர் போன்ற தோற்றமேயென்றும், அத்தோற்றம் ஒரு கண்ணாடி ஜெபமாலையின் உதவியால் உண்டானதென்றும் ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்து மதக்குருக்களின் சூழ்ச்சியை வெளிப்படுத்தினான்.

கடைசியாகப் போப் சமாதானம் வேண்டினர். நெபோலியனும் அதற்கிணங்கினான். மிகவும் தாராளமான நிபந்தனைகளுடன் சமாதானம் நிறைவேறியது. நெபோலியனது பெருந்தன்மையையும் தாராள குணத்தையும் போப் பெரிதும் பாராட்டினர். இவ்வுடன்படிக்கையின் பின்னர் நெபோலியன் மாண்டுவாவுக்குத் திரும்பிச் சென்றான்.

அத்தருணத்தில், நெபோலியன்மீது அநேக பழிகள் அடங்கிய பிரசுரங்கள் ஐரோப்பாவெங்கும் உலாவின. மதப்பற்றுடையார்க்கு வெறுப்புத் தோன்றுமாறு போப்பின் தாடியைப்பிடித்து நெபோலியன் இழுத்ததாக ஒரு கட்டுக்கதை ஐரோப்பாவெங்கும் பரவியது. காமவேட்கையும், குருதி தாகமும், பரதார விச்சையுங் கொண்ட அரக்கன் என்று நெபோலியன் வருணிக்கப்பட்டான். வீரர்களையும் மற்றவர்களையும் இரக்கமின்றி உயிரோடு நெருப்பில் வாட்டினனென்றும், தனக்குக் கீழ்ப்படியாத வீரர்களைத் தோலுரித்தனனென்றும் பத்திரிகைகள் நெபோலியன்மீது வீண் பழி சுமத்தின. நெபோலியனது புகழையும் பெருமையையும் தாழ்த்துமாறு எதிரிகள் பல சூழ்ச்சிகளிழைத்தும் பயனின்றி முடிந்தது. இப்பிரசுரங்களைப் படித்துப்



பார்த்த நெபோலியன் சிறிதும் கோபியாமல் அருகிருந்த நண்பனைப் பார்த்து, "உண்மையுரைகளே விசனத்தைத் தரவல்லன. என்மீது சுமத்திய பழிகளில் ஒன்றேனும் உண்மையன்று. பரதார இச்சை எனக்கு இயற்கையிலேயே இல்லையென்பது எல்லார்க்கும் தெரிந்ததொன்றும். ஈரமுடையாரும், வீரமுடையாரும், கல்வியின் மெய்ந்நெறி வாரமுடையாரும் மற்றவனது தாரத்தை இச்சிக்கும் இயல்புடையவரன்று. மேலும், தீய காரியங்களை நினைத்தற்கும் எனக்கு ஓய்வு என்பது கிடையாது. எனினும், இப்பழிமொழிகளை நம்புவாருமுளர். நெபோலியன், உடலெலாம் மயிர் முளைத்தவனாய் நிமிர்ந்து நடக்கவியலாது நான்கு கால்களால் நடக்கின்றான் என்று எவனாவது அச்சிட்டு வெளிப்படுத்தினன் அதனையும் நம்பி, கடவுளால் நெபோலியன் நன்கு தண்டிக்கப்பட்டான் என்று சொல்வாரும் பலர் உண்டு" என்று சொன்னான்.

மாண்டுவா நெபோலியனுக்கு வசமாயிற்று. ஆஸ்டிரியர்கள் இதாலியாவினின்றும் துரத்தப்பட்டனர். இதாலியாவின் எல்லாத் தேசங்களும் பிரான்சுடன் சமாதானம் செய்துகொண்டன. ஆஸ்டிரியர் மாத்திரம் குடியரசு நாடுடன் சமாதானம் செய்துகொள்ள இசையவில்லை. நெபோலியனை எதிர்த்துத் தாக்குமாறு மீண்டும் ஒரு பெரிய சேனையை ஆஸ்டிரியர் திரட்டி வந்தனர். அதனையறிந்த நெபோலியன் கார்னிக் ஆல்ப்ஸ் என்னும் மலையைக் கடந்து ஆஸ்டிரியாவுக்குள் நுழைந்து அதன் தலைநகராகிய வியன்னாவைத் தாக்கக்கருதி ஐம்பதாயிரம் சிப்பாய்களுடன் புறப்பட்டான். மார்ச்சு மாதம் 10-தேதி டேக்லியாமெண்டோ என்னும் நதிக்கரை சேர்ந்தான். அந்நதியின் அக்கரையில் தொண்ணூறாயிரம் ஆஸ்டிரியச் சேனை தங்கியிருந்தது. ஆஸ்டிரியர்கள் ஏமாந்திருந்த தருணத்தில் நெபோலியன் திடீரென்று ஆற்றைக் கடந்து எதிரிகளை முனைந்து தாக்கினான். ஆஸ்டிரிய வீரர்கள் பலர் மாண்டனர். கையிழந்தாரும், காலறுந்தாரும், உடல் சரிந்தாரும் யுத்தகளமெங்கும் நிறைந்தனர்.

இரத்தம் ஆறாக ஓடிற்று. ஆஸ்டிரியர்கள் புறங்காட்டி ஓடினர். ஓடுபவர்களைப் பிரன்சுவீரர்கள் துரத்திக்கொண்டே ஆல்ப்ஸ் மலையைக் கடந்து ஆஸ்டிரியப் பிரதேசம் அணுகினர். உடனே ஆஸ்டிரிய அரசனின் திருத்தம்பியும் ஆஸ்டிரியச் சேனைக்கு அப்போது தளகர்த்தருமான சார்லஸ் என்பாருக்கு நெபோலியன் பின்வரும் நிருபம் அனுப்பினான். "தளகர்த்தரே! இச்சண்டையானது ஆறு வருடங்களாக நடந்து வருகின்றதன்றோ? கணக்கற்ற மக்களை நாம் கொல்லவில்லையா? மக்களுக்கு நாம் இழைத்த தீங்குகள் போதாவோ? இனியாவது அவர்கட்கு ஓய்வு அளிக்கக்கூடாதோ? பிரான்சின் குடியரசுக்கு விரோதமாகச் சண்டைக்கு வந்தவர்களெல்லாம் தத்தம் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டனர். நம் அரசாங்கம் ஒன்றே விரோதத்தைப் பாராட்டுகின்றது. இனிச் செயப்புகும் யுத்தத்தில் இருதிறத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் துறப்பது திண்ணம். அத்தகைய யுத்தம் புரிந்து வெற்றியுறுவதைக் காட்டிலும் உடன்படிக்கை யாற்றி எண்ணிறந்த மக்களின் உயிரைக் காத்தலே சாலச் சிறந்ததன்றோ?" இவ்வாறெழுதியும் ஆஸ்டிரியர்கள் சமாதானத்துக்கிசைந்தாரல்லர். ஆகையால் ஆஸ்டிரியர்களைத் துரத்திக்கொண்டே பிரன்சு சேனை லியூபன் என்னும் இடத்தை நெருங்கிற்று. ஒரு சிறிய சேனையுடன் சார்லன் வியன்னைக்குள் நுழைந்தனன்.

வியன்னாவில் ஜனங்கள் பெருந்திகில் அடைந்தனர். தனவந்தர்கள் தத்தம் பொருளைத் திரட்டிக்கொண்டு ஊர்விட்டுப் போயினர். ஜனங்களெல்லாம் சமாதானமே சிறந்ததென்று கூக்குரலிட்டார்கள். உடனே சமாதானச் செய்தி தூதர்கள் மூலம் நெபோலியற்கு அனுப்பப்பட்டது. இருதிறத்தாரும் சமாதானவிச்சைய ராதலால் அபிப்பிராய பேத மதிகமின்றியே லியூபன் எனுமிடத்தில் சமாதானம் விரைவில் நிறைவேறியது. நெபோலியனும் ஆஸ்டிரியாவை விட்டுத் திரும்பினான்.

இதாலியா முழுவதும் பிரான்சுக்குச் சொந்தமாயிற்று. தேசமெங்கும் குடியரசு வழங்கப்பட்டது. நெபோலியன்



சென்றவிடமெலாம் மாதர்கள் மலர் தூவி அவனை வாழ்த்தினர். நாடெங்கும் வெற்றிவிழாக் கொண்டாடப்பட்டது.

மிலான் நகரத்தில் பெரிய மாளிகை யொன்றமைத்து அதில் நெபோலியன் தன் மனைவியுடன் சின்னாள் வசித்துவந்தான். இதாலியாதேசத்தில் வாய்க்கால்கள், நீரருவிகள், அகன்ற சாலைவழிகள் முதலியன உண்டாக்கினான். பல பாலங்களையும், துறைமுகங்களையும் எடுப்பித்தான். கோட்டை கொத்தளங்களைச் சீர்திருத்தினான். வியாபாரஸ்தலங்களையும் கல்விச்சாலைகளையும் கட்டினான். இராணுவத்தையும் கப்பற் படையையும் பலப்படுத்தினான். இங்ஙனம், பல துறைகளிலும் சீர்திருத்தம் செய்தபின்னர் நெபோலியன் 1797-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-உ யன்று பாரிஸ் நகரம் சென்றான்.

# அத்தியாயம்—5

## எகிப்து யாத்திரை.

நெபோலியன் பாரிஸ் சேர்ந்த செய்தி எங்கும் பரவியது. நகர மாந்தர்கள் அவனது வருகையைப் பாராட்டி விழாவொன்று நடத்தி, அதில் நெபோலியனைப் பலவாறு வாழ்த்தினர்கள். நெபோலியற்குக் கௌரவப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. 1798-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-தேதி யன்று 16-வது லூயி மன்னன் கழுவேற்றப்பட்ட நாளின் வருடக் கொண்டாட்டம் வழக்கம்போல் நடைபெற்றது. அவ்விழாவிற்கு வரும்படி நெபோலியனை வருந்தி யழைத்தார்கள். அதற்கு நெபோலியன், "ஒரு துக்ககரமான சம்பவத்தை இன்று கொண்டாடப் போகிறீர்கள். அஃது சிலர்க்கே இன்பம் பயக்கவல்லது. வெற்றியைக் கொண்டாடுவதும் யுத்தத்தில் இறந்தவர்களைக் குறித்துத் துக்கப்படுவதும் தருமமாகும். இறந்த மனிதனது இழவைக் கொண்டாடுவது எந்த அரசாங்கத்துக்கும் ஏற்புடைத்தன்று. அமைதியையழித்து ஆத்திரத்தைப் பெருக்குவதே அதனாலாய பயனாகும். அரசாங்கத்தின் பலத்தைக் குறைத்து அதன் அஸ்திவாரத்தையே அசைக்கச் செய்வது இக்கொண்டாட்டம் ஆகும்" என்று உரைத்தான். எனினும், ஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவ்விழாவில் அதிகமாய்க் கலந்துகொள்ளாமல் பலரில் தானும் ஒருவனாக இருப்பதற்கு நெபோலியன் இசைந்தான். விழாவில், மாந்தர்களெல்லாம் நெபோலியனையே கண்ணிமையாது நோக்கினர். விழா முடிவு பெற்றதும், "நெபோலியன் நீடு வாழ்க!" என்னும் பெரு முழக்கம் உண்டாயது. "இப்போது டைரக்டர்களாயுள்ள வக்கீல்களைத் துரத்திவிட்டு நெபோலியனையே அரசனாக்குவோம்" என்று நகர மாந்தர்கள் தெருக்களிலும் வீதிகளிலும் பேசியதைச்





செவியுற்ற டைரக்டர்களுக்கு நெபோலியன்மீது உண்டாய பொறாமை காட்டுத்தீப்போல் பெருகிற்று.

கங்கை, ஸிந்து முதலிய ஜீவ நதிகளால் பாயப்பெற்ற இந்தியாவின் நீர் வளப்பத்தினையும், ஜனத்தொகையினையும், மதப் பெருமையினையும் புத்தகவாயிலாக உணர்ந்த நெபோலியன் இந்தியாவைக் கைப்பற்ற எண்ணினான். இளம்பிராய முதற்கொண்டே நெபோலியனது மனதில் இவ்வெண்ணம் குடிகொண்டிருந்தது. இதாலியாவினின்று திரும்பிவந்த பின்னர் அவ்வெண்ணம் பலப்பட்டது. அதனை நிறைவேற்ற நெபோலியன் தீர்மானித்தான். ஆனால், எகிப்து தேசத்தைக் கைப்பற்றிய பின்னரே இந்தியாவின்மீது படையெடுத்துச் செல்லுதல் சாத்தியமாகுமென அறிந்தான். ஆகையால், எகிப்து தேசத்தை முதலில் கைப்பற்றி, அதன்பிறகு அறுபதினாயிரம் சேனையுடன் ஸிந்து நதியைக் கடந்து, ஆங்குள்ள ஆங்கில மக்களைத் துரத்தி, இந்தியாவில் குடியரசினை நிலைநாட்டத் தீர்மானித்தான். எகிப்து தேசத்தின் சரித்திரங்களையும் பூகோளத்தையும் இரவும் பகலுமாகப் படித்து வந்தான்.

ஆதிகாலத்தில் உன்னத நாகரீகம் பெற்று விளங்கிய எகிப்து தேசம் பதினெட்டாம் நூற்றாண்டில் தனது நாகரீக மனைத்து மிழந்து சீர்கேடான நிலையிலிருந்தது. எகிப்து தேசத்தில் நூறு வருடத்துக் கொரு மழை பெய்வது அரிது. எனினும் நீல நதியின் நீர்ப்பெருக்கினால் நிலம் வளப்பமுடையதாயிருந்தது. இருபத்தைந்து லட்சம் ஜனங்கள் அப்போது அதில் வசித்து வந்தனர். காப்ட்ஸ், அராபியர், துருக்கர்கள், மாமுலுக்குகள் என்னும் நால்வகைச் சாதியர் இருந்தனர். இப்ராஹிம், மோரத் என்னும் இரண்டு மாமுலூக் தலைவர்களே எகிப்து முழுவதையும் அரசாண்டுவந்தனர். இவர்களுடைய மாளிகைகளில் காமவேட்கையும் குடிவெறியுமே தலைவிரித்தாடின. இவர்கள், குடிமக்களைத் துன்புறுத்தியும், தாழ்த்தியும், ஏமாற்றியும் கொடுங்கோலோச்சி வந்தனர்.

இத்தகைய எகிப்து நாட்டைக் கைப்பற்றி அடிமைத் தனத்தை ஒழித்துச் சுதந்தரத்தை நிலைநிறுத்தி அதன்பிறகு இந்தியாவின்மேல் படையெடுத்துச் செல்லுதலே தனது ஆற்றலுக்குகந்தது என நெபோலியன் தீர்மானித்துக்கொண்டான். தனது கருத்தினை டைரக்டர்களுக்குத் தெளிவுறச் சொன்னான். நெபோலியன்மீது பொறாமையுற்ற டைரக்டர்கள் பிரான்சினின்றும் நெபோலியனை வெளியேற்றுதற்கு அதுவே தக்க தருணமென்றெண்ணி உடனே இணங்கினர். நெபோலியனது யாத்திரைக்கு வேண்டியன யாவும் விரைவில் தயாரிக்கப்பட்டன. நாற்பத்தாறாயிரம் வீரர்களும், விஞ்ஞான நிபுணர்களும், கணித நூல் வல்லாரும், தத்துவ அறிஞர்களும் தயாராயினர். பெரிய கப்பல் ஒன்றும், சிறிய கப்பல்கள் முப்பதும் சேகரிக்கப்பட்டன. 1798-ம் வருடம் மே மாதம் 19-தேதி நெபோலியன் பரிவாரங்களுடன் புறப்பட்டான்.

நெபோலியன் எந்த தேசத்துக்குப் போனானென்பது டைரக்டர்களைத் தவிர்த்த மற்ற எவர்க்குக் தெரியாது. இந்தியாவின்மீது படையெடுத்துச் சென்றான் என்றனர் சிலர். இங்கிலாந்து நோக்கிச் சென்றான் என்றனர் சிலர். சூயஸ் கால்வாயை வெட்டச் சென்றான் என்றனர் வேறு சிலர். இங்ஙனம், பலர் பலவிதமாகக் கூறினார்கள். நெபோலியனது உட்கருத்தினை அறிய முடியாமல் ஆங்கிலேயர் திகைத்தனர். மந்திராலோசனை சபையார் மத்திய தரைக்கடலில் பலமான கப்பற்படையொன்றை யமைத்து, நெபோலியனைத் தேடிச் செல்லும் பொருட்டு லார்ட் நெல்சனைக் கப்பல் தலைவனாக நியமித்தனர். நெல்சன், நெபோலியனைப் போன்ற ஓர் வீரன்; நல்ல இராஜ தந்திரி; யுத்த தர்மத்தை நன்கறிந்தவன்; யுத்த தந்திரங்களில் வல்லுநன்; அவன் பெருத்த கப்பற்படையோடு நெபோலியனைத் தேடித் திரிந்துகொண்டிருந்தான்.

இருபத்தேழு நாட்களுக்குப் பின்னர் மால்டா தீவின் வெண்மலைச் சிகரங்களை நெபோலியன் கண்டான். உடனே அப்பட்டினத்திலிறங்கி அதனைக் கைப்பற்றினான். அங்கே



ஸ்தல சுய ஆட்சியை யமைத்து, அரசியல் திட்டத்தை மாற்றி, துருக்கிக் கைதிகளையெல்லாம் விடுவித்துக் குடிமக்களின் நன்மதிப்பைப் பெற்றான். ஒரு வாரத்தில் இவையனைத்தும் முடிவு பெற்றபின் நெபோலியனது பரிவாரங்கள் எகிப்து நோக்கிப் புறப்பட்டன.

ஜூலை மாதம் முதல் தேதி யன்று பிரெஞ்சுசேனை எகிப்து கடற்கரையைக் காணப்பெற்று அபேகூர் குடாவில் இறங்கிற்று. நெபோலியன் தன் சேனையை உடனே அணிவகுத்துப் போர் வீரர்களுக்குப் பின்வரும் நற்புத்தி கூறினான்.

"வீரர்களே! நீங்கள் இப்போது மகம்மதியர் மீது படையெடுக்கப் போகின்றீர்கள். 'கடவுள் ஒருவர். மகம்மதே அவரது தூதர்' என்பது அவர்களது மதக் கொள்கையாகும். அதைக்குறித்து அவர்களிடம் விதண்டாவாதம் செய்யாதீர்கள். இதாலியர்களை நீங்கள் நேசித்தது போலவே மகம்மதியர்களையும் நேசியுங்கள். மதக்குருக்களிடம் மரியாதை காட்டுங்கள். இயேசுநாதருடைய வேத புத்தகத்தை நீங்கள் எவ்வாறு போற்றுகிறீர்களோ அவ்வாறே குர்ரான் வேதத்தையும் பாராட்டுங்கள். எல்லா மதங்களும் போற்றத்தக்கனவே. மகம்மதியர்களுக்கும் நமக்கும் பழக்க வழக்கங்களில் வேற்றுமை யநேகம் உண்டு. எனினும் இந்நாட்டின் ஆசாரங்களை அவமதிக்காதீர்கள். கொள்ளையடிக்காதீர்கள். அப்படிச் செய்தல் நமது நோக்கத்துக்கு முற்றிலும் விரோதமென்றறிக."

இங்ஙனம் வீரர்களுக்கு நற்புத்தி புகட்டியபின் அலெக்ஸாண்டிரியா நகரை உடனே தாக்குமாறு உத்தரவிட்டான். ஆங்குள்ள மாமுலூக்குகள் பெருந் திரட் சேனையொடு எதிர்த்தனர். கடும் போர் நிகழ்ந்தது. முடிவில், மாமுலூக்குகள் தோல்வியுற்று ஓடி மறைந்தனர். அலெக்ஸாண்டிரியா நகர் நெபோலியனுக்குச் சொந்தமாயிற்று. நெபோலியன் ஜனங்களுக்கு ஒரு அறிக்கை யனுப்பினான்.

"எகிப்து ஜனங்களே! உங்களது உரிமைகளைக் காக்கவும், உம்மைத் துன்புறுத்துவோரைத் தண்டிக்கவும், உமது கடவுள் பக்தியைப் பெருக்குதற்குமே நாங்கள் இங்கு வந்துளோம். உமது மதம் எமக்கும் சம்மதமே. கடவுள்முன் எல்லோரும் சமமானவர்களே. வாழ்க்கைக்குரிய எல்லாச் சுகங்களும் மாமுலூக்குகளுக்கே உரியனவென்றும், வளம் பொருந்திய இடமெல்லாம அவர்களுக்கே சொந்தமென்றும், சிறந்த குதிரைகள், பொருள் முதலியன அவர்களுக்கே தக்கனவென்றும் தரும சாஸ்திரம் எங்கேனும் கூறிற்றுண்டோ? அறநெறி தவறிய மாமுலூக்குகளின் அதிகாரம் அழியுமாறு அருட்கடவுள் ஆணையிட்டுள்ளார். அதற்கே, நாங்களும் வந்துளோம்."

இவ்வறிக்கையைக் கண்ட மகாஜனங்கள் மகிழ்ச்சியுற்று நெபோலியற்கு நல்வாவு கூறினர். புதிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. சம உரிமை எல்லோர்க்கும் வழங்கப்பட்டது. துறைமுகம் சீர்திருத்தப்பட்டது. கல்விச்சாலைகளும், கைத்தொழிற் சாலைகளும், வியாபார வசதிகளும் உண்டாக்கப்பட்டன. நெபோலியனை ஜனங்கள் வாயார வாழ்த்தினர்.

பிரான்ஸ் கப்பல்கள் அபோகிர் குடாவில் தங்கியிருத்தல் அபாயகரமானதால் கப்பல்களையுடனே அலெக்ஸாண்டிரியா குடாவுக்குச் செலுத்துமாறு புரூயீஸ் என்னும் கப்பற்றலைவருக்கு ஓர் உத்தரவும், ரோஸெட்டா நதியின் முகத்துவாரஞ் சென்று தனது வருகையை எதிர்பார்த்திருக்குமாறு மாக்கலக் கூட்டத்தாருக்கு ஓர் உத்தரவும் அனுப்பிவிட்டு, நெபோலியன் தனது சேனையுடன் கைரோ நகரை நோக்கிப் புறப்பட்டான். இடையிலுள்ள அறுபது மைல் அகன்ற பாலைவனத்தைக் கடத்தல் எளிதன்று. அனல்போல் எரிக்கும் கதிரவன் வெப்பம் வீரர்களின் தைரியத்தையுங் கொள்ளைகொண்டது.

படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகரும்கா
முடியவேம் முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வேம் மழையும்வேம் மின்னிமே
டிடியும்வேம் என்னில்வே றியாவைவே வாதவே.

—கம்பர்



ஆங்காங்குள்ள சிறு கிணறுகளும் எதிரிகளால் தூர்க்கப்பட்டமையால் நீர் வேட்கையாலும், சூரிய வெப்பத்தாலும், வீரர்கள் மனந் தளர்ந்தனர். நெபோலியன் மாத்திரம் தளராது நடந்து சென்று வீரர்களை உற்சாகப்படுத்தி வந்தான். ஐந்து நாட்கள் இவ்வாறு கழிந்தபின்,

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறி யளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த (நீல நதியினை) வீரர் கண்டார்.

—கம்பர்

நீல நதியைக் கண்ட வீரர்கள் மெய்ம்மறந்து ஆற்றிலிறங்கி நெடுநேரம் நீராடிக் களித்தனர். அத்தருணம் மாக்கலக் கூட்டமும் நெபோலியனது கட்டளைப்படியே குறித்த காலத்தில் வந்து சேர்ந்தது. மகிழ்ச்சியின் மிகுதியால் வீரர்கள் ஆடினர். பாடினர். ஓடினர். "கொல்லாத விரதத்தார்தம் கடவுளர் கூட்டம் ஒத்தார்." சிறிது நேரங் கழிந்தபின்னர் சேனை முழுவதும் புறப்பட்டு ஏழுநாள் நடந்து சென்று கைரோவை நெருங்கிற்று.

நெபோலியன் உடனே போர்செயத் தொடங்கினன். கைரோ நகரத்தின்மீது பீரங்கிகுண்டுகள் எறியப்பட்டன. பீரங்கி முழக்கத்தைக் கேட்ட மூரத்பேவும் சேனையைத் தயாரித்து அணிவகுத்து நின்றான். மாமுலூக் வீரர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்; யுத்தப் பயிற்சியில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள்; உயிருக்கஞ்சாது போர்புரியும் தீரர்கள். பிரான்சு சேனைக்கும் மூரத்பேவின் சேனைக்கும் யுத்தம் நடந்தது. பிரான்சு சேனை வெற்றியுற்றது. பகைவர்கள் ஓடி ஒளித்தனர். மூரத்பேவும் நகரை நீத்து உயிர் தப்பி ஓடினன். கைரோ நகரம் பிரான்சுக்குச் சொந்தமாயிற்று.

நெபோலியன், கைரோவில் புதிய சட்டங்களையுந் திட்டங்களையும் ஏற்படுத்தி ஒரு பெரிய தேசச்சபையை ஸ்தாபித்தான். வைத்திய சாலைகளும், கலாசாலைகளும், கைத்தொழிற்சாலைகளும்,

சுரங்கங்களும், இயந்திரச்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. குடிமக்கள் மனமுவந்து நெபோலியனைத் தெய்வம்போல் பாராட்டினார்கள். பிரன்சு சிப்பாய்கள் எகிப்து வாசிகளோடு மிகுவிரைவில் நட்புக்கொண்டு உறவினர்போல் அகமகிழ்ந்து வாழ்ந்தனர்.

ஒருநாள் சில பிரமுகர்களோடு நெபோலியன் பேசிக்கொண்டிருந்தபோது, சில திருடர்கள் ஒரு குடியானவனைக் கொன்று அவனது ஆடு மாடுகளைக் கவர்ந்து சென்றதாக நெபோலியற்குச் செய்தி வந்தது. நெபோலியன் அருகிருந்த ஒரு உத்தியோகஸ்தனைப் பார்த்து, "முந்நூறு குதிரைப் படையோடு சென்று அக்கள்வர்களைப் பிடித்து என்னிடம் கொணர்க" என்று கட்டளையிட்டான். அருகேயிருந்த ஒரு பிரமுகர் நெபோலியனைப் பார்த்து, "ஐயா! அந்தக் குடியானவன் உமது சகோதரன் அல்லனே. அவனது மரணத்தைக் குறித்து உமக்கு இவ்வளவு கவலையேன்" என்றனர். அதற்கு நெபோலியன், "ஐயா! அக்குடியானவனைப் பாதுகாக்கும் கடமை எனக்குக் கடவுளால் அளிக்கப்பட்டுளது. ஆகலால், உம்மனைவரைக் காட்டினும் அவனே எனக்குச் சிறந்தவன்" என நெபோலியன் மறுமொழி கூறினன்.

இங்ஙனம் நெபோலியன் கைரோ நகரில் தங்கியிருக்கும்போது புரூயிஸ் என்பவன் நெபோலியனது உத்தரவுப்படி கப்பல்களை அலெக்ஸாண்டிரியா குடாவுக்குள் செலுத்தாமல் அபெகூர் குடாவிலேயே தங்கியிருந்தான். பிரன்சுப் படையைத் தேடித் திரிந்துகொண்டிருந்த லார்ட் நெல்சன் கப்பற்படையுடன் அபெகூர் குடாவிற்குச் சென்று பிரன்சுக் கப்பல்களை வளைத்துக்கொண்டு வெஞ்சமர் புரிந்தான். பிரன்சுக்காரர்கள் தோல்வியுற்றனர். நான்கு பிரன்சுக் கப்பல்கள் தப்பித்துக்கொண்டு மால்டா சேர்ந்தன. மற்றைக் கப்பல்கள் அனைத்தும் நீர்க்கிரையாயின. நெபோலியனது அருயிர் நண்பனும் பிரன்சுக் கப்பற்றலைவனுமாகிய புரூயிஸ் என்பவன் புண்பட்டு உயிர் துறந்தான். சுமார் மூவாயிரம் பிரன்சு வீரர்கள் கைதியாக்கப்பட்டனர்.



இச்செய்தி நெபோலியனுக் கெட்டியது. அவனது ஆசையெல்லாம் கனவாய் முடிந்தது. பிரான்சு தேசத்தினின்று உதவியை எதிர்பார்த்தலும் எகிப்து தேசத்தினின்று பிரான்சுக்குத் திரும்பிப்போதலும் முடியாத காரியமாயின. நெபோலியனுக்கு எகிப்து தேசமே சிறைச்சாலையாய் முடிந்தது. எனினும், வெற்றியையும் தோல்வியையும் சமமாகப் பாவிக்கும் நெபோலியன் மனோதிடத்தைச் சிறிதும் விடாது தனது வீரர்களிடத்து இனிமையாகவும் உற்சாகத்துடனும் பேசிவந்தான். இந்நெருக்கடியான நிலையிலும் புரூயிஸின் மனைவிக்கு நெபோலியன் ஒரு கடிதம் எழுதினான். அந்நிருபம் பின்வருமாறு—

"அம்மா! போர் முனையில் மார்பில் குண்டுபட்டு நம் கணவர் இறந்தனர். நிகரற்ற போர்வீரனை நம் தாய்நாடிழந்தது. அரிய நண்பனை நானிழந்தேன். ஆருயிர்க் காதலனைத் தாங்கள் இழந்தீர்கள். அருமைக் காதலரைப் பிரிதல் மரணவேதனையினும் துக்ககரமானது. அஃது மனதின் ஆற்றலை அழிக்கவும் வல்லது. உலகத்தில் வேறு கதியின்றித் தனியே கைவிடப்பட்டோம் என்னும் எண்ணத்தையும், உலகில் உயிர்வாழ்தலினும் இறத்தலே சாலச் சிறந்ததெனும் துணிவையும் அஃது தரவல்லது. ஆனாலும், அத்தகைய துன்பங்களுக்கிடையே மக்களை மார்புறத் தழுவுங்கால் மனதில் அன்பும் இரக்கமுந் தோன்றி, அந்தோ! இம்மக்களின் நலத்தைக் கருதியாவது உயிர் வாழ்தல் வேண்டுமே என்னும் எண்ணம் உதிக்கும். அம்மா! அவ்வெண்ணமே உமக்கு உறுதி பயப்பதோர் உத்தம வழியாகும். உம் மக்களைக் காப்பாற்றுவதும் அவர்களுக்குக் கல்வி புகட்டுவதும் உமது கடமையாகும். உமது கணவரின் வீரத்தையும், அவரது வீரச் செயல்களையும், உம் மக்கட்குச் சொல்லி அவர்களையும் உத்தம வீராக்குங்கள். அவர்களுடைய நலத்தைக் கருதி வாழ்க்கையில் உமக்கோர் விருப்பமுண்டாகும். அப்போது எனது உதவிகளும் உமக்கோர் ஆறுதலை யுண்டாக்கும். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ எனத் தேர்ந்து மனதைத் திடப்படுத்துங்கள். இதுவே எனது வேண்டுகோள்."

இந்நிருபம் நெபோலியனது நட்பின் திறத்தை நன்கு விளக்குகிறதன்றோ?

இப்படியிருக்க, பிரான்சு தேசத்து மாதர்கள் பலருக்கு ஜோஸப்பைன்மீது பொறாமையுண்டாயிற்று. நெபோலியனது தங்கைமார்களுக்கும் அவள்மீது பொறாமை யுண்டாயது. நெபோலியன் ஜோஸப்பைனுக்கு எழுதிய கடிதங்களும் ஜோஸப்பைன் நெபோலியற்கு எழுதிய கடிதங்களும் இடைவழியில் பிரித்துப் பார்க்கப்பட்டு நிறுத்தப்பட்டன.

ஜோஸப்பைன்மீது பொறாமை கொண்டவர்கள் அவள் மீது பல பொய்ப்பழிகளைப் பிரான்சுதேசத்தில் பரப்பிவந்தனர். ஜோஸப்பைன் தன் கணவனை முற்றும் மறந்துவிட்டதாகவும், காம வசனத்தினளாய்ப் பலரோடும் உறவாடுவதாயும், கற்பிழந்து பலரால் தூற்றப்படுவதாயும் கடிதங்கள் நெபோலியற்கு அனுப்பப் பட்டன. அக்கடிதங்களில் குறித்துள்ளனவற்றை நெபோலியன் சிறிதும் நம்பவில்லையாயினும் பழிச்சொற்களைக் காற்றுதலைத் தனது மனைவியைக் கண்டித்து ஒரு நிருபம் விடுத்தான். அந்நிருபம் இடையில் வழிமறிக்கப்படாது ஜோஸப்பைனுக்குக் கிடைத்தது. அதனைப் படித்துணர்ந்த ஜோஸப்பைன் பெரிதும் கவலையுற்று மனமுடைந்தனள். தங்கள் நாயகரைக் காட்டினும் சிறந்த தெய்வம் வேறில்லை தென்றெண்ணும் மங்கைமார் மீதும் பழிகள் கூறுதல் தீயோர்க்கு இயல்பே யன்றோ?

பிறகு, நெபோலியன் எக்கர் நகரை நோக்கிச் சேனையுடன் புறப்பட்டான். எக்கர் என்பது சிரியா தேசத்தின் முக்கிய இராணுவத்தலம். அஃது சிரியாநாடுகளுக்கு ஒரு திறவுகோல் போன்றது. அதன் கோட்டையும் கொத்தளமும் மிகவும் வலிமையோடிருந்தன. அக்கோட்டையைக் கைப்பற்றுவோர் சிரியா தேசத்தை எளிதில் கைப்பற்றக்கூடுமாதலால், அக்கரைக் கைப்பற்றிய பின்னர் சிரியா தேசத்தையும் வசமாக்கிக் கொண்டு இடையூறின்றி இந்தியாவின்மீது படையெடுக்கவெண்ணிய நெபோலியன் அக்கர் கோட்டையை முற்றுகையிட்டான்.



இவ்வமயத்தில், இங்கிலாந்து தேசம் துருக்கி தேசத்தையும் ருஷியாதேசத்தையும் நெபோலியனுடன் போர்புரியும்படி தூண்டிற்று. தனது நாட்டிற்கருகே நெபோலியன் ஒரு பெருஞ் சேனையுடனிருப்பது தனக்குப் பெரிய ஆபத்தென்றெண்ணித் துருக்கி மன்னன் போருக்குத் தயாராயினன். குடியரசுணர்ச்சிக்கு எப்போதும் விரோதியான ருஷியா மன்னனும் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு எகிப்து சேர்ந்தான். ருஷியாவின் கப்பற்படையும், துருக்கிதேசத்துக் கப்பற்படையும், ஆங்கிலேயர் கப்பற்படையும், ஒன்று சேர்ந்து மத்திய தரைக்கடலில் தங்கியிருந்தன. சிரியாவிலும் பெருத்த சேனையொன்று திரட்டப் பட்டது. இந்தியாவிலிருந்து ஒரு படை ஆங்கிலேயரால் கொண்டு வரப்பட்டது.

முற்றுகை அறுபது நாள் நடந்தது. அப்போது நெபோலியற்கு அநேக இடையூறுகள் நேர்ந்தன. தன்னிடமிருந்த உணவுப் பொருள்கள் ஒழிந்தன. தனக்கு உணவுப் பொருள்கள் கொணர்ந்த படகுகளும் எதிரிகளின் கையில் சிக்குண்டன. அநேக வீரர்கள் நாள் தோறும் இறந்துபட்டனர். தவிரவும், பிளேக் என்னும் கொடிய நோயால் அநேக வீரர்கள் மாண்டனர். நெபோலியன் உடனே ஒரு தனி வைத்தியசாலையை அமைத்து அதில் அக்கொள்ளைநோய் கொண்ட வீரர்களுக்குச் சிகிச்சை செய்யவைத்தான். வைத்தியர்கள் அவ்வியாதியுடையார்களிடம் நெருங்கப் பயந்தனர்: அதையுணர்ந்த நெபோலியன் தானே நேரிற் சென்று அவ்வீரர்களுக்குச் சிகிச்சை செய்து வந்தான்.

அத்தருணத்தில், துருக்கிச் சேனையும், ஆங்கிலச் சேனையும் ஒன்று சேர்ந்து பிரான்சுப் படையை எதிர்த்தன. கடும்போர் நிகழ்ந்தது. ஆங்கிலேயரது கப்பற் றலைவனான ஸர் ஸிட்னி ஸ்மித் என்பவன் மிகுந்த வீரத்துடன் போர்புரிந்தான். இருதிறத்திலும் எண்ணிறந்த வீரர்கள் இறந்தனர். இறந்தவர்களைப் புதைக்கவும் நேரமின்மையால் அப்பிணங்கள் அழுகி ஆகாயமெங்கும் துர்நாற்றம் வீசின. பிரான்சுசேனை பலக்குறைவுற்றது. எக்கரை

வெல்லுதலினிமுடியாதென்றுணர்ந்த நெபோலியன் முற்றுகையை விடுத்து எகிப்து நோக்கிச் சேனையொடும் புறப்பட்டான்.

வைத்தியசாலையிலிருந்த ஆயிரத்திருநூறு வீரர்கள் குதிரைகள் மீதும், பல்லக்குகளிலும் ஏறிச் சென்றனர். வழியில் அநேகர்க்குப் பிளேக் நோய் கண்டது. ஒவ்வொரு நோயாளியிடத்தும் நெபோலியன் பயமின்றிச் சென்று இனிய வார்த்தைகளால் அவர்களை மகிழ்வித்தான். ஒருநாள், எழு நோயாளிகள் தூக்கிச் செல்லற்கும் சக்தியற்று இறக்குந் தறுவாயிலிருந்தனர். வழியில் விடுத்துச் சென்றால் அவ்வேழுபேரும் துருக்கியர்களால் இம்சிக்கப்பட்டுக் கொல்லப்படுவார்களென்பது திண்ணம். அவ்வேழுபேரையுந் தூக்கிச் செல்லவும் முடியாமல், விடுத்துச் செல்லவும் மனமில்லாது நெபோலியன் சற்றுநேரம் யோசித்து வைத்தியரைப் பார்த்து, "அவ்வெழுவருக்கும் அபினி மாத்திரையைக் கொடுத்து அவர்களது மரணத்தைத் துரிதப்படுத்துங்கள்" என்று சொன்னான். அவ்வுரைகேட்ட வைத்தியர், "ஐயா! சுகமாக்குதலே எமது தொழில்; கொல்லுவதன்று" எனப் பகர்ந்தனர். இதைக்கேட்ட நெபோலியன் பதில் பேசாது வாளாவிருந்தனன். பிறகு, ஐந்நூறு சிப்பாய்களை அவ்வேழு நோயாளிகட்குக் காவலாக வைத்துவிட்டு, எஞ்சிய சேனையுடன் நெபோலியன் கைரோ நோக்கிச் சென்றான். பாலைவனத்தைக் கடந்து செல்லும்போது பாலையின் கொடுமையாலும், நோயின் மிகுதியாலும் அநேகர் இறந்தனர். சுமார் ஒரு மாதம் நடந்து கைரோ நகர் சேர்ந்தனர்.

ஐந்நூறு நோயாளிகளை நெபோலியன் விஷமிட்டுக் கொன்றனன் என்ற வதந்தி ஐரோப்பாவெங்கும் பரவியதுமல்லாமல் அநேகரால் நம்பப்பட்டும் வந்தது. நம்மினவர்கள் நெபோலியனை இரக்கமில் அரக்கனென்றிகழ்ந்தனர். "விஷமிட்டுக் கொன்றனனோ அல்லது இல்லையோ, உண்மை எதுவாயினும் ஆகுக. ஆனால், விஷமிடும்படி நெபோலியன் வைத்தியருக்குரைத்தது உண்மையே யாகும். நெபோலியனது கொடிய



மனப்பான்மைக்கு அஃதொன்றே போதுமான சான்றாயுளது" என்றனர் சிலர். இதைக்குறித்து நெபோலியனது பதில் பின் வருமாறு—

"துருக்கியர்களால் துன்புறுத்தப்பட்டுக் கொலையுணும் படி அவ்வெழுவரையுந் தனியே விட்டு வருவதைத்தான் பாவம் எனக் கருதுகிறேன். அத்தகைய சந்தர்ப்பத்தில் அபினி கொடுத்து அவர்களது மரணத்தைத் துரிதப்படுத்துதலே புண்ணியம் என்று நான் நம்புகின்றேன். நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்குப் பின்னர் விரோதிகளால் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படுதலினும் இக்கணமே அமைதியோடு இறத்தலையே அறிவுள்ள எவனும் விரும்புவான் நானும் அதனையே விரும்புவேன். அத்தகைய சந்தர்ப்பத்தில் நான் இருந்திருப்பின் அபினி கொடுக்கும்படி வைத்தியரையும் நண்பர்களையும் வற்புறுத்தியிருப்பேன். நம்மிடம் பிறர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறோமோ அவ்வாறே நாமும் பிறரிடத்து நடந்துகொள்ள வேண்டும் என்பது வேத சம்மதமாதலால், வைத்தியரிடம் அவ்வெழுவர்க்கும் அபினி கொடுக்கும்படி நான் சொல்லியதுண்டு. ஆனால், சிறிது நேரம் யோசித்த பின்னர், ஐந்நூறு சிப்பாய்களை அங்கே காவலாக வைத்துவிட்டு நான் கைரோ நகரை நோக்கிச் சென்றேன். அங்ஙனம் காவல் வைத்துச் செல்லுதல் சாத்தியமில்லையேல், அபினி கொடுப்பதையே தீர்மானித்திருப்பேன். அவ்வாறு தீர்மானித்திருப்பினும் ஓர் ஆலோசனை சபையைக் கூட்டி, எல்லோர்க்கும் அதன் அவசியத்தை யெடுத்துக் காட்டி, அவர்கள் அங்கீகாரத்தையும் பெற்ற பின்னரே அபினி கொடுத்திருப்பேனே யன்றி இரகசியமாக ஒரு போதும் கொடுத்திருக்கமாட்டேன்."

நெபோலியன் கைரோவில் சின்னாள் தங்கியிருந்தான். அப்போது, பிரான்சு சேனைகள் இதாலியாவினின்று ஆஸ்டிரியரால் துரத்தப் பட்டதையும், ஐரோப்பாவின் வல்லரசுகள் ஒன்று கூடிப் பிரான்சைத் தாக்க முயன்றுவந்ததையும் பத்திரிகை மூலமாய் அறிந்த நெபோலியன் பிரான்சுதேசம் போகத் தீர்மானித்

தான். நீல நதியின் முகத்துவாரத்தைப் பரிசோதிக்கத் தான் போவதாக அறிக்கை செய்து விட்டு, சில முக்கிய நண்பர்களுடன் நெபோலியன் அலெக்ஸாண்டிரியா சென்றான். அங்கே நெபோலியனது உத்தரவுப்படி இரண்டு கப்பல்கள் தயாராயிருந்தன. பிரான்சுக்குப் போவதாக நெபோலியன் சொன்னவுடன் எல்லோரும் உவகை யெய்திக் கூத்தாடினர். ஐந்நூறு சிப்பாய்களும் எட்டு நண்பர்களும் நெபோலியனுடன் கப்பலேறிப் புறப்பட்டனர். ஆங்கிலேயரது கப்பல்கள் அவர்களைத் தேடித் திரிந்தன.

பிரயாணகாலத்தில் மதநூல், தத்துவ சாஸ்திரம், பொருள் நூல் முதலியனவற்றை நெபோலியன் படித்தவண்ணமே யிருந்தான். நவீன நாவற் புத்தகங்களைப் படிக்கும் வழக்கமே நெபோலியனிடத் தில்லை. நாவல்களின் மீதும் அப்புத்தகங்களைப் படிப்பவர் மீதும் நெபோலியனுக் கிருந்த வெறுப்புக் கணக்கில்லை. சோம்பேறிகளும், மூடர்களுமே வீண் கதைகளைப் படித்தற் குரியவர் என்பது நெபோலியனது அபிப்பிராயம். மத விஷயங்களையும் தத்துவ விஷயங்களையுங் கற்பதிலேயே நெபோலியன் காலங் கழித்து வந்தான். பைபில் புத்தகத்தையும் குரான் புத்தகத்தையும் நன்கு படித்து இரு மதங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ச்சி செய்துவந்தான். கிறிஸ்துவ மதத்தில் நெபோலியன் அதிக பற்றுடையவனாயிருந்தும் மற்ற மதங்களையும் போற்றிவந்தான். ஒருநாள், "கடவுள் உண்டா? இல்லையா?" என்னும் விஷயத்தைக் குறித்துச் சில உத்தியோகத்தர் விவாதித்தனர். இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமல் நெபோலியன் அருகில் உலாவிக்கொண்டிருந்தான். சிறிது நேரங் கழித்து நெபோலியன் திடீரென்று அருகிற் சென்று, "நண்பர்களே! உங்கள் விவாதம் மிக்க சுவையுடையதாயிருக்கிறது. ஆனால், இப்பரந்த உலகினையும், அகன்ற விசும்பின்கண் தோன்றும் எண்ணிலா உலகங்களையும் படைத்தவர் யாரென நீங்கள் எனக்குச் சொல்லக் கூடுமா?" என்றனன். அதைக் கேட்ட எல்லோரும் தலைகுனிந்து மௌனமுற்றனர். விவாதமும் முடிவுபெற்றது.



இவ்வாறு ஐம்பது நாட்கள் பிரயாணம் செய்து அக்டோபர் மாதம் 8-தேதி நெபோலியன் பிரான்சுக் கடற்கரை சேர்ந்தான். இவன் வரவை யறிந்த மாந்தர் உவகை பூத்தனர். அறுநூறு மைலுக் கப்பாலுள்ள பாரிஸ் நகருக்குத் தந்திகள் அனுப்பப்பட்டன. நெபோலியனது வருகையை யுணர்ந்த டைரக்டர்கள் துக்கமெய்தினர். ஆனால், மற்ற ஜனங்கள் களிப்புற்றனர்.

கணவரது வருகையை யுணர்ந்த ஜோஸப்பைன் நெபோலியனை எதிர்கொண்டழைக்குமாறு பாரிஸ் நகரினின்றும் புறப்பட்டாள். அதே சமயத்தில் நெபோலியனும் பாரிஸ் நோக்கிப் புறப்பட்டான். நெபோலியன் சென்றவிடமெங்கும் சிறப்பு விழாக்கள் நடந்தன. அன்று மாலை லையன்ஸ் நகரம் சேர்ந்தான். அங்கிருந்து ஜன நடமாட்டம் இல்லாத ஒரு பாதையின் வழியாய் பாரிஸ் நகருக்குப் புறப்பட்டான். மறுநாட்காலை, ஜோஸப்பைன் லையன்ஸ் நகரம் சேர்ந்தனள். தன் கணவன் முந்திய நாளே பாரிஸ் நோக்கிப் புறப்பட்டமை யறிந்து, மனம் நொந்து, வந்த வழியே மீண்டுந் திரும்பினள்.

17-தேதியன்று நெபோலியன் பாரிஸ் வந்ததும் தனது வீட்டுக்குச் சென்றான். மனைவியை யங்குக் காணாது திகைப்புற்றான். அப்பொழுது, "குற்றமுள்ள நெஞ்சின ளாதலால் கணவனைக் காண வஞ்சி மறைந்தனள் போலும்" என்று சிலர் பேசிக்கொண்டனர். அவர்களியம்பிய சொற்கள்,

"மருமத்தி லெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தா
லெனச் செவியிற் புகுதலோடும்"

நெபோலியன் மனந் தளர்ந் தயர் வுற்றான். எனினும், தன் துயரினைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தான்.

இரண்டு நாட்குப் பிறகு ஜோஸப்பைன் வீடு வந்து சேர்ந்தனள். இவளது வருகையை யறிந்தும் நெபோலியன் தனது அறையிலேயே நின்று கொண்டிருந்தான். ஜோஸப்பைன்

நெபோலியனது அறைக்குள் நுழைந்தாள். அங்கே அசையாது கோபக் குறியுடன் நின்று கொண்டிருந்த நெபோலியன் அவளைப் பார்த்து, "வேறிடம் சென்று நீ தனியே வாழுக. என்னுடன் வாழற்கு நீ உரியள் அல்லை" என்றான். இதனைக் கேட்ட ஜோஸப்பைன் இடியேறுண்ட நாகம் போல் கலங்கி, கண்களில் நீர்வடியக் கதறினாள். நெபோலியனது உத்தரவுப்படியே ஜோஸப்பைன் தன் மக்களுடன் வேறிடம்போகப் புறப்பட்டாள். அதைக்கண்ட நெபோலியன் மனமிரங்கி, "உணவருந்திக் களைப் பாறுக" என்றேவினான். கணவனது கட்டளைப்படியே ஜோஸப்பைன் திரும்பித் தன் படுக்கையறை சென்றயர்ந்தனள். இரண்டு நாள் ஒருவருடன் ஒருவர் பேசினாரில்லை. மூன்றாம் நாள் இருவரும் ஊடல் தணிந்தனர். ஜோஸப்பைன் கணவனை எதிர்கொண்டழைக்க லையன்ஸ் நகரம் சென்றதையும், மீண்டும் திரும்பி வந்ததையும், நெபோலியன் அறிந்து தானிழைத்த தவற்றினைக் கருதிப் பெரிதும் வருந்தினான்.

# அத்தியாயம்—6

## புதிய அரசாங்கம்.

நெபோலியன் வெளியே போகாமல் தன் வீட்டுக்குள்ளிருந்த வண்ணமாய் அரசாங்க விஷயங்களைக் கவனித்து வந்தான். ஐந்து டைரக்டர்களும் அரசாங்கக் காரியங்களை நன்கு கவனிக்காமல் ஒருவரோடொருவர் சண்டையிட்டு வந்தனர். அரசாங்கத்தில் அப்போது பிரபுக்கட்சி, ஜனக்கட்சியென இரண்டு கட்சிகளிருந்தன. ஜனக்கட்சியில் மிதவாதிகள், அமிதவாதிகள் என இரண்டு பிரிவுகள் இருந்தன. இவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டு வந்தனர். நாடெங்கும் குழப்பமாயிருந்தது. அரசாங்கத்தார் அதிக வரிகளை விதித்துக் குடிமக்களைத் துன்புறுத்தினர். பொக்கிஷத்தில் பணம் இல்லை. இதாலியாவிலிருந்து நெபோலியனால் அனுப்பப்பட்ட பொருள் முழுதும் வீண்வழிகளில் செலவு செய்யப்பட்டது. மாந்தர்கள் நோயாலும், வறுமையாலும் துன்புற்று வருந்தினர். கொலை, களவு, கள், காமம், பொய் எனும் பாவச் செயல்கள் பெருகின. குடிமக்களின் நலத்தையும், தேசத்தின் முன்னேற்றத்தையும் டைரக்டர்கள் சிறிதுங் கவனியாது சுய நலத்தையே பெரிதுங் கருதிவந்தனர். அக்கொடுங்கோ லரசினைச் சகிக்கமுடியாத அமிதவாதிகள் கலகஞ் செய்து வந்தனர். நெபோலியன் எகிப்து தேசம் சென்று திரும்பி வருதற்குள் தேசம் அத்தகைய சீர்கேடான நிலையிலாழ்ந்தது.

அப்போது, பிரான்சு தேசம் குடியரசுக்குத் தகுதியற்றதாயிருந்தது. சுய ஆட்சிக்குப்போதிய அறிவும் ஆற்றலும் பிரான்சு மக்களுக்கில்லை. பல்லாயிரம் ஆண்டுகளாக அடிமைத்தனத்திலாழ்ந்து வந்த மக்கள் சுய ஆட்சிக்குத் திடீரென்று தகுதியாதல் எங்ஙனம் கூடும்? நூற்றுக்கு மூன்று பேர்களே எழுதப் படிக்கத்

தெரிந்தவர்கள். மதவுணர்ச்சியும் கல்வியறிவு மில்லாத அவர்கள் வாக்குரிமை (Vote) யின் பெருமையை எங்ஙனம் அறியக்கூடும்! அமெரிக்காவில் தலைவர் தேர்தல் மிகு மும்முரமாய் நடக்கின்றது. தேர்தல் முடிந்ததும் தோல்வியுற்ற கட்சியினர் வெற்றியுற்ற கட்சியர்க்கு வாழ்த்துக் கூறி, இருவரும் ஒற்றுமைப் படுகின்றனர். தேர்தலின் பின்னர், தேசத்தில் அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டு விடுகின்றன. தேர்தல் விரோதங்களை இருதிறத்தாரும் வெட்டென மறக்கின்றனர். இத்தகைய மனப்பான்மை யன்றோ சுய ஆட்சிக்கு அத்தியாவசிய மானது! ஆனால், பிரன்சு மக்களுக்கு அக்காலத்தில் இம்மனப் பான்மை இல்லை. வலியார்கள் எளியாரை வாட்டுவதே அறமெனக் கருதப்பட்டது. பத்து வருட காலமாக, பிரான்சுதேசம் அரசிலா நாடென அல்லலுற்றது. மிகவும் வெறுப்புற்ற மாந்தர்கள் அரசியல் மாறுதலை அவாவினர்.

இவையெலாங் கண்ட நெபோலியன், அரசியல் திட்டத்தை மாற்றி, தேசத்தை அரசின்மையினின்றும் காப்பாற்றி, நாடெங்கும் அமைதியையும் நலத்தையும் நிலைநாட்டத் தீர்மானித்தான். தேசத்தை யாளுதற்குப் போதுமான ஆற்றலும், தேசமக்களின் ஆதரவும் தனக்கிருப்பதை நெபோலியன் உணர்ந்தான். ஆகையால், தேசச் சபைக ளிரண்டையும் தன் வசமாக்கிக்கொண்டு ஐந்து டைரக்டர்களையுந் தொலைத்தற்குரிய ஏற்பாடுகளை நெபோலியன் நிதானமாய்ச் செய்துவந்தான்.

தேசச் சபைகளின் அங்கத்தினர்களிற் சிலரே அறிவிலும் அநுபவத்திலும் தேர்ந்தவர்கள். மற்றவர்கள் கைதூக்கித் தம்பிரான்களா யிருந்தனர். நெபோலியன் ஒவ்வொருவரையும் தன் பக்கம் திருப்பினான். பிராசீனர் சபையின் தலைவனாயிருந்த கார்னட் என்பவனும் நெபோலியன் ஆணைப்படி நடக்கச் சம்மதித்தான். ஐந்நூற்றுவர் சபையின் தலைவனாயிருந்த லூஸியன் போனபார்ட்டியும் நெபோலியன் ஏவற்படி நடக்கவிணங்கினான். நெபோலியன் பிரன்சு சேனைகளுக்குத் தலைவனாதலால் சேனாவீரர்களும் அவன் சொற்படி நடக்கலாயினர்.



இவை யெல்லாம் உணர்ந்த டைரக்டர்களில் மூவர் தங்கள் பதவியைக் கௌரவமாக இராஜிநாமா செய்து விட்டனர். ஏனைய இருவரையும் நெபோலியன் அழைத்துத் தன்னாலியன்ற வரை நற்புத்தி புகட்டியும் அவர்கள் இராஜிநாமா செய்யவிணங்கவில்லை. கடைசியாக, அவர்களிருவரும் சிறை செய்யப்பட்டுத் துன்புற்றனர்.

நவம்பர் மாதம் 9-தேதியன்று தேசச் சபைகள் கூடின. சபையார்களை அபாயத்தினின்று காத்தற் பொருட்டும், ஆலோசனையானது அமைதியுடன் நடத்தற் பொருட்டும், முழுச் சேனையுடன் புறப்பட்டு வரும்படி நெபோலியனுக்கு உத்தரவு கிடைத்தது. அவ்வாறே நெபோலியனும் முழுச் சேனையுடன் புறப்பட்டுச் சபா மண்டபம் சேர்ந்தான். ஆலோசனை ஆரம்பித்தது. ஐந்நூற்றுவர் சபையில் பெரும்பான்மையோரான அமிதவாதிகள் கலகம் விளைத்தனர். நெபோலியன் தனது சேனையின் உதவியாலும் அறிவின் திறத்தாலும் கலகக் கூட்டத்தாரைத் துரத்தியடித்து அமைதியை உண்டாக்கினான். பின்னர், இரண்டு சபைகளும் அமைதியுடன் ஆலோசித்து, டைரக்டர்களின் ஆட்சி அன்றோடொழிந்த தென்றும், நெபோலியன், சீயஸ், டூகாஸ் என்னும் மூவரும் பிரதி காவலர்களாயிருக்கவேண்டு மென்றும், தனித்தனியே இருபத்தைந்து பேர்கள் கொண்ட இரண்டு சபைகள் மேற்சொல்லிய பிரதி காவலருடன் ஒத்துழைத்துப் புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்கவேண்டு மென்றும் ஏகமனதாகத் தீர்மானித்தன.

மறுநாள், மூன்று பிரதி காவலர்களும் கூடினார்கள். நெபோலியன் தலைமை வகித்தான். சீயஸ், டூகாஸ் என்பவர்கள் நெபோலியனது அறிவின் திறத்தைக் கண்டு வியந்தனர். அவர்கள் இருவரும் நெபோலியனது வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். பொருளாதாரம், வியாபாரம், போலீஸ், இராணுவம் முதலிய எல்லாத் துறைகளிலும் நெபோலியன் வல்லுநனாதலால் தானே ஒவ்வொன்றையும் ஆராய்ந்து தக்க திட்டங்களைத் தயார்

செய்து வந்தான். இரவும் பகலும் மெய் வருந்தி நெபோலியன் உழைத்தமையால் ஒரு மாதத்துக்குள் புதிய அரசாங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அது பின்வருமாறு:—

“நெபோலியன், பிரான்சு தேசத்தின் முதல் நாயகன் (First Consul) ஆகவும்; சீயஸ், டுகாஸ் என்போர் உபநாயகர்களாகவும் இருந்து அரசியல் நிர்வாகங்களை நடத்தவேண்டும். ஆலோசனை சபையும், சட்ட சபையும், நீதி சபையும் அமைக்கப்படல் வேண்டும். நெபோலியனால் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு சட்டமும் ஆலோசனை சபையில் ஆலோசிக்கப்பட்டுச் சட்ட சபையில் அங்கீகரிக்கப்படவேண்டும். முதல் நாயகருக்கு வருடம் ஐந்து லட்சம் பிராங்கு நாணயமும், உபநாயகருக்கு மூன்று லட்சமும், ஆலோசனை சபையார் ஒவ்வொருவருக்கும் இருபத்தையாயிரமும், சட்ட சபை, நீதி சபை அங்கத்தினர்க்குப் பதினையாயிரமும் சம்பளம் கொடுக்கப்படல் வேண்டும். அரசாங்கத்தில் வரி செலுத்தும் இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆண்மகற்கும் வாக்குரிமை வழங்கல் வேண்டும்.” இத்திட்டத்துக்கு முப்பது லட்சம் பேர்கள் சாதகமாகவும் ஆயிரத்தைந்நூறு பேர்கள் பாதகமாகவும் அபிப்பிராயம் தந்தனராதலால் அதுவே அமுலுக்குக் கொண்டுவரப்படுமென்று அறிக்கை செய்யப்பட்டது. பிரான்சு தேசத்துத் தனி நாயகனாக நெபோலியன் விளங்கினான்.

புதியவரசாங்கம் ஏற்பட்டவுடனே நெபோலியன் இங்கிலாந்து அரசர்க்குச் சமாதான விஷயமாய்க் கடிதம் எழுதினான். அது பின்வருமாறு:—

“ஐயா! பொது ஜனங்களின் விருப்பத்திற்கிணங்கிப் பிரான்சு தேசத்தின் முதல் நாயகப் பதவியை வகித்துள்ள நான் தங்கட்கு இக்கடிதத்தை எழுதும் பாக்கியத்தையும் பெற்றேன். சென்ற எட்டு வருடங்களாக உலகத்தைத் துன்புறுத்தி வரும் நம் யுத்தம் இனியும் நீடித்திருக்க வேண்டுமோ? ஏதேனும் ஒரு



முடிவுக்கு வருதற்கேற்ற வழிகள் இல்லையா? அற்பமாகிய வெற்றியைக் கருதி மாந்தர்களின் அமைதியையும், செல்வத்தையும் நாம் அழித்து வருதல் நியாயமாகுமா? சமாதானமும் அமைதியுமே உலகிற்கு இன்பம் பயக்கத் தக்கன. சமாதானமே எனது விருப்பம். நீரும் அதையே விரும்பின் ஐரோப்பாவில் அமைதியுண்டாகும்.”

இந்நிருபத்திற்கு ஆங்கிலேய முதல் மந்திரியாகிய லார்டு கிரின்வில் என்பவர் பின்வருமாறு பதில் விடுத்தனர்.

“அநேக நூற்றாண்டுகளாகப் பிரான்சு தேசத்தை அரசாண்டுவந்த போரபன் குடும்பத்தார்க்கு அரசுரிமையை மீண்டும் வழங்கினாலன்றி, சமாதானத்திற்கு நாங்கள் இணங்கோம்.”

இதற்கு, நெபோலியன் தனது அமைச்சர் மூலமாய் ஆங்கிலேய அரசாங்கத்தாருக் கனுப்பிய கடிதம் பின்வருமாறு:—

“தனது விருப்பப்படியே அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள ஒவ்வொரு தேசத்துக்கும் சுதந்தரமுண்டென்பதை ஆங்கிலேயர் மறுக்கமுடியாது. பிரான்சு தேசத்தைப் பல நூற்றாண்டுகளாகப் போரபன் குடும்பத்தார் அரசாண்டு வந்தமையால் அவர்களுக்குப் பரம்பரை பாத்தியம் உண்டென்றும், அரசுரிமை மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படலே நியாயமென்றும் இப்போது நீங்கள் கூறுகின்றீர்கள். அப்படியானால் ஸ்டுவர்ட் குடும்பத்தாரே இங்கிலாந்தை யரசாள வேண்டுமேயல்லாது மூன்றாவது ஜார்ஜ் இப்போது மன்னராயிருத்தல் எங்ஙனம் நியாயமாகும்.”

இதற்கு லார்டு கிரின்வில் பின்வருமாறு பதில் விடுத்தனர்.

“பிரான்சு தேசக் குடியரசினின்றும் மற்ற முடியரசுகளைக் காத்தற்பொருட்டே இங்கிலாந்து யுத்தம் புரிகிறது. விரைவில் யுத்தம் ஆரம்பமாகும்.”

இக்கிருப மூலமாய் ஆங்கிலேயரின் மனப்பான்மையை யறிந்த பிரான்சு மாந்தர்களுக்கு ஆங்கிலேயர்மீது அளவிலாக் கோபமும் நெபோலியன்மீது விருப்பமும் உண்டாயின.

ஆஸ்டிரியச் சக்கரவர்த்திக்கும் சமாதான விஷயமாய் நெபோலியன் ஒரு கடிதம் விடுத்தான். அதற்கு ஆஸ்டிரியர்கள், "எமது நண்பரான ஆங்கிலேயருடன் கலந்து ஆலோசிக்காமல் சமாதானத்துக்கேற்ற யாதொரு முயற்சியும் நாங்கள் எடுத்தற்கில்லை" என்று பதிலளித்தனர். நெபோலியனது சமாதான முயற்சியெல்லாம் இவ்வாறு பயனின்றி முடிந்தது.

இதற்கு முன் நடந்த யுத்தங்களில் கைதியாக்கப்பட்ட பதினாயிரம் ருஷியர்கள் அப்போது பிரான்சு தேசத்திலிருந்தனர். இதைப் போலவே பதினாயிரம் பிரான்சு வீரர்கள் அந்த யுத்தங்களில் கைதியாக்கப்பட்டு இங்கிலாந்திலும் ஆஸ்டிரியாவிலும் இருந்தனர். யுத்த தருமப்படி, ருஷியக் கைதிகளைத் தான் விட்டுவிடுவதாயும், அதற்குப் பதிலாகப் பிரான்சுக் கைதிகளை விட்டுவிடுமாறும் ஆங்கிலேயரையும் ஆஸ்டிரியரையும் நெபோலியன் வேண்டினான். ருஷியர்களுக்குப் பதிலாகப் பிரான்சுக் கைதிகளை விட்டுவிடுவதில் தங்கட்கு இலாபமொன்று மில்லையே என்னும் குறுகிய நோக்கத்துடன் ஆங்கிலேயரும் ஆஸ்டிரியரும் நெபோலியனது வேண்டுகோளுக்கிணங்க மறுத்தனர். அவர்களது மனப்பான்மையை நெபோலியன் வெறுத்தான். "உம்முடன் ஒன்று சேர்ந்து பிரான்சின்மீது படையெடுத்துப் போர்புரிந்த ருஷியர்கள் உங்கள் நண்பர்களல்லரோ? அவர்களைச் சிறை மீட்டல் உமது கடமையன்றோ?" என்று ஆங்கிலேயருக்கு ஒரு கடிதமும், "உமக்கு உதவியாக இதாலியாவில் போர்புரிந்து வெற்றியை யளித்தவர்களும், அவர்களால் கைதியாக்கப்பட்ட பல்லாயிரம் பிரான்சு வீரர்களை உம்மிடத்து ஒப்புவித்துப் போனவர்களுமான ருஷியர்களை மீட்பதையா நீங்கள் மறுக்கின்றீர்கள். நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்று ஆஸ்டிரிய வாசற்கு ஒரு நிருபமும் விடுத்த பின்னர்



பதினாயிரம் ருஷியர்களையும் நெபோலியன் சிறைவிடுத்து அவர்களுக்கு ஆடையும் வாளும் தந்து தங்கள் நாடேகும்படி உத்தரவளித்தான்.

இதனை யறிந்த ருஷிய மன்னனாகிய பால் என்பவன் பேருவகை யெய்தி நெபோலியனது பெருந்தகைமையைப் பாராட்டி அன்றே நெபோலியனுடன் நட்புக்கொண்டான். பிரான்சு மீது போர் செய்ய எண்ணியிருந்த ருஷியா தேசம் நெபோலியனுடன் உறவு கொண்டு பிரான்சு தேசத்தின் குடியரசை அங்கீகரித்தது. உடனே, நெபோலியன் ப்ரஷியா தேச மன்னனிடம் தூதனுப்பி அவனையும் நண்பனாக்கிக் கொண்டான்.

பழைய டைரக்டர்களின் காலத்தில் சிறைப்பட்டிருந்த இராஜீயக் கைதிகளை யெல்லாம் நெபோலியன் விடுதலை செய்தான். உயிருக்கஞ்சி அன்னிய தேசங்களுக்குப் போயிருந்த இருபதாயிரம் ஜனங்கள் பிரான்சு தேசத்துக்கு மீண்டும் அழைக்கப்பட்டனர். மாதா கோயில்கள் திறக்கப்பட்டன. மதப்பற்றும் கடவுள் நம்பிக்கையும் இல்லாத ஜனங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மத உணர்ச்சியை யுண்டுபண்ணி, தொழுகைத் தினத்தை ஜனங்கள் கொண்டாடுமாறு செய்தனன். இராணுவ வீரர்களுக்கு உடுப்பும் உணவும் ஏராளமாக வழங்கப்பட்டன. எகிப்திலிருந்த தனது சிப்பாய்களுக்குப் போதுமான உதவி யனுப்பப் பட்டது.

நெபோலியன் இரவும் பகலும் நாட்டின் முன்னேற்றத்தையே கவனித்து வந்தான். கல்விச் சாலைகளும், பொருளாதா வழிகளும் ஏற்படுத்தப்பட்டன. சம நீதி எல்லோர்க்கும் வழங்கப்பட்டது. வியாபார வசதிகள் உண்டாக்கப்பட்டன. தொன்று தொட்ட உரிமையும் பிறப்பின் பெருமையும் ஒழிக்கப்பட்டன. ஆற்றலும் அறிவுமுள்ள மக்கட்கே உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன. அவரவர்களுடைய சொத்துக்கேற்ப வரி விதிக்கப்பட்டது. பெண் பாடசாலைகளும், பெண் வைத்திய சாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. பெண்களின் முன்னேற்றத்துக்குரிய சகல

முறைகளையும் ஜோஸப்பைன் கவனித்து வந்தாள். எல்லாத் தேசங்களைக் காட்டிலும் பிரான்சு தேசத்தில் மாதர்களுக்கு அதிக உரிமை வழங்கப்பட்டது. லூயி மன்னனது மரணத்தின் வருடக் கொண்டாட்டம் நிறுத்தப்பட்டது.

அமெரிக்கா தேசத்தில் குடியரசினை ஸ்தாபித்தவரான ஜார்ஜ் வாஷிங்டன் இறந்தார் என்னும் செய்தியைக் கேட்ட நெபோலியன் நாடெங்கும் கறுப்புக்கொடி நாட்டும்படி உத்தரவிட்டான். பிரான்சு தேசத்தில் பத்துநாள்வரை துக்கங் கொண்டாடப்பட்டது. அமெரிக்கா தேசத்தின் முடியரசை வீழ்த்தி, குடியரசை ஸ்தாபித்து, மக்களுக்கு உரிமைகளையும் சுதந்தரங்களையும் வழங்கிய ஜார்ஜ் வாஷிங்டனுடைய சரித்திரத்தைப் பிரான்சு ஜனங்கள் வாசித்து விழாவாற்றினர்கள்.

நெபோலியன் நியாயமாகவும் ஒழுங்காகவும் தேசத்தை யரசாண்டு வந்தான். ஜனங்களின் முன்னேற்றத்தையும், சுக வாழ்வையும் கருதிப் பல திருத்தங்கள் செய்து வந்தமையால், நெபோலியன் எல்லோராலும் போற்றப்பட்டான்.

நெல்லு முயிரன்றே; நீரு முயி ரன்றே;
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்.
அதனால், யானுயிர் என்ப தறிகை,
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே. —புறம்.

ஒரு தேசத்துக்கு நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று; மன்னனே உயிர் என்னும் உண்மையை யறிந்த நெபோலியன் செங்கோலான் என்பதில் என்ன தடை?

போர்பன் குடும்பத்தார் மீண்டும் அரசுரிமையைப் பெற அவாவி நெபோலியனது உதவியை நாடினார்கள். 18-வது லூயி என்பவர், நெபோலியனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அது பின் வருமாறு—

"வீரரே! மீண்டும் எனக்கு அரசுரிமையை நீர் வழங்குவீரேல் உமக்கு வேண்டிய பதவியைத் தந்து நீடிய புகழையுந் தருவேன். உமது நண்பர்களுக்கு உயர்ந்த பதவிகளையும் கொடுப்பேன். நாம் இருவரும் ஒன்று சேர்ந்து பிரான்சு தேசத்தில் அமைதியையும் மகிழ்ச்சியையும் உண்டாக்குவோம். உமது



உதவியின்றி என்னால் அது செயற்பாலதன்று. எனது துணையின்றி உமக்கும் அஃது இயலாத காரியம். ஐரோப்பா முழுதும் உம்மையே நாடுகிறது. பெருமையும் புகழும் உம்மையே எதிர்நோக்கி நிற்கின்றன. எனது வேண்டுகோளுக்கு விரைவில் இணங்குவீராக. இதுவே அதற்கேற்ற தருணம்." இக்கிருபத்துக்கு நெபோலியன் விடுத்த பதில் பின் வருமாறு:—

"ஐயா! உமது நிருபம் கிடைக்கப் பெற்றேன். பிரான்சு தேசத்துக்குத் திரும்பி வரும் கருத்தினை நீவிர் அறவே அகற்றுக. அங்ஙனம் வருவதாயின் லட்சக்கணக்கான வீரர்களைக் கொன்ற பின்னரே வருதலும் கூடும். ஆதலால், தேசத்தின் அமைதியையும் இன்பத்தையுங் கருதியாவது உமது சுயநலத்தைத் தியாகம் செய்ய முந்துங்கள். அஃதே உமக்கு நீடிய புகழைத் தரவல்லது. உமது குடும்பத்துக்கு நேர்ந்த துரதிஷ்டம் என் மனதை வருத்துகிறது. எனினும் உம்மை அரசனாக்கிவைத்தல் என்னாற் செயற் பாலதன்று."

போர்பன் குடும்பத்தார் நெபோலியனைத் தம்வயப்படுத்துமாறு வேறொரு முயற்சி செய்தனர். பேரழகும், கல்வியும், வாக்குத்திறமும் வாய்ந்த ஓர் இளம் பெண்ணை நெபோலியனிடம் தூது விடுத்தனர். அப்பெண் நெபோலியனது அரண்மனைச் சென்று சின்னாள் தங்கித் தனது பாலொத்த மொழியாலும் சேலொத்த விழியாலும் நெபோலியனை மயக்க முயன்றனள். அவனது உள்ளக் கிடக்கையைத் தெள்ளென வுணர்ந்த நெபோலியன் அவளைப் பிரான்சு தேசத்தினின்றும் உடனே வெளியேறும்படி கட்டளையிட்டான்.

உள்நாட்டில் கலகம் விளைப்பதற்காக அன்னியநாடேகிச் சூழ்ச்சிகள் செய்து வந்த பல பிரான்சுக்காரர்களை நெபோலியன் மன்னித்துக் காப்பாற்றினான். பிரான்சுதேசத்தில் உள்நாட்டுக் குழப்பத்தை விளைக்குமாறு அன்னியரால் ஏவப் பெற்ற சில பிரான்சுக்காரர்கள் இங்கிலாந்திலிருந்து ஆயுதபாணிகளாகப் பிரான்சுக்கு வந்துகொண்டிருந்தனர். அவர்கள் வந்துகொண்டிருந்த கப்பல் புயற்காற்றினால் பாறைமீது மோதப்பட்டு உடைக்

துபோனமையால், அவர்களெல்லோரும் பிரான்சுக் கடற்கரை வந்து சேர்ந்தனர். அங்கே அவர்கள் கைதியாக்கப்பட்டு நீதி விசாரணையில் குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டதனால் மரண தண்டனை விதிக்கப் பெற்றனர். அதில் நெப்போலியன் உடனே பிரவேசித்து, "அவர்களது நோக்கம் யாதாயினும் ஆகுக. புயல்காற்றால் கப்பலுடைந்து நம் கரையேறினவர்கள் நமது விருந்தினர்கள் அன்றோ? அவர்களுக்குத் துன்பம் இழைத்தல் முறையன்று" எனச் சொல்லி அவர்களுடைய உயிரைக் காப்பாற்றினான்.

ஒருநாள் நெப்போலியன் நாடகசாலைக்குப் போய்க் கொண்டிருக்கும்போது வழியில் வெடிகுண்டு ஒன்றை வைத்து நெப்போலியனைக் கொல்லச் சிலர் முயன்றனர். அதிர்ஷ்டவசமாக நெப்போலியன் அதைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றபின் அவ்வெடிகுண்டு வெடித்தது. நெப்போலியன் உயிர் தப்பியதைக் கேட்ட மாந்தர்கள் உவகையெய்தினர். ஜனங்களின் அன்பைக் கண்டு நெப்போலியன் மனம் மகிழ்ந்தான். நெப்போலியனைக் கொல்ல முயன்ற கலகக்காரர்கள் கடைசியாகப் பிடிபட்டனர். நெப்போலியன் நீதி விசாரித்து அவர்களை நாடு கடத்தினான். தன்னைக் கொல்ல முயன்றவர்களையும் பெருந்தகைமையோடு நெப்போலியன் காப்பாற்றினான்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்.

—திருக்குறள்

நீதிபரிபாலன முறையில் நெப்போலியன் சற்றேனும் வழுவாதவன். தண்டிக்கத் தக்கவர்களைத் தண்டிப்பதில் சற்றும் தவறாதவன். தரும நீதியை வழங்குவதில் நெப்போலியன் மனோ உறுதியும் திடமும் வாய்ந்தவன்.

முப்பது வயதுள்ள ஒரு வாலிபன் பதினாறு வயதுள்ள ஒரு கன்னியை மணக்க விரும்பினான். அப்பெண்ணுக்கு அவன் மீது விருப்பமில்லாதிருந்தும் பெற்றோர்களின் பலவந்தத்தால் திருமணம் நடைபெற்றது. மணம் முடிந்தபின்னும் அப்பெண்



கணவனைக் காதலிக்கவில்லை. இதனால் பொறுமையற்ற அவ்வாலிபன் குற்றமற்ற மனைவியை இரக்கமின்றிக் கொலை செய்தனன். நீதி விசாரிக்கப்பட்டு அவ்வாலிபற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவனாதலால் அவனை மன்னிக்கும்படி அநேகர் நெப்போலியனை வேண்டினர். ஜோஸபைனும் கணவனைப் பன்முறை வேண்டினள். அதற்கு நெப்போலியன், "அவ்வாலிபனை நான் ஏன் மன்னிக்கவேண்டும்? தன்னைக் காதலிக்காத ஒரு கன்னியைப் பணச் செருக்கால் மணந்தான். மணந்த பின்னரும் அவளது காதலின்மையைக் கண்டு பொறுமையற்றுக் குற்றமற்ற அவ்வணங்கினைக் கொன்றனன். அவனது மிருகத்தன்மையும் பணச் செருக்குமே அக்கொலைக்குக் காரணமாகும். எனது இரக்கத்துக்கு அவன் உரியவனன்று. குற்றத்துக்குற்ற தண்டனையை அவன் அடைந்தே தீரவேண்டும். நான் அவனை மன்னிப்பின் ஒவ்வொரு பெண்டிரது உயிர்க்கும் ஏதம் விளைத்தவனாவேன். வெறுப்பாலாவது, சபலத்தாலாவது, வேறு மங்கையின்மீதுள்ள காதலாலாவது தனது மனைவியைப் பிரிதற்கெண்ணிய ஒவ்வொருவனும் நீதிமன்றம் செல்லாது கொலை செய்தலையே அச்சமின்றிக் கையாளக் கூடுமன்றோ?" என்று சொல்லி அவ்வாலிபற்கு மரண தண்டனை விதித்தான்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

—திருக்குறள்

அக்காலத்தில் முடிமன்னர்கள், குடியிலும், காமவேட்கையிலும், வீண் வேடிக்கைகளிலும் தங்கள் காலத்தைக் கழித்துவந்தார்கள். அரசாங்க விஷயங்களில் சிறிதும் அக்கறையின்றிப் பரதார இச்சையில் மதிமயங்கியிருந்தனர். அரசன் எப்படியோ அப்படியே குடிகளும். அரசர்களுடைய பரதாரவிச்சையே தேசமெங்கும் நாகரீகமாகக் கருதப்பட்டது. அவ்விச்சையே மற்றைப் பாவங்களுக்கும் தாயகமாகித் தேசத்தை நாசமாக்கும் விஷ வேராயிருந்தது. இதனை யறவே ஒழித்தற்கு நெப்போலியன் தீர்மானித்தான். அவனது தூய வாழ்க்கையைத் திருஷ்டாந்தமாகக்

கொண்டு பலரும் திருந்தினர். மானமும் கற்புமில்லாப் பெண்களைப் பெரிதும் கண்டித்தான். கணவனும் மனைவியும் ஒன்று சேர்ந்தே பொதுக்கூட்டங்களுக்குப் போகவேண்டுமென்ற ஓர் உத்தரவிட்டான்.

உயர்ந்த பதவியிலிருந்த ஒரு உத்தியோகஸ்தனுக்கு ஒரு மனைவி யிருந்தாள். அவள், பேரழகும், பார்ப்போரைத் தன்வயமாக்கும் பெற்றியும் வாய்ந்தவள். நெப்போலியன் செல்லும் ஒவ்வொரு விருந்திற்கும் அவள் சென்று நெப்போலியன் முன்னே உட்காருவது வழக்கம். அச்சமும் நாணமும் அடக்கமும் உடையாள்போல் பாசாங்கு காட்டிக்கொண்டே நெப்போலியனை மயக்க முயன்றனள். அவளது கணவன் இதைக் குறித்துக் கவலையற்றிருந்தான். அவளது தாயார் அவளுக்கு உதவியாயிருந்தாள். இந்த அக்கிரமத்தை யுணர்ந்த நெப்போலியன் அவள் கணவனை உத்தியோகத்தினின்று ஒரு வருட காலம் விலக்கியதுமன்றித் தன் அரண்மனைக்குள் அப்பெண் நுழைதல் கூடாது என்னும் உத்தரவும் செய்தான்.

ஒருநாள் நெப்போலியன் மாறு வேடந் தரித்துத் தன் நண்பன் புரியன் என்பவனோடு கடைத்தெருவிற் சென்று சில சாமான்கள் வாங்கினான். அப்போது, நெப்போலியன் கடைக்காரனைப் பார்த்து, "ஐயா! நெப்போலியனைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான். அக்கடைக்காரன் நெப்போலியனைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினான். அதற்கு நெப்போலியன், "ஐயா! சிறிது காலஞ் சென்ற பிறகே எதையுந் திடமாய்ச் சொல்ல முடியும். நெப்போலியனது ஆட்சியும் கொடுங்கோலாயினும் ஆகலாம். எதையும் நிதானித்துப் பார்ப்பதே நல்லது" என்று சொன்னான். இதைச் செவியுற்ற கடைக்காரன் அடங்காத கோபம் எய்தி மாறுவேடம் பூண்ட நெப்போலியனை நன்கு புடைக்கச் சென்றான். அதைக் கண்ட நெப்போலியன் பயந்து கடையினின்றும் வெளியே ஓடிவிட்டான்.

# அத்தியாயம்—7

## நாட்டின் அமைதி.

இத்தருணத்தில், ஆங்கிலேயரது கடற்படை பிரான்சு தேசத்தின் கடற்கரை யோரமாய் நின்று உள்நாட்டுக் கலகத்தைத் தூண்டிக்கொண்டும், கடலோரமுள்ள பட்டினங்கள்மீது பீரங்கி குண்டுகளை எறிந்துகொண்டும் இருந்தது. பிரான்சுக்கு வடதிசையில் ரைன்நதி தீரத்தில் ஒன்றரை லட்சம் கொண்ட ஆஸ்டிரியச்சேனை பனிவருந்துப் போருக்குத் தயாராயிருந்தது. அதே சமயத்தில் இதாலியா தேசத்திலிருந்த பிரான்சுசேனை ஆஸ்டிரியர்களால் தோற்கடிக்கப்பட்டது. வெற்றிபெற்ற அந்த ஆஸ்டிரியச்சேனை பிரான்சின்மீது படையெடுத்து வந்தது. மூன்று பக்கமும் எதிரிகளால் சூழப்பட்டுப் பிரான்சுதேசம் நெருக்கடியான நிலையிலிருந்தது.

நெப்போலியன் சமாதானத்தையே விரும்பினானெனினும் யுத்தத்துக்கு அஞ்சினானில்லை. எதிரிகளின் மனப்பான்மையை நன்குணர்ந்த நெப்போலியன் உடனே தன் ஜனங்களுக்குக் கீழ்க்கண்ட அறிக்கையொன்றனுப்பினான்.

"பிரான்சு மக்களே! சமாதானத்தையே நீங்கள் விரும்பினீர்கள். உமது அரசாங்கமும் சமாதானத்தை விரும்பிப் பல முயற்சிகள் செய்தும் பயனின்றி முடிந்தது. ஆங்கிலேயரது மனப்பான்மை இப்போது பகிரங்கமாயது. பிரான்சு தேசத்தைச் சின்னாபின்னமாக்கி, அதனது வியாபாரத்தை நாசஞ்செய்து, ஐரோப்பா படத்தினின்றும் பிரான்சு தேசத்தை அறவே யழித்து விடவேண்டுமென்பதே ஆங்கிலேயரது நோக்கமாகும். ஐரோப்பாவிலுள்ள தேசமன்னர்களுக்குள் பகைமையை உண்டாக்கி அதனால் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள ஆங்கிலேயர் பல தந்திரங்கள் செய்து வருகின்றனர்."

இவ்வதிர்ச்சியைக் கண்ணுற்ற பிரெஞ்சு ஜனங்களுக்கு வீராவேசம் உண்டாயது. பெருந்த படையொன்று திரட்டப்பட்டது. அநேக யுத்தங்களில் வெற்றி பெற்றவர்களும், வெஞ்சமருக்கஞ்சாத வீரர்களுமான ஒன்றரை லட்சம் பேர்களை மோரோ என்னும் தளகர்த்தனிடம் ஒப்புவித்து ரைன்நதி தீரத்தில் தங்கியிருந்த ஆஸ்டிரியச் சேனையைத் தாக்குமாறு நெப்போலியன் ஏவினான். யுத்தப் பயிற்சிபெற்ற அறுபதினாயிரம்வீரர்களுடன் சென்று மேற்றிசையில் வந்து கொண்டிருந்த ஆஸ்டிரியச் சேனையைத் தானே எதிர்க்கத் தீர்மானித்தான். நெப்போலியனது பெருந்தன்மைக்கும், தன்னல மறுப்புக்கும் இஃதொன்றே போதுமான சான்றாகும். போர்வன்மையில் தனக்கு நிகரான மற்றொருவனிடம் கைதேர்ந்த சேனையை ஒப்புவித்துத் தேர்ச்சியற்ற சேனையைத் தான் ஏற்றுக்கொண்டு, தனக்கு வரக்கூடிய புகழையும் பெருமையையும் மற்றவர்க்கீந்து தன்னலத்தைப் பாராட்டாமல் தேசத்தின் நன்மையையே கருதிய நெப்போலியனது பெருமையை எவர்தான் போற்றமாட்டார்!

மோரோ என்பவன் ஆஸ்டிரியச் சேனையைத் துரத்தியடித்தான். ஆஸ்டிரியர்கள் புறங்காட்டிப் பஞ்செனப் பறந்தனர். நெப்போலியனோ அறுபதினாயிரம் வீரர்களுடன் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து சென்று மாரங்கோ என்னுமிடத்தில் ஆஸ்டிரியர்களைத் தாக்கினான். பன்னிரண்டு மணி நேரம் யுத்தம் நடந்தது. இருதிறத்திலும் ஆயிரக்கணக்கான வீரர்கள் உயிர் துறந்தனர். இறுதியில் ஆஸ்டிரியர்கள் தோல்வியுற்றுச் சமாதானத்துக்கிசைந்தனர். நெப்போலியனும் இணங்கினமையால் சமாதானம் நிறைவேறியது. நெப்போலியன் உடனே மிலான் நகர் சென்று அங்கே பத்துநாள் தங்கியிருந்தான். அங்குச் சில சீர்திருத்தங்களைச் செய்து முடித்த பின்னர் பாரிஸ்நகர் சேர்ந்தான். இவ்வாறு நெப்போலியன் ஐந்து வாரத்துக்குள் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து, ஆஸ்டிரியர்களை முறியடித்து, இழந்த இதாலியாதேசத்தை மீண்டும் கைப்பற்றியமை பொதுவாக உலகோரின் வியப்பையும், சிறப்பாகப் பிரெஞ்சு மக்களின் ஆனந்



தத்தையும் உண்டாக்கியது. ஐரோப்பாவில் அமைதியும் சமாதானமும் நிலவின. இங்கிலாந்து மாத்திரம் பிரான்ஸின்மீது பகைமையே பாராட்டி வந்தது.

ஐரோப்பாவில் இங்கிலாந்து கடலரசாய் விளங்கியது. கடற்படையில் இங்கிலாந்துக்கு நிகரான தேசம் வேறொன்றுமில்லை. ஐரோப்பா முழுதும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பினும் கடல் யுத்தத்தில் இங்கிலாந்துக்கு முன்னிற்க முடியாது. கப்பற்பலத்தில் ஒப்பின்றி யிருத்தலே ஆங்கிலேயரது முக்கிய நோக்கமாக விருந்தது. நிலச்சண்டையில் பிரான்சுதேசம் சிறந்து இருந்தது போலவே இங்கிலாந்து தேசம் கடற்சண்டையில் இணையின்றி விளங்கியது. வியாபாரக் கப்பல்களை வழிமறித்துப் பரிசோதிக்கக் கூடிய சுதந்தரம் தங்கட்கு உண்டென ஆங்கிலேயர் சாதித்து வந்தனர். இப்படியிருக்க, இதர தேசத்துக் கப்பல்கள் பிரான்சுதேசத் துறைமுகத்துக்குப் போகக்கூடாது என்று ஆங்கிலேயர்கள் உத்தரவிட்டனர். அவ்வுத்தரவை மீறிச் சென்ற கப்பல்கள் பரிசோதிக்கப்பட்டு அவற்றிலுள்ள பிரெஞ்சு சாமான்களும், பிரெஞ்சு தேசத்துக்குக் கொண்டு போவதாகக் கருதப்பட்ட போர்க்கருவிகளும் ஆங்கிலேயரால் பறிமுதல் செய்யப்பட்டன. இவ்வாறு இதர தேசங்களின் வியாபாரத்தை இங்கிலாந்து அழித்து வந்தது. இதைக் கண்ணுற்ற ஐரோப்பா மன்னர்களெல்லாம் நெப்போலியனுடன் ஒன்றுசேர்ந்து ஆங்கிலேயரை எதிர்க்கத் தீர்மானித்தனர்.

இச்சமயத்தில், ருஷியா, டென்மார்க், ஸ்வீடன் முதலிய தேசங்களுக்குச் சொந்தமான பல கப்பல்கள் பால்டிக் சமுத்திரத்தில் தங்கியிருந்தன. லார்டு நெல்சன் ஒரு பெரிய கடற்படையுடன் சென்று அக்கப்பல்களைத் தீக்கிரையாக்கினான்.

ருஷியா தேசத்து மன்னனும் நெப்போலியனது ஆருயிர் நண்பனுமாகிய பால் என்பவன் அத்தேசத்துப் பிரபுக்களால்

கொல்லப்பட்டான். பால் மன்னன் மாண்டதும் அவனது புத்திரன் அலெக்ஸாந்தர் பட்டத்துக்கு வந்தான். பிரபுக்களின் தூண்டுதலினால் அலெக்ஸாந்தர் ஆங்கிலேயரோடு நட்புக்கொண்டான். இதனால் பிரான்சுதேசத்துக்குப் பக்கபலம் குன்றியது.

நிற்க, எகிப்து தேசத்தில் அரசாண்டு வந்த கிளீபர் என்னும் பிரான்சு தளகர்த்தன் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டு ஒரு துஷ்டனால் கொல்லப்பட்டான். ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்று எகிப்து தேசத்தைக் கைப்பற்றினார்கள். இத் தோல்வியைச் செவியுற்ற நெபோலியன் இங்கிலாந்தின்மீது படையெடுக்கத் தீர்மானித்தான். ஒரு இலட்சம் வீரர்கள் முன்வந்தனர். கப்பல்கள் தயாரிக்கப்பட்டன. பிரான்சுதேச முழுவதும் போருக்குத் தயாராயிருந்தது. இதைக் கேட்ட ஆங்கிலேயர் திகில் கொண்டனர். இங்கிலாந்தில் ஒரு பஞ்சம் நேர்ந்தது. அப்போது ஜனங்கள் உணவின்றி வருந்தியமையால் சமாதானத்தையே விரும்பினர். ஆங்கிலேயரது வெற்றிகளைக் கண்ட நெபோலியனுக்கும் ஒருவாறு திகிலுண்டாயது. ஆகையால் இருதிறத்தாரும் சமாதானத்தை அவாவினர். ஆமியன்ஸ் என்னுமிடத்தில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் உடன்படிக்கை யொன்று தயாரிக்கப்பட்டது.

பிரான்சுக்காரர்கள் எகிப்து தேசத்தை விட்டுவிடவேண்டுமென்றும், மால்டாவைப் பழைய அரசர்களுக்கே மீண்டும் கொடுத்துவிட்டு மூன்று மாதத்திற்குள் ஆங்கிலேயரது சேனையும் பிரான்சு சேனையும் வெளியேறவேண்டியதென்றும் உடன்படிக்கை நிறைவேறியது. இரண்டு அரசாங்கங்களும் ஏகோபித்து அவ்வுடன் படிக்கையில் கையெழுத்திட்டன.

இவ்வுடன்படிக்கை ஆங்கிலேயராலும் பிரான்சுக்காரராலும் கொண்டாடப்பட்டது. இரண்டு தேசங்கட்கும் பகைமையொழிந்து உறவு ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள் பிரான்சு தேசத்தையும் நெபோலியனையுங் காணச்சென்றனர்.



பாக்ஸ் என்பவரும் சென்றனர். பாரிஸ் மாந்தர்கள் அவரை அன்போடு வரவழைத்துப் பல மரியாதைகள் செய்தனர். பாக்ஸும் நெபோலியனும் நட்புக்கொண்டனர். "பாக்ஸ், கார்ன்வாலிஸ் என்பவர்களைப்போல் பத்துப்பேர்கள் இங்கிலாந்திலிருந்தால் அத்தேசம் அறநெறி வாய்ந்து சிறப்புற்றோங்கும்" என்று நெபோலியன் கூறினான். ஆனால், பிட் பிரபுவும் அவரது நண்பர் குழாமும் ஆமியன்ஸ் உடன்படிக்கையை ஆமோதிக்காது அருவருப்புற்றனர். எந்த நோக்கங்களைக் கருதிப் போர் நடந்து வந்ததோ அந்நோக்கங்களிலொன்றேனும் நிறைவேறா வண்ணம் சமாதான மாற்றியது மதியீனமென்றும், அத்தகைய உடன்படிக்கை நெடுநாள் நீடித்தற்பாலது அன்று என்றும் அவர்கள் கூறிவந்ததுமன்றி உடன்படிக்கையைக் கலைத்தற்குரிய பல சூழ்ச்சிகளும் இழைத்துவந்தனர்.

இவற்றிற்கிடையே, பிரான்சு தேசத்தில் மதத்தை மீண்டும் ஸ்தாபிக்க நெபோலியன் தீர்மானித்தான். அவனது போர் வீரர்களும், தளகர்த்தர்களும், நண்பர்களும் நாஸ்திகப்பற்றுடையவர்கள். ஆனால், நெபோலியனோ மதப்பற்றும், கடவுள் பக்தியும் வாய்ந்த ஆஸ்திகன். பிரான்சு தேசத்துப் புலவர்களும் விஞ்ஞான நிபுணர்களும் நெபோலியனது மத ஸ்தாபன முயற்சிகளைக் கண்டித்தனர். சட்டசபையிலும் எதிர்ப்பு இருந்தது. ஆனால் நெபோலியன் அவர்களுக்குத் தக்க சமாதானம் சொல்லி எல்லோரையும் இணங்கச் செய்தான்.

"எனது கடவுள் நம்பிக்கை அற்பமாகிய மூட பக்தியாலுண்டாயதன்று; ஆனால் பகுத்தறிவினால் உண்டானது. சிறிய இயந்திரங்களை மனிதன் செய்கிறான். அதைப்போலவே, அறிவுக்கெட்டாத அகன்ற இப்பிரபஞ்சமாகிய இயந்திரத்தைச் செய்தவர் ஒருவர் இருத்தல் வேண்டுமன்றோ? அவரே கடவுள். எவ்வாறு இயந்திரங்களைக் காட்டிலும் இப்பிரபஞ்சம் பெரியதோ அப்படியே மனிதனைக் காட்டிலும் கடவுள் சிறந்தவரென விளங்குகிறது" என்று நெபோலியன் கூறுவதுண்டு. நெபோலியனது நிகி

முயற்சியாலும், அறிவின் திறத்தாலும் கிறிஸ்துவ மதம் பிரான்சு தேசத்தில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் மாதா கோயில்கள் திறக்கப்பட்டன. ஜனங்கள் மகிழ்ச்சியொடு கோவிலுக்குச் சென்று தொழுதுவந்தனர். ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாகத் தேசமெங்கும் கொண்டாடப்பட்டது.

பிரான்சுதேசம் பிறநாடுகளொடு நட்புக்கொண்டு அமைதி பெற்றிருந்தது. நெபோலியன் தற்பெருமை சிறிதும் பாராது ஏழைமக்களிடத்தும் அளவளாவி அவர்களது குறையனைத்தும் தீர்த்துப் பெரும்புகழும் பெருநன்மையும் பெற்றிருந்தானாதலால் பிரன்சு மாந்தர்கள் அவனைத் தெய்வமெனக் கொண்டாடினார்கள். ஏழை மக்களின் நண்பனென்னவும், சமத்துவத்தை நிலைநாட்டிய உத்தமன் எனவும் பிரன்சு ஜனங்கள் நெபோலியனைப் புகழ்ந்தனர். நெபோலியனது திறமையையும், தேச ஊழியத்தையும் மெச்சிய நகரமாந்தர்கள் நெபோலியனது ஞாபகார்த்தமாக ஐந்து லட்சம் மதிப்புள்ள ஒரு கட்டடம் எழுப்பத் தீர்மானித்து நெபோலியனிடம் சென்று அநுமதி கேட்டனர். அதற்கு நெபோலியன், "ஐயன்மீர்! நீங்கள் என்மீது காட்டிய போன்புக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். தேச ஊழியம் செய்த பெரியார்களின் ஞாபகார்த்தமாக, கட்டடம் எழுப்புதல் உலக வழக்கமாதலால் தாங்கள் செய்யக் கருதியுள்ளதை நான் பணிவுடன் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதற்குத் தக்க இடத்தை நீங்கள் ஏற்படுத்துங்கள்; கட்டடத்தைப் பின்சந்ததியார் எழுப்பிக் கொள்ளட்டும். எனது தேச ஊழியம் பின்சந்ததியாராலும் போற்றத் தக்கதாயின் அக்கட்டடம் அவர்களால் எழுப்பப்படட்டும்" என்று பதிலளித்தான்.

ஜோஸப்பைனுடைய மகள் ஹார்டன்சுக்கு வயது பதினெட்டாயிற்று. அவள் நல்ல அழகுவாய்ந்தவள். சிறந்த அறிவும் நற்குணமு முள்ளவள். ரேக் என்னும் போர்வீரனைக் காதலித்தாள். இருவருக்கும் கடிதப் போக்குவரத்துக்களும் நடந்து வந்தன. ஆனால், அவளை நெபோலியனது தம்பியாகிய லூயிக்குக் கொடுத்துச் சம்பந்தஞ் செய்துகொள்ள ஜோஸப்பைன் தீர்மானித்தாள். நெபோலியனும் கடைசியாக இணங்கினான். லூயி என்பவன் நல்லொழுக்கமும் கற்பனா சக்தியும், விடா முயற்சியும் வாய்ந்த வாலிபன். அவன் சிறு பிராயத்தில் பிரபுவம்சத்தினளாய ஒரு கன்னியைக் காதலித்தான். நெபோலியனது பலவந்தத்தால் அம்மணம் நிறைவேறாது போனமையால் லூயி மனமுடைந்து உலக வின்பத்தை வெறுத்தவனாய் ஏகாந்த வாழ்க்கையினையே பெரிதும் விரும்பினான். அக்கன்னிகையே அவனது உள்ளத்தில் குடிகொண்டிருந்தாள். மற்றொரு மங்கையைக் கனவிலும் நினைத்தற்கு அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. ஆனால், ஜோஸப்பைனுடைய தந்திரத்தாலும், நெபோலியனது பலவந்தத்தாலும் ஹார்டன்சுக்கும் லூயிக்கும் திருமணம் வெகு ஆடம்பரத்துடன் நிறைவேறியது.



இப்படியிருக்க, குடியரசில் அனுபவமில்லாத இதாலியர்கள் நெபோலியனிடம் சென்று அரசாங்கத் திட்டம் ஒன்று தயாரித்துக் கொடுக்குமாறும், அவ்வரசாங்கத்துக்கு நெபோலியனே தலைவனாயிருக்குமாறும் வேண்டினர். அவர்களது விருப்பத்திற்கிணங்கி ஒரு திட்டத்தைத் தயாரித்துக்கொடுத்ததுமன்றி தலைவர் பதவியையும் நெபோலியன் ஏற்றுக்கொண்டான். பாரிஸுக்கும், மிலான் நகர்க்கும் இடையிலுள்ள லையன்ஸ் என்னுமிடத்தில் இதாலியரின் தேசச்சபை கூடிற்று. நெபோலியனும் அச்சபைக்குப் போயிருந்தான். நெபோலியனால் தயாரிக்கப்பட்ட திட்டம் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பட்டது. இதாலியக் குடியரசுக்கு நெபோலியனைத் தலைவனாகப் பிரேரேபித்தவுடன் பெருத்த கரகோஷம் உண்டாயிற்று நெபோலியன் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றபின் லையன்ஸ் நகரில் இருபதுநாள் தங்கிச் செயத்தக்கவைகளைச் சீர்பெறச் செய்தபின் 1802-ஆம் ஜனவரி 31-உ பாரிஸ்நகர் சென்றான்.

நெபோலியன் தனது மனோபலம் முழுவதையும் பிரான்சு தேசத்தின் முன்னேற்றத்திலேயே செலுத்திவந்தான். பிரான்சு

தேசத்தின் இன்பத்தைத் தனது இன்பமெனவும், அதன் துன்பத்தைத் தனது துன்பமெனவும் பாராட்டிவந்தான். தன் குடும்பத்தின் நன்மைக்காக ஒரு மனிதன் எவ்வாறு உடல் வருந்தி உழைப்பானோ அவ்வாறே தேசத்தின் நன்மைக்காக அல்லும் பகலும் ஊணுறக்கமின்றி மெய்வருத்தம் பாராது நெபோலியன் உழைத்தான். பிரான்ச தேசத்தை ஒப்புயர்வின்றி ஆக்குதலே அவனது நோக்கமாகவிருந்தது. மற்றத் தேசங்களை அழித்துப் பிரான்ச தேசத்தைச் செழிக்கச் செய்வது அவனது கருத்தன்று. ஆனால், மனோவன்மையிலும், சீரிய ஒழுக்கங்களிலும், கைத்தொழில்களிலும், அயல் நாட்டு வர்த்தகத்திலும், தேசப் பொது வேலைகளிலும் பிரான்ச தேசம் இதர தேசங்கட்கு ஒரு வழிகாட்டியாயிருத்தல் வேண்டுமென்பதே நெபோலியனது நோக்கமாகும்.

பல கல்விச்சாலைகளும், சட்ட கலாசாலைகளும், வைத்திய கலாசாலைகளும், கைத்தொழிற் சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இராணுவக் கலாசாலைகள் புதிய மாதிரியில் அமைக்கப்பட்டன. மாணவர்களுக்குள் உயர்வு தாழ்வு என்னும் பேதம் ஒழிந்து, சமத்துவமே நிலவியது. ஜனங்கள், நலத்தையும் சுகத்தையும் அடைந்தமையால் நெபோலியனிடம் சென்று, "ஐயனே, எமையாளும் மெய்யனே! இத்தேசத்தையும் எங்களையும் அடிமைத்தனத்தினின்றும் நீக்கிய உமது உதவிக்கோருதவி செய்ய எண்ணியுள்ளோம். உமது திருவுளக் கருத்தெதுவோ அதைத் தெரியப்படுத்தின் இக்கணமே செய்து முடிப்போம்" என்றனர். அதற்கு நெபோலியன், "ஐயன்மீர்! எனது கடமையைச் சரிவர ஆற்றினேன் என்னும் திருப்தியைத் தவிர வேறொரு பெருமையையும் நான் நாடவில்லை. தேசமக்களின் அன்பைக் காட்டிலும் வேறு வெகுமதியும் வேண்டுமோ? பிரான்சதேசம் அமைதியையும், சுகவாழ்வையும் பெற்றபின் நான் இறக்கநேரின் மரணமும் எனக்குத் துன்பம் தரவல்லதன்று. பிரான்ச தேசத்தின் நலமே எனது நலம்; அதனது துயரே எனது துயர். இதுவே எனது



வாழ்க்கையின் இரகசியமாகும்" என்று பதில் தந்தனன். பிறகு, நெபோலியனை (Life Consul) சாசுவத அதிபதியாக ஜனங்கள் ஏற்படுத்தினர். இதனை மதித்த பல தேசத்து முடிமன்னர்களும் தத்தம் சந்தோஷத்தை நெபோலியற்குத் தெரிவித்தனர். பிரான்சதேசம் கவலை நீங்கிக் களிப்புற்றது.

# அத்தியாயம்—8

## போலோன் பாசறை.

பிரான்சு தேசத்தில் எண்ணிறந்த கைத்தொழில்கள் விருத்தி செய்யப்பட்டன. மேலும், அன்னிய நாட்டுச் சாமான்களுக்கு மிகுதியான தீர்வை விதிக்கப்பட்டது. இதனால், பிரான்சிலும், பிரான்சு தேசத்துக்குக் கீழ்ப்பட்ட இதர தேசங்களிலும் ஆங்கில நாட்டுச் சாமான்கள் விலையாகவில்லை. இதைக்கண்ட ஆங்கிலேயருக்கு நெப்போலியன்மீது பகைமை உண்டாயிற்று. ஆமியன்ஸ் சமாதானம் நிறைவேறி வருடம் ஒன்றாகியும் ஆங்கிலேயர்கள் எகிப்திலின்றாவது, அல்லது மால்டா தீவினின்றாவது தங்களது பட்டாளங்களை வெளிப்படுத்தினாரில்லை. நெப்போலியனோ உடன்படிக்கையின் நிபந்தனைகளை விரைவில் நிறைவேற்றினான். பிரான்ச தேசம் நாளுக்கு நாள் பலப்பட்டு வந்தமையால் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு ஆங்கிலேயர் சம்மதிக்கவில்லை. இதைக்குறித்துப் பார்லிமெண்டில் பெருத்த விவாதம் நடந்தது. அப்போது பாக்ஸ் என்பவர், "பிரான்ச தேசம் நாளுக்குநாள் பலப்பட்டு வருவதைக் குறித்து உங்களைக் காட்டிலும் நான் அதிகமாகவே வருந்துகிறேன். ஆனால், அதைக் காரணமாகக்கொண்டு உடன்படிக்கையை நிராகரிப்பது தருமமன்று. அவ்வாறு சத்தியம் தவறினால் அப்பழி உலகுள்ளளவும் இங்கிலாந்தின் பெருமைக்கு ஒரு களங்கமாகும். உடன்படிக்கையின் பிரகாரம் மால்டா தீவை விட்டு விடலே நமது பெருமைக்குப் பொருத்தமானது" என்று பிரசங்கித்தார். ஆனால், சமாதானத்தை மீறலே நியாயம் என்றும் யுத்தவாரம்பமே தக்கதென்றும் முடிவில் சபையோர் தீர்மானித்தனர்.





பிறகு, கடலில் காணப்பட்ட பிரான்சுக் கப்பல்களை ஆங்கிலேயர் உடனே தாக்கினர். பல பிரான்சுக் கப்பல்கள் பிடிக்கப்பட்டு அவைகளிலிருந்த எழுகோடி பிராங்கு விலை மதிப்புள்ள சாமான்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனைச் செவியுற்ற நெப்போலியன் கோபங்கொண்டு பிரான்சு தேசத்தில் அப்போது தங்கியிருந்த ஒவ்வொரு ஆங்கிலேயனையும் உடனே சிறை செய்யுமாறு உத்தரவிட்டான். நிரபராதிகளான பல்லாயிர ஆங்கில மக்கள் சிறை செய்யப்பட்டனர். இதனையறிந்த ஆங்கிலேயர்கள் திடுக்கிட்டு இங்கிலாந்தில் அப்போது காணப்பட்ட ஒவ்வொரு பிரான்சுக்காரனையும் சிறை செய்யுமாறு உத்தரவிட்டனர். பல்லாயிரம் பிரான்சுக்காரர்கள் உடனே சிறை செய்யப்பட்டனர். அந்தோ! யுத்தத்தின் கொடுமைதான் என்னே! குற்றமற்ற மக்களும், அவர்களது குடும்பங்களும் பட்ட இன்னலுக்கு அளவுமுண்டோ?

இப்படியிருக்க, இங்கிலாந்து தேசத்தின்மீது படையெடுத்துப்போக நெப்போலியன் துணிந்தான். கடற்படையில் இங்கிலாந்துக்கு நிகரான தேசம் கிடையாது. நான்கு பக்கங்களிலும் பலமான யுத்தக்கப்பல்களாலும் மற்றுத்தளவாடங்களாலும் நன்கு காக்கப்பட்ட இங்கிலாந்தின் மீது படையெடுத்தல் எளிதன்று என்பதை நெப்போலியன் அறிந்தும் தனது மானத்தையும் தேசத்தின் மானத்தையும் காக்கக் கருதிப் போருக்குரிய சகல முயற்சிகளையும் செய்து வந்தான். மூன்று லட்சம் வீரர்கள் போர்புரிதற்கு முன் வந்தனர். இரண்டாயிரம் பீரங்கிப்படகுகள் விரைவில் தயாரிக்கப்பட்டன. பிரான்சு தேசத்தின் கரையோரங்கள் நன்கு காக்கப்பட்டன. போர்ச்செலவுக்காகப் புதிய வரிகள் விதிக்கப்பட்டன. ஜனங்கள் அவ்வரியினை மகிழ்ச்சியுடன் செலுத்தியதுமன்றி விலையுயர்ந்த ஆபரணங்களையும், திரவியங்களையும் போருக்கு இனாமாக அளித்தனர். இதாலியா தேசத்தினரும் திரண்ட திரவியம் அனுப்பினர். பிறகு, போலோன் என்னுமிடத்தில் இராணுவத்தையும் கடற்படையையும் அணிவகுத்துத் தக்க தருணத்தை நெப்போலியன் எதிர்பார்த்திருந்தான்.

கடலைக் கடந்து சென்று, இங்கிலாந்துடன் நிலப்போர் புரியக்கருதி நெபோலியன் செய்துவந்த ஏற்பாடுகளைக் கண்டு ஆங்கிலேயர் பயந்தனர். சிறந்த இராணுவத்தையும், கடற்படையையும் ஆங்கிலேயர் ஆங்காங்கு அமைத்தனர். பதினேழு வயதுக்கு மேற்பட்டும் ஐம்பத்தேழு வயதுக்குக் கீழ்ப்பட்டுமுள்ள ஒவ்வொரு ஆங்கிலேயனும் இராணுவத்தில் சேரவேண்டுமென்று சட்டமொன்றைப் பிறப்பித்தனர். இங்கிலாந்து கடலரசேயாயினும் நிலச்சண்டையில் நெபோலியனுக்கு அஞ்சியது.

இப்படியிருக்க, லண்டன்மாநகரில் பெருத்த சதியாலோசனையொன்று செய்யப்பட்டது. நூறுபேர்கள் பிரான்சு தேசம் சென்று உள்நாட்டுக் கலகத்தை உண்டாக்குவதும், நெபோலியன் தன் அரண்மனைக்குத் தனியே செல்லும்போது அவனையும் அவனது மெய்க்காவலர்களையும் கொன்று வீழ்த்துவதும் அச்சதியாலோசனையின் நோக்கங்களாகும். ஒருநாள் இவ்வாலோசனைக்காரர்கள் லண்டனிலிருந்து புறப்பட்டு வந்து நள்ளிரவில் நார்மண்டி என்னும் ஊர் சேர்ந்தனர். அங்கிருந்து மெல்ல மெல்லப் பாரிஸ் நகர் சென்று, திரண்ட பொருள் தந்து, உள்நாட்டுக் கலகத்தையுண்டாக்க முயன்றனர். அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை. ஆண்டு நெபோலியனைப் புகழாதார் ஒருவருமிலர். பிரபுவம்சத்தவர்களும், மத குருக்களும், பிறரும், நெபோலியனது ஆட்சியில் சுகம் பெற்று அமைதியுடனிருந்தமையால் உள்நாட்டுக் கலகத்துக்கு எவரும் இசைந்திலர். சதியாலோசனைக்காரர்கள் பெருத்த முயற்சி செய்தும் திரண்ட பொருளைக் கொடுத்தும் முப்பதுபேர்களையே தம் வசமாக்கினர்.

இச்சதியாலோசனை நெபோலியனுக்கெட்டியது. நெபோலியனால் அனுப்பப்பட்ட பல வேவுகாரர்கள் உருமாறிப் பலவிடமுஞ் சென்று உண்மையை யறிந்து சதியாலோசனைக்காரர்களில் சிலரைச் சிறை செய்தனர். சிறைபட்ட சிலரால் சதியாலோசனையின் விவரங்கள் முழுதும் வெளிவந்தன. நெபோலியனால் பெரிதும் போற்றப்பட்ட வீரனை மோரோவும் அச்சதியா



லோசனையில் கலந்திருந்தமை வெளியாயிற்று. அன்றிரவே மோரோ சிறை செய்யப்பட்டான்.

மறுநாட்காலையில், பாரிஸ் நகர் எங்கும் வதந்தி ஒன்று உலாவியது. மோரோவின் நண்பர்கள், சதியாலோசனை என்பது ஒன்றுங் கிடையாதென்றும், அவ்வாறிருப்பினும் மோரோ அதில் கலந்துகொள்ளவில்லையென்றும், தனக்கு நிகரான போர்வீரனைத் தொலைத்தற்பொருட்டே அத்தகைய கட்டுக்கதைகளை நெபோலியன் தயாரித்தனன் என்றும் வெளிப்படையாய்ப் பேசினார்கள். ஜனங்களின் நன்மதிப்பையும் ஆதரவையுமே நோக்கமாகக் கொண்ட நெபோலியன் அவ்வதந்தியை யறிந்து, "யாரே விதியினை வெல்ல வல்லார்? இவ்வளவு சதியாலோசனைக்கும் இலக்காகிய என்னைச் சதியாலோசனைக்காரனென்றும், பொறாமை வயப்பட்டாரால் தூற்றப்படும் என்னைப் பொறாமைப் பேயன் என்றும், என்னுயிரைக் கவர்வான்பொருட்டுப் பலர் என்னைத் தாக்குகையில் பிறனொருவனை நான் கொல்ல முயல்வதாகவும் ஜனங்கள் சொல்லுவரேல் அஃது விதியின் பயனே யாகும்" என்று மனம் நொந்துரைத்தான்.

பின்னர், நீதி விசாரிக்கப்பட்டதில் மோரோவின் சதியாலோசனை வெளிப்பட்டமையினால் சட்டப்படி மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஆனாலும் நெபோலியன் மோரோவை மன்னித்து, திரண்ட பொருளையுந் தந்து அமெரிக்கா செல்லுமாறு உத்தரவளித்தான். மோரோ மிகவும் நல்லவன்; போர் வீரன்; போரில் வல்லுநன்; அதி தீரன். எனினும் நெபோலியன்மீதுள்ள பொறாமையினாலும் தனது மனைவியின் தூண்டுதலினாலும் நெபோலியனைத் தொலைத்து அவனது பதவியைத் தான் பெறவெண்ணிச் சதியாலோசனையிற் சேர்ந்தான்.

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். —திருக்குறள்.

பிரான்சு தேசத்து எல்லைப்புறத்தில் எடன்ஹீம் என்னும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் போர்பன் குடும்பத்தைச் சேர்ந்த

டியங்கியன் என்னும் ஓர் பிரபு வசித்துவந்தான். அவன் ஆங்கிலேயரது ஊதியம் பெற்றுத் தருணம் வாய்த்தபோது பிரான்சைத் தாக்குதற்கேற்ற முயற்சிகள் செய்து வருகிறானென்றும், சதியாலோசனைக் கூட்டத்தாரில் முக்கியமானவனென்றும் வேவுகாரர்கள் நெபோலியனுக்குத் தெரிவித்தனர். நெபோலியனும் அவற்றை யுண்மையென்றெண்ணி அவனை யுடனே சிறை செய்யுமாறு கட்டளையிட்டான். அன்றிரவே டியங்கியன் சிறை செய்யப்பட்டான். மறுநாள் நடந்தேறிய நீதி விசாரணையில் டியங்கியன் பிரபு, தான் சதியாலோசனையில் கலக்கவில்லையென்றும், தருணம் வாய்த்தபோது பிரான்சின்மீது படையெடுத்துச் செல்லற்குரிய ஏற்பாடுகளை மாத்திரம் தான் செய்துவந்ததாயும் உண்மையையுரைத்தான். சட்டப்படி அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. நெபோலியனை நேரிற் கண்டு பேசுதற்கு உத்தரவளிக்கும்படி நீதிபதிகளை டியங்கியன் வேண்டினான். உத்தரவு மறுக்கப்பட்டது. டியங்கியனும் அன்றே சுடப்பட்டு உயிர் துறந்தான்.

டியங்கியன் சதியாலோசனையில் கலக்கவில்லை யென்பதை நெபோலியன் பின்னருணர்ந்து மிகவும் வருந்தினான். இவ்வுண்மையை நெபோலியன் முன்னரே உணர்ந்திருப்பின் டியங்கியன் பிரபுவை மன்னித்துக் காப்பாற்றியிருப்பான். இதைக்குறித்து நண்பர்களிடத்துப் பேசும்போதெல்லாம் நெபோலியன் கண்ணீர் விட்டுக் கவலையுற்றனன். எனினும் அக்குற்றத்தை வேவுகாரர்கள் மீதாவது அல்லது நீதிபதிகள் மீதாவது சாட்டினானில்லை. அதன் முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டான்.

இதைக் குறித்துப் பலவரசர்களும் நெபோலியன்மீது குறை கூறினர். ருஷியா சக்கரவர்த்தியும் நெபோலியனைக் கண்டித்துப் பேசினர். தன் உயிரைக் காத்தற்கும், தேசத்தின் அமைதியை நிலைக்கச் செய்தற்கும் ஒரு அரசன் எதைச் செய்வானோ அதையே தானும் செய்ததாக நெபோலியன் அதற்குப் பதிலளித்தான்.



இப்படியிருக்க, நெபோலியனது வீரத்தையும், செங்கோல் ஆட்சியையும் கண்டு உவகை எய்திய பிரன்சு மாந்தர்கள் நெபோலியனையே அரசனாக்கத் தீர்மானித்தனர். நெபோலியன் பிரான்சுதேசத்தின் சக்கரவர்த்தியாய் முடிசூட்டிக்கொள்ள வேண்டுமெனத் தேசசபையார் ஏகமனதாய்த் தீர்மானித்தனர். பிரான்சுதேசம் மீண்டும் முடியரசை அங்கீகரிப்பின் ஐரோப்பாவின் வல்லரசுகள் பகைதணிந்து நட்புக்கொள்வரேல் பிரான்சின் முன்னேற்றத்தை முழு மனதோடு தான் கவனிக்க இயலுமென எண்ணியதால் சக்கரவர்த்திப் பதவியை ஏற்றுக்கொள்ள நெபோலியன் இசைந்தான்.

நெபோலியனது வேண்டுகோளுக்கிணங்கி ரோமாபுரியிலிருந்து போப் குருவும் பாரிஸ் வந்தனர். நெபோலியற்கும் ஜோஸப்பைனுக்கும் மதநெறிப்படி விவாகம் நடக்கவில்லையென்றுணர்ந்த போப்குரு அவர்களிருவர்க்கும் விதிப்படி விவாகம் செய்துவைத்தார். 1804-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-தேதி பிரான்சுதேச முழுவதும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தது. மாதா கோயில் அலங்கரிக்கப்பட்டு இந்திர சபையே போல் விளங்கியது. அங்கே நெபோலியற்கும் ஜோஸப்பைனுக்கும் ஒரு பெரிய சிம்மாசனம் தயாரிக்கப்பட்டிருந்தது. நெபோலியனது வரவை மாந்தர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். நெபோலியனும் அவனது மனைவியும் வண்டியினின்றிறங்கிக் கோயிலுக்குள் நுழைந்தனர். இன்னியங்கள் முழங்கின. சங்கீத அறிஞர்கள் இசைபாடினர். பெரியோர் ஆசி கூறினர். மற்றுளோர் நறைதோய் நாண்மலர் தூவினர். அப்பொழுது முடி சூட்டும் பொருட்டுப் போப் என்பவர் மௌலியைக் கையிலேந்தி நெபோலியன் அருகே சென்றனர். நெபோலியன் போப்பினிடமிருந்து அக்கிரீடத்தை வாங்கித் தன் தலையில் தானே சூட்டிக்கொண்டான். பிறகு, ஜோஸப்பைனுக்கென்று தயாரிக்கப்பட்டிருந்த மௌலியை நெபோலியன் எடுத்து அவள் தலையிற் சூட்டினான். ஜோஸப்பைன் ஆனந்தமிகுதியால் கண்

ணீர் வடித்துத் தன் கணவனது கழல் பணிந்து வணங்கினாள். வணங்கலும், "அரசன் நீடு வாழ்க" என்று அனைவரும் ஆசி கூறினர்.

நெபோலியனது ஆட்சியில் மாந்தர்கள் சுகம் பெற்றனர். பிறப்புயர்வு ஒழிக்கப்பட்டது. சமத்துவம் நாடெங்கும் நிலவியது. மதகுருக்களின் அட்டூழியமும், பிரபுக்களின் செருக்கும் பழைய கதைகளாயின. அரசாங்கத்தின் வரிப்பணம் மாந்தர்களின் பொது நன்மைக்கே செலவழிக்கப்பட்டது. அரசாங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள் எல்லோரும் அறியுமாறு பிரசுரிக்கப்பட்டன.

செய்வன செய்தல் யாண்டும் தீயன சிந்தியாமல்
வைவன வந்தபோதும் வசையில வினிய கூறல்
மெய்சொலல் வழங்கல் யாவு மேவின வெஃகலின்மை
உய்வன வாக்கித் தன்னே டுயர்வன வுவந்து செய்தான்.

—கம்பர்.

இவ்வாறு நெபோலியன் செங்கோலோச்சியமையால் மக்களின் அன்புக்குப் பாத்திரமாகிப் பொன்முடி தரித்துப் பிரான்சதேசத்தின் சக்கரவர்த்தியாய் விளங்கினான்.

பிரான்சதேசம் குடியரசை விடுத்து மீண்டும் முடியரசை ஸ்தாபித்ததை யறிந்த இதாலியர்கள் தாங்களும் அவ்வாறே செய்யத் தீர்மானித்து நெபோலியனிடஞ் சென்று தங்களது தீர்மானத்தைத் தெரிவித்து இதாலியாவுக்கும் முடிமன்னனாகவிருக்கும்படி நெபோலியனை வேண்டினர். நெபோலியனும் அதற்கிசைந்தான். 1805-ம் ஆண்டு மே மாதம் 26-உ. மிலான் நகரத்தில் நெபோலியன் முடிசூட்டிக்கொண்டான். நெபோலியன் அங்கே ஒரு திங்கள் தங்கிப் பல திருத்தங்களை யாற்றியபின் ஜோஸப்பைனது புத்திரனாகிய யூஜினை அரசப் பிரதிநிதியாக நியமித்துவிட்டுப் பாரிஸ் நகருக்குப் புறப்பட்டான்.

ஒவ்வொரு இடத்திலும் ஜனங்கள் நெபோலியனை வரவேற்று உபசரித்தனர். ஆல்ப்ஸ் மலைக்கருகில் நெபோலியன் வண்டியினின்றிறங்கிக் கொஞ்ச தூரம் நடந்து சென்றான்



அப்போது அவசரமாய் வந்துகொண்டிருந்த ஒரு கிழவியை நெபோலியன் பார்த்து, "அம்மா! இவ்வளவு விரைவாக எங்குச் செல்கின்றீர்கள்" என்று வினவினான். தன்னுடன் பேசுகின்றவர் இன்னாரென அறியாத அக்கிழவி, "ஐயா! சக்கரவர்த்தியார் இவ்வழி வருகின்றாரெனக் கேள்வியுற்று அவரைக் காணுமாறு விரைந்து செல்கின்றேன்" என்றனள். அதைக்கேட்ட நெபோலியன், தாயே! அவரை எதற்காகப் பார்க்கவேண்டும். இதுவரையிலும் போரபன் குடும்பத்தார் அரசாண்டனர். இப்போது நெபோலியன் அரசாளுகின்றான். இந்த மாறுதலால் நமக்கு வந்த நன்மை யாது?" என்று சொன்னான். அவ்வுரை கேட்டதும், அக்கிழவி சற்றுத் திகைத்து, "ஐயா! அறியாது பேசினீர். போரபன் குடும்பத்தார் பிரபுக்களின் அரசர்கள். நெபோலியனே எம்போன்றார்க்கரசன்" என்று விடையளித்துச் சென்றனள்.

நெபோலியன் பாரிஸ் நகர் சென்று இரண்டு கிரீடங்களின் பொறுப்பையும் ஏற்று மெய்வருந்தி உழைத்து வந்தான். உணவருந்தும் வேளை தவிர மற்ற நேரத்தை நிர்வாக விஷயத்திலே கழித்து வந்தான். எந்தக் காரியத்தையும் ஒத்திவைக்காமல் அன்றன்றே செய்தான். தேசமாந்தர்கள் நெபோலியனைத் தந்தையென்றும், அரசனென்றும், தெய்வமென்றும் போற்றி வந்தனர்.

போலோன் பாசறையில் பிரான்சுக் கடற்படையும் இராணுவப்படையும் பெருத்த முயற்சிகள் செய்து வந்தன. தினந்தோறும் ஒரு லட்சம் வீரர்கள் கடற்கடக்கும் விஞ்சையில் பயிற்சி செய்து வந்தனர். இங்கிலாந்தைத் தாக்கி வெற்றி பெறுதல் முழுதும் சாத்தியமானதென்று நெபோலியனும் நம்பினான்.

போலோன் பாசறைக்காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களை ஈங்குக் குறிப்பிடுவாம்:—

ஒருநாள் ஓர் ஆங்கில வாலிபன் பிரான்சு தேசத்து உள்நாட்டுச் சிறையினின்றும் தப்பியோடிப் போலோனுக் கருகே

யுள்ள கடற்கரை சேர்ந்தான். அங்கே, சில மரக்கிளைகளால் ஒரு படகு செய்து அதில் ஏறிக் கடலைக் கடந்து இங்கிலாந்து போகப் புறப்பட்டான். அப்போது சில பிரெஞ்சு வீரர்கள் அவனைப் பிடித்து வந்து நெபோலியன் முன் விடுத்து நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறுரைத்தனர். அவ்வாலிபனது மனோதிடத்தையும், தீரத்தையுங்கண்டு வியப்புற்ற நெபோலியன் அச்சிறுவனைப் பார்த்து, "பலமற்ற ஓர் படகில் ஏறிக் கடலைக் கடக்க நீ முயன்றது உண்மைதானா?" என்றனன். அதற்கு அவ்வாலிபன் "ஐயா! உண்மைதான். நீவிர் அநுமதி அளிப்பின் இக்கணமே கடந்து செல்வேன். வறுமைப்பிணியுற்றவளும், உடல் வருந்தி உழைத்தற்குப் போதிய பலமற்றவளும், வயது முதிர்ந்தவளும், வேறு கதியற்றவளுமாகிய எனது அருமைத்தாயைக் காண விழைகின்றேன்" என்று விடை தந்தான். அதனைச் செவியுற்ற நெபோலியன், "சரி! நீ செல்வாயாக. இதோ இந்தப் பொற்கிழியை இனாமாக வளிக்கின்றேன். இதை உன் தாயிடம் தந்து அவள் வறுமையை நீக்குக. வீரமும், பெற்றோர்பால் அன்பும் வாய்ந்த உன்னை ஈன்ற பெண்மகள் நல்ல உத்தமியாயிருத்தல் வேண்டும்". என்று பகர்ந்தனன். அச்சிறுவனும் ஒரு ஆங்கிலக் கப்பலில்" இங்கிலாந்து சென்று தன் தாயார்க்குத் தொண்டாற்றி இனிது வாழ்ந்தனன்.

லஜோலே என்னும் பிரஞ்சுவீரன் சதியாலோசனையில் கலந்திருந்தமையால் சிறை செய்யப்பட்டான். நீதி விசாரிக்கப்பட்டு அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவனுக்கு அழகும் அன்பும் வாய்ந்த பதினெட்டைப் பருவத்தளான ஒரு புத்திரி இருந்தாள். ஒருநாள் நெபோலியன் அரண்மனைப் புறத்தில் உலாவிக்கொண்டிருக்கும்போது அப்பெண் நெபோலியனது பாதங்களில் வீழ்ந்து தனது தந்தையை மன்னித்தருளுமாறு வேண்டினாள். அதைக் கண்டு மனமிரங்கிய நெபோலியன்," "நீ யார்? உன் தந்தையின் பேர் என்ன?" என வினவினான். அதற்கு அந்தப்பெண், "ஐயா! என் தந்தையின் பெயர் லஜோலே. அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுளது" எனக்



கூறினாள். "நங்காய்! முன் ஒரு முறை உனது தந்தையை மன்னித்தருளினேன். மறுமுறையும் அவன் சதியாலோசனையில் கலந்தமையால் நான் அவனை மன்னித்தல் முடியாது" என்று நெபோலியன் உரைத்தான். அதைக்கேட்ட அப்பெண்மணி "ஐயா! முதன் முறை அவர் நிரபராதி. இம்முறை அவர் குற்றமிழைத்தது உண்மையே. ஆதலால் உமது மன்னிப்பையே இரக்கின்றேன்" என்றனள். இதைச் செவியுற்ற நெபோலியன் அப்பெண்ணின் கையைப் பிடித்து, "குழந்தாய்! உன் தந்தையை மறுமுறையும் மன்னித்தேன். எழுந்து செல்க" என்று விளம்பினான். அவ்வுரை கேட்டதும், அப்பெண்மணி மூர்ச்சையுற்றுத் தரையில் வீழ்ந்தாள். மூர்ச்சை தெளிந்த பின்னர், தன் களைப்பையும் பொருட் படுத்தாது தந்தையிருந்த சிறைக்குச் சென்றனள். தந்தையைக் கண்டதும் அவன்மேல் விழுந்து, விம்மிவிம்மி யழுது, பேச வாயெழாது, உடல் நடுக்கமுற்று மீண்டும் மூர்ச்சித்து விழுந்தனள். சிறிது நேரம் சென்றபின் மூர்ச்சை தெளிந்து விழித்தாள். ஆனாலும் பகுத்தறிவு முழுவதும் இழந்து பித்தங் கொண்டனள். அதை யறிந்த நெபோலியன் பெரிதும் கவலையுற்று அன்று முதல் அப்பெண்ணையும் அவளது தாயையும் தனது பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றி வந்தான்.

ஒருநாள் நெபோலியன் தனது பாசறைக் கருகே உலாவிக்கொண்டிருந்தான். அப்போது மிகுந்த துக்கத்தோடு அழுது கொண்டிருந்த ஒரு மங்கையையும் அவள் அருகே நின்றிருந்த ஒரு குழந்தையையும் கண்டான். உடனே அம்மங்கையின் அருகே சென்று "அம்மணி! ஏன் அழுகிறீர்" என்று வினவினான். நெபோலியனை இன்னாரென்று அறியாத அம்மங்கை துயர மிகுதியால் விடையளிக்காது வாளாவிருந்தனள். அருகேயிருந்த அவள் மகன், "ஐயா! எனது தந்தையார் அடித்துவிட்டமையால் என் தாயார் அழுகிறார்கள்" என்று பதிலுரைத்தான்.

நெபோலியன்—உனது தந்தை எங்கே?

பையன்—அவர் இராணுவக் காவலாளர். சிறிது தூரத்தில் காவல்புரிந்து நிற்கிறார்.

நெபோலியன்—அம்மணி! நும் கணவன் பெயர் யாது?

மங்கை—ஐயா! உம்மைப் பார்த்தால் தளகர்த்தர்போலிருக்கிறது. என் கணவரது பெயரைச் சொன்னால் நீர் அவரைத் தண்டிக்கக் கூடுமாதலால் அவர் பெயரைச் சொல்ல மறுக்கிறேன். என் கணவரிடத்து அநேக நற்குணங்களுள. அவரிடத்துள்ள தீக்குணம் பொறாமை ஒன்றே. பொறாமை வந்தபோது உள்ளத்தே கொதித்தெழும் சினத்தைக் காக்க முடியாது என்னை யடித்து விடுகிறார். என்னை விதிப்படி மணந்தவராதலாலும் என் அருமைச் செல்வனின் திருத்தந்தையானமையாலும் அவரை நான் முழுவன்புடன் நேசிக்கின்றேன். அவரும் என்னை அவ்வாறே நேசிக்கின்றார்.

நெபோலியன்—அம்மணி! நீங்கள் ஒருவரை ஒருவர் உள்ளன்புடன் நேசிப்பினும் அவர் உம்மை அடித்துத் துன்புறுத்துதல் நீதியன்று. அவரது பெயரைச் சொல்லுங்கள். அரசற்குத் தெரிவித்து அவரைச் சீர்திருத்துவேன்.

மங்கை—ஐயா! அரசர் நீரேயாயினும் என் கணவரது பெயரைச் சொல்லமாட்டேன். சொன்னால் அவர் தண்டிக்கப்படுவாராதலால்.

இதனைச் செவியுற்ற நெபோலியன் அவ்விடத்தினின்றும் நீங்கினான். பிறகு, அப்படைக் காவலனைப்பற்றி விசாரித்தறிந்து அவனைத் தன்முன் கொணரும்படி நெபோலியன் ஏவினான். அப்படைக் காவலன் இருபத்தைந்து வயதுள்ள வாலிபன். இராணுவத்தில் புதியவனாய் அமர்ந்தவன். அதுவரையிலும் நெபோலியனைப் பார்க்காதவன். அவன் நெபோலியன்முன் கொண்டுவரப்பட்டான்.

நெபோலியன்—சிறுவனே! உன் மனைவியை அடித்த காரணம் என்னை? அவள் அழகும் அறிவும் வாய்ந்த உத்தமி. அவளை



நீ அடித்தல் தகாத காரியமாகும். பிரான்சு வீரனுக்கு இத்தகைய குணமிருப்பது வெட்கந் தரத்தக்கது.

வாலிபன்—ஐயா! பெண்கள் சொல்வனவற்றை எல்லாம் நம்புவதென்றால் அவர்களிடத்துக் குற்றமே காண்டலரிது. ஒருவனிடத்தும் பேசக்கூடாதெனக் கட்டளை யிட்டுள்ளேன். ஆனால், நான் வீட்டுக்குப் போகும்போதெல்லாம் எனது நண்பர்களிடத்துப் பேசிக்கொண்டே யிருக்கிறாள்.

நெபோலியன்—உன் மனைவியைப் பேசாமடந்தை யாக்க முயல்கின்றாய் போலும். ஆற்றின் நீர்ப்பெருக்கை எதிர்நோக்கி ஓடச் செய்யினும் செய்யலாம், காடி வெம்புலி வாயையும் கட்டலாம், பெண்களின் வாயை யடக்குதல் இயலாத காரியமாகும். என் அறிவுரையை ஏற்றுக் கொள்க. உனக்குள்ள பொறாமைக் குணத்தினை விட்டொழிக. உன் மனைவி பிறருடன் பேசி மகிழ்ச்சியடைக. அவள் தவறிழைப்பின் அத்தவறு அவளைத் துயரக்கடலிலாழ்த்துமே யல்லாது இன்பம் பயக்க வல்லதன்று. எனது கட்டளையை மீறி நடப்பின் நான் அரசற்குத் தெரிவிப்பேன். அரசர் உன்னையழைத்து விசாரிப்பின் நீ என்ன சொல்வாய்.

வாலிபன்—ஐயா! என் மனைவி எனக்குரியவள். தவறிழைப்பின், அவளைத் தண்டிக்கக் கூடிய உரிமையும் எனக்குண்டு. அரசர் என்னைக் கேட்டால், "அரசே! உங்கள் விரோதிகளை நீங்கள் நன்கு கவனியுங்கள். என் மனைவியைத் திருத்திக் கொள்ளும் தொழிலை எனக்கே விட்டு விடுங்கள்" என்று பதில் சொல்வேன்.

நெபோலியன்— (சிரித்துக்கொண்டு) சிறுவ! நான்தான் அரசனென்பதை நீ அறியாயோ?

வாலிபன்—அரசே! அறியாதுரைத்தேன். மன்னித்தருளுக. உமது கட்டளைப்படியே இனி நடப்பேன்.

நெபோலியன்—நன்று பேசினை. உன் மனைவியின் நல்லொழுக்கத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டேன். அனைவரும் அவளைப் புகழ்கின்றனர். உனக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று பயந்து உனது பெயரையும் என்னிடம் சொல்ல மறுத்தனள். அவளிடம் அன்போடிருத்தலே உனது கடமையாகும். ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் உன்னை யமர்த்தியுள்ளேன். உனது மனைவியை நீ மறுபடியும் அடிப்பின் நானும் உன்னை நன்கு புடைக்கக்கூடும் என்பதை யுணருக.

இச்சம்பாஷணை நிகழ்ந்த பல ஆண்டுகட்குப் பின்னர் அந்நங்கையை நெபோலியன் தற்செயலாய்ப் பார்க்க நேர்ந்த போது, "அம்மணி! சுகமா? உன் கணவன் எனக்களித்த வாக்குறுதியை நிறைவேற்றினனா?" என்று வினவினன். அப்பெண்மணி மகிழ்ச்சியின் மிகுதியால் கண்ணீர் விடுத்து, அரசன் அடிபணிந்து, "அரசே! உம்மைப்பார்த்த அன்றைநாள் முதல் சுகவாழ் வெய்தினேன்" என்றனள். அதைக் கேட்டு மகிழ்வுற்ற நெபோலியன், "அம்மா! கற்புக் கரசியாய் விளங்குதலே நீர் எனக்குச் செய்யும் கைம்மாறாகும்" என்று பதில் உரைத்தான்.

# அத்தியாயம்—9

## பகைவர் சீற்றமும் பிரான்சின் ஏற்றமும்.

போலோன் பாசறையில் யுத்த முயற்சிகள் நாளுக்குநாள் பலப்பட்டு வந்தன. ஆங்கிலேயர்கள் பெருந்திகில் கொண்டு ருஷியா, ஆஸ்டிரியா, ஸ்வீடன் எனப்படும் மூன்று வல்லரசுகளையும் பிரான்சுமீது போர் தொடங்கும்படி தூண்டினர். அம்மூன்று வல்லரசுகளும் ஆங்கிலேயரின் பொருளுதவி பெற்று ஐந்து லட்சம் வீரர்களைத் தயாரித்து அணிவகுத்து நின்றன. ஆயிரம் மைலுக் கப்பாலுள்ள போலோன் பாசறையில் நெபோலியன் தங்கியிருந்தமையால் பிரான்சின்மீது திடீரென்று பாய்ந்து வெற்றிபெற எண்ணி அவ்வல்லரசுகள் தத்தம் சேனையுடன் புறப்பட்டன. ஆஸ்டிரியச் சேனை பவேரியாவிற் புகுந்து அல்ம், மூனிச் என்னும் இடங்களைக் கைப்பற்றிய பின்னர் ரைன்நதி தீரத்தில் வந்து தங்கியது. ருஷிய சக்கரவர்த்தியும் பெருத்த சேனையுடன் பிரான்சு நோக்கி வந்துகொண்டிருந்தான்.

77382

இவற்றை யுணர்ந்த நெபோலியன் போலோனிலிருந்து இராணுவத்துடன் புறப்பட்டுக் காரோனக் கடிது சென்று, [illegible] டேன்யூப் என்னும் நதிகளையுங் கடந்து ஆஸ்டிரியச் சேனையை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டான். தங்களது நிலையையும் எதிரியின் பலத்தையும் அறிந்த ஆஸ்டிரிய வீரர்கள் தத்தம் ஆயுதங்களை எறிந்துவிட்டுச் சரண் புகுந்தனர். பிறகு, நெபோலியன் அல்ம் கோட்டையை முற்றுகையிட்டான். அதில் இருந்த முப்பத்தாறாயிரம் ஆஸ்டிரிய வீரர்களும் உடனே சரண்புகுந்தனர். நெபோலியன் அவர்களை மன்னித்தருளினன். பிறகு மூனிச் என்னும் நகரமும் கைப்பற்றப்பட்டது. ஆஸ்டிரியர்கள்



V52
N3C1

பவேரியாவை விட்டு ஓடிப்போயினர். பவேரியா மன்னன் மீண்டும் சிம்மாதனம் பெற்றனன். ஆஸ்டிரியச் சேனை நாலா பக்கங்களிலும் சிதறி ஓடியது.

பின்னர், நெபோலியன் ஆஸ்டிரியாவின் தலைநகராகிய வியன்னா மீது படையெடுத்துச் சென்றான். ருஷியச் சக்கரவர்த்தியும், ஆஸ்டிரிய மன்னனும் ஒரு லட்சம் சேனையைத் திரட்டிக்கொண்டு எதிர் நோக்கிச்சென்று நெபோலியனை எதிர்த்தனர். நெபோலியனிடம் எழுபதினாயிரம் வீரர்களே யிருந்தனர். ஆஸ்டர்லிட்ஸ் என்னும் இடத்தில் கடும்போர் நிகழ்ந்தது. பிரான்சுசேனை முன் நிற்கமாட்டாமல் எதிரிகள் அஞ்சியோடினர். மன்னர்களிருவரும் நள்ளிரவில் ஓடி ஒளிந்தனர். இருபதினாயிரம் எதிரிகள் நெபோலியனால் சிறை செய்யப்பட்டனர். புறங்காட்டியோடும் எதிரிகளைத் தாக்கிக்கொண்டே நெபோலியன் வியன்னா அணுகினான். ஆஸ்டிரிய மன்னன் பயந்து சமாதானம் வேண்டலும் நெபோலியனும் இசைந்தமையால் சமாதானம் நிறைவேறியது. ஆஸ்டிரியர்கள் பிரான்சுடன் சமாதான மாற்றியதுமல்லாமல் ருஷியா மன்னனையும் யுத்தத்தை நிறுத்தும்படி வேண்டினர். யுத்தம் நிற்றலும் சமாதானம் உண்டாயிற்று.

நெபோலியன் பிரான்சுக்குத் திரும்பிச் சென்றனன். பாரிஸ் நகர மாந்தர்கள் நெபோலியனை ஆடம்பரத்துடன் வரவேற்க ஏற்பாடுகள் செய்தனர். அதனை யறிந்த நெபோலியன் யாரும் அறியா வண்ணம் நள்ளிரவில் பாரிஸ் சென்று அரண்மனைப் புகுந்தமையால் மாந்தர்கள் ஏமாறினர். தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தவும், வெற்றி வாழ்த்துக் கூறவும் அரசன் சந்தர்ப்பம் அளிக்காமையைக் குறித்து ஜனங்கள் வருந்தினார்கள். அதற்கு நெபோலியன், "நான் தோல்வியுற்று வரும்போது நீங்கள் நல்வரவு கூறி என்னை உபசரிப்பின், உமது அன்பின் திறத்தைப் பகைவர்களும் புகழ்தல் கூடும்.



பிரான்சு மாந்தர்கள், வெற்றியையுந் தோல்வியையும் சமமாகப் பாவிக்கும் பான்மை யுடையவர்கள் எனவும், வாழ்விலுந் தாழ்விலும் அரசன்பால் மாறாத அன்பு கொண்டவர்களெனவும் மாற்றலர்கள் உம்மைப் போற்றுவார்கள். ஆனால், நான் வெற்றியுற்று வரும்போது என்னை நீங்கள் வரவேற்று வாழ்த்துக் கூறின் ஜெயங் கொண்டானைப் பயங்கொண்டு போற்றும் பான்மையுடையவர் எனப் பகைவர்கள் உம்மை இகழ்ந்து கூறுவாராதலால் அத்தகைய வரவேற்பை விலக்கினேன்" என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டான்.

ஒருகாலத்தில் குடியரசு தேசமாயிருந்த ஹாலந்தை ஆங்கிலேயர்கள் தாக்கி அதன் வியாபாரத்தையும் இராணுவத்தையும் அழித்தனர். அப்பொழுது பிரான்சுதேசம் அதன் உதவிக்குச் சென்று எதிரிகளைத் துரத்தியடித்து மீண்டும் குடியரசை நிலைநிறுத்தியது. பிரான்சு தேசம் நெபோலியனை மன்னனாக்கி மீண்டும் முடியரசை நிறுவியபோது ஹாலந்து தேசமும் பிரான்சைப் பின்பற்றி முடியரசை அவாவியது. நெபோலியனது தம்பியாகிய லூயி போனபார்ட்டி என்பவன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அமைதியும் அறிவும் நல்லொழுக்கமும் வாய்ந்த அவனை ஹாலந்து தேச மாந்தர்கள் அன்புடன் ஆதரித்தனர்.

அத்தருணத்தில், பிட் என்னும் ஆங்கில முதன் மந்திரி யிறந்தனர். பாக்ஸ் என்பவர் முதல் மந்திரியாக நியமிக்கப்பட்டனர். அவரும் நெபோலியனும் நெருங்கிய நண்பர்களானமையால் ஐரோப்பாவில் விரைவில் சமாதானம் உண்டாகுமென்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால், சமாதானத்துக்குத் தடைகளாக அநேக சிக்கல்கள் அப்போதிருந்தன. எனினும், அவ்விடையூறுகளை ஒவ்வொன்றாய் நீக்கிச் சமாதானத்தை விரைவில் நிலைநாட்டற்குரிய ஏற்பாடுகளை இருவரும் ஆற்றி வந்தனர். ஐரோப்பாவின் துரதிர்ஷ்டத்தால் பாக்ஸ் திடீரென்று மாண்டனர். சமாதானமும் அவருடனே புதைக்கப்பட்டது. இதைக்குறித்து

நெபோலியன், "மனித இரத்தினமாகிய பாக்ஸ் என்பவர் இன்னும் சில வாண்டுகள் உயிர்வாழ்ந்திருப்பின் ஐரோப்பாவின் சரித்திரம் வேறுவிதமாய் முடிந்திருக்கும். குடியாட்சியை ஐரோப்பாவெங்கும் பரவச் செய்திருப்போம்" என்று செண்ட் ஹெலினாவில் சிறைவாசம் செய்யும்போது சொல்லியதுண்டு.

இப்படியிருக்க, இங்கிலாந்தும், ருஷியாவும், பிரஷியாவும் ஒன்று சேர்ந்து பிரான்சின் மீது படையெடுத்தன. பிரஷியாவின் அரசனை வில்லியம் என்பவன் இரண்டு லட்சம் சேனையுடன் சேக்ஸனியில் நுழைந்து அம்மன்னனையும் தன்னுடன் சேரும்படி பலவந்தப் படுத்தினான். ருஷிய மன்னனாகிய அலெக்ஸாந்தர் என்பவனும் இரண்டு லட்சம் சேனையுடன் பிரான்சை நோக்கி வந்தான். ஆங்கிலேயரது கப்பற்படை மத்தியதரைக்கடலில் நின்று கரையோரமுள்ள ஒவ்வொரு பிரெஞ்சுப் பட்டினத்தையும் தாக்கியது. இவையெலாம் உணர்ந்த நெபோலியன் பெருமூச்செறிந்தான். சில மாதங்கட்கு முன்னர்த்தான் ஆஸ்டிரியர்களையும் ருஷியர்களையும் முறியடித்து அவர்களுடன் தாராளமான நிபந்தனைகளுடன் சமாதானமாற்றினான். அப்படியிருந்தும் ருஷிய மன்னன் கண்ணியமிழந்து, உடன்படிக்கையை மீறி, சத்தியந்தவறி மீண்டும் போருக்கெழுந்ததைக் கேட்பின் நெபோலியன் மனங்கசியா திருப்பானோ? சிறிது நேரத்துக்குள் தேறுதலடைந்து, தன்னறைக்குள் சென்று, ஆங்கு நாற்பத்தெட்டு மணி நேரம் தனியே அமர்ந்து, யுத்த முறைகளை எண்ணித் துணிந்த பின்னர்ப் போருக்குப் புறப்பட்டான். ஜீனா, ஆர்ஸ்டாத் என்னுமிடங்களில் பிரெஞ்சு சேனையும் பிரஷியச்சேனையும் சந்தித்துப் பெரும்போர் நிகழ்த்தின. பிரஷியர்கள் தோல்வியுற்றுச் சிதறியோடினர். பிரஷியாதேசம் நெபோலியன் வசமாயிற்று. அத்தேசத்து மன்னன் சில நண்பர்களோடு ருஷியாவுக்கு ஓடிப் போய் அலெக்ஸாந்தரின் உதவியை எதிர்பார்த்திருந்தான். பிரஷியாவின் தலை நகரான பர்லின் பட்டினத்தில் நெபோலியன் சிறிதுகாலம் தங்கிக் களைப்பாறினான். அவ்வமயம் சேக்ஸனி மன்னனை வரவழைத்துப் புத்தி புகட்டினான். நெபோலியனது



பெருந்தன்மையைக் கண்ட சேக்ஸனி மன்னன், "பிரான்சுக்கு விரோதமாய்ப் படையெடேன் அமரில்" என்று வாக்களித்தமையால் இருவர்க்கும் சமாதானம் நிறைவேறியது. நெபோலியன் ஒரு மாதத்துக்குள் பிரஷியாவின் முடியரசை முடித்து அதன் இராணுவத்தையும் தகர்த்து அத்தேசத்தையும் கைப்பற்றினான்.

நெபோலியன் பர்லின் நகரில் தங்கியிருக்கும்போது இங்கிலாந்து தேசத்தினர், "பிரான்சு, தேசத்துடனாயினும் அதன் நேச தேசங்களுடனாயினும் எந்தத் தேசமும் கடல் வழியாக எத்தகைய வியாபாரமும் செய்யக்கூடாது. அப்படிச்செய்யின் கடலில் காணப்படும் கப்பல்கள் கைப்பற்றப்பட்டு அவைகளிலுள்ள சாக்குகளனைத்தும் பறிமுதற் செய்யப்படுவதுமன்றிப் பிரயாணிகளும் சிறை செய்யப்படுவார்கள்" என்ற சட்டத்தை ஏற்படுத்தினர்.

இதையறிந்ததும் தன் தேசத்தின் மரியாதையையும் சுதந்தரத்தையுங் காப்பாற்றக் கருதிய நெபோலியன் "பிரான்சு தேசத்தின் எல்லைக்குள்ளாயினும் அதன் நேச தேசங்களுக்குள்ளாயினும் காணப்படும் ஆங்கிலேயர்கள் உடனே சிறை செய்யப்படவேண்டும். அன்றியும் அவர்களுக்குச் சொந்தமான எல்லா சாக்குகளும் பறிமுதல் செய்யப்படவேண்டும். பிரான்சு தேசமும் அதன் நேச தேசங்களும் இங்கிலாந்துடனாயினும் அதன் குடியேற்ற நாடுகளுடனாயினும் வியாபாரம் செய்தல் கூடாது. அப்படிச் செய்யின் அக்கப்பல்கள் பறிமுதல் செய்யப்படும்" என்று உத்தரவு செய்தனன். இதற்குப் பர்லின் உத்தரவு என்று பெயர்.

பின்னர், நெபோலியன் ருஷியாவின் மீது படையெடுக்க வெண்ணிச் சேனையுடன் புறப்பட்டு விஸ்டுலா நதியை யணுகினான். மாரிக்காலமாதலால் பிரெஞ்சு சேனை அங்கே தங்கியிருந்தது. அதையறிந்த அலெக்ஸாந்தர் ஒரு பெரிய சேனையுடன் சென்று பிரெஞ்சு சேனையைத் தாக்கினான். வெஞ்சமர் நிகழ்ந்தது. இருதிறத்திலும் பல்லாயிரம் வீரர்கள் மாண்டனர். ருஷியர்கள்

இறுதியில் தோல்வியுற்றுச் சிதறியோடினர். அலெக்ஸாந்தர் நெபோலியனுக்குச் சமாதானச் செய்தியனுப்பினான். நெபோலியனும் இணங்கியமையால் சண்டை நின்றது. டில்சிட் என்னுமிடத்தில் நெபோலியன் சின்னாள் தங்கியிருந்தான். அப்போது நெபோலியனும் அலெக்ஸாந்தரும் நட்புற்றனர். நெபோலியனது அரிய குணங்களைக் கண்டு அலெக்ஸாந்தர் வியப்புற்றனன். பிரஷியா மன்னனும் அவன் மனைவியும் அங்கே வந்து சேர்ந்தனர். அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கிப் பெருந்தகை நெபோலியன் பிரஷியா மன்னற்குப் பாதி தேசம் தந்து அவனை மீண்டும் அரசனாக்கினான். அலெக்ஸாந்தரும் பிரான்சு தேசத்துடன் சில நிபந்தனைகளோடு சமாதானம் செய்துகொண்டான். இந்த டில்சிட் சமாதானம் முடிவுற்ற பின்னர் நெபோலியன் பாரிஸ் நகர் சென்றான்.

பிரான்சு தேசத்தின் முன்னேற்றத்தைக் கருதி நெபோலியன் கண்ணுறக்கமின்றி உழைத்து வந்தான். அளவிலா அபிவிருத்திகள் அமைக்கப்பட்டன. நாற்பதினாயிரம் மைல் நீளமுள்ள பாதைகள் தேசமெங்கும் உண்டாக்கப்பட்டன. பதினான்கு வாராவதிகள் கட்டப்பட்டன. அவ்வாராவதிகள் இக்காலத்திலும் சிறந்து விளங்குகின்றன. இரண்டு பெரிய கால்வாய்கள் வெட்டப்பட்டன. கோட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. முப்பது நீர்க்குழாய்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டுப் பாரிஸ் நகரம் அலங்கரிக்கப்பட்டது. கைத்தொழில்களும், வியாபாரமும் மிகுதியாயின. பாதைகளில் வண்டிகளும், கால்வாய்களில் படகுகளும் இடைவிடாமற் போய்க்கொண்டிருந்தன. பஞ்சு விளைதற்குரிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கால்நடை ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப்பட்டன. பிரான்சு தேசம் செழிப்புற்றுச் சீர்பெற்று விளங்கியது. நெபோலியனது கீர்த்தி கதிரவன் ஒளிபோல் உலகெங்கும் பரவியது.

ஐரோப்பாவின் வல்லரசர்களெல்லாம் நெபோலியனிடம் கட்டுக்கொண்டு பர்லின் உத்தரவை ஆதரித்து வந்தனர். நெபோ



லியனது தம்பியும் ஹாலந்து தேசத்து மன்னனுமாகிய லூயி என்பவன் மாத்திரம் பர்லின் உத்தரவை அமுலுக்குக் கொண்டு வரவில்லை. இங்கிலாந்து சாமான்கள் ஹாலந்தில் இறங்கி மற்றத் தேசங்களுக்குப் போய்க்கொண்டிருந்தன. ஹாலந்து தேசத்தின் வருமானத்தையும் முன்னேற்றத்தையுமே பெரிதாகக் கருதிய லூயி மன்னன் பர்லின் உத்தரவை நிராகரித்து வந்தான். இதையறிந்த நெபோலியன் தன் தம்பியைப் பெரிதும் கண்டித்து ஒரு நிருபம் வரைந்தனன்.

பிறகு, நெபோலியனது தம்பியான ஜரோம் என்பவனுக்கும் ஜர்மனியைச் சார்ந்த வர்டம்பர்க் மாகாணத்து மன்னனுடைய மகளுக்கும் திருமணம் நிகழ்ந்தது. இம்மன்றற்குப் பின்னர் ஜரோம் என்பவன் வெஸ்ட்பேலியா என்னும் மாகாணத்துக்கு அரசனாக நியமிக்கப்பட்டான். அப்பொழுது, நெபோலியன் தம்பிக்குக் கூறிய அறிவுரைகளாவன.

"தம்பி! பிரஜைகளைப் பட்சபாதமின்றிப் பாதுகாப்பாயாக. ஒருவர் மீதும் விசேடப்பற்று வையாதே. ஒருவர்க்கும் தீங்கினைச் செய்யாதே. குடிமக்களது இன்பமே உனதின்பமாகவும் அவர்களது துன்பமே உனது துன்பமாகவும் கருதுக. அரசியல் விஷயங்களை எவரிடத்தும் பேசாதே அரசியல் விஷயம் அதிக அந்தரங்கமானது. அதனை நின் மனைவியிடத்தும் தெரிவித்தல் கூடாது. பிரஜைகளுக்கு அறிவையும், நல்லொழுக்கத்தையும் பரந்த நோக்கத்தையும் உண்டாக்கக்கூடிய எல்லா வழிகளையும் நீ தேடுக. விருந்துகச்சேரிகளுக்குச் செல்லற்க. ஆடம்பர வாழ்க்கையை விடுத்துத் தேசத்தின் முன்னேற்றத்திலேயே கண்ணுங் கருத்துமாய் இருப்பாயாக. பெண்களின் வலையில் அகப்படாதே. யுத்த வீரர்களையும், தொழிலாளர்களையும் ஆதரிப்பாயாக. கடவுளின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து வாழ்வாயாக."

இங்ஙனம் அறிவுரைகள் கூறித் தம்பியை யனுப்பிய பின்னர் நெபோலியன் அரசியல் நிர்வாகத்தைக் கவனித்து வந்தான். நெபோலியனைப் போல மெய்வருந்தி உழைத்த வேறெவரையும்

உலகில் காண்டலரிது. நெபோலியன் இருபது வருடங்களே அரசாண்டான். அவ்விருபது வருடங்களில் எண்ணிறந்த போர்களைப் புரிந்ததுமன்றி அரசாங்க பரிபாலனத்தையும் நடத்திவந்தான். இவைகளுக்கிடையே அவன் எழுதிய கடிதங்கள் கணக்கற்றன. அக்கடிதங்கள் இப்போதும் பாரிஸ்நகரில் காணக்கிடைக்கின்றன. அவைகளை அச்சிடின் நூற்றுக் கணக்கான புத்தகங்களாகும் என்று கூறப்படுகின்றது.

இத்தருணத்தில் போர்ச்சுகல் தேசம் ஆங்கிலேயரது ஆதரவிலிருந்தது. அதன் துறைமுகத்தில் ஆங்கிலக் கப்பல்கள் கணக்கற்றிருந்தன. இங்கிலீஷ் சாமான்கள் அத்தேசத்தின் கடைகளிலும் பிற இடங்களிலும் நிறைந்திருந்தன. இவற்றையறிந்த நெபோலியன் உடனே போர்ச்சுகல் மன்னற்கு ஓர் நிருபம் விடுத்தனன். அந்நிருபத்தில், இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் நடந்துவரும் சண்டையில் போர்ச்சுகல் தேசத்தவர் இங்கிலாந்துடனாயினும் அல்லது பிரான்சுடனாயினும் வெளிப்படையாகச் சேரவேண்டுமென்றும், பிரான்சு பக்கம் சேரின் இங்கிலாந்துடன் யாதொரு வியாபார சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் குறிக்கப்பட்டிருந்தது. போர்ச்சுகல் மன்னன் அந்நிருபத்தை இங்கிலாந்துக்கனுப்பினான். இங்கிலீஷ் பார்லிமெண்டார் அதற்குப் பதில் வரைந்து போர்ச்சுகல் மன்னற்கனுப்ப அவன் அதை நெபோலியனுக்கனுப்பினான். நெபோலியன் உடனே ஒரு படையைத் திரட்டிப் போர்ச்சுகல் தேசத்தைத் தாக்குமாறு ஏவினான். அப்படை விரைவாய்ச் சென்று போர்ச்சுகல் தேசத்தின் தலைநகரான லிஸ்பன் நகரை நெருங்கியது. இதனைச் செவியுற்ற அரசனும், அரச குடும்பத்தினரும், பிரபு வம்சத்தினரும் தத்தம் திரவியங்களைத் திரட்டிக் கொண்டு அமெரிக்காவில் தங்கட்குச் சொந்தமான பிரேஸில் என்னும் நாட்டுக்குப் போகப் புறப்பட்டனர். ஆங்கிலேயரது கப்பற்படையின் உதவியால் அவர்கள் உயிர்தப்பி நகர் நீங்கினர். அக்கணமே பிரான்சு சேனை லிஸ்பன் நகரில் நுழைந்து ஒருவித எதிர்ப்புமின்றிப் போர்ச்சுகல் தேசத்தைக் கைப்பற்றியது.



இச்சமயத்தில் ஸ்பெயின் தேசத்தை நாலாவது சார்லஸ் என்பவன் அரசாண்டுவந்தான். அவன் மனவுறுதியும், ஆற்றலுமில்லாத வயோதிகன். அவனது மனைவி வெட்கமும், கற்பும் அற்றுக் கணவனை மதிக்காமல் காமவேட்கை கொண்டு, அழகும், வீரமும், சங்கீத அறிவும் வாய்ந்த காடாய் என்னும் யுத்த வீரனுடைய மோகத்தில் மயங்கிக் காலங்கழித்தனள். அரசனும் அவளுடைய நடக்கையை ஆமோதித்துக் காடாய் என்பவனிடம் நட்புப் பாராட்டி வந்தனன். அவளுக்கு மூன்று பிள்ளைகளிருந்தனர். அவர்களில் மூத்தவனான பர்டினண்டு என்பவன் தாயைப்போலக் காமியாகவும் தந்தையைப்போல அறிவற்றவனுமாக விருந்தான். அரசனது மூடத்தன்மையையும் அரசியின் அட்டூழியங்களையும் அறிந்த மாந்தர்கள் பர்டினண்டை அரசனாக்கக் கருதினர். இதற்குத் தடையாயிருந்த தாய் தந்தையர்களையும், தாயின் சோரநாயகனான காடாய் என்பவனையும் விஷமிட்டுக் கொல்லப் பர்டினண்டு முயன்றனன். இதையறிந்த காடாய் அவனைச் சிறையிலடைத்தான்.

இச்செய்தியையுணர்ந்த மாந்தர்கள் காடாய் மீது கோபங்கொண்டு, அவன் மாளிகையில் நுழைந்து, அவனைக் கொல்ல முயன்றனர். காடாய் என்பவன் பயந்து ஒரு மூலையில் ஒளித்துக்கொண்டான். மூன்றாம் நாள் அவன் கண்டுபிடிக்கப்பட்டுச் சிறை செய்யப்பட்டான். பின்னர், மாந்தர்கள் அரசனது அரண்மனை நோக்கிச் சென்றனர். புரட்சிக் குறிகள் எங்கும் காணப்பட்டன. அரசன் கலகத்தைக்கண்டு பயந்து காடாயை நாடு கடத்தித் தானும் சிம்மாதனத்தை விட்டிறங்கித் தன் மகன் பர்டினண்டுக்கு அரசுரிமையைத் தந்தனன். உடனே பர்டினண்டு அரசனாக்கப்பட்டான்.

பிறகு, தான் பலவந்தத்தால் சிம்மாதனத்தை நீத்ததாகவும் தான் மீண்டும் அரசுரிமையைப் பெறும்பொருட்டு நெபோலியனது உதவியை நாடுவதாகவும் நெபோலியற்குச் சார்லஸ் கடிதம் வரைந்தான். பர்டினண்டும் நெபோலியனது உதவியை வேண்டி

னான். நெபோலியன் இதைக் குறித்து ஆழ்ந்து யோசித்த வண்ணமாயிருந்தான். தனது உள்ளக்கிடக்கையை அருயிர் நண்பர்களிடத்தும் சொன்னானில்லை. ஸ்பெயின் தேசத்தின் கலவரங்களை நேரிலறிந்து சீர்திருத்தம் செய்யக் கருதி, பாரிஸ் நகரிலிருந்து மனைவியுடன் புறப்பட்டுப் பேயன் நகர் சென்று அங்கே தங்கினான்.

இதனையறிந்த பர்டினண்டு நெபோலியனைக் காணச் சென்றான். அவனை நெபோலியன் அன்புடன் வரவேற்று உபசரித்தான். பர்டினண்டு நெபோலியனிடம் சென்றதையறிந்த அவனது தாயும், தந்தையும், தம்பிமார்களும் நெபோலியனைக் காணச் சென்றனர். அவர்களையும் தக்கபடி நெபோலியன் உபசரித்தான்.

சார்லஸ் என்பவன் தன் மகன் பர்டினண்டின்மேல் அநேக குற்றங்களைச் சாட்டிக் குறை கூறினான். தாயோ தன் மகனைப் பலவாறு வைததுமன்றி அவன் அரசற்குப் பிறந்தவன் அன்றென்றும் வாய்கூசாதுரைத்தனள். பர்டினண்டுக்கு அரசுரிமை வழங்கக் கூடாதென்றும், ஸ்பெயின் தேசத்துக்கு நெபோலியனாவது அல்லது நெபோலியனால் நியமிக்கப்பட்ட வேறு யாராவது அரசனாதல் வேண்டுமென்றும், அப்போது தாங்களிருவரும் அரசுரிமையை விருப்பத்தோடு விட்டுவிடுவதாயும் பர்டினண்டின் பெற்றோர்கள் புகன்றனர். இவையெலாங் கேட்ட நெபோலியன் வியப்புற்று,

“எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார் எம்மாடு
சம்மாடாம் எவரே நல்லார்”

என்று மனம் நொந்துரைத்தான். பின்னர், நெபோலியன் பர்டினண்டை அழைத்து, “ஐயா, நீவிர் தாய்தந்தையர்களை விஷமிட்டுக் கொல்ல முயன்றதுமன்றி அவர்களைப் பலவந்தப் படுத்தி அரசினையும் இழக்கச் செய்தீர். நான் தும்முடன் சேர்வதற்கில்லை. இன்று மாலைக்குள் தும் அரச பதவியை நீர் இராஜிநாமா செய்வீராக. இல்லையேல், சிறை செய்யப்பட்டு மரண தண்டனைக்குள்ளாவது திண்ணம். எனது மொழிப்படி நடப்பின் சுகவாழ்வெய்துவீர்” என்று சொன்னான்.



நெபோலியனது மொழிப்படியே பர்டினண்டு அரசுரிமையை நீத்தனன். அவனது பெற்றோர்களும் அவ்வாறே செய்தனர். பர்டினண்டும், அவனது தம்பிமார்களும், அரசனும், இராணியும் தனித்தனியே உபகாரச் சம்பளமும், நல்ல மாளிகைகளும் பெற்று வேற்று நாட்டில் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தனர். ஸ்பெயின் தேசத்திற்கு நெபோலியனது மூத்த சகோதரரான ஜோஸப் போனபார்ட்டி என்பவர் அரசராக நியமிக்கப்பட்டார். அவர், அறிவும் அமைதியும் வாய்ந்தவர்; கடவுள் பக்தியும் இரக்கமும் கொண்டவர்; அரசியலில் நல்ல ஞானமும் பெற்றவர். அவரால் ஸ்பெயின் தேசத்தின் ஜனங்களுக்குப் பல சுதந்தரங்களளிக்கப்பட்டன. புதிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஜனங்கள் சமாதானமுற்று வாழ்ந்தனர்.

இதைக் குறித்துப் பலர், “நெபோலியன் பேராசை கொண்டவன், வஞ்சகக் கள்வன், பர்டினண்டையும் அவனது பெற்றோர்களையும் தன்னைநேரிற் காண வரும்படி அந்தரங்க ஏற்பாடுகள்செய்தனன். வந்தவர்களைப் பயமுறுத்தி அவர்களுடைய அரசினை அபகரித்தனன். இரண்டு பூனைகளுக்கு வடையைப்பகிர்ந்த குரங்கைப் போன்றவன்” என நெபோலியனைப்பழித்துக் கூறினர். அதைக் குறித்து நெபோலியன் சொன்னதாவது. “நான் ஸ்பெயின் விடயத்தில் சூதும் வாதும் புரிந்திலேன். தந்தைக்கும் மகற்கும் நேர்ந்த கலகத்தில் நான் கலந்ததுமில்லை. பேயன் என்னும் இடத்துக்கு அவர்களை வரவழைக்க அந்தரங்க ஏற்பாடுகள் செய்ததுமில்லை. அவர்களே என்னிடம் விரைந்து வந்தனர். நாலாவது சார்லஸ் என்பவன் அறிவும் ஆற்றலும் அற்ற வயோதிகனாதலால் அவனை மாந்தர்கள் வெறுத்தனர். அவனை மீண்டும் அரசனாக்கியிருப்பின் ஸ்பெயின் தேசத்தில் புரட்சியும் கலகமும் உண்டாயிருக்கும். பர்டினண்டுக்கு அரசுரிமை தந்து அவனை நண்பனாக்கியிருக்கலாம். ஆனால், அவனும் தந்தையைப்போல் அறிவிலியாயும் தாயைப்போல் காமியாயும் இருந்தமையால், செவ்வனே அரசாளும் ஆற்றலற்றவனாயிருந்தான். அவர்கள் இருவரும் அரசாட்சியை என்னிடம் ஒப்புவிக்கத்

தயாராயிருந்தமையால் ஸ்பெயின் தேசத்தைப் புதுப்பிக்க அதுவே ஏற்ற தருணமென எண்ணி நானும் அதனை பெற்றுக் கொண்டேன். அவ்வரசினைப் பெறுதற்கு நான் எத்தகைய சூழ்ச்சிகளும் புரியவில்லை; அது தானாகவே எதிர்பாராது எனக்குக் கிடைத்தது.''

இஃது இப்படியிருக்க, ருஷியச் சக்கரவர்த்தியும் நெபோலியனும் சமாதான விஷயமாய் ஆலோசிக்க எர்பர்த் என்னுமிடத்தில் கூடினர். அங்கே இருவரும் இருபது நாள் தங்கி அரசியல் விஷயமாகப் பேசினர். நெபோலியனுக்கும், அலெக்ஸாந்தருக்கும் சில நிபந்தனைகளுடன் உடன்படிக்கை நிறைவேறியது. நெபோலியனது மறுமண விஷயமும் அங்கே தீர்மானிக்கப்பட்டது. அலெக்ஸாந்தரும் தன் தங்கையை நெபோலியனுக்குக் கொடுக்க விரும்பினான். இச்சமயத்தில் நெபோலியன் ஜோஸப்பைனுக்குப் பின்வருமாறு ஒரு நிருபம் எழுதினான்.

" அன்பிற்குரிய ஜோஸப்பைன்! உன்னையே நான் காதலிக்கிறேன். உலகத்தில் சிற்சில வேளைகளில் யான் அனுபவித்த இன்பமும் உனது அன்பினாலாயதே. ஐரோப்பாவின் வல்லரசர்களெல்லாம் என்மீது பகை கொண்டிருப்பதையும், என்னையும் பிரான்சு தேசத்தின் பிராபல்யத்தையும் தொலைக்க அவர்கள் எல்லோரும் முயன்று வருவதையும் நீ நன்கு அறிவாய். சமாதான அறிகுறிகள் காணப்படவில்லை. பல்லாயிர மக்களின் மரணத்தையும் அவர்களது இரத்த வெள்ளத்தையும் விலக்குதல் நம் கடமையன்றோ? ருஷிய வாசனது தங்கையையாயினும் அல்லது ஆஸ்திரிய மன்னனது புத்திரியையாயினும் மணந்து அரசவம்சத்தாருடன் சம்பந்தம் செய்து கொண்டால் சண்டை ஓய்ந்திடச் சமாதானம் ஓங்குமென எண்ணுகிறேன். தவிர, நான் இறந்தால் எனக்குப்பின் அரசனாவான் யார் என்பதை யோசித்துப்பார். நூற்றுக்கணக்கான வீரர்கள் கலகத்தை யுண்டாக்கி நாட்டை அரசின்மையில் வீழ்த்துவார்கள். எனக்குப்பின்னர் நெருப்பும், இரத்தமும், மரணமுமே தேசத்தில் தலைவிரித்தாடும்.




எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் எனக்கொரு புத்திரன் பிறந்தால் எனது மரணத்தின் பின்னர், தேசத்தில் கலகமும், புரட்சியும் நிகழாவாம். அப்பிள்ளையும், மன்னர் வம்சத்தைச் சேர்ந்தவனாதலால் எல்லோராலும் அரசனாக அங்கீகரிக்கப்படுவான்.

" என்னுடைய காலத்தில் நடந்துவரும் யுத்தங்களையும், எனக்குப் பிறகு பிரான்சு தேசத்தில் நிகழக்கூடிய புரட்சியையும் விலக்கக் கருதி மறுமணம் புரியத் தீர்மானித்துள்ளேன். எனது மனதிற்கும் கருத்திற்கும் இசைந்தவள் நீயே. ஆனாலும், உலகின் நன்மைக்காக நமது துலகேகப் பிரிவினை நான் நாடுகிறேன். நீயும் அதற்கிணங்குவாயாக. இவ்வரிய தியாகத்தைப் பிரான்சு தேசத்தவர் போற்றுவார்கள். இனிப் பிறக்கப்போகும் எண்ணிறந்த மானிடரும் நம்மைப் புகழ்ந்து போற்றுவர்.''

இந்த நிருபத்தைப் பார்த்து ஜோஸப்பைன் மனமுடைந்தனள்.

எர்பர்த் என்னுமிடத்தில் நெபோலியன் சிறிது காலம் தங்கியிருந்து, பின்னர் பாரிஸ் சென்றான். ஸ்பெயின் தேசத்தில் உள்நாட்டுக் கலகம் அதிகமாயிற்று. நெபோலியன் உடனே ஒரு சேனையுடன் புறப்பட்டு, ஸ்பெயின் தேசம் சென்[illegible] இரண்டு மூன்று இடங்களில் வெஞ்சமர் புரிந்து வெற்றி[illegible]னன். ஸ்பெயின் தேசத்துக் கலகக் கூட்டத்தினர் பஞ்செனப் பறந்தனர். அத்தருணத்தில் ஜர்ஜான்மூர் என்னும் ஆங்கிலச் சேனாதிப[illegible]ப்பதினாயிரம் வீரர்களுடன் போர்ச்சுகல் வழியாக விரைவா[illegible]வந்துகொண்டிருந்தான். அதையுணர்ந்த பிரான்சு சேனை ஆங்கிலேயரை எதிர்நோக்கிச் சென்றது. கொரன்னா என்னுமிட[illegible]ல் இருதிறத்தார்க்கும் நிகழ்ந்த கொடும்போரில் ஜர்[illegible]ஜான்மூர் என்னும் சேனைத்தலைவன் குண்டுபட்டிறந்தான். எஞ்சி நின்ற ஆங்கில வீரர்கள் கப்பலேறி உயிர்தப்பினர்.

நெபோலியன் பெருத்த சேனையுடன் ஸ்பெயின் தேசத்துக்குச் சென்றதை யறிந்த ஆஸ்டிரிய மன்னனது தம்பியாகிய சார்லஸ் என்பவன் ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு, டான்யூப் நதியைத் தாண்டிப் பவேரியாவுக்குள் பிரவேசித்தனன். இதனையறிந்த நெபோலியன் ஸ்பெயினிலிருந்து சேனையுடன் புறப்பட்டு, விரைந்து சென்று, எக்மல் என்னுமிடத்தில் ஆஸ்டிரியர்களை முறியடித்து வெற்றியுற்றான். ஆஸ்டிரியச் சேனை புறங்காட்டி ஓடிற்று. நெபோலியன் அச்சேனையைத் துரத்திக்கொண்டு சென்று ரேடிஸ்பன் கோட்டையைக் கைப்பற்றிய பின்னர் டான்யூப் நதியைக் கடந்து சென்று, வியன்னாவுக்குள் நுழைந்தான். [illegible] குடும்பத்தாரனைவரும் வியன்னாவிலிருந்து உயிர் [illegible] ஆஸ்டிரிய மன்னன் சமாதானம் வேண் [illegible] நெபோ [illegible] னை யொடிவைத்தான். [illegible] நிபந்தனை [illegible] பின்னர் நெபோலியன் பாரிஸ் நகர் [illegible].



மேரி லூயிஸா சக்கரவர்த்தினி

114A

# அத்தியாயம்—10

## மனைவியைப் பிரிதலும் மறுமணம் புரிதலும்

நெபோலியன் ஜோஸப்பைனை நிராகரிக்க நிச்சயித்து விளம்பரப் படுத்தினான். இதையறிந்த ஜோஸப்பைன் கண்ணீரும் கம்பலையுமாய் மனம் நொந்து உடல் வாடினாள். அரண்மனை திருவற்று இருளுற்று இருந்தது. எல்லார் முகத்திலும் துக்கக் குறியே காணப்பட்டது. ஜோஸப்பைன் உறக்கமின்றி அழுத வண்ணமாய் இருந்தனள். நெபோலியனும் அவளருகிற் செல்ல அஞ்சித் தனியே யிருந்தான்.

ஒருநாள் இருவரும் உணவருந்த ஒரு மேஜையினருகே அமர்ந்தனர். ஒருவரோடொருவர் பேசினரில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவுமில்லை. துக்க மிகுதியால் இருவர் முகங்களும் வெளுத்து அகத்தினழகைக் காட்டின. ஜோஸப்பைன் சிலையைப்போல் அசையாது இருந்தனள். அறுசுவை உணவுத் தட்டுகள் ஒன்றன்பின் ஒன்று கொண்டுவரப்பட்டன. இருவரும் உணவருந்தாமல் வாளாவிருந்தமையால் அத்தட்டுகள் மீண்டும் அப்படியே கொண்டு போகப்பட்டன. உணவு முடிந்ததும் பணியாட்கள் அறையை விட்டு நீங்கினர். நெபோலியன் எழுந்து சென்று கதவைத் தாளிட்டபின் ஜோஸப்பைனது கரத்தினைப் பிடித்துத் தன் நெஞ்சின்மீது வைத்து, நடுக்கமுற்று வாய் குழறிப் பிதற்றிய மொழிகளாவன :—

“ஆருயிர்க் காதலி! நான் உன்னை எங்ஙனம் நேசித்து வந்தேனென்பதை நீயே அறிவாய். உலகில் நான் இன்பம் அனுபவித்த நேரங்கள் சிலவே; அவைகளும் உன் அன்பினாலாயினவாம். என் மதியைக் காட்டிலும் விதியே வலியதா

யிருக்கிறது. பிரான்சு தேசத்தின் நன்மையைக் கருதி என் னுருயிர்க்கினிய அருந்தனமாகிய உன்னையும் கைவிட நேர்ந்ததே."

இம்மொழிகளைச் செவியுற்ற ஜோஸப்பைன் இடியேறுண்ட நாகம் போல் மனங்கலங்கி, அடியற்ற மரமெனத் தரையில் விழுந்து மூர்ச்சையுற்றனள். நெபோலியன் பாங்கியர்களை யுடனே யழைத்து ஜோஸப்பைனைத் தூக்கிப் படுக்கையில் கிடத்துமாறேவினான். நெபோலியன் அப்படுக்கையினருகே யமர்ந்து ஜோஸப்பைனுக்குப் பலவித உபசாரங்கள் செய்தான். மூர்ச்சை சிறிது தெளிந்தபின்னர் நெபோலியன் வேறொரு அறைக்குள் சென்று அன்றிரவு முழுதும் அங்கு உலாவிக்கொண்டேயிருந்தான். துக்கமிகுதியால் நெபோலியன் பலவாறு பிதற்றினான். ஹோர்டென்ஸ் தாயருகிருந்து பல உபசாரங்கள் செய்தனள். அப்பொழுது யூஜனும் வந்து சேர்ந்தான். தன் தாயின் துயரத்தைக் கண்டு யூஜன் மனங்கசிந்து நெபோலியனிடம் சென்று, "அரசே! என் தாயார் உம்மால் கைவிடப்பட்டது உண்மையாயின் உமது சேவகத்தினின்று என்னையும் விலக்கிவிடுங்கள். இராணிப் பதவியை இழந்தவளது புத்திரனாகிய நான் இதாலிக்கு அரசப் பிரதிநிதியாயிருத்தல் தகுதியன்று. என் தாயோடு நானும் செல்வேன்" என்று சொன்னான். அப்பொழுது கேட்டும், நெபோலியன் கண்ணீர் சொரிந்து, "யூஜனே! நீ அறியாத விஷயம் ஒன்றுமில்லை. பிரான்சு தேசத்தின் நன்மையைக் கருதியே உன் தாயைக் கைவிட நேர்ந்தது. இதையுணர்ந்த நீயும் என்னைப் பிரியத் துணிந்தனையா? நீயும் என்னைப் பிரிந்தால் எனக்குற்ற துணை யார்? கடவுள் அருளால் எனக்கொரு புத்திரன் பிறப்பின் அக்குழந்தையைக் கவனிப்பவர் யார்? அக்குழந்தையை வீரனாக்குவதும் யார்? குழந்தாய்! சற்று யோசித்துப் பார். எனது மனதைப் புண்படுத்தாதே" என்று பகர்ந்தான். அதைக் கேட்ட யூஜன் மனமிரங்கி மௌனமாயிருந்தான்.

மூர்ச்சை முற்றிலும் தெளிந்தபின்னர் ஜோஸப்பைன் யூஜனை யழைத்து, "குழந்தாய்! அரசர்க்குப் பலவிதத்திலும் நீ



கடமைப் பட்டுள்ளாய். உனக்குத் தாயும் அவரே; தந்தையும் அவரே; தனி நாயகனும் அவரே. அவர் சொல் கடவாதிருத்தலே உனது கடமையென உணர்க" என்று புத்தி கூறினாள்.

•

கடைசியாக, 1809-ம் ஆண்டு டிசம்பர்-மீ 15-உயன்று விவாக ரத்துக்காக அரண்மனையில் எல்லோரும் கூடினார்கள். எல்லோர் முகத்திலும் துக்கக் குறியே காணப்பட்டது. அப்போது நெபோலியன் எழுந்து நின்று பின்வருமாறு பேசினான். "தேசத்தின் நன்மையையும் பிரஜைகளின் அபிப்பிராயத்தையும் தழுவியே சகல காரியங்களையும் செய்து வந்தேன். எனக்குப் பின்னர் இத்தேசத்தை ஆளுதற்குரிய புத்திரோற்பத்தியைக் கருதி மறுமணம் புரியுமாறு என்னை நெடுநாளாக வற்புறுத்தி வந்தீர்கள். என் ஆருயிர்க் காதலியாகிய ஜோஸப்பைனுக்குப் புத்திரன் பிறப்பான் என்ற நம்பிக்கை இதுகாறும் எனக்கிருந்தது. அந்நம்பிக்கையை இப்போது முழுதும் இழந்தமையாலும் உமது விருப்பப்படியே நடக்கக் கடமைப் பட்டுள்ளேனாதலாலும் என் மனதிற்குகந்த மனையாளைத் தியாகம் செய்ய முன்வந்துள்ளேன். ஜோஸப்பைனைப் பலவாற்றானும் புகழக் கடமைப் பட்டுள்ளேன். அவளுடைய அன்பும் அமைதியும் போற்றத்தக்கன. என் வாழ்க்கையின் பதினைந்து வருட காலத்தை அழகு பெறச் செய்தவள் அவளே. அவளுடைய நினைவு என் உள்ளத்தில் என்றைக்கும் பசுமரத்தாணிபோல் பதிந்து கிடக்கும். என் உயிருள்ளளவும் அஃது மறத்தற் பாலதுமன்று. என் கைகளால் அவளுக்கு மகுடம் சூட்டியமையால், சக்கரவர்த்தினி யென்ற பட்டம் அவளுக்கு என்றைக்கும் இருப்பதாகுக. இத்தகைய அருந்தனமாகிய அன்பிற்கினியாளின் பிரிவு என்னைத் துன்ப சாகரத்துளாழ்த்தியது. அத்துயரினைப் பொறுமையோடு சகித்தற்குரிய ஆற்றலை இறைவன் எனக் கருள்வாராக!"

நெபோலியன் இவ்வாறு பேசிய பின்னர் ஜோஸப்பைன் எழுந்து நின்று பேச முயன்றனள். துக்க மிகுதியால் பேச நாவெழாமையால் தன் கையிலிருந்த அறிக்கைப் பத்திரத்தை

அருகிருந்தவரிடம் கொடுத்து அதனைப் படிக்குமாறு வேண்டினாள். அவரும் பின்வருமாறு படித்தார்.

"எனது அருயிர் நாயகரது உத்தரவு பெற்று நான் உங்களுக்குச் சொல்லுவதாவது:—தேசத்தின் நன்மையைக் கருதியும், ஜனங்களின் விருப்பத்திற்கிணங்கியும் உலகில் எவராலும் செய்ய வியலாத அரிய தியாகத்தைச் செய்ய யான் முன்வந்துள்ளேன். பல வழிகளிலும் நான் அரசற்குக் கடைப்பட்டுள்ளேன். அவரது திருக்கரங்களே எனக்கு மௌலி சூட்டின. அவரது ஆட்சியில் பிரான்சு மாந்தர்களது அன்பையும் ஆதரவையும் பெற்றேன். பிரான்சு தேசத்தின் முன்னேற்றத்துக்கு இடையூறாக நிற்கும் எமது விவாகத்தை ரத்து செய்ய நானிசைகின்றேன். பிரான்சு தேசத்தைக் குழப்பத்தினின்றும் காத்து, அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்திய என் கணவரது புத்திரனால் இத்தேசம் அவருக்குப்பின் ஆளப்படுவதாக. அதற்கு நான் தடையாக நிற்கமாட்டேன். இவ்விவாகரத்தானது எம்மிருவருக்குள்ள நட்பின் திறத்தை மாற்ற வல்லதன்று. என்றைக்கும் அரசரது அருயிர்த் தோழியாகவே நான் இருப்பேன். இப்பிரிவினால் மன்னற்கும் எனக்கும் நேர்ந்த துக்க மிகுதி செப்பத்தரமன்று. ஆயினும், நாட்டின் நலத்தைக் கருதி நாங்களிருவரும் ஒருமித்தே இவ்வரிய தியாகத்தைச் செய்கின்றோமென்பதை உலகோர் உணர்வாராக."

இவ்வாறு வாசிக்கப்பட்ட பின்னர் நெபோலியனும் ஜோஸப்பைனும் ஒருவரை யொருவர் மார்புறத் தழுவி மூர்ச்சித்து விழுந்தனர். நெபோலியனது கண்களினின்றும் பெருகிய நீரே ஜோஸப்பைனது உத்தம குணங்களுக்குப் போதிய சான்றாயிருந்தது. பிறகு, விவாகரத்தில் இருவரும் கையொப்பமிட்டனர். பதினைந்து வருடகாலம் பூவும் மணமும்போல் வாழ்ந்து வந்த இருவரும் பிரிந்தனர்.

மறுநாள் ஜோஸப்பைன் மல்மேசான் என்னுமிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றனள். அங்கே ஜோஸப்பைனுக்கு வேண்டிய சகல வசதிகளும் தக்கபடி அமைக்கப்பட்டன.



தேசத்தின் முன்னேற்றத்தைக் கருதியே இவ்விவாகம் ரத்து செய்யப்படினும் நெபோலியனது செய்கை கடவுள் ஆணைக்கும் அறநெறிக்கும் விரோதமானதே. ஒவ்வொரு பிழையும், முதலில் இன்பத்தைப் பயப்பதுபோல் தோன்றினும், இறுதியில் துன்பத்தையே பயக்கவல்லது. தேசத்தின் நன்மையைத் தழுவித் தான் செய்தது சரியென்று நெபோலியன் உறுதியாய் நம்பினான். எனினும், குற்றத்துக் கேற்ற தண்டனை நெபோலியற்குப் பின்னால் கடவுளால் விதிக்கப்பட்டது.

எந்தத் தேசத்தினது சம்பந்தம் பிரான்சுக்குத் தகுதியானது என்ற விஷயத்தைத் தீர்மானிக்க 1810ம் ஆண்டு ஜனவரி மீ 21-ம் தேதியன்று ஆலோசனை சபை கூடியது. நெபோலியன் அதற்குத் தலைமை வகித்தனன். ருஷியாவின் சம்பந்தமே தகுதியானது என்றனர் ஒரு சாரார். சேக்ஸனி தேசத்துச் சம்பந்தமே சிறந்ததென்றனர் மற்றொரு சாரார். ஆனால், ஆஸ்டிரியாவின் சம்பந்தமே விரும்பற்பாலது என்றனர் பெரும்பான்மையோர். இவ்விவாதம் நடந்தபோது நெபோலியன் மௌனமுற்றிருந்தான். அவனது மனப்பான்மை யின்னதென எவரும் அறிந்திலர்.

பிறகு, ருஷியமன்னனாகிய அலெக்ஸாந்தருக்கு நெபோலியன் தன் கருத்தைத் தெரிவித்தனன். அலெக்ஸாந்தர் அச்சம்பந்தத்தை அவாவினன். ஆனால், நெபோலியன்மீது என்றும் பகைமையே பாராட்டிவந்த அலெக்ஸாந்தரது தாயாரும், ருஷிய தேசத்துப் பிரபுக்களும், "கேட்ட மாத்திரத்தில் பெண்ணைக் கொடுக்க இசைவதா?" என்று இறுமாந்து நெபோலியற்குப் பதிலனுப்பாது வாளாவிருந்தனர். ருஷிய அரசாங்கத்தின் மனப்பான்மையை யுணர்ந்த நெபோலியன் ஆஸ்டிரியவரசற்குத் தன் கருத்தினை அறிவித்தான். ஆஸ்டிரிய மன்னனாகிய பிரான்சிஸ் என்பவனும் மகிழ்ச்சியுற்று இசைந்தான். மேரியாலூயிஸா என்னும் அரச புத்திரி அழகினும், அறிவினும், அமைதியினும் சிறந்தவள். அவளும் நெபோலியனை மணத்தற்கு இசைந்தனள்.

மன்றலுக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. திருமணத் தேதியும் நிச்சயிக்கப்பட்டது. திருமணத் திருவிழாவினைக் கண்ணுறின் ஜோஸப்பைன் மனம் வருந்துவள் என்றெண்ணி அவளை நவார் என்னுமிடத்துக்குச் செல்லும்படி நெபோலியன் ஏவினான். ஜோஸப்பைனும் அவ்வாறே நவார் சென்று எழுதிய நிருபமாவது:—

“அரசே! நவார் வந்து சேர்ந்தேன். இங்குத் தனித்திருப்பதே எனக்கு இன்பத்தைத் தருகிறது. காதலின் இன்பங்களையும், காதலரைப் பிரிவதால் சேரும் துன்பங்களையும், முடியுடை மன்னரால் அளிக்கக்கூடிய சகல சுகங்களையும் அனுபவித்தேன். மாயா விநோதங்கள் இனியென்னை மயக்க வல்லன வல்ல. உம்மைப் பிரிந்த நாள் முதல் விஷயவின்பங்கள் அனைத்தையுந் துறந்தேன். உமது சுகத்தையும் கீர்த்தியையுங் கேட்டுப் பரவசமடைதலே எனது பேரானந்தம்.”

ஆஸ்திரியாவின் அரச குடும்பத்தார் மணமகளுடன் புறப்பட்டு அதிக ஆடம்பரத்துடன் பிரான்சு நோக்கி வந்து கொண்டிருந்தனர். நெபோலியனும் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு எதிர்கொண்டழைக்கச் சென்றான். இருதிறத்தினரும் காம்பெயின் என்னுமிடத்தில் சந்தித்தனர். நெபோலியனும் மேரியா லூயிஸாவும் ஒருவரையொருவர் அற்றைநாள் வரை கண்டிலர். நெபோலியன் தன் வண்டியினின்றும் இறங்கித் தனிச்சென்று, மணமகள் வந்துகொண்டிருந்த வண்டியில் திடீரென்று ஏறி, லூயிஸாவை அன்புடன் ஆலிங்கனஞ் செய்து தன்னுவகையைத் தெரிவித்தான். நெபோலியனது போன்பையும் அழகையுங் கண்ட லூயிஸா அளவிலா உவகை பூத்தனள். நெபோலியன் அவளுடைய அழகையும் அமைதியையும் கண்ணுற்று மகிழ்ச்சியுற்றனன்.

1810-ம் ஆண்டு ஏப்ரல்-மீ 1-ம் தேதியன்று விவாகம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மாந்தர்கள் விஜயம் செய்தனர். அரண்மனை அதிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.



பல்லோர் ஆசி கூறினர். சங்கீத வாத்தியங்கள் இயங்கின. மணியோசைகளும், பீரங்கி வெடிகளும் நகரெங்கும் முழங்கின. பாரிஸ் மாந்தர்கள் உவகை மிகுதியால் கூத்தாடினர்.

இந்த விவாகத்தினால் ஐரோப்பாவில் சமாதானத்தை ஸ்தாபித்து விடலாம் என்று நெபோலியன் எண்ணினான். ஆனால், அது வெறுங் கனவாய் முடிந்தது. ஹாலந்து தேசத்து அரசனான லூயி போனபார்ட்டி நெபோலியனது கருத்துக்கு மாறாகவும் பாரிஸின் உத்தரவுக்கு விரோதமாயும் இங்கிலீஷ் சாமான்களைத் தடை செய்யாதிருந்தான். முன்னொருமுறை நெபோலியன் கண்டித்தெழுதிய நிருபத்தையும் பொருட்படுத்தினானில்லை. இங்கிலீஷ் சாமான்கள் ஹாலந்தில் தாராளமாக இறங்கிப் பிற தேசங்கட்குக் கொண்டுபோகப்பட்டன. இதையுணர்ந்த நெபோலியன் தன் தம்பிக்குப் பின்வருமாறு ஒரு நிருபம் எழுதினான்.

“சகோதரனே! ஹாலந்து தேசத்தாரின் வீரத்தை மெச்சிய நான் அவர்களுக்குச் சுதந்தரமளித்து, சட்ட திட்டங்களை அமைத்துத் தந்து, உன்னையும் அதற்கு அரசனாக்கினேன். என்னுடன் வளர்ந்தவனாதலாலும், என்னுடன் பயின்றவனாதலாலும் நீ பிரான்சு தேசத்தின் நலத்தைக் கருதுவாயென்று நான் பெரிதும் நம்பினேன். உடன்படிக்கையின்படி ஹாலந்து தேசம் எனது கொள்கையினைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளதை நீ மறந்தனைபோலும்! பிரான்சு தேசத்தை நேசியாதவர்கள் என்னையும் நேசியாதவர்களே. தாய் நாட்டுப் பற்றினை உன்னிடம் காண்பனேல் சகோதரப் பற்றினை என்னிடம் காண்பாய். நம்மிருவர்க்கும் தாய்நாடான பிரான்சு தேசத்தில் உனக்குப் பற்றில்லையேல் எனக்கும் உனக்கும் இயற்கையில் அமைந்துள்ள சகோதரப் பற்றும் பறந்துபோம் என்பதை உணர்வாயாக.”

நெபோலியனது அபிப்பிராயத்துக்கு இணங்க மனமில்லாத லூயி, அரச பதவியை மறுத்துவிட்டு, ஹாலந்து தேசத்தினின்றும் புறப்பட்டு, வேறிடஞ் சென்று, உடல் நலிவாலும்,

குடும்ப சங்கடங்களாலும் பெரிதும் துன்புற்று வாழ்ந்துவந்தான். லூயி போனபார்ட்டியின் நடத்தையைக் கேள்வியுற்ற நெபோலியன், "எனக்குப் பலவிதத்திலும் கடமைப்பட்டுள்ள லூயி இத்தகைய குறும்பு இழைப்பானென்று நான் கனவிலும் கருதினேனில்லை. இராணுவத்தில் உபசேனாபதியாய் நானிருந்தபோது எனக்குக் கிடைத்த சிறிது ஊதியத்தைக் கொண்டு அவனைக் காப்பாற்றினேன். எனது உணவில் அவனுக்குப் பாதி தந்து உதவினேன். அவ்வாறன்பு காட்டிய எனக்கு அவன் செய்த கைம்மாறு இதுவேயாம்" என்று பகர்ந்து புலம்பினான்.

லூயியின் மனைவியாகிய ஹார்டென்ஸும் அவளுடைய குழந்தைகளும் பாரிஸ் நகர்க்குச் சென்றனர். லூயியின் குழந்தைகள் நெபோலியனுடன் சந்தோஷமாய் விளையாடின. தன் தம்பியின் புதல்வனை நெபோலியன் மடிமேலமர்த்தி, "குழந்தாய்! உன்னை நானே வளர்த்து வருவேன். உனக்குக் குறையொன்றுமிலது. உன் தந்தையின் நடத்தை என் மனதைப் புண்படுத்தியது. அவனது உடல் நலிவே அதற்குக் காரணமாம். நீ பெரியவனானபின் உன் கடனையும் உன் தந்தையின் கடனையும் தீர்ப்பாயாக. நீ எவ்விடத்திருப்பினும், எப்பதவி வகிப்பினும் உன் முதற்கடமை எனக்கே என்பதை என்றும் மறவாதே" என்று உரைத்தனன்.

வருடம் ஒன்று கழிந்தது. மேரியா லூயிஸா பிரசவ வேதனையுற்றனள். பிரசவ வேதனை சகிக்கமுடியாதவாறு அதிகமாயிற்று. நெபோலியன் லூயிஸாவுக்கு ஆறுதலும் தைரியமும் அளித்து வந்தான். நெடு நேரஞ் சென்றும் பிரசவம் ஆகவில்லை. வைத்தியர்கள் நெபோலியனிடம் சென்று, "அரசே! இஃது கடினமான பிரசவம். குழந்தையேனும் தாயேனும் உயிர் துறத்தல் நிச்சயம்" என்றுரைத்தனர். அவ்வுரை கேட்ட நெபோலியன், "தாயைக் காப்பாற்றுக" என்றியம்பினான். வைத்தியர் தைரியமிழந்து உடல் நடுங்குவதைக் கண்ட நெபோலியன் அவரைத் தனியே அழைத்து, "வைத்தியரே! உமது முழுத் தைரியத்தையும் மனத்துட் கொண்டு, இராணிக்கு மருத்துவம்



பார்க்கிறோம் எனும் எண்ணத்தை அறவே மறந்து, யாதோ ஒரு ஏழைப் பெண்ணுக்கு மருத்துவம் பார்ப்பதாக நினைத்து உமது கடமையைப் புரிவீராக" என்று சொன்னான். அம்மொழி கேட்டு வைத்தியரும் மனோதிடத்துடன் மருத்துவம் பார்த்தனர். 1811-ம் ஆண்டு மார்ச்சு-மீ 20-ம் தேதியன்று லூயிஸா ஆண் மகவீன்றனள். தாயும் குழந்தையும் ஆகிய இருவரும் காப்பாற்றப் பட்டனர். ஆண் மகவு பிறந்தமை துப்பாக்கி வெடிகளால் மாந்தர்க்கறிவிக்கப்பட்டது. பிரான்சு மாந்தர்கள் அனைவரும் அளவிலா உவகை எய்தினர்.

தாண்டொளி போல்மகன் தோன்ற உவப்புற்
றுண்டகை மன்னவன் அறவோர் கொள்ளப்
பூண்டுகில் மாமணி பொன்னில மற்றும்
வேண்டின யாவும் வெறுப்ப வளித்தான்.

—பிரபுலிங்கலீலை.

இச்செய்தி நவார் நகரிலிருந்த ஜோஸப்பைனுக்கும் எட்டியது. அன்றிரவே நெபோலியனுக்குப் பின்வருமாறு அவள் ஒரு நிருபம் வரைந்தாள்.

"அரசே! பிரான்சு தேசத்தின் ஒவ்வொரு மூலையினின்றும் தங்கட்கு வந்துள்ள வாழ்த்துக் கடிதங்கட்கிடையே எனது வாழ்த்தும் நும் திருச்செவிக்கெட்டுக. நம் வாழ்க்கையின் ஒரு குறை இன்று நிவர்த்தியாயது. பதினைந்தாண்டுகளாக நமது சுகத்தையும் துக்கத்தையும் உடனிருந்து அனுபவித்த என்றன் புன்மொழிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன். நமக்கு ஆண்மகவு பிறந்த நற்செய்தியைத் துப்பாக்கி வெடிகளால் அறிந்தேன். நம் குறையைத் தீர்த்து நமது வாழ்க்கையின் இன்பத்தைப் பெருக்கும் பாக்கியத்தைப் பெற்ற அரசியை நீங்கள் முதலில் கவனிக்கக் கடமைப் பட்டிருப்பதை யானும் உணர்வேன். ஆயினும் அடியேனையும் மறவாதிருக்க வேண்டுகிறேன். அருமைக் குழந்தையினைக் கையிலேந்தி, உச்சி மோந்து, ஆசிகூறி, உள மகிழ்ந்த பின்னாவது அடிமைக்கொரு நிருபம் வரையக் கோருகிறேன். அரசே! நமது ஆனந்தமே எனக்குப் பரமா

னந்தம். இந்நற்செய்தி கேட்டு என்னினும் அதிகமாக உவகை பூத்தார் உலகில் வேறெவருமில்லையென்று உறுதியாய்ச் சொல்வேன். நான் செய்த தியாகத்தைக் கருதிப் பெருமையடைகிறேன். என்னைத் துன்பக் கடலிலாழ்த்திய அத்தியாகம் பிரான்சு மாந்தர்களனைவரையும் இன்பக் கடலில் ஆழ்த்தியமையால் அதைக் குறித்துப் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். அரசியின் உடல் நலத்தை அறிய அவாவுகின்றேன். குழந்தையை ஒருமுறை கண்டானந்திக்க விடையருள வேண்டுகின்றேன்."

இக்கடிதத்தை நெபோலியற்கு அனுப்பிய சிறிது நேரத்துக்குப் பின்னர் நெபோலியனிடமிருந்து ஜோஸப்பைனுக்கு நிருபம் வந்தது. ஜோஸப்பைன் அதனைப் பெற்றதும் தன்னறைக்குள் சென்று படித்துப் பார்த்தனள். அதனிறுதியில், "இப்பிள்ளையும் யூஜனுமே எனக்கும் பிரான்சு தேசத்திற்கும் இன்பத்தைத் தரத்தக்கவர்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப் படித்த ஜோஸப்பைனது விழிகள் சிவந்தன. கண்களினின்றும் பெருகிய நீர் கையிலிருந்த கடிதத்தை நீராட்டியது. அரைமணி கழிந்த பின்னர் ஜோஸப்பைன் அறையினின்றும் வெளிப்போந்து நற்செய்தி கொணர்ந்தவனுக்குத் தக்க பரிசளித்து அவனிடம் பதில் கடிதமும் கொடுத்தனுப்பினள்.

சில நாட்கள் சென்ற பின்னர் நெபோலியன் ஜோஸப்பைனை வரவழைத்துக் குழந்தையைக் காட்டினன். ஜோஸப்பைனும் பெரு மகிழ்ச்சியுற்று, நவார் சென்றபின் நெபோலியற்கு எழுதிய நிருபமாவது :—

"அரசே! உமது குழந்தையைக் கண்ணுற்று அளவிலா மகிழ்ச்சி யடைந்தேன். அதன் வதனமும், குரலோசையும், உமது முகத்தையும் குரலையும் ஒத்திருந்தமையால் எனக்கு வரையிலா இன்பத்தைத் தந்தன. தாங்கள் குழந்தைக் கையிலேந்தி வந்தபோது நான் அனுபவித்த ஆனந்தத்தைப்போல இதுவரையிலும் அனுபவித்ததில்லை; இனி அனுபவிக்கப்போவதுமில்லை. வேறொருத்தியின் புதல்வனைக்கண்டு நான் எங்ஙனம் மகிழ்ச்சி



யுறக் கூடுமென்று எண்ணற்க. எனது மக்களைத் தாங்கள் உள்ளன்போடு நேசித்தது போலவே நானும் உமது புத்திரனைப் பேரன்புடன் நேசிப்பது வியப்பன்று."

மேரி லூயிஸா மிகவும் நற்குணம் வாய்ந்தவள்; நல்ல உத்தமி; கற்பினுக்கணியே போன்றவள். ஆனால் ஜோஸப்பைன் மீது பொறாமை கொண்டிருந்தனள். ஜோஸப்பைனைக் காணச் செல்வதாக நெபோலியன் தெரிவிப்பின், "நாதா! தாங்கள் அவளைக் காணச் செல்வதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. எனினும், அதை என்னிடம் சொல்லாதிருக்க வேண்டுகின்றேன்" என்று லூயிஸா பதிலுரைப்பாள். ஆனால் நெபோலியனைப் போகாவண்ணம் செய்தற்குப் பற்பல சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் புரிவாள். நெபோலியன் அவைகளைப் பொருட்படுத்தாது புறப்பட்டால் லூயிஸா கண்ணீர் பெருக்கித் தேம்பியழுவாள். ஆதலால் ஜோஸப்பைனிடம் செல்வதையும் நெபோலியன் விடுத்தனன்.

'கடந்த ஞானியும் கடப்பரோ மக்கண் மேல் காதல்' என்றபடி நெபோலியன் தன் புத்திரன்மீது அதிக அன்புடையவனாயிருந்தான். அக்குழந்தையும்,

குழலும் யாழும் இனியவெனக் கூறுவண்ணம் மென்கனிவாய்
மழலை மொழிந்தும் உடற்கின்பம் மருவ வோடி மேல்விழுந்தும்
விழைய மமிழ்தின் மிகவினிமை விளையநகரும் சுவையடிசில்
செறிய சிறுகை யாலளைந்தும் செய்தான் மோகம் ஈன்றோரை
—பிரபுலிங்கலீலை.

அரசியல் வேலைகட்கிடையில் நெபோலியன் மனைவியுடனும் மைந்தனுடனும் அளவளாவிச் சிற்சில வேளைகளில் இன்புற்று வாழ்ந்தனன்.

மேரியா லூயிஸாவுக்கு முட்டைவடைமீது அதிகப் பிரியம் இருந்தது. ஒருநாள், லூயிஸா சமையல் அறையில் முட்டைவடை செய்யச் சாமான் தயாரித்துக் கொண்டிருந்தாள். அவ்வமயம் திடீரென்று சமையலறைக்குள் சென்ற நெபோலியனைக்

கண்ணுற்ற நாயினா சற்றுத் திகைத்து நின்றனள். "இங்கே என்ன செய்கின்றீர், ஏதோ வறுவல் நாற்றம் வீசுகிறதே" என்று சொல்லிக்கொண்டே நெபோலியன் சுற்றி நோக்கினான். வாணற் சட்டியில் வெண்ணெய் உருகுவதையும், தட்டிலுள்ள முட்டைகளையும், காரச் சாமான்களையும் கண்டு, "ஓ! முட்டை வடை செய்ய முயல்கின்றீர் போலும்! நீ அதைச் செய்தறியாய். நான் செய்வேன். விலகிநில்" என்று சொல்லிக் கொண்டே நெபோலியன் அடுப்பருகிற் சென்று அடிசிற்றொழிலை ஆரம்பித்தான். நாயினா உடனிருந்து உதவிபுரிந்தாள். எல்லாம் தயாராயின. முட்டைவடை வாணற்சட்டியிலிடப்பட்டது. ஒரு பக்கம் நன்கு வெந்தபின்னர் வடையைத் திருப்பிப் போடும் தருணம் வந்தது. நெபோலியன் அவ்வடையை அதிக கம்பீரமாக எடுத்துத் திருப்பிப் போட்டான். அந்தோ! அவ்வடை வாணற் சட்டியில் விழாமல் தரைமீது விழுந்தது. அதைக்கண்ட நெபோலியன் புன்னகை செய்து, "என்னிடத்தில்லா ஆற்றல்கள் என்னிடம் இருப்பனவாக எண்ணி ஏமாற்றமுற்றேன்" என்று சொல்லிக்கொண்டே சமையலறையினின்றும் வெட்கி வெளிப் போந்தான்.

# அத்தியாயம்—11

## ருஷியா யுத்தமும் லீப்சிக் தோல்வியும்.

ஸ்வீடன் தேசத்தில் குடியரசுணர்ச்சி அதிகப்பட்டமையால் அத்தேசத்தின் ஜனங்கள் அரசனை நாடுகடத்தியபின் குடியரசை ஸ்தாபித்துப் பெர்னதாத்தி என்னும் பிரான்சவீரனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தனர். பிரான்சு சேனாதிபதிகளில் சிறந்தவனான பெர்னதாத்தியைத் தலைவனாகத் தேர்ந்தெடுப்பின் நெபோலியன் மகிழ்ச்சியுறுவான் என்று ஸ்வீடன் மாந்தர்கள் கருதினார்கள். ஆனால், பெர்னதாத்தியின்மீது நெபோலியனுக்கு நம்பிக்கையும் நன்மதிப்பும் இல்லை. பெர்னதாத்தியை ஒரு நச்சுப்பாம்பென நெபோலியன் கருதி வந்தான். ஸ்வீடன் தேசத்துக்குத் தான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை யறிந்த பெர்னதாத்தி நெபோலியனைக் காணச் சென்றான். அவனை நெபோலியன் அன்புடன் வரவழைத்து, "ஐயா! ஸ்வீடன் தேசத்துமாந்தர்கள் உம்மைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துள்ளார். உமது போர்த்திறமும் அதிர்ஷ்டமுமே அப்பதவியை உமக்களித்தன. எனது எண்ணம் வேறு விதமாயிருந்தது. எனினும் உமக்குத் தீங்கிழைக்க என் மனம் சம்மதிக்கவில்லை. நீர் அப்பதவியை ஏற்றுக்கொள்வீராக" என்று சொன்னான். சில நாட்கள் கழிந்தபின்னர், பெர்னதாத்தி மிகவும் எளிய நிலைமையிலிருந்தமையால் சாதாரண மனிதனைப்போல் ஸ்வீடன் தேசத்துக்குப் புறப்பட்டான். அதையுணர்ந்த நெபோலியன் அவனுக்கு இருபது லட்சம் பிராங்குக் கொடுத்துத் தக்க ஆடம்பரத்துடன் செல்லுமாறு கட்டளையிட்டனன். பெர்னதாத்தியும் நெபோலியனது உதவியைப் பெற்றுத் தன் பதவிக்கேற்ற மதிப்புடன் புறப்பட்டுச் சென்றான்.

இப்படியிருக்க, ஆஸ்டிரியர்களுக்குச் சொந்தமான [illegible] மாகாணங்களையும் துருக்கியர்களுக்குச் சொந்தமாயிருந்த கான்ஸ்டாண்டிநோபிளையும் ருஷியர்கள் கைப்பற்றக் கருதி, நெபோலியனது உதவியை நாடினர். நெபோலியன் உதவி செய்ய மறுத்தனன். இதையுணர்ந்த ஆங்கிலேயர்கள் ருஷிய மன்னர்க்கு வேண்டிய படையையும் பொருளையும் கொடுத்துப் பிரான்ஸின் மீது படையெடுக்குமாறு தூண்டினர். அலெக்ஸாந்தரும் ஒரு பெருத்த சேனையைத் திரட்டிப் போருக்குத் தயாராயினன். இதையறிந்து நெபோலியன் சமாதானச் செய்தியனுப்பினன். ஆனால் அலெக்ஸாந்தர் சமாதானத்துக்கிணங்காமல் போருக்கெழுந்தனன். அதே சமயத்தில், ஸ்பெயின் தேசத்தில் உள்நாட்டுக் கலகம் மீண்டும் புகைந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயர்களோ கடற்கரை யருகிலுள்ள பிரான்சுப்பட்டினங்களைத் தாக்கி நின்றனர்.

மூன்று திசைகளிலும் எதிரிகளால் தாக்கப்பட்ட நெபோலியன் தானும் போருக்குத் தயாராயினன். ஆஸ்டிரியா, பவேரியா, பிரஷியா, இதாலி, சாக்ஸனி, வெஸ்ட்பேலியா முதலிய நேச தேசத்தார்களை நெபோலியன் துணைக்கழைத்தனன். ஐந்து லட்சம் வீரர்கள் முன் வந்தனர். பிரான்ஸ தேசத்தின் நிர்வாக விஷயமாய்ச் சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்த பின்னர், 1812-ம் ஆண்டு மே-மீ நெபோலியன் போருக்குப் புறப்பட்டான். நேச தேசத்து மன்னர்களும் நெபோலியனும் டிரஸ்டன் என்னுமிடத்தில் கூடினர். ஆங்கு ஒரு வாரம் தங்கியிருந்தனர். பிறகு வேண்டிய உணவுப் பொருளையும், ஆறு பாலங்களமைத்தற்குரிய கருவிகளையும், அநேக மாடுகளையும், பல வண்டிகளையும், பீரங்கிகளையும், பல்லாயிரம் குதிரைகளையும், ஐந்து லட்சம் வீரர்களையும் திரட்டிக்கொண்டு நெபோலியன் ருஷியா மீது படையெடுத்துச் சென்றான். பதின்மூன்று பிரிவுகளாகச் சேனை அணி வகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு சேனைத்தலைவன் நியமிக்கப்பட்டான். சேனைகள் புறப்பட்டு நீமன் நதியைக் கடந்து சென்றன. இதையறிந்த நான்கு லட்சம் ருஷிய வீரர்கள் போருக்கஞ்சிப் புறங்கொண்டோடி வில்னா நகர்க்குள் நுழைந்தனர்.



நெபோலியன் அவர்களைப் பின்றொடர்ந்து சென்று வில்னா நகரணுகினன். அதையறிந்த அலெக்ஸாந்தர் உணவுப் பொருள்களையும் போர்க்கருவிகளையும் திரட்டிக்கொண்டு அந்நகரைத் தீக்கிரையாக்கிவிட்டுச் சேனையுடன் புறங்காட்டியோடி ஸ்மாலன்ஸ்க் என்னும் கோட்டைக்குள் நுழைந்தனன். அவர்களைத் துரத்திக் கொண்டே சென்று நெபோலியன் அக்கோட்டைக்குள் நுழைந்தான். அந்தோ! அக்கோட்டைக்குள்ளிருந்த உணவுப் பொருள்களையும், போர்க்கருவிகளையும் திரட்டிக்கொண்டு, அந்நகரையும் கொளுத்திவிட்டு ருஷியர்கள் மாஸ்கோ நோக்கி ஓடிப்போயினர். நகர் கொழுந்துவிட்டு எரிந்தது. பூமியில் புதைக்கப்பட்டிருந்த மருந்துகளும் குண்டுகளும் வெடித்துப் பூமியை அதிரச் செய்தன. பிரான்ஸ சேனைகள் தெய்வாதீனமாக அத்தீயினின்றும் உயிர் தப்பின. அப்போது அந்நகரில் ஒரு பாதிரியார், நெருப்பில் வெந்துற்ற சில ஜனங்களுக்குச் சிகிச்சை செய்து வந்தார். அப்பாதிரியார் நெபோலியன் முன் கொண்டுவரப்பட்டனர். நெபோலியன் அவரைப் பார்த்து, "ஐயா! உமது மாதாகோயிலும் தீக்கிரையாயிற்றோ?" என்று வினவினன். அதற்கு அப்பாதிரியார், "ஐயா! எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் மாதா கோயில் தீக்கிரையாயிற்றில்லை. உம்மைக்காட்டிலும் கடவுள் வல்லமை வாய்ந்தவர் என்பதை அறியீரோ? மனிதர்களை நீங்கள் எத்துணை வதைப்பினும் கடவுளிடத்து நும் வீரம் செல்லாது. உறைவிடமிழந்த ஜனங்கள் அக்கோயிலில் இப்போது தங்கியிருக்கின்றனர்" என்று சொன்னார். அவ்வுரை கேட்டதும், நெபோலியன் புன்முறுவல் செய்து, "பாதிரியாரே! நீங்கள் கூறுவதுண்மையே. கடவுள் எல்லாரினும் உயர்ந்தவரே. அவரின்றி ஓர் அணுவும் அசையாது. உமது தைரியத்தையும் அன்பின் மிகுதியையும் மெச்சினேன். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். ஆதலால், கடவுள் உம்மைக் காப்பாற்றுவார். சிறிதும் ஜீவகாருண்யமின்றித் தங்கள் உயிரையே பெரிதாகக் கருதி ஓடிப்போன மற்றப் பாதிரிமார்களோ அறநெறி தவறியவராவர். நீரோ

உண்மைக் கிறிஸ்துவர். நாங்களும் கிறிஸ்துவர்களே. உமது கடவுள் எமது கடவுளே. உமக்கு ஒருவிதத் துன்பத்தையும் எம் வீரர்கள் செய்யார். நீர் சென்று உமது கடமையை நன்கு புரிவீராக" என்று சொல்லி அப்பாதிரியாரைப் பத்திரமாய்க் கோயிலுக்கு அழைத்துச் செல்லுமாறு தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அப்பாதிரியும் அவருடன் சென்ற சில பிரன்ச வீரர்களும் கோயிலுக்குள் நுழைந்தவுடன் அங்கே தங்கியிருந்த ருஷியர்கள் பயந்து கூக்குரலிட்டனர். அப்போது, அப்பாதிரியார் அவர்களைப் பார்த்து, "அஞ்சன்மின்! நெபோலியனைக் கண்டு பேசினேன். ஆ! குழந்தைகளே! நாம் அனைவரும் ஏமாற்றப்பட்டோம். நெபோலியன் குருதிவெறி கொண்ட ஓர் அரக்கன் என்றும், பாபமே ஓர் உருக்கொண்டு பிறந்தவனென்றும், மதப்பற்றின்றிய நாத்திகப் பேயனென்றும் நாம் கேள்விப்பட்டவனைத்தும் பொய்யுரைகளேயாம். அவரும் அவரது வீரர்களும் நமது கடவுளையே வணங்குகின்றனர். அவர் புரிவது அரசியற் போரேயன்றி மதப்போரன்று. அவரது வீரர்கள் நமது வீரர்களுடன் போர் புரிகின்றது உண்மையே. ஆனால், பிள்ளைகளையும் பெண்களையும் அவர் இரக்கமின்றிக் கொல்வதாக நாம் கேள்வியுற்றவனைத்தும் வீண் பழிகளேயாம்" என்று பிரசங்கம் செய்தார்.

ஒவ்வொரு இடத்திலும் நெபோலியனே வெற்றிபெற்றனன்; எனினும், அவனது சேனையில் அதிக சேதம் உண்டாயிற்று. உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. குடிக்கத் தண்ணீரும் உண்ண உணவும் கிடைத்தில. எங்குப்பார்த்தாலும் விளைவின்றிய பாழ்நிலமே காணப்பட்டது. பிரன்சு வீரர்கள் எய்திய துன்பம் செப்பத்தரமன்று. வழி நடந்த இளைப்பாலும், உணவின்மையாலும் கணக்கற்ற வீரர்கள் இறந்து பட்டனர். பல்லாயிரம்பேர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையிலிருந்தனர். நெபோலியனது மனம் வெதும்பியது. பிரான்சுக்குத் திரும்பிப் போகவும் மனமில்லாமல் இருந்தவிடத்தே தங்கியிருப்பதற்கும் விருப்பமில்லாமல் நெபோலியன் தன் சேனையுடன் மாஸ்கோ நோக்கிப் புறப்பட்டான்.



வழியில், பிரன்ச வீரர்கள் பல துன்பங்கள் எய்தினர். கடைசியாக, மாஸ்கோ நகரைக் கண்ணுற்ற பிரன்ச வீரர்கள் அதிகக் களிப்பெய்தினர். உணவுப் பொருள்களும், ஆடைகளும் அங்கே கிடைக்குமென்று எண்ணி உவகையுடன் மாஸ்கோவில் நுழைந்தனர். அந்தோ! அந்நகர் முழுதும் காலி செய்யப்பட்டு வெறும் பாழாக இருந்தது. அந்நகர மாந்தர்கள் அனைவரும் நெபோலியனது வருகையை அறிந்து தத்தம் பொருள்களைத் திரட்டிக்கொண்டு வெளியேறினர். பிரன்சவீரர்கள் மாளிகைகளிலும் வீடுகளிலும் தங்கியிருந்தனர். அன்றிரவு அந்நகர் தீயிடப்பட்டது. மாளிகைகளும் உயர்ந்த கட்டடங்களும் சாம்பலாயின.

இங்ஙனமிருக்க, மாரிகாலம் வந்துற்றது. குளிர் மிகுதியால் பிரன்சு சேனை நாளுக்கு நாள் குறைந்தது. மாஸ்கோவைக் கடந்து அப்புறம் செல்வதை நெபோலியன் அங்கீகரிக்கவில்லை. ஆலோசனை சபை கூடியது. மாஸ்கோவினின்றும் புறப்பட்டுத் திரும்பிப் போதலே சிறந்ததென்று தீர்மானிக்கப்பட்டது.

மாஸ்கோவினின்றும் புறப்பட்டு ஸ்மாலென்ஸ்க் என்னும் நகர்க்கு மீண்டும் சென்றனர். அவ்வருடம் அங்கே விசேடமான பனிக்கட்டிகள் விழுந்தன. பிரன்சுவீரர்கள் பல்லோர் மாண்டனர். மேலும், ருஷிய தேசத்துக் காஸக்வீரர்கள் பிரன்சு சேனைகளைப் பலவிடங்களிலும் தாக்கினர். காஸக்வீரர்கள் போர்த்திறம் வாய்ந்தவர்கள்; சற்றும் சலிக்காமல் சமர் புரியு மாற்றல் உடையவர்கள். உடல் பலமும், உயரமும், பருமனும் வாய்ந்தவர்களாதலால் குளிருக்கஞ்சாது போர்புரிந்தனர். பிரன்சுவீரர்கள் பனிக்குப் பயந்து பலவிடங்களில் சிதறியிருந்தும் நெபோலியனே வெற்றியுற்றான்.

நிற்க, ருஷியா யுத்தத்தில் நெபோலியன் இறந்தனன் என்னும் ஓர் அறிக்கையை மாலட் என்னும் போர்வீரன் தயாரித்துப் பாரிஸ் நகர் எங்கணும் விளம்பரப் படுத்தியதுமன்றித் தானே அரசுரிமையைப் பெறவெண்ணிப் பாரிஸ் நகரில் குழப்பந்

தையுமுண்டாக்கினன். அவன் உடனே சிறை செய்யப்பட்டுச் சுடப்பட்டனன். இதையறிந்த நெபோலியன் மனங்கலங்கினன். தன் மரணத்துக்குப் பின்னர் உள்நாட்டுக் கலகங்களும், அரசாங்க வீழ்ச்சியும் உண்டாவது திண்ணமென்பதை நெபோலியன் உணர்ந்தான். இதைக்குறித்து நெபோலியன், "எனது அதிகாரம் இவ்வளவு தானா? ஓரிரண்டு வீரர்கள் நான் நிலைநிறுத்திய அரசாங்கத்தைக் கவிழ்க்க முயல்வரேல் அம்மகுடம் எனக்குத் தகுதியானதன்று. பன்னீராண்டுகள் அரசாண்டேன். அநேக வெற்றிகளும் பெற்றேன். தேசத்தின் நன்மையைக் கருதி என்னுயிர்க்கினிய மனைவியையும் பிரிந்து மறுமணம் புரிந்தேன். ஓர் ஆண் மகவையும் பெற்றேன். நான் இறந்த பின்னர், எனது புத்திரனையும் மதியாமல் தேசம் புரட்சியில் இறங்குமேல் நான் பட்டபாடெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போலாமன்றோ?" என்றுரைத்தான். தேசத்தின் அமைதியைக் காத்தற்பொருட்டும், புதியதொரு சேனையைத் தயாரித்து வருதற்பொருட்டும் நெபோலியன் பாரிஸ் செல்லத் தீர்மானித்துத் தனது வீரர்களுக்குத் தெரிவித்தான். அவர்களும் உடனே இசைந்தார்கள்.

ஆயினும், பிரான்சுசேனை அதிக நெருக்கடியான நிலையிலிருந்தமையாலும், கஸாக்வீரர்கள் நான்கு பக்கங்களிலும் பலமாய்த் தாக்கி வந்தமையாலும் நெபோலியன் தன் சேனையை அத்தருணத்தில் விட்டுப்பிரிய மனமில்லாமல், சில நாட்கள் அங்கேயே தங்கியிருந்தான். பிறகு, சேனையுடன் புறப்பட்டு, வழியில் பல துன்பங்கள் அடைந்து வில்நா நகர் சேர்ந்தான். அங்கே பிரான்சு சேனைக்கு வேண்டிய உணவு வழங்கப்பட்டது. எல்லோரும் உணவருந்தியபின்னர் நெபோலியன் தன் வீரர்களிடம் விடைபெற்றுப் பாரிஸ் சென்றனன்.

பிரான்சுசேனை வில்நா நகரினின்றும் புறப்பட்டு நீமன் நதியினைக் கடந்து சென்று கௌனு என்னும் நகர் சேர்ந்த வழிநடந்த இளைப்பாலும், பனியின் கொடுமையாலும், கா வீரர்களின் கொடும்போராலும் பிரான்சுவீரர்கள் பலர் மாண்ட



னர். நல்ல வீரஞ்செறிந்த சேனைத்தலைவர்களில் அநேகர் உயிர் துறந்தனர். பிரான்சுசேனை இவ்வாறு நாசமுற்றதையும் நெபோலியன் பாரிஸ் சென்றதையும் அறிந்த பல வல்லரசுகள் பிரான்சின் மீது படையெடுக்கத் தொடங்கின. நெபோலியனால் முன்னர் முறியடிக்கப்பட்டவனும் வேறுகதியின்றி நெபோலியனிடத்துச் சரண்புகுந்தவனும், நெபோலியனது கருணையினால் பிரஷியா தேசத்திற்கு மீண்டும் அரசனாக்கப்பட்டவனுமாகிய பிரடரிக் என்பவன் நெபோலியனுக்கு விரோதமாக ருஷியாவுடன் சேர்ந்தான். பலவகைகளிலும் நெபோலியனுக்குக் கடமைப்பட்டிருந்தவனும், பல தருணங்களில் நெபோலியனிடமிருந்து பண உதவி பெற்றவனுமாகிய பர்னதாத்தி என்னும் ஸ்வீடன் தேசத்து மன்னனும் ருஷியாவுடன் நட்புக்கொண்டனன். சதியாலோசனையில் கலந்து நெபோலியனைக் கொல்லமுயன்றமையால் சிறை செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்றும், நெபோலியனது மன்னிப்பையும் பணவுதவியையும் பெற்று அமெரிக்கா சென்றவனாகிய மோரோ என்பவனும் பகைவர்களுடன் சேர்ந்துகொண்டான். நெபோலியனால் பெரிதும் நம்பப்பட்டுவந்த ஜெனரல் ஜோமினி என்னும் இராணுவ அதிகாரியும் பகைவர்பால் சேர்ந்து நெபோலியனை வஞ்சித்தான். நெபோலியனால் பன்முறையும் முறியடிக்கப்பட்டுச் சமாதானம் இரந்தவர்களும், உடன்படிக்கைகளைப் பன்முறைகளில் நிராகரித்தும் பெருந்தகை நெபோலியனால் மன்னிக்கப்பட்டவர்களும், கடைசியாக நெபோலியனுக்குப் பெண்ணையுங் கொடுத்துச் சம்பந்தம் கலந்தவர்களுமான ஆஸ்டிரியர்களும், ருஷியர்களோடு நட்புக்கொண்டு நெபோலியன்மீது படையெடுத்தனர். நெபோலியனது உதவியால் உயர்பதவி பெற்ற மோரத் என்னும் நேப்பிள்ஸ் மன்னனும் பகைவர் பக்கம் சேர்ந்தனன். ஆங்கிலேயர்களோ திரண்ட பொருள்தந்து வல்லரசுகளைத் தூண்டிக்கொண்டே யிருந்தனர். ஸ்பெயின் தேசத்தில் உள்நாட்டுக் கலகம் புகைந்துகொண்டே யிருந்தது. வெஸ்ட்பேலியாவின் ஜனங்கள் பகைவர்களுடன் சேரவெண்ணியதை நெபோலியனது தம்பியாகிய ஜரோம் என்பவன் அறிந்து சிம்மாதனத்தை உதறித் தள்ளிவிட்டு வேறொரு ஊருக்குச் சென்றனன். நெபோலிய

னிடம் கடைசிவரையிலும் கட்டுக்கொண்டிருந்தவர்கள் சேக்ஸனி மன்னனும் பூஜனுமாகிய இருவர்களேயாவர். மற்ற மன்னர்களெல்லாம் அற்றகுளத்தின் அறுநீர்ப் பறவைபோல் பறந்து சென்று பகைவரிடம் சேர்ந்தனர். இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து பெருத்த படையுடன் பிரான்சு நோக்கிச் சென்றனர்.

நிற்க, பாரிஸ் சென்ற நெபோலியன் தேச சபையினைக் கூட்டி மாஸ்கோ யுத்தத்தில் பிரன்சு சேனைக்கு நேர்ந்த துன்பங்களனைத்தையும் காவாது உரைத்தனன். இதாலிய தேசத்தவர் நெபோலியனுக்கு உதவிபுரிய முன்வந்தனர். பிரன்சு மாந்தர்களும் உற்சாகத்துடன் போருக்கெழுந்தனர். 1813-ம் ஆண்டு எப்ரல்-மீ 15-ம் தேதியன்று நெபோலியன் ஒரு லட்சம் வீரர்களுடன் போருக்கெழுந்தான்.

முதலில், டிரஸ்டன் என்னுமிடத்திலும், பின்னர் லட்சன், பாட்சன் என்னுமிடங்களிலும் எதிரிகளைத் தாக்கி நெபோலியன் வெற்றியுற்றான். பகைவர்கள் சிதறியோடினர். எனினும், பலமன்னர்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்து ஐந்துலட்சம் வீரர்களுடன் போருக்குப் புறப்பட்டனர். நெபோலியனிடம் ஒரு லட்சம் சிப்பாய்களே இருந்தனர். அவர்களும் போரில் பயிற்சியில்லாதவர்கள். போர் வல்லுநரும் போர்வீரர்களும் ருஷியாவிலேயே மாண்டொழிந்தனர். அஞ்சா நெஞ்சினனாகிய நெபோலியன் பகைவர்களது பெருத்த படையையும் பொருட்படுத்தாது தன் சேனையைப் பர்லின் நோக்கிச் செல்லுமாறு ஏவினான். ஆனால், சேனைத்தலைவர்கள் பர்லின்மீது படையெடுக்கச் சம்மதியாமல் லீப்ஸிக்மீது படையெடுத்தலையே விரும்பினர். நெபோலியனது கட்டளைக்குச் சேனைத்தலைவர்கள் மறுத்துப் பேசியது இதுவே முதன்முறையாகும். நெபோலியனது புருவம் குனிந்தது; விழிகள் சிவந்தன. எனினும், தன் கோபத்தை வெளிக்காட்டாமல் சேனைத்தலைவர்கள் உரைத்ததைச் செவிமடுத்துக் கேட்டு, "வீரர்களே! பர்லின்மீது படையெடுத்துச்



செல்லுதலே ஏற்றதாகும். இந்நிலைமையில் லீப்ஸிக் செல்லுதல் அறிவின்மையாகும். எனினும், நீங்கள் சொல்லியதையும் யோசித்துப் பார்ப்பேன்" என்று நெபோலியன் உரைத்தனன்.

பிறகு, நெபோலியன் தன்னறைக்குள் சென்று நெடுநேரம் வெளியே வாராமையால் மந்திரி கலேன்கோர்ட்டு அதிக கவலையுற்று நெபோலியனது அறைக்குள் சென்றான். தேசப்படங்கள் மேஜையின் மீது விரிக்கப்பட்டிருந்தன. நெபோலியனது முகத்தில் துக்கக்குறியே காணப்பட்டது. நெபோலியனது வெருண்ட பார்வையையும் வெளுத்த முகத்தினையும் கண்ணுற்ற கலேன்கோர்ட்டு, "அரசே! சேனைத்தலைவர்கள் தமது அபிப்பிராயங்களை உமக்குத் தெரிவித்தார்களேயன்றி உமது கட்டளையை மீறக் கருதினார்களில்லை. அதைக் குறித்து நீர் இங்ஙனம் வருந்துதல் உமது உடல் நலத்திற்கு ஏதம் விளைப்பதொன்றாம்" எனப் பகர்ந்தனன். அதைச் செவியுற்ற நெபோலியன் "மந்திரி! அறியாது பேசுகின்றீர். சேனைத்தலைவர்களது கீழ்ப்படியாமை தேசத்தின் நாசத்தையே அறிவிக்கின்றது. அரசனது கருத்துக்கு மாறாக வாளேந்திய வீரர்கள் ஆலோசனை செய்வரேல் அரசனது ஆட்சி அன்றே ஒழிந்ததென உணர்க. மறுத்து விவாதம் செய்தல் வீரர்க்கு அழகன்று. இந்நிலவுலகின் மற்றொரு கோடிக்குச் செல்கவெனினும் எதிர்த்துப் பேசாமல் எழுபவரே போருக்குரிய வீரர்களாவர். மேலும், நம் வீரர்கள் ஊக்கமின்றி உயிரற்றார்போல் உலவுகின்றனர். பகைவரது வாளுக்கஞ்சுவேன் அல்லேன். ஆனால், நம்வீரர்களின் கீழ்ப்படியாமையும், ஊக்கமின்மையுமே என்னை அஞ்சச் செய்தன. பற்பல பேசி என்னாம்! எல்லாமிழந்தோம். விதிக்கு மாறாகப் போராடுகின்றேன். துன்பங்களைச் சகிக்கும் ஆற்றல் பிரன்சு மக்களுக்கில்லை யென்பதை உணர்ந்தேன்" என்று சொல்லியபின் பெருமூச்செறிந்து படுக்கையிற் சாய்ந்து ஆழ்ந்து சிந்தித்திருந்தான்.

பொழுது புலர்ந்தது. நெபோலியன் தன் கருத்துக்கு மாறாகவே சேனையுடன் லீப்ஸிக் நகருக்குப் புறப்பட்டான். லீப்ஸிக் சென்றதும் கோட்டையைச் சுற்றிச் சேனையை அணி

வருத்து நின்றனன். பகைவர்கள் மூன்றரை லட்சம் வீரர்களுடன் கோட்டையைத் தாக்கினர். எப்போதும் வெற்றியே பெற்ற ஒருலட்சம் பிரான்சு வீரர்கள் முனைந்து நின்றனர். வெஞ்சமர் நடந்தது. இருதிறத்திலும் பல்லாயிரம் வீரர்கள் இறந்தனர். அன்றிரவு முழுவதும் நெபோலியன் கண்ணுறக்கமின்றி வீரர்களை உற்சாகப் படுத்தியவாறிருந்தான். ஆனால் அறுபதினாயிரம் வீரர்களைத் திரட்டிக்கொண்டு பர்னதாத்தி என்பவன் வந்து சேர்ந்ததும் பகைவர்கள் பலமுற்றனர். பகைவர்களது பலத்தையும் தனது பலமின்மையையும் நெபோலியன் உணர்ந்து கவலையுற்றனன். ஒவ்வொரு விநாடியும் அவனது துயரினை அதிகப்படுத்தியது. அவனது அகத்தின் நிலைமை முகத்தில் தோன்றிற்று. அத்தருணத்தில் வயிற்றுநோயும் ஆரம்பித்தது. நெபோலியன் வயிற்றின்மேல் கைவைத்துக்கொண்டு, "வயிற்றுவலி என்னைத் துன்புறுத்துகிறது. என் மனம் ஊக்கத்துடனேயிருக்கிறது. எனினும், இவ்வுடல் தளர்வுறுகிறது" என்று சொன்னான். சிறிது நேரம் வயிற்றுநோயால் சொல்லொணாத் துன்பம் எய்திப் பின்னர் சுகமடைந்தான்.

மறுநாள், காலைமுதல் மாலைவரையிலும் போர் நிகழ்ந்தது. அப்போரின் கொடுமையைப் பார்க்க மனந்தாளாது கதிரவனும் குடதிசை மறைந்தான். அன்றிரவு, மறுநாட் போருக்குரிய சகல ஏற்பாடுகளையும் நெபோலியன் வழக்கம்போல் செய்து வந்தான். அப்பொழுது, வெடிகுண்டு செலவாயினவென்றும் எஞ்சி நிற்பது இரண்டுமணி நேர யுத்தத்துக்கும் போதாதென்றும் வீரர்கள் நெபோலியனுக்குத் தெரிவித்தனர். உடனே லீப்ஸிக் கோட்டையினின்றும் பின்வாங்கிச் சேக்ஸனி தேசம் செல்ல நெபோலியன் தீர்மானித்தான். நெபோலியனும், அவனது சேனையும் ஆற்றைக் கடந்து உயிர்தப்பிச் சேக்ஸனி தேசம் சென்றனர். பிறகு, நெபோலியன் தன் வீரர்களை யழைத்து "நான் சேனையைக் கலைத்துவிட்டேன். நீங்கள் எல்லோரும் உமது வீட்டிற்குச் செல்வீராக" என்று கட்டளையிட்டான். பிறகு, டிரஸ்டன் நகரையும் பகைவர்கள் கைப்பற்றினர். சேக்



ஸனி மன்னனாகிய பிரடரிக் அகஸ்டஸ் என்பவர் நெபோலியனை மார்புறத் தழுவி, "நாம் ஒருவரையொருவர் கடைசியாகப் பார்க்கும் காலம் இதுதான்" என்று சொல்லி இருவரும் பிரிந்தனர். பிறகு, நெபோலியன் புறப்பட்டு நவம்பர்-மீ 4-ம்தேதி பாரிஸ் சென்று அரண்மனைப் புகுந்தான். நெபோலியனைக் கண்டதும் மேரியா லூயிஸா துக்கித்துக் கண்ணீர் பெருக்கித் தேம்பினாள். தன் தந்தையின் வஞ்சகத்தைக் கருதி நெஞ்சம் நெக்குருகினாள். நெபோலியனோ சற்றேனும் மனந்தளராது இனிய வார்த்தைகளால் அவளைத் தேற்றிப் பிள்ளையை அழைத்து வரும்படி ஏவினான். அக்குழந்தையும் வந்தது. நெபோலியன் தன் பிள்ளையை எடுத்து, முத்தமிட்டு, உச்சிமோந்து உவகை பூத்தனன்.

# அத்தியாயம்—12

## ஊழ்வலி

நெபோலியனைச் சிம்மாதனத்தினின்று இறக்கும்பொருட்டும் ஐரோப்பாவெங்கும் பரவியிருந்த சமத்துவ உணர்ச்சியை வேருடன் அழிக்கும் பொருட்டும் வல்லரசர்கள் ஒன்று சேர்ந்து பெருத்த சேனையுடன் ரைன்நதிக்கரை யணுகினர். பிரான்சு மாந்தர்களுக்கும் நெபோலியனுக்கும் பகைமையுண்டாக்கக் கருதிய வல்லரசர்கள் நெபோலியனைக் குறித்துப் பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். நேசக்கட்சியினர் சமாதானத்தையே நாடுகையில் நெபோலியன் போரையே விரும்புவதாகவும், வல்லரசர்களெல்லாரும் மக்களது உரிமைக்காகப் பரிந்து நிற்கையில் நெபோலியன் சுய நலத்தை முன்னிட்டு மாந்தர்களைத் துன்புறுத்துவதாகவும், நேசதேசக்கட்சியினர் பிரான்சின்மீது படையெடுக்க விரும்பவில்லையாயினும் பேராசையும் போராசையுங்கொண்டு ஐரோப்பாவெங்கும் குருதி வெள்ளத்தைப் பெருக்கிவரும் நெபோலியன் மீதே படையெடுப்பதாகவும் அவ்விளம்பரங்களில் குறிக்கப்பட்டிருந்தன. இப்பொய்யுரைகளைப் பலர் மெய்யென நம்பினார்கள்.

பிரான்சு தேசத்தில பழையபடி பிரபுத்துவத்தை நிலைநிறுத்தக் கருதிய பிரபுக்களும், பிரான்சுதேசம் சாமானிய குடிமக்களின் ஆட்சியில் அமைந்திருத்தல் வேண்டுமென்னும் கொள்கையினரான அமிதவாதிகளும் தங்கள் கொள்கையினை முறையே நிலைநிறுத்தக் கருதிப் பகைவர்பால் சேர்ந்தனர். இவர்கள், நெபோலியனது இரகசியங்களையும், நாட்டின் நடவடிக்கைகளையும், சட்ட சபையின் ஆலோசனைகளையுங் கடிதமூலமாய்ப் பகைவர்களுக்குத் தெரிவித்து வந்தனர். மத குருக்களும் பகைவர்களுக்கு உதவி புரிந்தனர். போர்பன் ஆட்சி நிலவுமேல் பறிமுதல்





செய்யப்பட்ட கோயில்மானியங்களனைத்தும் தமக்கு மீண்டும் வழங்கப்படுமென்னும் நம்பிக்கையுடன் மதகுருக்கள் நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள மக்களைக் கலகம் செய்யுமாறு தூண்டினர். சட்டசபை அங்கத்தினர்களுக்கும் நெபோலியனுக்கும் அபிப்பிராய பேதங்கள் தோன்றின. அவர்களும் ஆபத்துக் காலத்தில் நெபோலியனுக்கு உதவி செய்யாமல் பல துன்பங்களை இழைத்துவந்தனர். இவற்றை யுணர்ந்த நெபோலியன் முதன் மந்திரியான **கலைன்கோர்ட்டு** என்பவரை அழைத்து, "மந்திரி! சமாதானமே எனது விருப்பம். நீர் பகைவரிடஞ் சென்று சமாதான மாற்றி வருக. ஆனால், அநியாயமான நிபந்தனைகட்கு நான் சம்மதியேன். சமாதானம் என்பது இருதிறத்தினர்க்கும் நியாயமாகவும் ஏற்றதாகவும் இருந்தாலல்லது நெடுநாள் நீடியாதென்பதையும் பகைவர்க்குக் கூறுக. பிரான்சு தேசத்துக்குத் தாழ்வைத் தரத்தக்க நிபந்தனைகளை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். பிரான்சு தேசத்துக்கும் எனக்கும் இகழ்ச்சி வாராதவண்ணம் சமாதான மாற்றுக" என்று உரைத்தனன்.

மன்னவன் மொழிப்படியே கலைன்கோர்ட்டு, பகைவரிடஞ் சென்று சமாதானம் வேண்டினான். பகைவர்களும் சமாதான இச்சையர்போல் பாசாங்கு காட்டித் தங்களுக்குப் புதிய சேனைகள் வரும்வரை கால தாமதம் செய்தனர். பகைவர்களது உள்ளக்கிடக்கையைத் தெள்ளிதினுணர்ந்த கலைன்கோர்ட்டு நெபோலியற்கு எழுதிய நிருபமாவது: "அரசே! பகைவர்களைக் கண்டு சமாதானவிடயமாய் முயற்சி செய்தேன். முதல் நாள் சில நிபந்தனைகளைக் குறிப்பிட்டனர். அவைகளுக்கிணங்கினேன். மறுநாள் வேறு சில நிபந்தனைகளை வேண்டினர். அவைகட்கும் சம்மதித்தேன். இன்று, முன்னிகழ்ந்தனவற்றை முற்றிலும் மறந்து, வேறு நிபந்தனைகளைக் கூறுகின்றனர். இவ்வாறு, நிபந்தனைகள் நாடோறும் மாறுகின்றன. நம்முடன் உடன்படிக்கை யாற்றப் பகைவர்களுக்கு விருப்பமில்லையென்பது எனது துணிபு. நாம் இவ்வாறு சமாதான முயற்சியில் காலங் கழித்து வருகையில்

பகைவர்கள் தங்கள் சேனைகளைத் திரட்டிக்கொண்டு பிரான்சு தேசத்தைப் பலவிடங்களில் ஒரே தருணத்தில் தாக்குதற்குத் தயார் செய்கின்றனர். நாம் இனிமேலும் தாமதம் செய்யின் ஏமாற்றம் அடைவோம்.''

இந்நிருபத்தை நெபோலியற்கு அனுப்பியபின் கலேன் கோர்ட்டும் பாரீஸ் சென்றனன்.

அத்தருணத்தில், ஸ்வீடன் தேசத்து அரசனுயிருந்து நாடு கடத்தப்பட்ட **குஸ்தாவஸ்** என்பவர் ஒரு சேனையுடன் நெபோலியனுக்கு உதவி செய்ய முன்வந்தனர். அவருடைய உதவியை நெபோலியன் ஏற்றுக்கொண்டிருப்பின் ஐரோப்பாவின் சரித்திரம் ஒருகால் வேறுவிதமாக மாறியிருப்பினும் இருக்கலாம். ஆனால், நெபோலியன் அவ்வுதவியை மறுத்துவிட்டான். அதைக் குறித்து நெபோலியன் சொன்னதாவது: "குஸ்தாவஸினுடைய உதவியை நான் ஏற்றுக்கொண்டிருந்தால் அவ்வுதவிக்குக் கைம் மாருகப் பர்னதாத்தியை நாடு கடத்திக் குஸ்தாவஸ்ஸை மீண்டும் அரசனுக்கக் கட்டுப்பட்டவனுவேன். அவ்வாறு செய்யின், எனது கொள்கையும் செய்கையும் முரண்பட்டனவாகும். எங் ஙனம் எனின், குஸ்தாவஸ் என்பவர் ஜனங்களால் நாடு கடத்தப் பட்டவர். பர்னதாத்தியோ ஜனங்களால் அரசனுகத் தேர்ந் தெடுக்கப்பட்டவன். எனவே, மக்களது அபிப்பிராயத்துக்கு மாருகக் குஸ்தாவஸை அரசனுக்கிப் பர்னதாத்தியை வெளியேற் றுதல் எனது கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.'' நெபோலியனது உயர்ந்த குணத்தையும் மேன்மையையும் காட்டு தற்கு இஃது ஒன்றே போதுமானதன்றோ?

நிற்க, வெல்லிங்டன் பிரபு ஒன்றரைலட்சம் வீரர்களுடன் ஸ்பெயின் தேசத்திற் புகுந்து அங்கிருந்த பிரான்சு வீரர்களையெல் லாம் துரத்தியபின் பிரான்சு நோக்கி வந்துகொண்டிருந்தான். ஸ்பெயின் தேசம் பிரான்சு ஆட்சியினின்றும் நழுவியது. உடனே, பர்டினண்டு அரசனுக்கப்பட்டான்.



இதற்குள், வல்லரசர்கள் பத்தரைலட்சம் வீரர்களுடன் ரைன்நதியைக் கடந்து பிரான்சுக்குள் நுழைந்து விட்டனர். நான்கு பக்கங்களிலும் நெருங்கிவரும் பகைவர்களைத் தனித் தனித் தாக்குதற்கேற்ற சேனைபலம் நெபோலியனுக்கில்லை. ஐந்து லட்சம் பிரான்சு வீரர்கள் ருஷியாவில் மாண்டொழிந்தனர். மூன்று லட்சம் வீரர்கள் சேக்ஸனி யுத்தத்திலும், இரண்டரை லட்சம் வீரர்கள் ஸ்பெயின்போரிலும் இறந்தனர். இந்நிலைமையில் நெபோலியன் தன்னுலியன்றவரைப் பாடுபட்டும் இரண்டரை லட்சம் வீரர்களையே திரட்ட முடிந்தது.

பிறகு, ஜனவரி மாதம் 24-ம் தேதியன்று கடவுள் வழி பாட்டாற்றியபின் நெபோலியன் மந்திரிகளை யழைத்து, "அன்பர் களே! இன்றிரவு நான் போருக்குப் புறப்படுவேன். எனது மனைவியையும் அருமை மைந்தனையும் விடுத்துப் போகிறேன். அவர்களை உங்களுடைய பாதுகாப்பில் வைத்துப்போவதால் கவலையின்றிச் செல்லுவேன். உலகில் எல்லாவற்றினும் எனக்கு அருமையான பிரான்சு தேசத்தையும் உம் வசம் ஒப்புவித்துப் போகிறேன். உங்களுடைய கடமைகளை மனப்பூர்வமாய்க் கவனிப்பீர்களாக.'' என்று உரைத்தனன். அம்மொழிகேட்ட அமைச்சர் யாவரும் கண்ணீர் பெருக்கினர்.

அன்றிரவு மூன்று மணிக்கு நெபோலியன் மனைவியையும் மைந்தனையும் ஆலிங்கனஞ் செய்து அவர்களிடம் விடைபெற்றுப் போருக்குப் புறப்பட்டான். நெபோலியன் மறுபடியும் அவர் களைப் பார்க்கவேயில்லை. நெபோலியன் சேனையுடன் விரைந்து சென்று பாரிஸுக்குக் கிழக்கே நூறுமைல் தூரத்திலுள்ள இரண்டு இடங்களில் காஸக் வீரர்களைத் தாக்கி வெற்றியுற்றனன். பிறகு, ப்ரையன் என்னுமிடத்தில் புளூசர் என்பவரது தலைமையின் கீழிருந்த அறுபதினயிரம் பிரஷியச் சேனையை எதிர்த்துக் [illegible]ம்போர் புரிந்து வெற்றியுற்றனன். மறுநாள், புளூசருக்கு [illegible]யாக ஒன்றரை லட்சம் வீரர்களைக் கொண்ட புதிய சேனை [illegible]ன்று வந்து சேர்ந்ததும் புளூசருக்குப் புத்துயிர் தோன்றி

பது. உடனே, தனது சேனையுடன் நெபோலியனைத் தாக்கினான். இருதிறத்தினர்க்கும் இடைவிடாது வெஞ்சமர் நிகழ்ந்துவந்தது.

ஒருநாள், நெபோலியன் தன் சேனையுடன் ஜோஸப்பைன் வசித்துவந்த இடத்திற்கருகே செல்ல நேர்ந்தது. அப்போது, நெபோலியன் ஜோஸப்பைன் வீட்டுக்குச் சென்று சற்று நேரம் பேசியபின் விடைபெற்றுத் திரும்புங்கால் ஜோஸப்பைனைப் பார்த்து, “அன்பே! உலகில் என்னைப் போன்ற அதிர்ஷ்டசாலி எவரும் இலர். ஆனால், துன்பங்களும், தீயனவும் தொடர்ந்து வரும் இவ்வையத்தில் நம்பத்தகுந்தவர் உனையன்றி வேறெவரையும் காணேன்” என்று பகர்ந்தனன் நெபோலியன் ஜோஸப்பைனைக் கண்டது இதுவே கடைசி முறையாகும். சில நாட்கள் சென்றபின் நெபோலியன் ஜோஸப்பைனுக்கு எழுதிய கடிதமாவது:

“இவ்வூரில் நான் மாணவனாயிருக்கையில் அனுபவித்த அமைதியையும், இப்போது அநுபவிக்கும் அமைதியின்மையையும் ஒத்திட்டுப் பார்க்கின் வாழ்க்கையின் இன்றியமையா மாறுதல்கள் கட்புலனாகின்றன. இங்கே நிகழ்கின்ற போர்களில் மரணத்தையே தேடித் திரிகின்றேன். மரண பயமென்பது எள்ளளவும் எனக்குக் கிடையாது. இப்போது மரணமே எனக்கு இன்பம் ஊட்டவல்லது. ஆனால், இறப்பதற்குமுன் ஒருமுறை உன்னைப் பார்க்க விரும்புகிறேன்.”

புளூசருடன் நெபோலியன் போர்புரிந்து வருகையில் பகைவர்கள் மற்றத் திக்குகளில் பாரிஸ் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். இதை யுணர்ந்த நெபோலியன், பாரிஸ் நகரைக் காத்தற்பொருட்டு எவ்வித சமாதானமாயினும் செய்துகொள்ளுமாறு கலின்கோர்ட்டுக்குக் கடிதம் அனுப்பினான். கலின்கோர்ட்டும் சமாதான முயற்சி செய்தனன். பகைவர்களும் இணங்கினர். நெபோலியன் அரசனாவதற்குமுன் பிரான்சுதேசம் எவ்வளவு பரப்புடையதாயிருந்ததோ அதுவரையினும் நெபோலியன் வைத்துக்கொண்டு மற்றப் பாகத்தைப் பகைவர்களுக்குக் கொடுத்



துவிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு நெபோலியன் முதலில் இணங்கவில்லை யெனினும் நண்பர்களுடைய பலவந்தத்தால் பின்னர்ச் சம்மதித்தான். இத்தகைய நிபந்தனைக்கும் நெபோலியன் இணங்கியதையறிந்த வல்லரசர்கள் புதியதோர் நிபந்தனையைக் குறிப்பிட்டனர். புரட்சிக்குமுன் பிரான்சுதேசம் எவ்வளவு பரப்பினதாயிருந்ததோ அதை மாத்திரம் நெபோலியன் வைத்துக்கொண்டு மற்றைய பாகத்தைப் பகைவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதே அப்புதிய நிபந்தனையாகும். அதைச் செவியுற்ற நெபோலியன், “என்னேயிது! இந்நிபந்தனைக்கும் நான் இணங்குவேனென்று பகைவர்கள் நினைத்தனரோ? நான் அரசனான பின்னர்க் கைப்பற்றிய பாகங்களை விட்டுவிட முன்பு ஒருவாறு சம்மதித்தேன். ஆனால், எனது ஆட்சிக்குமுன்னரே பிரான்சு தேசத்துக்குச் சொந்தமாயிருந்த பாகங்களை விட்டுவிட நான் எங்ஙனம் இசைவேன். போர்கள் பல புரிந்தேன். வெற்றிகள் பல பெற்றேன். பல்லாயிர பிரான்சு வீரர்களின் இரத்தத்தையும் சிந்தச் செய்தேன். இவ்வளவு செய்தும் பிரான்சு எனதாட்சியால் குறைவுறுமாயின் உலகம் என்னைத் தேசத்துரோகி யெனவும் சுயநலப் பிரியனெனவும் இகழுமன்றோ? இந்நிபந்தனைக்கு நான் இணங்கேன். யுத்தமுனையில் வெற்றியே ஆகுக, அல்லது தோல்வியே யாகுக, அன்றி மரணமே நேருக. அதைக்குறித்து எனக்குக் கவலையிலது. பதியிழப்பினும், பாலனையிழப்பினும், படைத்த நிதியிழப்பினும், இனி யெனக்குளதெனும் கதியிழக்கினும் மானம் இழக்கிலேன்” என்று பகர்ந்தனன்.

இப்படியிருக்க, பகைவர்களது சேனை பாரிஸ் நகர்க்கு இருபதுமைல் தூரத்தில் வந்துவிட்டது. அதைச் செவியுற்ற நெபோலியன், “நான் விரைவில் வந்து சேர்வேன். நான் வருவதற்குள் பகைவர்கள் பாரிஸ் நகரினைக் கைப்பற்றின் எனது மனைவியையும், மைந்தனையும், மந்திரிமார்களையும், பொக்கிஷத்தையும் லாயர் என்னுமிடத்துக்கு அனுப்பிவிடுக. எனது புத்திரனைக் கைவிடாதே. அவன் பகைவர் கையில் அகப்படுவதைக் காட்டினும் ஆற்றில் விழுந்து இறந்தலே ஏற்புடைத்தாகும்” என்ற ஒரு

நிருபத்தைத் தம்பிக்கு அனுப்பிவிட்டுப் பாரிஸ் நோக்கி விரைந்து சென்று இரண்டு நாட்களில் பவுண்டன்புளு என்னும் இடத்தை யணுகினன்.

இதற்குள், பகைவர்கள் பாரிஸ் நகர்க்குள் புகுந்தனர். பிரன்சு வீரர்கள் தங்களாலியன்றவரை வெஞ்சமர் புரிந்தும் கடைசியில் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் புறங்கொண்டோடினர். அரசியும், மந்திரியும், மற்றுஞ்சிலரும் ப்ளாயிஸ் என்னுமிடத்துக்குப் போகப் புறப்பட்டனர். நெபோலியனது மைந்தனோ அரண்மனையை விட்டகலாது, "எனது தந்தையை இவர்கள் வஞ்சிக்கின்றனர். நான் அரண்மனையை விட்டகலேன். தந்தை ஊரிலில்லாதபோது இவ்வரண்மனைக்குத் தலைவன் நான் அன்றோ?" என்று கூறினான். குழலினும் இனிய அம்மழலைச் சொற்கேட்டு மனங்கசியாதார் யார்? என்ன கூறியும் என்? எல்லோரும் புறப்பட்டுப் பிளாயிஸ் சென்றனர். தந்தைபால் பேரன்புகொண்ட அக்குழந்தை மறுபடியும் நெபோலியனைக் காணவேயில்லை. அந்தோ, பாவம்! விதியினை யாவரே வெல்லும் நீர்மையர்? பாரிஸ் பகைவர்களின் வசமாயிற்று. பவுண்டன் புளுவுக்கருகே சேனையுடன் வந்துகொண்டிருந்த நெபோலியன் இச்செய்தியைச் செவியுற்றதும் மனம் வெதும்பி, "அந்தோ! தலைநகரைப் பகைவர்களிடம் ஒப்புவித்துச் சரண் புகுந்தனரே. தாய்நாட்டைக் காப்பாற்றாது துரோகம் செய்தனரே. தாய்நாட்டுப் பற்றிலா மனிதர்கள் இருந்தென், இறந்தென்? சேனைத் தலைவர்களும் உயிர்க்கஞ்சி ஓடினரா? கொடுமை யிழைத்தனரே?" என்று அரற்றி மூர்ச்சித்து வீழ்ந்தான். மூர்ச்சை தெளிந்த பின்னர்க் கலைன்கோர்ட்டை யழைத்து "பாரிஸ் நகரைக் காப்பாற்ற எவ்வித உடன்படிக்கையேனும் செய்துகொள். உடனே பாரிஸ் செல்வாயாக" என்றனன். கலைன்கோர்ட்டு உடனே பாரிஸ் புறப்பட்டான். நெபோலியனோ ஐம்பதினாயிரம் வீரர்களுடன் பவுண்டன்புளுவில் தங்கியிருந்தான்.

கலைன்கோர்ட்டு, பாரிஸ் நகர்க்குள் நுழைய முடியவில்லை. பகைவர்களின் வீரர்கள் பாரிஸ் சுற்றிலும் நின்று பிரன்சுக்காரன்



எவனையும் உள்ளே விடாமல் தடுத்து வந்தனர். உள்ளே நுழைய வழியின்றி, கலைன்கோர்ட்டுத் திகைத்து நின்றனன். அவ்வமயத்தில் அவ்வழி சென்ற ருஷியா மந்திரி கலைன்கோர்ட்டைக் கண்டு, வண்டியினின்றிறங்கி, அவனையும் அழைத்துக்கொண்டு அலெக்ஸாந்தரிடம் சென்றான். கலைன்கோர்ட்டின் உயர்ந்த குணங்களையும் நல்லொழுக்கத்தையும் செவ்வனே யுணர்ந்த அலெக்ஸாந்தர் கலைன்கோர்ட்டைத் தக்க முறையில் உபசரித்த பின் இருவரும் நெடுநேரம் பின்வருமாறு சம்பாஷித்தனர்:—

அலெக்ஸாந்தர்—பிரபுவே! உமது நிலைமையைக் குறித்து நான் பெரிதும் வருந்துகின்றேன். உங்களுக்கு நான் செய்யக்கூடியது ஏதேனும் உளதேல் நான் அவசியம் செய்வேன். என்னை உமது உடன்பிறந்தானெனக் கருதி நம்புவீர்களாக.

கலைன்—மன்னரே! எனக்காக நான் வேண்டுவது ஒன்றுமில்லை. ஆனால், அனைத்தும் நெபோலியனுக்காகவே.

அலெக்—அதைத்தான் கேட்பீரென்று யானும் அஞ்சினேன். நெபோலியனுக்காக என்னால் ஒன்றும் செய்யமுடியாது. நேசக்கட்சியினருடன் நான் சம்பந்தப்பட்டுள்ளதால் அவர்களுடைய அபிப்பிராயங்கட்குக் கட்டுப்பட்டுள்ளேன். மன்னிக்கவும்.

கலைன்—அரசே! நீ முயன்றால் ஆகாததொன்றுமில்லை. உமது வார்த்தைக்கு அதிக மதிப்புண்டு. ஆஸ்டிரிய மன்னன் தன் புத்திரியின் நன்மையைக் கருதியேனும் நெபோலியன்பால் அன்பு காட்டக்கூடும். நீங்கள் இருவரும் ஒன்றுபட்டால் நெபோலியனைக் காப்பாற்றமுடியும்.

அலெக்—பிரபுவே! அறியாது கூறினீர். நெபோலியனைச் சிம்மாதனத்தில் நிலைக்கச் செய்யும் எவ்வித பிரேரபணை

யையும் ஆஸ்டிரிய மன்னன் ஆமோதிப்பதில்லை. ஐரோப்பாவின் சமாதானத்தை முன்னிட்டுத் தன் புத்திரியையும், பந்துக்களையும் பறிகொடுக்கப் பிரான்சிஸ் தயாராயிருக்கின்றார். நெபோலியனைச் சிம்மாதனத்தினின்றும் வெளியேற்றுவதாக வல்லரசர்கள் ஏகமனதாய்த் தீர்மானித்துவிட்டனர். அத்தீர்மானத்தை இனி மாற்றுதல் இயலாததொன்றாகும்.

கலேன்—(கண்ணீர் வடித்து) அரசே! அப்படியேயாயினும் அரசியையும், அரசிளங்குமாரனையும் நாடு கடத்தல் நீதியாகுமோ? நெபோலியனது புத்திரன் நேசதேசத்தவர்க்கு ஒரு தீங்கும் இழைக்கவில்லையே? அவன் ஒரு இராஜ சம்ரட்சகனாக (Regent) இருக்கலாமே.

அலெக்—அதையும் நாங்கள் ஆலோசித்தோம். ஆனால், நெபோலியனே அதற்கும் தடையாக உள்ளான். அவ்வித உடன்படிக்கைக்கு நெபோலியன் தற்சமயம் இணங்கினும் பின்னர்க் கிளம்பி ஐரோப்பாவை மீண்டும் தீக்கிரையாக்குவன் அன்றோ?

கலேன்—எனவே, நெபோலியனை வேருடன் கெடுக்கத் தீர்மானித்துவிட்டீர்களா?

அலெக்—ஆம். ஆனால் அஃது யாருடைய குற்றம்? இவ்வித இடையூறுகளினின்று நெபோலியனை விலக்குவான் கருதி எவ்வளவோ முன்னறிக்கை செய்தேன். "ஐயா! உமது இடைவிடா வெற்றிகளால் வல்லரசர்கள் பொறாமையுற்று எல்லோரும் ஒன்று சேர்ந்து உம்மை எதிர்க்கத் தயார்செய்கின்றனர்" என்று நெபோலியற்குப் பன்முறையும் தெரிவித்தேன். நான் ஒருவனே அவர்களுடன் சேராமலிருந்தேன். அப்படியிருந்தும், என் தேசத்தின்மீது நெபோலியன் படையெடுத்தனன். எனினும், எனக்கு அவர்மீது பகைமையென்பதில்லை. அவருக்கு என்னாலாய உதவிபுரியத் தயாராயிருக்கின்றேன்.



கலேன்—மன்னர் திலகமே! மகா உத்தம புருடனாகிய நெபோலியனை எவ்விதத்திலேனும் காப்பாற்றவேண்டுகின்றேன். அதுவே உமது குலத்துக்கும் குணத்துக்கும் ஏற்றதாகும்.

அலெக்—எனது விருப்பமும் அஃதே. ஆனால், எனது முயற்சி ஈடேறாதென அஞ்சுகின்றேன். பிரான்சு தேசத்தின் அரசுரிமையை நெபோலியனிடமிருந்து பறிக்கவேண்டுமென்ற எண்ணம் வல்லரசர்களின் உள்ளத்தில் பதிந்து கிடக்கின்றது. பிரன்சு மாந்தர்கள் தங்களுக்குப் பிரியமான ஒருவனை அரசனாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளட்டும். இன்னானைத்தான் அரசனாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர்களை நாங்கள் வற்புறுத்தப்போவதில்லை. ஆனால், பிரன்சு மாந்தர்கள் போரபன் அரசினையே பெரிதும் விரும்புவதால் நாங்களும் அவ்வாறே செய்யத் தீர்மானித்துள்ளோம். போரபன் அரசு மீண்டும் ஸ்தாபிக்கப்படின் நாங்கள் எல்லோரும் யுத்தபயமின்றிக் கவலையற்றிருப்போமன்றோ?

கலேன்—மன்னரே! நீங்கள் சொல்லியது உண்மைக்கு மாறானது. போரபன் வம்சத்தினர்பால் ஜனங்களுக்கு அன்பென்பது அணுவளவும் கிடையாது. அவ்வன்பின்மையே பிரன்சு புரட்சிக்கு முதற்காரணமாகும். பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறியவேண்டின் ஜனங்களின் வாக்குகளை (Votes) எண்ணிப் பார்த்தலே தக்கவழியாகும். அப்பொழுது ஜனங்கள் விரும்புவது நெபோலியனையா அல்லது போரபன் குடும்பத்தினரையா என்பதை நேசக்கட்சியினர் எளிதில் அறியக்கூடும்.

அலெக்—நீங்கள் சொல்லியதே தக்க வழியாகும். ஆனால் அது விரைவிற் செயற்பாலதன்று. இத்தருணம், காலதாமதத்திற்கு ஏற்றதன்று. எதையும் விரைவில் தீர்மானிக்குமாறு பிரன்சு பிரபுக்கள் வல்லரசர்களை வற்புறுத்துகின்றனர். ஆஸ்டிரிய மன்னனும் இங்கேயில்லை. நெபோலியனது மைந்தனுக்காக நான் ஏதேனும் சொன்னாலும் அதை ஆமோதிப்பவர் யாவரும்

க்கில்லை. எனினும், என்னாலாயதைக் கட்டாயம் நான் செய்வேன். என் மனதில் ஓர் புதிய வுணர்ச்சியை நீங்கள் உண்டாக்கினீர். எல்லாம் கடவுள் செயல் என்று மனக்கவலையின்றி இருப்பீராக. நான் சபைக்குச் சென்று வருவேன்.

பிறகு, அலெக்ஸாந்தர் நேசக்கட்சியினர் சபைக்குச் சென்றனர். கலேன்கோர்ட்டு ஓர் அறையில் இருந்துகொண்டு அலெக்ஸாந்தரது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். நெடுநேரம் சென்றபின் அலெக்ஸாந்தர் திரும்பிவந்து கலேன்கோர்ட்டைக் கண்டு, "பிரபுவே! காரியம் ஒருவிதமாக முடிந்தது. உணவருந்தப்போவோம் எழுந்திருங்கள்" என்றனர். இருவரும் உணவருந்துகையில் கலேன்கோர்ட்டு அலெக்ஸாந்தரைப்பார்த்து "மன்னரே! எவ்வாறு முடிவு செய்தீர்கள்" என்றனன். அதற்கு அலெக்ஸாந்தர், "பிரபுவே! நெபோலியன் உடனே தனது இராஜ்யத்தைத் தன் மைந்தனுக்கு விட்டுவிட்டு அரசினைத் துறக்கவேண்டும். நீவிர் விரைவில் நெபோலியனிடஞ் சென்று அத்தகைய சாஸனமொன்றை வாங்கிவரவேண்டுகின்றேன். நெபோலியனைப்பற்றிய கவலை உமக்கு வேண்டாம். அவரை அவமானப்படுத்த நான் இணங்கேன். அப்பொறுப்பு என்னைச் சேர்ந்ததாகும். அவரைக் கௌரவமாகவே பாராட்டுவோம்" என்று சொன்னார் அதைக் கேட்ட கலேன்கோர்ட்டு உடனே புறப்பட்டுப் பவுண்டன்புளூ சென்று நெபோலியனைக் கண்டு நிகழ்ந்தனவற்றை அறியச் சொல்லினன். அதைச் செவியுற்ற நெபோலியன், "வல்லரசர்கள் என்னுடன் சமாதானம் செய்துகொள்ள இணங்கவில்லையா? வாள் பலத்தால் நான் பெற்ற சிம்மாதனத்தினின்றும் என்னை வெளியேற்றக் கருதியுள்ளார். ஆற்றலினாலும் அறிவின் திறத்தாலும் உயர்பதவி பெற்றுக் கொடுங்கோன் மன்னரை நடுங்கச் செய்த என்னை அவமானப்படுத்தத் தீர்மானித்தனரா? அன்றியும், போரபன் குடும்பத்தார்க்கு அரசுரிமையை மீண்டும் வழங்க நிச்சயித்தனரா? என்னே இது! வல்லரசர்கள் வெறிகொண்டனரா?



அல்லது பிரான்சு தேசத்தைப் பாழாக்கக் கருதினரா? என்னிடத்தில் இப்பொழுதும் ஐம்பதாயிரம் வீரர்கள் இருக்கின்றனர். அவர்களின் உதவியால் அவ்வல்லரசுகளைத் தாக்கி வெற்றிபெற என்னால் முடியும். எதையும் எண்ணித் துணிதலே நன்று. நீர் சென்று இளைப்பாறுக" என்று சொன்னான். கலேன்கோர்ட்டு அவ்வாறே சென்று இளைப்பாறிய பின்னர் நெபோலியனைக் கண்டான். அதற்குள் நெபோலியன் நன்கு யோசித்துச் சமாதானமே சிறந்த வழியென்னும் முடிவெய்தி ஓர் சாஸனத்தை எழுதி முடித்தனன். அச்சாஸனமாவது,

"ஐரோப்பாவின் சமாதானத்துக்கு நெபோலியனே தடையாயிருக்கிறானென நேசக் கட்சியினர் விளம்பரப்படுத்தியிருக்கின்றனர். ஆனால், ஐரோப்பாவின் சமாதானத்தையும், நன்மையையுங் கருதி எனது பதவியை மாத்திரமன்றி உயிரையுந் தியாகஞ் செய்யத் தயாராயிருக்கிறேனாதலால், வல்லரசுகளின் விருப்பப்படியே பிரான்சு தேசத்தின் அரசுரிமையை என் மைந்தனுக்கு விட்டுவிட்டு இராஜ்யத் துறவை நான் மேற்கொள்கிறேன்"

இச்சாஸனத்தை நெபோலியன் கலேன்கோர்ட்டுக்குத் தந்தனன். கலேன்கோர்ட்டு அச்சாஸனத்தைப் பெற்றதும் நெபோலியனிடம் விடைபெற்றுப் பாரிஸ் நகர்க்குப் புறப்பட்டான்.

இப்படியிருக்க, பாரிஸ் சட்ட சபையின் தலைவனான தாலிராண்டு என்பவன் வல்லரசுகளின் நன்மதிப்பைப் பெறும்பொருட்டு, "நெபோலியன் பிரான்சு சிம்மாதனத்தினின்றும் நீக்கப்பட்டான்" என்ற ஓர் தீர்மானத்தைச் சட்ட சபையில் நிறைவேற்றிப் புதிய அரசாங்கமொன்றை ஏற்படுத்தி அதற்குத் தானே தலைவனுமாயினான். நெபோலியன் பிரான்சு மாந்தர்களிடமிருந்து அரசாங்கத்தைப் பெற்றானேயன்றிச் சட்டசபையினரிடமிருந்து பெறவில்லையாதலால் அத்தீர்மானத்தைக் குறித்து நெபோலியன் கவலையற்றிருந்தான். தவிர, பவுண்டன்புளூவில் நெபோலியனுடன் தங்கியிருந்த மார்மண்டு என்னும் பிரான்சு

சேனைத்தலைவன் இருபதினாயிரம் வீரர்களுடன் பகைவர் பக்கம் சேர்ந்தனன். இதனைக் கேள்வியுற்ற நெபோலியன் பெரிதும் வருந்தினான்.

சட்டசபையின் தீர்மானத்தையும், மார்மண்டுவின் வஞ்சனையையும் அறியாத கலேன்கோர்ட்டு, பாரிஸ் சென்று, அலெக்ஸாந்தரைக் கண்டு, நெபோலியனது சாஸனத்தை அவனிடம் கொடுத்துத் தனக்கும் நெபோலியனுக்கும் நிகழ்ந்த சம்பாஷணையைக் கூறலாயினான். [sic: printed "யைக் காவாதுரைத்தனன்"]

அலெக்—பிரபுவே! நீர் இவ்விடமிருந்து சென்றபோது நெபோலியனது நிலைமை கம்பீரமாகவே யிருந்தது. பவுண்டன்புளுவில் நெபோலியனைச் சுற்றியிருந்த ஐம்பதினாயிரம் வீரர்களையும், நெபோலியனது தைரியத்தையுங் கண்ட வல்லரசர்கள் பயங்கொண்டிருந்தனர். ஆனால், நெபோலியனது நிலைமை இப்போது முற்றிலும் மாறிவிட்டது.

கலேன்—மன்னரே! நெபோலியனிடம் இப்பொழுதும் எண்பதினாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள். நெபோலியன் குறித்ததைக் குறிப்பினுன்னி வழுவல செய்தற்கேற்ற அவ்வீரர்கள் நெபோலியனுக்காக உயிரையுந் தியாகம் செய்யத் தயாராயிருக்கின்றனர். அவர்களது உதவியால் நெபோலியன் இப்போதும் போருக்கெழுதல்கூடும்.

அலெக்—பிரபுவே! நிகழ்ந்தனவற்றை அறியாது பேசுகின்றீர். பாரிஸ் சட்டசபையில் "நெபோலியன் சிம்மாதனத்தினின்றும் நீக்கப்பட்டான்" என்ற தீர்மானம் ஒன்று நிறைவேறியது. புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டு அதற்குத் தாலிராண்டு என்பவன் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். தவிர, நெபோலியனுக்கு உதவியாயிருந்த மார்மண்டு என்னும் சேனைத்தலைவனும் இருபதாயிரம் வீரர்களுடன் நேசக்கட்சியினர் பக்கம் சேர்ந்துகொண்டான் மற்றச் சேனைத்தலைவர்களும் நெபோலியனை நீத்து எங்கள் பக்கம் சேர விரும்புகின்றனர்.



பவுண்டன்புளுவில் நெபோலியன் தனியாகச் சேனாபலமின்றிப் பகைவர் கையில் சிக்குண்டுள்ளான்.

கலேன்—அரசே! இனி வேறு வழியில்லை. நீரே கதி.

அலெக்—நெபோலியனுக்குப் படைப்பலம் இருந்த வரையிலும் பகைவர்கள் பயந்திருந்தனர். இப்போது, நெபோலியனது நிலைமை மாறிவிட்டது. இராஜ்ய சம்ரட்சகர் (Regent) விடயமாக விவாதம் நடந்தது. அப்பொழுது தாலிராண்டு அதனை எதிர்த்துப் போராடினான். பிரான்சு மாந்தர்கள் போரபன் அரசினையே விரும்புவதாகவும், சேனைத்தலைவர்களும் வீரர்களும் நெபோலியனைத் தனியே விடுத்துப் பகைவர்பால் திரண்டு வருவதே அதற்குப் போதுமான சான்றென்றும் தாலிராண்டு வாதாடினான். நெபோலியனுக்கு உதவிபுரிய எனக்கு அதிக விருப்பம் இருந்தும் நான் ஒருவன் மாத்திரம் யாது செய்யக்கூடும் என்பதை நீங்களே அறிந்துகொள்ளுங்கள்.

கலேன்—அந்தோ! நெபோலியன் வஞ்சிக்கப்பட்டான். பிரான்சு மாந்தர்களே நெபோலியனைப் பகைவர் கையில் கொடுத்தனர். இனிப் பேசியென் பயன்?

இச்சம்பாஷணை முடிந்தபின்னர் அலெக்ஸாந்தர் சபைக்குச் சென்று நெபோலியனது சாஸனத்தைப் படித்தான். பிரடரிக் வில்லியம், தாலிராண்டு, பர்னதாத்தி ஆகிய மூவரும் போரபன் வம்சத்தாரின் சார்பாகப் பெரிதும் வாதாடினார்கள். கடைசியாக, நெபோலியன் நிபந்தனையின்றி அரசாங்கத்தைத் துறக்கவேண்டுமென்றும், நெபோலியனது மனைவிக்காவது அல்லது மைந்தனுக்காவது பிரான்சு அரசாங்கத்தில் எத்தகைய உரிமையுமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தைச் செவியுற்ற கலேன்கோர்ட்டு உடனே புறப்பட்டு, பவுண்டன்புளு சென்று, நெபோலியனைக் கண்டு, நிகழ்ந்தவற்றை நிகழ்த்தினான். வல்லரசர்களின் தீர்மானத்தைச் செவியுற்ற நெபோலியன் எறெனக் கர்ச்சித்துக் கூறியதாவது:

"வஞ்சனைக்காரரின் உதவியால் பாரிஸ் நகர்க்குள் நுழைந்த பகைவர்கள் பிரான்சுக்குத் தலைவராயினரா? என்னைப் போன்றவன் கல்லறையில் கிடத்தப்படும் வரையிலும் பலவானே என்பதை அவ்வறிவிலிகள் உணர்ந்தாரில்லை. நாளையதினமே ஒரு லட்சம் வீரர்களுடன் சென்று எனது திறமையைக் காட்டுவேனாக. என்னுடன் சமாதான மாற்றப் பகைவர்களுக்கு மனமில்லை. நான் எழுதியனுப்பிய சாஸனத்தையும் பகைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இனிப் போருக்கெழுதலே என் ஆற்றலுக்கு உரியதாகும். போருக் கஞ்சுவேன் இல்லை, பயனற்ற வாழ்க்கை இருந்தென்ன, போயென்ன? இத்தகைய வாழ்க்கையை இனி நீடிக்கச் செய்யேன். ஆனால், மற்ற வீரர்களின் சம்மதத்தைப் பெற்ற பின்னரே அங்ஙனம் செய்ய விரும்புகின்றேன்."

அவ்வாறு சொல்லியபின் தன்னைச் சுற்றியிருந்த வீரர்களை அருகே யழைத்து, "வீரர்களே! நான் அனுப்பிய சாஸனத்தைப் பகைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனது மனைவியும் மைந்தனும்கூட அரசுரிமையிழந்து நாடு கடத்தல் வேண்டுமென்பதே பகைவர்களது எண்ணமாகும். நீங்கள் அதற்குச் சம்மதிக்கின்றீர்களா? ஆல்ப்ஸ் மலையைக் கடந்து இதாலியாவுக்குச் சென்று அங்கே ஒரு புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளேன். நமது உதவியைப் பிரான்சு தேசம் நாடும் வரையிலும் நாம் அங்கே இன்புற்று வாழக்கூடும். நீங்கள் எல்லோரும் என்னுடன் புறப்படச் சம்மதிக்கின்றீர்களா?" என்று சொன்னான்.

இச்சொற்பொழிவைக் கேட்டும் வீரர்கள் மறுமொழி கூறாது வாளாவிருந்தனர். அவர்களது விருப்பமின்மையை உணர்ந்த நெபோலியன் உடனே வேறொரு சாஸனத்தை எழுதிக் கலைன்கோர்ட்டுக் கையில் தந்தனன். அது பின்வருமாறு:

"ஐரோப்பாவின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் நெபோலியனே தடையாயிருக்கிறானென்று வல்லரசர்கள் விளம்



பப்படுத்துவதால் நானும் எனது வார்சுகளும் அரசாங்கத்தைத் துறக்கத் தீர்மானித்தோம். இதுவுந்தவிர, பிரான்சின் நன்மைக்காக எனது உயிரையுந் தியாகம் செய்யத் தயாராயிருக்கின்றேன்."

இச்சாஸனத்தை எடுத்துக்கொண்டு கலைன்கோர்ட்டு, பாரிஸ் சென்று நேசக்கட்சியினரிடம் கொடுத்தான். அதைப் படித்துப்பார்த்த வல்லரசர்கள் நெபோலியன்மீது இரக்கங்கொண்டனர். உடனே ஆலோசனைசபை கூடியது. பிரான்சு தேசத்துக்கு நெடுந்தூரத்திலுள்ள செண்ட் ஹெலினாவுக்கு நெபோலியனை அனுப்பவேண்டுமென்று போரபன் கட்சியினர் முனைந்து பேசினர். கார்சிகா, எல்பா முதலிய இடங்களும் பிரேரேபிக்கப்பட்டன. சீதோஷ்ண நிலைமையை முன்னிட்டு எல்பாவே நெபோலியனுக்கு ஏற்றவிடமென்று கலைன்கோர்ட்டுப் பரிந்து பேசினான். நெபோலியனை அவ்வளவு அருகே வைத்திருத்தல் அபாயகரமென்று போரபன் கட்சியினர் வாதாடினார்கள். ஆனால், அலெக்ஸாந்தர் கலைன்கோர்ட்டுக்கு உதவியாய்ப் பேசினமையால் எல்பாவே தக்கதென்று தீர்மானிக்கப்பட்டது. உடனே, உடன்படிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. நெபோலியனும், மேரியா லூயிஸாவும் முறையே சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி என்னும் பட்டத்தை ஆயுள்வரையிலும் வைத்துக்கொள்ளலாமெனவும், நெபோலியனுடைய வம்சத்தவர்கள் தத்தமக்குரிய பட்டங்களை ஆயுள்வரை வகித்துக்கொள்ளலாமெனவும் எல்பா தீவு நெபோலியனுக்கே சொந்தமானதெனவும், மேரியா லூயிஸாவுக்கும் அவளது வார்சுகளுக்கும் பார்மா, குஸ்தாவா, ப்ளேசென்ஷியா என்ற மூன்று ஊர்களும் ஜாகிராகக் கொடுக்கப்படவேண்டுமெனவும், நெபோலியனது தாயார், சகோதரர்கள், சகோதரிகள் முதலாயினோர்க்குப் போதுமான வருட வருமானங்கள் அளிக்க வேண்டுமெனவும், நெபோலியனது சொந்தப் பொருள்களெல்லாம் அரசாங்கத்துக்குச் சேரவேண்டுமெனவும், நெபோலியன் கப்பல் ஏறும் வரையில் அரசாங்க சேனைகள் பந்தோபஸ்துக்குப் போக வேண்டுமெனவும், நெபோலியன் தனது மெய்க்காப்புக்காக ஐந்

நூறு வீரர்கள் கொண்ட ஒரு சிறு படையை எல்பாவில் வைத்துக் கொள்ளலாமெனவும் அவ்வுடன்படிக்கையில் குறிக்கப்பட்டன.

இவ்வுடன்படிக்கையை எடுத்துக்கொண்டு கலைன்கோர்ட்டு, பாரிஸ் நகரினின்றும் புறப்பட்டுப் பவுண்டன்புளூவுக்குச் சென்று நெபோலியனைக்கண்டு அவ்வுடன்படிக்கையில் கையொப்பமிடுமாறு வேண்டினான். அதற்கு நெபோலியன், "எதையும் தீர விசாரித்தே செய்தல்வேண்டும். நீர் சென்று களைப்பாறுக" என்றனன்.

கலைன்கோர்ட்டு உடனே படுக்கையறை சென்று அயர்ந்து தூங்கினான். நள்ளிரவில் நெபோலியன் உடல் நலிவுற்றமையால் நித்திரையினின்றும் கலைன்கோர்ட்டு எழுப்பப்பட்டான். கலைன்கோர்ட்டு உடனே நெபோலியனது அறைக்குள் சென்றான். வயிற்றுவலியின் மிகுதியால் நெபோலியன் மிக்க துன்பமெய்திப் படுக்கையிற் பரண்டுகொண்டிருந்தான். அவனது நெற்றியில் வேர்வைத் துளிகள் காணப்பட்டன. தலைமயிர் நெற்றியில் படிந்து வேர்வையில் நனைந்திருந்தது. அவனது ஆழ்ந்த கண்களும் வெருண்ட பார்வையும் எல்லாருள்ளத்தையும் உருகச் செய்தன. வேதனை மிகுதியால் அலறிக்கொண்டிருந்தனன். ஒரு கைக்குட்டையை வாயிற் கவ்விப் பற்களால் நெறுநெறென்று கடித்துக் கொண்டிருந்தான். உலக வாழ்க்கையை வெறுத்து உயிர் துறக்கத் தயாராயிருந்தான். இந்த நிலைமையில் கலைன்கோர்ட்டைப் பார்த்து, 'என் ஆருயிர் நண்ப! நான் இறக்கின்றேன். என் மனைவியையும், மைந்தனையும் நும் ஆதரவில் விட்டுச்செல்கின்றேன். எனது களங்கமற்ற வாழ்க்கைக்கு நீரே சான்றாயிருப்பீராக. நான் இனி உயிர் வாழ்தல் வெட்ககரமானது" என்று சொன்னான். இதைச் செவியுற்ற அனைவரும் அழுது தேம்பினர். அங்கிருந்த வைத்தியர் தேத்தண்ணீர் தயாரித்து நெபோலியனுக்குக் கொடுத்தனர். நெபோலியனும் அதை அருந்தினான். அருந்திய சிறிது நேரத்திற்குள் வயிற்றுவலி நீங்கலும் நெபோலியன் சற்றுநேரம் அயர்ந்து தூங்கினான்.

நெபோலியன் காலையில் எழுந்து கலைன்கோர்ட்டை அழைத்து, "நண்பரே! நான் இன்னும் சிலகாலம் உயிர் வாழவேண்டுமென்பது இறைவன் ஆணைபோலும். சென்ற இரவு நான் இறவாமையே அதற்குச் சான்றாகும். அரசையும் இழந்தேன். அரசிளங்குமாரனாகப் பிறந்த என் அருமைப் புத்திரனையும் ஆண்டியாக்கினேன். எனினும், இவைகளைக் குறித்து நான் அதிகம் வருந்தவில்லை. மனிதரது செய்ந்நன்றி மறத்தலே எனது மனத்தைப் புண்படுத்தியதுமன்றி இல்வாழ்க்கையில் வெறுப்பையும் உண்டாக்கியது. மரணம் ஒன்றே இப்போது எனக்கு அமைதியைத் தரவல்லது. சென்ற இருபது ஆண்டுகளாக நான் பட்டதெல்லாம் வெறும் பாடாயது. நண்பரே! இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளேன். இதனையெடுத்துச் சென்று பகைவர்பால் தந்து என்னை விரைவில் நாடுகடத்த ஏற்பாடாற்றுக. நான் உடனே புறப்பட்டு எல்பா செல்ல விரும்புகின்றேன். பிரான்சு தேசத்தின் காற்று எனக்கு ஆற்றொணாததாகும் என்று நான் கனவிலும் கருதியதில்லை. பகைவர்களது வாளைக்காட்டிலும் நண்பர்களது நயவஞ்சனையே என்னைத் துன்புறுத்துகின்றது. என்னை வென்ற பகைவர்களுடன் சமாதானம் ஆற்றினேனேயன்றிப் பிரான்சு தேசத்தின் புதிய அரசாங்கத்துடன் அன்று என்பதையும், அப்புதிய அரசாங்கத்திலிருப்பவர்கள் வஞ்சகர்களும், வீணர்களும், செய்ந்நன்றி கொன்ற மக்களுமே என்பதையும் பகைவர்களுக்குக் கூறுக" என்று புகன்றனன். கலைன்கோர்ட்டு உடன்படிக்கைப் பத்திரத்தைப் பெற்றுப் பாரிஸ் சென்று பகைவர்பால் தந்தனன்.

நிற்க, மேரியா லூயிஸாவும் அவள் மைந்தனும் ப்ளாயிஸ் என்னுமிடத்தில் தங்கியிருந்தனர். நெபோலியன் நாடு துறந்து எல்பாவுக்குப் போக நேர்ந்ததை யறிந்த மேரியா லூயிஸா அளவிலாத் துன்பமெய்தி அல்லலுற்றனள். அரசவம்சத்திற் பிறந்து, செல்வக் குழந்தையாய் வளர்ந்து, மன்னனைமணந்து, அரசியாய் விளங்கி, எந்நாளும் இன்பமே நுகர்ந்து, இல்லறம் நடாத்திய லூயிஸா தனக்குத் திடீரென்று நேர்ந்த துன்பத்தினை எங்ஙனம் சகிப்பாள். எனினும், தன் துயரினைக் கருதினாளில்லை. கணவ

ரின் நிலைமையே அவளைப் பெரிதும் வருத்தியது. கணவருகிருந்து குற்றேவல் புரிய விரும்பினாள். ஆனால், கணவரிடம் செல்லற்குத் தக்க துணையின்றித் தவித்தனள். அவ்வமையத்தில், மேரியா லூயிஸாவை வியன்னாவுக்கு அழைத்துச் செல்லும்படி ஒரு சிறிய படையை வல்லரசர்கள் அனுப்பினார்கள். அவ்வாறே, லூயிஸாவும் அவள் மைந்தனும் வியன்னாவுக்குக் கொண்டுபோகப் பட்டனர்.

எப்ரல் மாதம் 20-ம் தேதி நெபோலியன் எல்பாவுக்குப் புறப்படவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டுச் சகல ஏற்பாடுகளும் முடிந்தன. பிறகு, கலைன்கோர்ட்டு, பாரிஸ் நகரினின்றும் புறப்பட்டு நெபோலியனிடம் சென்று, "ஐயா! நாளையதினம் தாங்கள் எல்பாவுக்குப் புறப்படற்குரிய சகல ஏற்பாடுகளும் முடிவுற்றன" என்று தாழ்ந்த குரலில் துக்கத்துடன் இயம்பினான். அதற்கு,

நெபோ—நண்பரே! உம்மை எவ்வாறு பிரிவேன்?

கலைன்—ஐயா! நானும் உம்முடன் வருவேன். பிரான்சு தேசத்தின்மீது எனக்கும் வெறுப்பு உண்டாகிவிட்டது.

நெபோ—அது சரியன்று. நீவிர் பிரான்சினின்றும் எகுதல் தக்கதன்று. நீர் பிரான்சுக்குச் செய்யவேண்டிய உதவிகள் இன்னும் பலவுள. எனது குடும்பத்தாரையும், என்னிடம் என்றும் உண்மையோடிருந்த பணியாளர்களையும் யாரே பாதுகாப்பவர்? தவிர, நமக்கு உள்ளன்புடன் உதவிபுரிந்த போலந்து தேசத்து வீரர்களின் நன்மையைக் கவனிப்பவர் யார்? எனைக் குறித்து நமக்குக் கவலைவேண்டாம். இன்னும் சில நாட்களில் நான் எல்பாவுக்கு அரசனாக விளங்குவேன். பிரான்சு தேசத்திற்கு அநேக நன்மைகளைச் செய்ய நினைத்தேன். ஆனால், கால வித்தியாசத்தால் அஃது கனவாய் முடிந்தது. பிரான்சு மக்களுக்குச் சகித்தற்றன்மை என்பது கிடையாது. சென்ற ஈரெட்டாண்டுகளாகப் பிரான்சு வீரர்கள் வெற்றியே பெற்றனர். இவ்வாண்டொன்றில் நிகழ்ந்த தோல்விக் காற்றாது மனமுடைந்தனர்.



பகைவர்கள் எனக்குக் கொடுமை புரிகின்றனர். மனைவியையும் மைந்தனையும் என்னிடமிருந்து பிரித்தனர். ஒரு மன்னனது மனைவியையும் மைந்தனையும் பிரித்து வைக்கும்படி எந்த அறநெறியும் கூறிற்றில்லை. கடவுளால் கூட்டப்பட்ட எங்களைப் பிரித்தற்கு எந்த அநாகரீகச் சட்டம் அவர்களுக்கு இடங்கொடுத்ததோ அறியேன். சரித்திரமோ என்னைக் குறைகூறாது. நெபோலியன் வெற்றியுற்ற காலங்களில் பகைவர்பால் கருணையையும் அன்பையும் காட்டினான்; ஆனால் தோல்வியுற்ற காலத்தில் அவனைப் பகைவர்கள் கொடுமையுடனும், மரியாதையின்றியும் நடத்தினார்களென்று உலக சரித்திரமாவது உண்மையைக் கூறாதா?

கலைன்—ஐயா! இவ்வநியாயப் பிரிவினை ஒழித்தற்கு என்னாலாயதைச் செய்வேன். ஆஸ்டிரிய மன்னனைக் கண்டு பேசுவேன். நும் மனைவியும் நும்முடன் வசித்தலையே விரும்புமாகலான் நம்பிக்கையுடனிருங்கள்.

நெபோ—நன்று சொன்னீர். என் மனைவி என்னை முழுவன்புடன் நேசிக்கின்றனள். தந்தையின் அரண்மனையில் உறைவதைக் காட்டினும் என்னுடன் வசித்தலையே அவள் விரும்புவாள். என் மனைவியும் மைந்தனும் என்னுடன் வசிப்பின் எல்பா தீவிலும் இன்புற்று வாழ்வேன். நண்ப! நேரமாயிற்று. நாம் பிரிவோமாக.

இருவரும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனஞ் செய்து கண்கள் நீர்மல்கத் துயருடன் பிரிந்தனர்.

எப்ரல் மாதம் 20-ம் தேதி கதிரவன் கீழ்த்திசை தோன்றினான். காலை முழுவதும் நெபோலியன் தனது அறையில் தனியே யிருந்தனன். மணி பன்னிரண்டடித்தது. வல்லரசர்களால் அனுப்பப்பட்ட பந்தோபஸ்து சேனையும், நெபோலியனது மெய்க்காப்புப் படையும் வந்து சேர்ந்தன. எங்கும் நிசப்தமே நிலவியது. எல்லோர் முகத்திலும் துக்கக்குறியே காணப்பட்

டது. நெபோலியன் தன் அறையினின்றும் வெளிப்போந்து, எல்லோரையும் பார்த்து,

"சேனைத்தலைவர்களே! இராணுவ உத்தியோகஸ்தர்களே! என் மெய்க்காப்பு வீரர்களே! நகர மாந்தர்களே! நான் போகிறேன். சென்ற இருபத்தைந்தாண்டுகளாக நீவிர் நன்னெறி வழுவாது புகழையே ஈட்டினீர். என் வாழ்விலும் தாழ்விலும் உண்மையோடிருந்தீர். ஐரோப்பா முழுவதும் உம்மை எதிர்த்தும் வெற்றியே பெற்றீர்கள். இப்போது கால வித்தியாசத்தால் இராஜ்யத்தைத் துறந்து நான் எல்பாவுக்குப் போகிறேன். தேசத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசனிடம் நீங்கள் உண்மையாகவும் உள்ளன்புடனும் நடந்துகொள்வீர்களாக. இதுவே எனது கட்டளையும் வேண்டுகோளுமாவன. பிரான்சு தேசத்தின் சுகவாழ்வே என் வாழ்க்கையின் நோக்கமாகும். எனக்காக நீங்கள் துயரப்படவேண்டாம். நீங்களெல்லாம் இன்புற்றிருக்கும் வரையில் நானும் இன்புற்று வாழ்வேன். என் மக்களே! நான் போகிறேன். விடை கொடுங்கள். உம்மைத் தனித்தனியே ஆலிங்கனஞ் செய்ய விரும்புகிறேன். அஃதியலாதாகையால் நமது சேனைத்தலைவரையும், நமது கழுகுக் கொடியையும் ஒரு முறை ஆலிங்கனம் செய்த பின்னர் நான் போய் வருவேன்" என்ற சொற்பொழிவு நிகழ்த்தினன்.

பிறகு, சேனைத்தலைவனையும், கழுகுக் கொடியையும் தனித்தனியே ஆலிங்கனம் செய்த பின்னர் வண்டியிலேறி ஆசனத்தமர்ந்து இரண்டு கண்களையும் மூடிக்கொண்டான். பிரான்சு தேசத்தின் அருந்தனமாகிய நெபோலியனை ஏற்றிக்கொண்டு வண்டியும் நகர்ந்தது. வீரர்கள் கண்ணீர் வடித்துக் கதறினர்கள்.

முதிர்தரு தவமுடை முனிவர் ஆயினும்
பொதுவறு திருவொடு பொலிவர் ஆயினும்
மதியினர் ஆயினும் வலியர் ஆயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்.

—கந்த புராணம்.

# அத்தியாயம்—13

## எல்பா வாசமும் பாரிஸ் பிரவேசமும்

நெபோலியன் எழுநாள் பிரயாணம் செய்தபின் பிரிஜஸ் என்னும் துறைமுகம் சேர்ந்தான். நெபோலியன் ஜோஸப்பைனுக்கு அன்று எழுதிய கடிதமாவது:

"அன்பிற்குரிய ஜோஸப்பைன்! நான் முன்பு எழுதிய நிருபம் உனக்குச் சேர்ந்திராதென வெண்ணுகிறேன். பகைமை நீங்கிச் சமாதானம் முடிவுபெற்றமையால் இக்கடிதமேனும் உனக்குக் கிடைக்குமென நம்புகிறேன். ஒரு பெரிய பாரம் நீங்கியமையால் நான் இப்பொழுது கவலையற்றிருக்கின்றேன். எனது தாழ்வு மிகவும் பெரியதே யெனினும் அஃதும் ஓர் நன்மைக்கே என்று எண்ணுகிறேன். இதுவரையிலும் கத்தி பிடித்துக் காலத்தைப் போக்கினேன். இனிப் பேனா பிடித்துக் காலத்தைக் கழிக்கக் கருதியுள்ளேன். என் சரிதம் வெகு விசித்திரமாயிருக்கும். எனது ஆற்றலின் ஏக தேசத்தையே உலகம் இதுவரையிலும் கண்டுளது. எனது முழு வன்மையையும் உலகோர்க்கு இனிக் காட்டுவேனாக. இலட்சக் கணக்கான மக்களுக்கு நான் நன்மையே செய்தேன். ஆனால், அவர்களெல்லாம் எனக்கு இறுதியில் வஞ்சனையே இழைத்தனர். அப்படியிருந்தும் நான் எவ்வாறு கவலையின்றி இருக்கின்றேனோ அவ்வாறே நீயும் இருப்பாயாக. உன்னை நான் மறவாதது போலவே என்னையும் நீ மறவாதே. உனது பதிலை எல்பாவில் எதிர்பார்ப்பேன்."

இந்நிருபத்தை அனுப்பிய மறுநாள் (ஏப்ரல் மாதம் 28-ம் தேதி) நெபோலியன் கப்பலேறி எல்பாவுக்குப் புறப்பட்டான். ஆறுநாள் பிரயாணம் செய்தபின்னர் நெபோலியன் எல்பாதீவில்

இறங்கினான். உடனே ஒரு குதிரை மீதேறித் தன் தேயத்தைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினான். ஓர் உயர்ந்த குன்றின்மேலேறி எல்பாதீவின் அமைப்பை முற்றிலுமுணர்ந்த பின்னர், "எனது இராஜ்யம் உண்மையில் மிகச் சிறியதே" என்று புகன்றனன். எல்பாதீவு பிரான்சு தேசக் கடற்கரைக்குச் சுமார் இருநூறு மைல் தூரத்திலுள்ளது. சுமார் பதினாறு மைல் நீளமும், பத்து மைல் அகலமுமுள்ள அத்தீவில் பதின்மூன்றாயிரம் ஜனங்கள் வசித்துவந்தனர்.

அவ்வூரினர் நெபோலியனை அன்புடன் வரவேற்று ஆரவாரித்தனர். அவ்வூர் விவசாயிகள் நெபோலியனைக் கண்டதும் அவன் அடிகளில் வீழ்ந்து பணிந்து நின்றனர். ஜனங்களுக்குப் போதுமான கல்வியில்லாமையைக் கண்ட நெபோலியன் கல்விச் சாலைகளை உடனே உண்டாக்கத் தீர்மானித்தான். இரண்டு மூன்று நாட்களுக்குள் அவ்வூரிலுள்ள சுரங்கங்கள், காடுகள், கோட்டைகள், திராட்சைத் தோட்டங்கள் முதலிய பல விடங்களையும் நெபோலியன் நேரிற் சென்று பரிசோதித்தான். அச்சிற்றூர்க்கு அத்தியாவசியமான பல சீர்திருத்தங்களையும் உடனே உண்டாக்கினான். புதிய சாலைவழிகளும், வைத்திய சாலைகளும், கால்வாய்களும், உப்பளக் கட்டடங்களும் விரைவில் ஏற்படுத்தப்பட்டன.

நிற்க, நெபோலியனது நிருபத்தைக்கண்ட ஜோஸப்பைன் பெரிதுந் துயருற்று நிலத்தை நீராட்டினாள். உடனே எல்பா சென்று நெபோலியனுக்குக் குற்றேவல் செய்வதே தனது கடமையெனத் தீர்மானித்தாள். ஆயினும், மேரியா லூயிஸாவின் மனப்பான்மையை நன்குணர்ந்த ஜோஸப்பைன் சற்று நிதானித்துப் பின்வரும் நிருபத்தை நெபோலியனுக்கு அனுப்பினாள்.

"அரசே! உமக்கு நேர்ந்த எதிர்பாராத துயரத்தினால் எனது அன்பு சிறிதேனும் குறைவுறாமல் முன்னினும் பன்மடங்காயதை உமக்குத் தெரிவிக்கிறேன். பிரான்சினின்று புறப்பட்டு உம்மிடம் போந்து உம்மால் உய்வுபெற்ற என் வாழ்க்கையின் மிகுதியை உமக்கே அர்ப்பணம் செய்யக் கருதினேன். ஆனால், ஒரே ஒரு எண்ணம் என்னைத் தடை செய்கின்றது. அஃது யாதென நீரே அறியக்கூடும். இத்தருணத்தில் உம்முடனிருந்து ஊழியஞ் செய்யக்கூடியவள் என்னையன்றி வேறெவருமில்லையென நீர் எனக்குத் தெரிவிப்பின் நான் உடனே புறப்பட்டு எல்பா போந்து உமக்குத் தொண்டாற்றி, உம்மை மகிழ்வித்து அதனால் நானும் மகிழ்வுறுவேன். ஒரு வார்த்தை சொல்லுங்கள். நான் உடனே புறப்படுவேன். உள்ளன்பினைக் காட்டுவனுக்குச் செய்வன வார்த்தைகளல்ல, செய்கைகளே யாகும். அச்செய்கைக்கும் உமது சம்மதமே அவசியமாகும்."



இந்நிருபத்தை அனுப்பிய சில தினங்களுக்குள் ஜோஸப்பைன் துயரமிகுதியால் நோயுற்றனள். மரணகாலம் நெருங்கியது. தனது மக்களான யூஜினையும், ஹார்டன்ஸையும் அருகே யழைத்து, "அருமை மக்களே! பிரான்சு தேசத்தின் இன்பத்தையே என்றும் நான் விரும்பினேன். அதற்காக என்னாலாயவைகளை என்றும் யான் செய்து வந்தேன். நெபோலியனது முதல் மனைவியாகிய நான் எக்காலத்தும் எவர்க்கும் எவ்விதத் தீங்கும் இழைத்திலேன். இறக்குந் தறுவாயில் இந்நினைவு ஒன்றே எனக்குச் சாந்தத்தையும் அமைதியையும் அளிக்கின்றது. அருமை மக்களே! என் கணவனது உருவப் படத்தைச் சற்று எடுத்து வருக" என்றனள். உடனே, நெபோலியனது உருவப் படம் கொண்டுவரப்பட்டது. ஜோஸப்பைன் அப்படத்தைக் கையிலேந்தி, நெடுநேரம் அன்புடன் உற்று நோக்கியபின் அதனை மார்புறவணைத்துச் சொல்லியதாவது—

"அறக்கடவுளே! நெபோலியன் இவ்வுலகில் உயிருடன் இருக்கும் வரையில் அவரைப் பாதுகாக்க வேண்டுகின்றேன். பிரான்சு தேசத்தில் பல நன்மைகளையும் சீர்திருத்தங்களையும் செய்து அதனைப் பிரதேசங்கட்கு வழிகாட்டியாகச் செய்யவேண்

டும் என்பதே அவரது வாழ்க்கையின் முக்கிய நோக்கமாயிருந்தது. இஃது நீர் அறியாததன்றே? ஆதலால், எனது கடைசி பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டுகின்றேன்.' எனது அருமை மக்களையும் என் ஆருயிர் நெபோலியனையும் விட்டுச் செல்லுகிறேன். நீரே அவர்களுக்குக் கதி."

இவ்வாறு சொல்லிய பின்னர் உருவப் படத்தை மீண்டுங் கையிலேந்தி, உற்று நோக்கி, "எல்பா—நெபோலியன்" என்ற வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே மே மாதம் 29-ம் தேதியன்று ஜோஸப்பைன் உயிர் துறந்தனள்.

நெபோலியனால் எல்பாதீவுக்கு ஒரு மகிமை உண்டாயிற்று. பல தேசங்களினின்றும் ஜனங்கள் திரள் திரளாய் நெபோலியனைக் காணச் சென்றனர். அவர்களுடன் நெபோலியன் பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசி அவர்களைக் களிக்கச் செய்தனன். நெபோலியனது அரிய புத்தியையும் உயர்ந்த குணத்தையுங் கண்டு ஜனங்கள் வியப்படைந்தனர். எல்பாதீவு ஒரு பெரிய யாத்திரை ஸ்தலமாகக் கருதப்பட்டது. நெபோலியன் அமைதியுடன் இருந்தான். எல்லோரிடத்தும் இனிமையுடன் பேசினான். தனக்குத் தீங்கிழைத்தவர்களைக் குறித்தும் நெபோலியன் பெருமையாகவே பேசினான். தனது காலத்தை எழுதுவதிலும் படிப்பதிலும் பயன்படுத்தினான். தனது துயரத்தையேனும் துரதிர்ஷ்டத்தையேனும் ஒருவரிடத்தும் வாய்விட்டுச் சொன்னானில்லை.

இப்படியிருக்க, பிரான்சு தேசத்திற்கு அரசனாக நியமிக்கப்பட்ட பதினெட்டாம் லூயி மன்னன் ஜனங்களைத் துன்புறுத்த ஆரம்பித்தான். போர்பன் குடும்பத்தார்க்குப் பெரிதும் கடமைப்பட்டிருந்த சிலர் தவிர மற்றெல்லோரும் புதிய அரசாங்கத்தில் வெறுப்புற்றனர். லூயி மன்னன் அறுபது வயது கொண்ட வயோதிகன். அவன் எப்போதும் உண்பதும் உறங்குவதுமாகவே யிருந்தான். பருத்துப் பெருத்திருந்தமையால் நடக்கவும் சக்தியற்றிருந்தான். அவனது உடுக்கை, பார்ப்பவர்க்கு நகைப்



பைத் தரத்தக்கதாயிருந்தது. அவனது தலைமயிர் நன்கு அலங்கரிக்கப்பட்டுச் செயற்கைச் சுருளுடன் நெற்றியில் படிந்திருந்தது. நெபோலியனால் நியமிக்கப்பட்ட படைவீரர்கள் எல்லாரையும் வேலையினின்று நீக்கினான். வாக்காளர்களின் (Voters) எண்ணிக்கையைப் பெரிதும் குறைத்தான். நெபோலியன் காலத்தில் ஐம்பது லட்சம் ஜனங்கள் வாக்குரிமை பெற்றிருந்தனர்; ஆனால் லூயி காலத்தில் எட்டு லட்சம் வாக்காளர்களே இருந்தனர். நெபோலியனால் கைப்பற்றப்பட்ட பல பிரதேசங்கள் நேசக் கட்சியினர்க்குக் கொடுக்கப்பட்டதால் ஒன்றரைக் கோடி ஜனங்கள் பிரான்சு ஆட்சியினின்றும் ஒரு நொடியில் நீக்கப்பட்டனர். பன்னீராயிரம் பீரங்கிகளும், பற்பல போர்க்கருவிகளும் வல்லரசர்களுக்கு லூயி மன்னனால் வழங்கப்பட்டன. ஆதலால், பிரான்சு தேசம், போர்வீரர்களும், போர்க்கருவிகளும் அற்ற நாடாயிற்று. லூயி மன்னன் தனது சிம்மாசனத்தையும் சுயநலத்தையுமே பெரிதெனக் கருதினானேயன்றி தேசத்தின் நலத்தையும், பலத்தையும் சிறிதும் கருதினானில்லை. இன்னோரன்ன பல காரணங்களால் லூயி மன்னன் மீது ஜனங்கள் மிக்க வெறுப்புக்கொண்டு நெபோலியனையே மீண்டும் அரசனாக்க விரும்பினர்.

ஜனங்களது அபிப்பிராயத்தை யறிந்த அலெக்ஸாந்தர் லூயிமன்னற்கு எழுதிய நிருபமாவது:

"நண்பரே! அரசுரிமை யென்பது இறைவனால் அளிக்கப்பட்டவோர் உரிமை யென்னும் தத்துவத்தைப் பிரான்சுமாந்தர்கள் அங்கீகரிக்க மறுக்கின்றனர். ஆதலால், பொது ஜனங்களுடைய நம்பிக்கையாலும் ஆதரவாலுமே எவனும் அரசுரிமையைப் பெறுதல்வேண்டும். சட்ட சபையினர்களால் நீரும் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்படுதலே ஒழுங்கான முறையாகும். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக நடைபெற்றுவந்த ஜனாதிபத்திய அரசினை நீவிர் அங்கீகரித்தல் அவசியமாகும். அதனை நீர் நிராகரிக்கின் பிரான்சு மாந்தர்களது மனதைப் புண்படுத்தியவராவீர்."

இந்நிருபத்துக்கு லூயி எழுதிய பதில் கடிதமாவது,

"நண்பரே! பிரான்சு தேசத்தின் அரசுரிமையில் சட்டசபையினர்க்காவது ஜனங்களுக்காவது ஒருவித அதிகாரமும் கிடையாது. இம்மகுடம் பிரன்சு மக்களுக்குச் சொந்தமன்று; எனது மரபினர்க்கே உரியதொன்றும். என் உடன் பிறந்தவர்கள் இறந்தமையால் அரசுரிமை எனக்குக் கிடைத்தது. இறைவன் ஆணையாலும், பரம்பரைப் பாத்தியத்தாலும் எனக்குக் கிடைத்த இவ்வரசுரிமையில் பிரன்சு மாந்தர்களுக்கு ஒருவித அதிகாரமுமில்லையென மீண்டும் வற்புறுத்துகின்றேன். எந்த உரிமையைக் கொண்டு கோடிக்கணக்கான ஜனங்களைத் தாங்கள் அரசாண்டு வருகின்றீரோ அந்த உரிமையைக் கொண்டே நானும் அரசுபுரிகின்றேன்."

பொது ஜனங்களை லூயி மன்னவன் அலட்சியம் செய்ததுமன்றி அவர்களைத் துன்புறுத்தியும் வந்தமையால் பிரன்சு மக்களுக்கு அதிருப்தியும் அமைதியின்மையும் உண்டாயின. பிரான்சு தேசத்தில் மீண்டும் ஓர் புரட்சி உண்டாகும்போல் தோன்றியது. லூயி மன்னனும் அவனது நண்பர்களும் திகில் கொண்டனர். நெபோலியனை எல்பாவினின்று வெளியேற்றி அதிக தூரத்திலுள்ள ஓர் இடத்துக்குக் கொண்டுபோதலே சிறந்ததென லூயி மன்னன் கருதினான். நேசக்கட்சியினரும் நெபோலியனைச் செண்ட் ஹெலினாவுக்கு அனுப்பும் விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்வதாக நாடெங்கும் வதந்தி உலாவியது.

இப்படியிருக்க, எல்பாதீவில் நெபோலியனுக்குப் பண நெருக்கடி நேர்ந்தது. அவன் கொண்டுவந்த பணமுழுதும் செலவழிந்தது. பவுண்டன் புளூவின் உடன்படிக்கையின்படி நெபோலியனுக்குச் சேரவேண்டிய தொகையை லூயி மன்னன் அனுப்பாமலிருந்தான். நேசக்கட்சியினர் அதைக் குறித்து லூயி மன்னனைக் கண்டித்தும் பயனின்றி முடிந்தது. நெபோலியன் எல்பாவின் சீர்திருத்த வேலைகளை உடனே நிறுத்திவிட்டுத் தன் செலவைக் குறைத்துச் சிக்கனத்தைக் கைக்கொண்டான். புத்த



கங்கள், பத்திரிகைகள் முதலியனவற்றைப் படிப்பதிலும் தன்னைப் பார்க்க வந்தவர்களுடன் சம்பாஷிப்பதிலும் நெபோலியன் காலத்தைக் கழித்தான். பிரான்சு தேசம் சீர்குலைந்து இருந்ததையும், போரபன் ஆட்சியில் ஜனங்கள் வெறுப்புற்றதையும், தன்னை எல்பாவினின்று வெளியேற்றிச் செண்ட் ஹெலினாவுக்குக் கொண்டுபோக வல்லரசர்கள் ஆலோசனை செய்வதையும், பிரன்சு மாந்தர்கள் தன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததையும் நண்பர்கள் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் நெபோலியன் செவ்வனே உணர்ந்தான். அத்தருணத்தில் நெபோலியனது நண்பனொருவன் மாறுவேடம் பூண்டு எல்பாவுக்குச் சென்று நெபோலியனைக் கண்டான். அவர்களிருவர்க்கும் நடந்த சம்பாஷணை கீழ் வருமாறு:—

நெபோலியன்—பாரிஸினின்று இன்றுதான் வந்தீர்களா? பாரிஸில் விசேடம் யாது? என் நண்பர்களிடமிருந்து கடிதங்கள் கொண்டுவந்தீர்களா?

நண்பன்—ஐயா! இல்லை.

நெபோலியன்—அப்படியா? அவர்களும் என்னை மறந்தனர்போலும்.

நண்பன்—பிரன்சு மக்கள் உம்மை மறத்தல் கூடுமோ? அளவிலா உள்ளன்புடன் அவர்கள் உம்மைப் போற்றுகின்றனர்.

நெபோலியன்—எனைக்குறித்துப் பாரிஸ் நகரில் அநேக கட்டுக்கதைகளும் பொய்யுரைகளும் புனையப்படுகின்றன. என்னைச் செண்ட் ஹெலினாவுக்குக் கொண்டுபோகப் பகைவர்கள் தீர்மானித்ததாக வதந்தியும் உலவுகின்றது. நிராயுதபாணியாயும், வேறெவர்க்கும் தீங்கிழைக்காமலும் தனியேயிருக்கும் என்மீது படையெடுத்தல் வல்லரசர்களுக்கு அடுத்ததன்று. நல்லனவற்றில் விருப்பமும் அல்லனவற்றில் வெறுப்புங்கொண்ட அலெக்ஸாந்தர் அத்தகைய இழிய செயலுக்கிணங்காரென நம்புகின்றேன். பவுண்டன்புளூ உடன்படிக்கையின்படி எல்பாதீவு எனக்குச் சொந்த

மானது. என்னுடைய வீட்டில் நான் இருக்கின்றேன். வெளியே சென்று பிறருடன் சண்டையிடாமல் நான் அமைதியுடனிருக்கும்போது பிறனொருவன் என்னைத் தாக்கித் துன்புறுத்தல் எங்ஙனம் நீதியாகும்? போரபன் ஆட்சியைக் குறித்துப் பிரன்சு மக்களின் அபிப்பிராயம் யாது?

நண்பன்—பிரன்சு மக்களின் தேவைகளை லூயி மன்னன் அறியவில்லை. அதிருப்தியுடையோரின் எண்ணிக்கை நாடோறும் பெருகுகின்றது.

நெபோலியன்—போரபன் வம்சத்தினர் சற்றேனுந் திருந்தினரில்லை. அவர்கள் தங்கள் தீய குணங்களை மறக்கவுமில்லை; நற்குணங்களைக் கற்கவுமில்லை. லூயி மன்னன் செய்தனவெல்லாம் பிழைகளே. புரட்சிக்குப் பின்னர்ப் பிரான்சுக்குச் சொந்தமான பிரதேசங்களையும், ஆயிரக்கணக்கான பீரங்கிகளையும், ஏராளமான போர்க் கருவிகளையும் லூயி மன்னன் வல்லரசர்களுக் கீந்ததை எவர்தான் அங்கீகரிக்கக்கூடும். குருதி தாகங்கொண்ட வெறியனென்றும், பேராசைப் பேயனென்றும் பகைவர்கள் என்னைத் தூற்றினர். உமது நாயைக் கொல்ல நீர் பிரியப்படின் அதற்கு வெறிநாய் என்று பெயரிட்டு அதனைக் கொல்லுகின்றீர் அல்லவா? அவ்வாறே, என்னைக் கொல்லவெண்ணிய பகைவர்கள் எனக்கு வெறியன் என்ற பட்டமும் தந்தனர். ஆனால் நாளடைவில் உலகோர்க்கு உண்மை விளங்காமற் போகாது. குருதி தாகமும், இரக்கமின்மையும், பேராசையும் என்னிடம் இருந்தனவா அல்லது பகைவரிடம் இருந்தனவா என்பதை உலகம் இனியாவது அறியுமென்பது திண்ணம். எனது வீரர்கள் எனைக் குறித்து யாது கூறுகின்றனர்?

நண்பன்—பிரன்சு வீரர்கள் உம்மை உள்ளன்புடன் நேசிக்கின்றனர்.

நெபோலியன்—(புன்சிரிப்புடன்) வீரர்கள் என்னை இப்பொழுதும் நேசிக்கின்றனரா?



நண்பன்—முன்னினும் பன்முறை யதிகமாய் நேசிக்கின்றனர். வஞ்சனையும் நம்பிக்கைத் துரோகமும், செய்க்நன்றி கொன்றமையுமே உமது தோல்விக்குக் காரணமாயினவென்று அவர்கள் துயருறுகின்றனர்.

நெபோலியன்—அவர்கள் சொல்லுவது சரி. எனவே, போரபன் ஆட்சியில் பிரபுக்களும், மதகுருக்களுமே திருப்தி பெற்றாரென்றும், மாந்தர்களனைவரும் அதிருப்தி யுற்றாரெனவும், இராணுவ வீரர்களும் பராமுகமாயினரென்றும், அரசனிடத்து ஜனங்களுக்கு அன்பும் இல்லை, பயமுமில்லையென்றும் நான் உணர்ந்தேன். ஆனால், இஃது எவ்வாறு முடியுமென்பதை அறிகிலேன். மற்றொரு புரட்சி ஏற்படுமா?

நண்பன்—அதிருப்தியும் அமைதியின்மையும் அதிகமாயின. ஒரு சிறிய காரணத்தானும் பெரியதோர் குழப்பம் ஏற்படலாம். அக்குழப்பம் இன்றே நேரினும் அதிசயம் அன்று.

நெபோலியன்—மீண்டும் குழப்பம் உண்டாயின், லூயி மன்னன் நாடு கடத்தப்பட்டுக் குடியாசு ஸ்தாபிக்கப்படும் அன்றோ?

நண்பன்—குடியரசினை ஜனங்கள் விரும்பவில்லை. ஆனால், ஒரு இராஜ சம்ரக்ஷகனை (Regent) நியமிப்பார்கள்போலும்.

நெபோலியன்—இராஜ சம்ரட்சகனா? நான் இன்னும் இறக்கவில்லையே? நான் உயிருடன் இருப்பதை ஜனங்கள் மறந்து விட்டனரா?

நண்பன்—தாங்கள் ஊரில்லாமையே அதற்குக் காரணமாகும்.

நெபோலியன்—ஊரிலில்லாவிடின் என்ன? இரண்டு நாட்களில் நான் பிரான்சுக்குத் திரும்பி வருதல்கூடும். நான் திரும்பி வந்தால் நலமுண்டாகுமா?

நண்பன்—அதற்கு என்ன சந்தேகம்.

நெபோலியன்—அப்படியாயின், நானூறு சிப்பாய்களுடன் புறப்பட்டுப் பிரான்சுக்குச் செல்லத் தீர்மானித்தேன். அஃது அபாயகரமானதேயெனினும் என்னால் செய்யற்பாலதேயாகும். எனது சுகவாழ்வையும், இன்பத்தையும், இரத்தத்தையும், உயிரையும் பிரான்சு தேசத்துக்குத் தியாகம் செய்யத் தயாராயுள்ளேன். நான் புறப்படும் நாள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. நீர் பிரான்சு சென்று, என் தீர்மானத்தை நண்பர்களுக்குத் தெரிவிப்பீராக. ஜோஸப்பைன் இறந்ததைக் குறித்துப் பிரான்சு மக்கள் துயருற்றனரா?

நண்பன்—பிரான்சு தேச முழுதும் அவ்வம்மையின் மரணத்தைக் குறித்துத் துயருற்றது. அவ்வம்மையார்மீது பிரான்சு மக்கள் வைத்திருந்த அன்புக்கும், மரியாதைக்கும் அளவேயில்லையெனினும் மிகையன்று.

நெபோலியன்—நன்று சொன்னீர். ஜோஸப்பைன், நல்ல உத்தமி; கற்பினுக்கு அணியே போன்றவள்; பிரான்சு மக்களின் அன்பிற்குரியவள்; அறிவிலும், அமைதியிலும் நிகரற்றவள். அவளது மரணத்தைக் கேள்வியுற்ற நாள்தான் எனது வாழ்க்கையில் அதிக துக்கமான நாளாகும்.

மேற்குறித்த சம்பாஷணை நடந்த சில தினங்கட்குப் பின்னர், அதாவது 1815-ம் வருஷம், பிப்ரவரி மாதம் 27-ம் தேதியன்று நெபோலியன் நானூறு சிப்பாய்களுடன் கப்பலேறிப் பிரான்சுக்குப் புறப்பட்டான். எல்பாதீவு மறைந்த பின்னர், நெபோலியன் தன் சிப்பாய்களையழைத்துப் பிரான்சுக்குப் போவதாகத் தெரிவித்தான். எல்லோரும் எல்லையிலா உவகையெய்தி ஆரவாரித்தனர். ஒவ்வொருவரும் தத்தம் ஆடைகளையும், ஆயுதங்களையும் எழில்பெறத் திருத்தினர். அன்றிரவு எழுதத் தெரிந்த பலபேர்களையு மழைத்து, ஆசனத்தமர்த்தி, தான் சொல்வனவற்றை எழுதும்படி நெபோலியன் கட்டளையிட்டான். நெபோ-



லியன் உலாவிக்கொண்டே பின்வரும் விளம்பரங்களைப் பிரசங்கித்தான். சிப்பாய்களும் அவற்றை எழுதத் தொடங்கினர்.

விளம்பரம் 1—(பிரன்சு வீரர்களுக்கு)

"இராணுவ வீரர்களே! பகைவர்களால் நாம் ஜெயிக்கப்படவில்லை. நம்மவர்களே நமது தேசத்தையும், அரசாங்கத்தையும், நம்மையும் வஞ்சித்துப் பகைவர்க்குக் காட்டிக் கொடுத்தனர். அவர்களாற்றான் போரபன் வம்சத்தார் அரச பதவியைப் பெற்றனர். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக நமது பகைவர்களைத் தூண்டிவிட்டுத் தேசத்துக்கு விரோதமாகப் போர் புரிந்து வந்த போரபன் வம்சத்தினரையா பிரான்சு சிம்மாதனத்தில் இருக்கச் செய்வது? நமது பழைய வெற்றிகளையெல்லாம் அவர்கள் இகழ்ந்துரைக்கின்றனர். உலகோர் நம்மீது வெறுப்படையும்படி நம்மைக் குறித்துப் பல கட்டுக்கதைகளையும், பொய்மொழிகளையும் புனைந்துரைக்கின்றனர். அவர்களை இனியும் ஆட்சிபுரிய விடுவோமாயின் நமது வெற்றியும், புகழும், கீர்த்தியும் என்னாகும் என்பதை நீங்களே உணர்வீர்களாக.

வீரர்களே! உமது துன்பங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்தேன். உமது துன்பங்களையும், குறைகளையும் நேரிற் பார்த்து விலக்குதற்கே அநேக இடையூறுகளையும், அபாயங்களையும் பொருட்படுத்தாது கடற்கடந்து உங்கள்பால் வந்தேன். உங்களது உதவியால் பலவிடங்களில் வெற்றிமாலை சூடியவனும், ஜனங்களது ஆதாரவால் பொன்முடி புனைந்தவனுமாகிய நெபோலியன் உங்கள்முன் வந்துற்றான். நீங்களும் அவனுடன் சேர்வீர்களாக.

வீரசிகாமணிகளே! எகிப்து, இதாலிய, ஆஸ்டிரியா, ருஷியா, முதலிய இடங்களில் நடந்த மகாயுத்தங்களில் போர்புரிந்து, வெற்றியுற்ற வீரர்களின் மானமும் பெருமையும் லூயி மன்னனால் அபகரிக்கப்பட்டன. அவர்களது வெற்றிகளெல்லாம் இப்போது குற்றங்களாயின. தேசத்துக்கு விரோதிகளாயிருந்தார்க்குப் பட்டங்களும், பதவிகளும் வழங்கப்படுகின்றன.

உமது தலைவனாகிய நெபோலியனுடன் சேர்ந்து தாய்நாட்டைக் கொடுங்கோலினின்றும் காப்பாற்ற முயல்வீராக."

---

விளம்பரம் 2.—(பிரன்சு மகாஜனங்களுக்கு)

"பிரன்சு ஜனங்களே! இரண்டு சேனைத்தலைவர்களின் வஞ்சனையால் பிரான்சு தேசம் பகைவர்களின் வசமாயிற்று. அவ்விருவரும் சத்தியம் தவறாதிருந்திருப்பின் ஐரோப்பாவின் சரித்திரம் வேறுவிதமாக முடிந்திருக்கும். பிரன்சு வீரர்கள் பகைவர்கள் முன் நிற்கமாட்டாமல் புறங்காட்டி ஓடியதை நினைக்குந்தோறும் என் மனம் உருகுகின்றது. எனினும், தைரியத்தை மாத்திரம் விடாமலிருக்கின்றேன். பிரான்சு தேசத்தின் அமைதியைக் கருதியே எல்பாதீவு சென்றேன். உங்களது குறைகளையும் துன்பங்களையும் அங்கே கேள்வியுற்று அவைகளை நீக்குவான் கருதியே நான் மீண்டும் உம்முன் வந்து சேர்ந்தேன்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சுதந்தரத்தையும். சம உரிமையையும் அனுபவித்தீர்கள். ஆனால், அவ்வுரிமைகளும், சுதந்தரங்களும் இப்பொழுது அடியோடொழிந்தன. பிரபுக்கட்சியைச் சேர்ந்தவனும், பகைவர்களது உதவியால் சிம்மாதனம் பெற்றவனுமான லூயி மன்னன் ஜனங்களது உரிமைகளை எங்ஙனம் காக்கமுடியும். அத்தகைய ஆட்சியினால் உங்களது அமைதியும் புகழும் சீர்குலையும் என்பதற்கு ஐயமுமுண்டோ?

உங்களது அபிப்பிராயத்துக்கொத்த அரசாங்கத்தை ஏற்படுத்துவதே உமது முதற் கடமையாகும். தேசமக்களின் விருப்பத்திற்கு முரணாகப் பகைவர்களால் ஏற்படுத்தப்பட்ட கொடுங்கோல் மன்னனை நாடு கடத்தலே நன்மக்கட்கழகாம். உங்களது குறைகளைத் தவிர்ப்பான்பொருட்டே உம்மிடம் வந்தேன். விழிமின்! எழுமின்!!"

---

மேற்குறித்த விளம்பரங்கள் பல எழுதப்பட்டன. இரண்டு நாட்கள் இவ்வாறு கழிந்தபின் எல்லோரும் பிரன்சுக் கடற்



கரை சேர்ந்தனர். நெபோலியன் எல்பாவினின்றுந் திரும்பி வந்ததை தேசமெங்கும் காட்டுத் தீப்போல் பரவியது. நெபோலியனைக் காணுமாறு ஜனங்கள் திரண்டு வந்தனர். பழைய வீரர்கள் நெபோலியனுக்கு உதவி செய்ய முன்வந்தனர். சென்றவிடமெங்கும் நெபோலியன் சிறப்புடன் வரவேற்கப்பட்டான். ஜனங்களுடைய அன்பினைக்கண்டு நெபோலியன் ஆநந்தம் கொண்டான். மேற்குறிக்கப்பட்ட விளம்பரங்கள் அச்சிடப்பட்டு எல்லோர்க்கும் வழங்கப்பட்டன. பதினாயிரம் வீரர்கள் நெபோலியனுடன் சேர்ந்தனர்.

நெபோலியனும் அவனது வீரர்களும் ஆறுநாள் நடந்து சென்று கிரிநோபில் என்னும் ஊர் சேர்ந்தனர். அங்கே தங்கியிருந்த இராணுவப் படையின் தலைவன் தனது சேனையை அணிவகுத்து நெபோலியனை எதிர்த்து நின்றான். அதையுணர்ந்த நெபோலியன் தன் வீரர்களை ஒருபுறம் நிறுத்திவிட்டுத் தான் தனியே சென்று எதிரிகளுக்கு முன்னே இருபதடி தூரத்தில் நின்றான். போர்வீரர்கள் எல்லோரும் நெபோலியனைப் பார்த்தனர். உடனே, சேனைத்தலைவன் நெபோலியனைச் சுடும்படி கட்டளையிட்டான். சிப்பாய்களும் தத்தம் துப்பாக்கிகளைக் கையிலேந்தினர். நெபோலியனோ கொஞ்சமேனும் அஞ்சாமல் தன் மார்பினைத் திறந்து காட்டி, "வீரர்களே! அரசனைக் கொல்பவன் எவனாவது இங்கேயிருப்பின் அப்படியே சுடுக. இதோ நான் இருக்கின்றேன்" என்றான். நிசப்தம் நிலவியது. ஒரு துப்பாக்கி கீழே தாழ்த்தப்பட்டது மற்றத் துப்பாக்கிகளும் ஒன்றன்பின் ஒன்று தாழ்த்தப்பட்டன. வீரர்களின் கண்களில் நீர் ததும்பியது. "மன்னன் நீடு வாழ்க" என்றுகூவிக்கொண்டே வீரர்கள் நெபோலியனிடம் ஓடினர். நெபோலியனும் அவர்களை மார்புறத் தழுவி உவகை பூத்தனன். இக்காட்சியினைக் கண்ணுற்ற சேனைத்தலைவன் உயிர்க்கஞ்சி ஓடி ஒளித்தனன்.

அங்கிருந்து எல்லோரும் புறப்பட்டு லையன்ஸ் நகரம் சேர்ந்தனர். அந்நகரத்தார் நெபோலியனுக்கு உபசாரப்பத்திரம்

வாசித்துத் தந்தனர். லையன்ஸ் நகரினர் நெபோலியனுக்குக் காட்டிய அன்பிற்கு அளவேயில்லை. நெபோலியனும் அவர்களுக்குத் தகுந்த முறையில் பதிலளித்தான். அத்தருணத்தில் லூயி மன்னன் ஒரு விளம்பரம் விடுத்தனன். அதாவது:—

"போனபார்ட்டி எல்பாவினின்றும் தப்பித்துப் பிரான்சுக்கு வந்துவிட்டான். அவன் செய்த அக்கிரமங்களையும், அட்டூழியங்களையும் வல்லரசர்கள் பெருந்தன்மையுடன் மன்னித்து அவனை எல்பாவுக்கு அரசனாக்கினர். இராஜ்யத்தைத் துறந்து சென்று எல்பாவில் ஒரு வருடகாலமாக வசித்துவந்தவனும், இலட்சக்கணக்கான ஜனங்களைக் கொன்ற கொலைப்பாதகனும், போரையும் குருதி தாகமுங்கொண்ட இரக்கமற்ற அரக்கனுமாகிய நெபோலியன் எனது பிறப்புரிமையான அரசாட்சியை மீண்டும் கவர்வான்பொருட்டு இங்கே வந்துளான். அவனால் தேச மக்கட்கு உண்டான புண்கள் இன்னும் ஆறாமலிருக்கின்றன. எமது விடாமுயற்சியாலும், காருண்யத்தாலும் சிறிது சிறிதாக ஆறிவரும் அப்புண்களை மீண்டும் உதுப்பிக்க வந்துள்ளான். பிரான்சு தேசம் அவனை வெளியேற்றியது. திரும்பிவந்த அவனைப் பிரான்சு தேசம் விழுங்காமல் விடுமா?"

இந்நிலைமையில், நெபோலியன் பாரிஸ் நகர் நோக்கிப் புறப்பட்டான். வழி முழுதும் வாழ்த்துப்பாக்கள் பாடப்பட்டன. நெபோலியனைக் கொல்லுதற்குப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. ஆனால், ஜனங்களுடைய நன் முயற்சியாலும் வீரர்களது பாதுகாப்பினாலும் அச்சூழ்ச்சிகள் அனைத்தும் பயனின்றி முடிந்தன. நெபோலியன் பவுண்டன் புளுவுக்கு அருகே வந்ததைக் கேள்வியுற்ற லூயிமன்னன் பாரிஸ் நகரத்தினின்றும் புறப்பட்டுக் குடும்பத்துடன் வேறிடம் சேர்ந்தான். நெபோலியன் பவுண்டன் புளுவிலிருந்து விரைந்து சென்று பாரிஸ் நகர்க்குள் நுழைந்தான். ஜனங்களின் உற்சாகத்துக்கு எல்லையில்லை. மாதர்கள் மங்களம் பாடினர். இழந்தவொரு மணியை மீண்டும் பெற்ற புற்றரவுபோல நக மாந்தர்கள் களிப்பெய்தினர் ஒரு



வித எதிர்ப்புமின்றி நெபோலியன் அரண்மனைப் புகுந்தனன். ஒரு தனி மனிதன் எழுநூறு மைல் நடந்து, பாரிஸ் சென்று, ஒருவித எதிர்ப்புமின்றி, ஒரு துளி இரத்தமேனும் சிந்துதலின்றி அரண்மனைப் புகுந்ததை ஆராய்ந்து பார்ப்பார்க்கு நெபோலியனது பெருமை விளங்காமற் போகாது. இத்தகைய தேசப் பிரவேசமும், இத்தகைய வெற்றியும் உலக சரித்திரத்தில் காண்டலரிது.

மறுநாள், தேசச்சபையார் கூட்டங் கூடி நெபோலியனை அரசனாக்கினர். பொது ஜனங்களும் அவ்வாறே அபிப்பிராயம் தந்தமையால் நெபோலியன் மீண்டும் அரசனானான்.

# அத்தியாயம்—14

## வாடர்லூ யுத்தம்.

நெபோலியன், அரசனான பின்பு, அநேக சீர்திருத்தங்களைச் செய்துவந்தான். சட்ட சபையும், நீதி மன்றமும் மந்திராலோசனைச் சபையும் பழையபடி ஏற்படுத்தப்பட்டன. கலாசாலைகளும், பொது ஜன நிலையங்களும் புதுப்பிக்கப்பட்டன. தேசத்தின் முன்னேற்றத்திற்குரிய பல அபிவிருத்திகளும் செய்யப்பட்டன. ஒரு நாள் நெபோலியன் ஒரு பெண் பள்ளிக்கூடத்துக்குச் சென்று பார்வையிட்டான். அப்பள்ளிப் பெண்கள் நெபோலியனிடம் அளவிலா அன்பு காட்டினர். ஒரு சிறுமி தன் மோதிரத்தைக் கழற்றி நெபோலியனது விரலில் இட்டுத் தன் அன்பை வெளிப்படுத்தினாள். அதைக் கண்ணுற்ற நெபோலியன் புன்முறுவற் காட்டித் தன் உவகையை அறிவித்தான். உடனே, மற்றைச் சிறுமிகளும் தம் தம் மோதிரங்களை நெபோலியனது விரல்களில் மாட்டித் தம் அன்பினைத் தெரிவித்தனர். நெபோலியன் அச்சிறுமிகளைப் பார்த்து, "அன்புமிக்க சிறுமிகளே! என்னுடைய கிரீடத்தில் பதியப் பெற்றுள்ள நவரத்தினங்களைக் காட்டிலும் உமது மோதிரங்களே எனக்கு உயர்ந்தனவாயின. என் வாழ்க்கையில் அதிக இன்பகரமான சந்தர்ப்பம் இதுவேயாம்" என்று உரைத்தான்.

நிற்க, நேசக்கட்சியினர் வியன்னாவில் சபை கூடிப் புரட்சிக்குப்பின் பிரான்சுக்குச் சொந்தமாக்கப்பட்ட பிரதேசங்களையும், போலந்து, சாக்ஸனி, இதாலியா முதலிய தேசங்களையும் தங்கட்குள் பங்கிடும் விஷயத்தைப்பற்றி ஆலோசித்து வந்தனர். அபிப்பிராய பேதத்தால் அவர்களுக்குள் விவாதமும், மனஸ்தாபமும்





உண்டாயின. அத்தருணத்தில், நெபோலியன் எல்பாவினின்றும் புறப்பட்டுக் கடல் கடந்து பிரான்சில் இறங்கிப் பாரிஸ் நோக்கிச் செல்கின்றான் என்னும் செய்தி அவர்களுக்கு எட்டியது. ஒவ்வொருவரும் மனங்கலங்கி, மெய்விதிர்த்து, திகைப்புற்றுத் திகில் கொண்டனர். தங்களுக்குள் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தையும், விவாதத்தையும், விரோதத்தையும் வெட்டென மறந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். நெபோலியனைப் பிரான்சு தேசத்தினின்று வெளியேற்றும் வரையிலும் வல்லரசர்கள் ஊணுறக்கமின்றி உழைக்கவேண்டும் எனவும், வல்லரசர்கள் தத்தம் சக்திக்கேற்றவாறு பணமும் படையும் உதவவேண்டுமெனவும் ஒப்பந்தம் நிறைவேறியது. நேசதேசக்கட்சியினர் போருக்குத் தயார் செய்தனர். நெபோலியன் தனது சமாதான விருப்பத்தைப் பகைவர்களுக்குத் தெரிவித்தான். பகைவர்கள் இணங்கவில்லையாதலால் நெபோலியனும் போருக்குத் தயார் செய்தனன். நேச தேசக்கட்சியினர் கீழ்க்கண்ட விளம்பரத்தைப் பிரசுரித்தனர்.

"நெபோலியன் எல்பாவினின்றுந் தப்பித்துப் பிரான்சுக்குச் சென்று குழப்பத்தையம், கலவரத்தையும் உண்டாக்கிப் பவுண்டன்புளூ சமாதானத்தை மீறினமையால் எமக்கும் அவற்கும் சமாதானமென்பது இனி முடியாத காரியமாகும். உலகத்தின் அமைதியையும் சமாதானத்தையும் கலைக்க வந்த நெபோலியனுடன் நாங்கள் போர்புரிந்து பழிவாங்கத் தீர்மானித்துள்ளோம்."

இவ்விளம்பரத்திற்குப் பதில் விளம்பரம் ஒன்று நெபோலியனால் தயாரிக்கப்பட்டது. அஃது பின்வருமாறு—

(1) மேரியா லூயிசாவையும், அவள் மைந்தனையும் எல்பாவுக்குச் செல்லவிடாமல் பகைவர்கள் தடுத்தனர்.

(2) என்னையும் எனது குடும்பத்தார்களையும் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன.

(3) உடன்படிக்கையில் குறிக்கப்பட்டுள்ள ஜாகீர் மேரியா லூயிசாவுக்கு நாளது வரை கொடுக்கப்படவில்லை.

(4) புத்ரனுக்கு ஒரு பிரதேசம் விடத் தீர்மானித்திருந்தும் அவ்வுடன்படிக்கை நிறைவேறிற்றில்லை.

(5) எனது இராணுவ வீரர்களுக்குச் சம்பளமும் உபகாரச் சம்பளமும் கொடுத்து அப்படையைக் கலைத்து விடுவதாக உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்தும், வீரர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் படை கலைக்கப்பட்டது.

(6) எனது செலவுக்காகப் பணம் கொடுக்கும்படி உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்தும் அஃது நாளது வரையிலும் கொடுக்கப்படவில்லை.

(7) நெப்போலியன் எல்பாவுக்கு அரசனாக இருக்கவேண்டுமென்று உடன்படிக்கையிலிருந்தும் என்னைச் செண்ட் ஹெலினாவுக்குக் கொண்டு போக வல்லரசர்கள் தீர்மானித்தனர்.

(8) நேசக்கட்சியினர் பவுண்டன்புளு சமாதானத்தை மேற்குறித்த பல வழிகளிலும் நிராகரித்தனர். இவ்வளவு துன்பங்களையும் தீமைகளையும் சகித்துக்கொண்டு எவ்வளவு காலம் நான் அமைதியுடனிருத்தல் கூடும். இக்காரணங்களால்தான் எல்பாவினின்றும் நான் வரவேண்டியதாயிற்று.

---

இவ்விளம்பரத்தைக் கண்ட ஜனங்களுக்கு நெப்போலியன் மீது அதிக அன்பு உண்டாயிற்று. ஆனால் நேசக்கட்சியினர் மாத்திரம் அதனைப் பொருட்படுத்தினரில்லை.

இங்கிலீஷ் சேனாதிபதி வெல்லிங்டனும், பிரஷியச் சேனாதிபதி புளுசரும், ஆஸ்டிரியச் சேனாதிபதியும் ரைன்நதி ஓரத்தில் பெருத்த சேனையுடன் அணிவகுத்து நின்றனர். ருஷியச் சேனை ஜெர்மனி தேசத்திற் புகுந்து விரைவாய் வந்து கொண்டிருந்தது. இவ்வாறு நான்கு பக்கங்களிலும் பகைவர்களது சேனைகள் நெருங்கின. இந்த நிலைமையில், பாரிஸ் நகரைப் பலமாகக் காப்பதா அல்லது பகைவர்களைப் பிரான்சுதேசத்தின் எல்லைக்குள் வாராவண்ணம் எதிர்த்துப் போர்புரிவதா என்பதைக் குறித்து நெப்போலியன் ஆழ்ந்து யோசித்துப் பார்த்துப் பிந்திய வழியே சிறந்ததெனத் தீர்மானித்தான். உடனே, நே என்னும் சேனாதிபதியிடம் ஒரு பலமான படையை ஒப்புவித்துப் புளுசரைத் தாக்கித் துரத்துமாறும், புளுசரது படையும் வெல்லிங்டனது படையும் ஒன்று சேராவண்ணம் காக்குமாறும் நேவுக்குக் கட்டளையிட்டபின் ஒரு பெருத்த சேனையுடன் நெப்போலியன் புறப்பட்டு வெல்லிங்டன் சேனையை எதிர் நோக்கிச் சென்றான்.

நே தனது சேனையுடன் சென்று புளுசரைத் தாக்கி வெஞ்சமர் புரிந்தான். இரண்டொரு இடங்களில் புளுசர் தோல்வியுற்றனன். தான் வெற்றியுற்ற இறுமாப்பினால் நே ஏமாந்திருந்த போது புளுசர் தன் சேனையுடன் வெல்லிங்டனுக்கு உதவி செய்ய விரைந்து சென்றனன். இப்படியிருக்க, நெப்போலியன் வெல்லிங்டனை எதிர்த்துப் போர்புரிந்தான். நெப்போலியன் முன் நிற்கமாட்டாமல் வெல்லிங்டனும் பின் வாங்கினன். வாடர்லூ என்னுமிடத்தில் வெஞ்சமர் நிகழ்ந்தது. இருதிறத்தாரும் முனைந்து நின்றனர். இருதிறத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் துறந்தனர். அத்தருணத்தில் புளுசரது சேனை வந்து சேர்ந்ததும் வெல்லிங்டனுக்குப் பலம் அதிகரித்தது. நெப்போலியனது சேனை பலக்குறைவடைந்து பறக்கலாயிற்று. பிரான்சு சேனை நாசமுற்றது. நெப்போலியன் தோல்வியுற்றான். வெல்லிங்டன் வெற்றியுற்றான்.

நெப்போலியன் போர்க்களத்தினின்று புறப்பட்டுப் பாரிஸ் நகரம் சென்றான். கலன்கோர்ட்டுப் பிரபு நெப்போலியனை வரவேற்றான். நெப்போலியன் மிகுந்த வருத்தங்கொண்டு அறைக்குள் சென்று படுக்கையில் சாய்ந்தான். நெப்போலியனுக்குக் கஷ்டகாலம் வந்தது. அடுத்தடுத்து அவனுக்குத் தோல்

வியே உண்டாயிற்று எனினும், எதற்கும் அஞ்சா நெஞ்சினனாகிய நெபோலியன் மறுநாள் சட்ட சபையைக் கூட்டிச் சபையோர்களைப் பார்த்து, "அன்பர்களே! வாடர்லூ யுத்தத்தில் நாம் தோல்வியுற்றோம். வெல்லிங்டனும் புளூசரும் தங்கள் சேனையுடன் இன்னும் ஒரு வாரத்தில் பாரிஸ் நகர்க்குள் பிரவேசிக்கக் கூடுமாதலால் அவர்களை எதிர்த்துத் துரத்துமாறு நமது வாலிபர்களும் மற்றவர்களும் போருக்கெழுதல் அத்தியாவசியமாகும். அதற்காக நமது சம்மதத்தைப் பெறும்பொருட்டே இச்சபையைக் கூட்டினேன்" என்றான். நெபோலியனுக்கு விரோதமாகப் பல அங்கத்தினர் பேசினர். குடியரசுணர்ச்சி உள்ளவர்களும் நெபோலியனை எதிர்த்துப் பேசினர். இதைக்கண்ட மந்திரிகள், "பிரான்சு தேசத்தின் நெருக்கடியான நிலைமையில் சகல அதிகாரங்களும் சக்கரவர்த்திக்கே வழங்கப்படவேண்டுமென்றும் அவ்வா[illegible]செய்வதால் தேசத்தின் அபாயகரமான நிலைமை மாறக் கூடும்" என்ற ஓர் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். சபையில் உடனே குழப்பமும் கலவரமும் உண்டாயின. அத்தீர்மானத்தை அநேகர் எதிர்த்தனர். நெபோலியன் தன்னாலாய வரையிலும் பல இரகசியங்களைச் சபையோர்க்குக் கூறியும் பயனின்றி முடிந்தது. சிலர் எழுந்து நின்று, "நெபோலியன் சிம்மாதனத்தினின்று விலகினால் பகைவர்கள் பகை தணிந்து நமக்குக் குடியரசை வழங்குவார்கள் என்பதே இச்சபையின் அபிப்பிராயமாகும். நேசக்கட்சியினர்க்கு நெபோலியன்மீது பகையேயன்றி பிரான்சின்மீது பகைமையில்லை. ஆதலால், நெபோலியன் பிரான்சு தேசத்தின் நன்மையைக் கருதிச் சபையோர்களின் அபிப்பிராயத்துக்கிணங்குதலே சிறந்தது" என்று கூறினர். அதைக்கேட்ட நெபோலியன், "அன்பர்களே! பகைவர்களைத் துரத்தித் தேயத்தைக் காப்பாற்றக் கருதி இச்சபையைக் கூட்டினேன். நீங்களோ மாறுபட்ட அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளீர். எனது வார்த்தைக்குக் குறுக்கிடாமல் நாட்டின் நலத்தையே யென்றும் நாடி வந்த நீங்கள் இன்று என்னை எதிர்த்துப் பேசுகிறீர்கள், நாட்டின் நன்மையைக் கருதி எனது உதவியை நாடிய நீவிர் நாட்டின்



நலத்தை முன்னிட்டே என்னை விலகிக் கொள்ளவும் கட்டளையிடுகின்றீர். நாட்டின் அமைதிக்கு நான் ஒருவனே தடையாயுள்ளேன் என்று நீங்கள் அபிப்பிராயப்படுவதால் நான் சிம்மாதனத்தை நீத்து வெளியேறத் தீர்மானித்தேன். உள்நாட்டுக் குழப்பத்தை உண்டாக்க நான் பிரான்சுக்கு வரவில்லை என்பதை உமக்குத் தெரிவிக்கின்றேன்" என்று கூறிச் சபையைக் கலைத்த பின் பொது ஜனங்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தனன். அஃது பின் வருமாறு,

"பிரான்சு ஜனங்களே! வாடர்லூ யுத்தத்தில் கட்டாயம் வெற்றிபெறுவேனென எண்ணினேன். ஆனால், காலவித்தியாசத்தால் தோல்வியுற்றேன். எனது இராஜீய வாழ்க்கை இன்றோடு முடிந்துவிட்டது. எனது மைந்தன் இரண்டாவது நெபோலியன் என்ற பெயருடன் பிரான்சுக்குச் சக்கரவர்த்தியாதல் வேண்டுமென்பதே எனது விருப்பம். மந்திராலோசனைச் சபையினரும் என் மைந்தனைச் சக்கரவர்த்தியாக நியமிக்கப் புதிய சட்டமொன்றை ஏற்படுத்துவார்களென நம்புகிறேன். நம் தேசம் சுதந்தரத்தோடு திலங்குவதாக".

இவ்வறிக்கையை விடுத்தபின் நெபோலியன் இராஜ்ய பதவியை நீத்து எலிஸீ என்னுமிடத்திற்குச் சாமானிய மனிதனாகச் சென்றான். அங்கே சில நாள் தங்கினான். பின்னர் மால்மைஸான் சென்று தனது சொந்த வீட்டில் தங்கியிருந்தான். அவ்வீட்டில், தானும் ஜோஸப்பைனும் வசித்துவந்த பழைய காலத்தின் நினைவு நெபோலியனுக்கு வந்தது. ஜோஸப்பைனை நினைத்துப் புலம்பினான். ஜோஸப்பைனது அகால மரணத்துக்குத் தானே காரணமென்று நெபோலியன் புகன்றனன்.

நிற்க, நெபோலியன் சிம்மாதனத்தினின்று இறங்கியபின் புதிய அரசாங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் போசி என்பவன் தலைவனாக நியமிக்கப்பட்டான். போசி என்பவன் ஓர் சுயநலப்புலி. தனது சுயநன்மைக்காக சுயநாட்டையும் விற்கக்கூடிய வஞ்சகன். பதினெட்டாவது லூயிக்கே அரசுரிமையை

அளிக்கவேண்டு மென்னும் கருத்தினன். நெபோலியனைச் சிறைப்படுத்த போசி பல சூழ்ச்சிகள் புரிந்தும் முடியாததைக் கண்டு ஒரு தந்திரம் செய்தான். "நெபோலியன் பிரான்சு தேசத்தில் இருக்கும் வரையில் யுத்தத்தை நிறுத்தவாவது, பிரான்சுக்குச் சுதந்திரமளிக்கவாவது பகைவர்கள் சம்மதியார்களாதலால் நெபோலியன் அதிக விரைவில் பிரான்சை விட்டு வெளியேறல் வேண்டும்" என்ற தீர்மானத்தைச் சட்டசபையில் நிறைவேற்றி அத்தீர்மானத்தை நெபோலியனுக்குப் போசி அனுப்பினன். அத்தீர்மானத்தைக் கண்டதும் நெபோலியன் அமெரிக்காவுக்குப் போகத் தீர்மானித்துத் தன் கருத்தினை நண்பர்களுக்கு அறிவித்தான். இதனை யறிந்த போசி உடனே வெல்லிங்டனுக்குத் தெரிவித்தான்.

நெபோலியன் சில நண்பர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு எல்லோரிடத்தும் விடை பெற்று மால்மைசானின்றும் புறப்பட்டு ரோசி துறைமுகம் சென்றான். தான் அமெரிக்காவுக்கு ஆபத்தின்றிப் போகும் பொருட்டுப் பந்தோபஸ்து அனுப்பும்படி வெல்லிங்டன் பிரபுவை நெபோலியன் கேட்டான். அஃது தனது அதிகாரத்திலில்லை என்று வெல்லிங்டன் பதில் அளித்தான். ஆதலால், நெபோலியனும் அவனது தோழர்களும் "ஸாலி", "மதுஸா" என்னும் சிறிய கப்பல்களிலேறி அமெரிக்காவுக்குப் புறப்படத் தொடங்கினர். நெபோலியனை எந்த வழியிலும் போகவிடாமல் ஆங்கிலக் கப்பல்கள் உடனே சூழ்ந்து கொண்டன. போசியின் சூழ்ச்சிகளை நெபோலியன் அப்போது தான் உணர்ந்தான். கடலடைப்பைக்கண்டு நெபோலியன் திகைத்தான். மாறுவேடம் பூண்டு ஆங்கிலேயர் அறியாவண்ணம் ஒருவித பயமுமின்றி அமெரிக்காவுக்குப் போகுமாறு பலர் நெபோலியனுக்குக் கூறினர். அதற்கு நெபோலியன், "அவ்வாறு மாறுவேடங்கொண்டு மறைந்து செல்வது எனது பெருமைக்கேற்றதன்று" எனப் புகன்றான். பின்னர் நெபோலியனும் அவனுடைய நண்பர்களும் அச்சிறு கப்பல்களினின்றிறங்கி "பெல்லர் ஹாபன்" என்னும் கப்பலில் ஏறினர். அக்கப்பல் தலைவன் மேயித் லாந்து என்னும் பெயரினன். நெபோலியன், தான் இராஜீய வாழ்க்கையைத் துறந்து, சாந்தி நிலையை மேற்கொண்டு, இங்கிலாந்தின் சட்டங்களுக்கு அடைக்கலம் புகுந்து, இங்கிலாந்தில் வாழ நிச்சயித்துள்ளதாக இங்கிலாந்து மன்னற்குக் கடிதமொன்றை அனுப்பிவிட்டுப் பெல்லர் ஹாபன் என்னும் கப்பலில் புறப்பட்டு இங்கிலாந்து நோக்கிச் சென்றான். அக்கப்பற்றலைவனை மெயித்லாந்தும் நெபோலியனை அன்புடன் உபசரித்தான். அவனது உபசாரத்தைக் கண்டு மகிழ்ந்த நெபோலியனும் அமைதியுற்றிருந்தான்.

கப்பல் பிளிமத் துறைமுகம் சேர்ந்தது. அத்துறைமுகத்தைக் காத்து வந்த கீத் என்னும் கப்பற்றலைவன் மெயித்லாந்துக்கு நிருபம் எழுதி நெபோலியன் சிறைப்பட்டவனென்று தெரிவித்தான். நெபோலியன்பால் பேரன்பு கொண்ட மெயித்லாந்துக்கு அச்செய்தியைக் கேட்டவுடன் மிகுந்த துக்கம் உண்டாயிற்று. தன்னைச் சுற்றி யுத்த கப்பல்கள் காவல்காத்து வருவதையும், கீத் என்பவனுடைய உத்திரவில்லாமல் தனது கப்பலுக்கு எவனும் வரமுடியாதென்பதையும் நெபோலியன் அறிந்து மனச்சோர்வடைந்தான். நெபோலியனைச் சுட்டுக் கொல்வதா அல்லது செண்ட் ஹெலினாவுக்குக் கொண்டுபோவதா என்னும் விஷயத்தைக் குறித்துப் பார்லிமெண்டில் விவாதம் நடந்து வந்ததையும் பத்திரிகைகள் மூலமாய் நெபோலியன் அறிந்தான். ஆங்கிலேயர்கள் நெபோலியனைக் காணத் திரள் திரளாய்ச் சென்றனர். ஆனால் அவர்களை நெருங்கவிடாமற் கீத்து என்பவன் காத்துவந்தான். நெபோலியன் ஒருகால் தப்பித்துக் கொள்ளக் கூடும் என்ற பயத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இரண்டு யுத்த கப்பல்களை அனுப்பிக் கடுங்காவல் அமைத்தனர். இவற்றை யெல்லாம் கண்ட நெபோலியன் மனம் நொந்து வாய்பேசாது ஆழ்ந்து சிந்தித்திருந்தான்.

மறுநாள் அன்னிய நாட்டு உபமந்திரி ஸர் ஹென்றி பான்பரி என்பவன் நெபோலியன் இருந்த கப்பலுக்குச் சென்று பிரிட்டிஷ்

அரசாங்கத்தாரது உத்திரவை நெபோலியனுக்குப் படித்துக் காட்டினான். அஃது பின் வருமாறு—

“எங்கள் தேசத்தையும் எமது நேசதேசங்களையும் காக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஐரோப்பாவின் அமைதி மீண்டும் அழிவுறுவண்ணம் நெபோலியனைச் சிறைப்படுத்தியுள்ளோம். செண்ட் ஹெலினாவின் சீதோஷ்ண ஸ்திதி மிக ஆரோக்கியமானதாலும், அத்தீவு பாதுகாப்புக்குத் தக்கதாயிருத்தலாலும் நெபோலியன் அத்தீவில் வசிக்கவேண்டும். ஒரு வைத்தியரும், மூன்று உத்தியோகஸ்தர்களும், பன்னிரண்டு பணியாட்களும் நெபோலியனுடன் வசிக்கலாம். நெபோலியன் சக்கரவர்த்தி என்று அழைக்கப்படாமல் சாமானிய சேனைத் தலைவனென்றே அழைக்கப்படல் வேண்டும். நெபோலியனது சாமான்களெல்லாம் நன்கு பரிசோதிக்கப்படவேண்டும். நெபோலியனது குடும்பத்தார் எவராகிலும் ஹெலினாவில் வசிக்க விரும்புவரேல் அவர்களும் சிறைப்பட்டார் போலவே நடத்தப்படுவார்கள்.”

அவ்வுத்தரவைக் கேட்ட நெபோலியன் அமைதியுடனும், கம்பீரத்துடனும் பின்வருமாறு கூறினான்.

“நான் இங்கிலாந்தின் விருந்தாளியேயன்றி சிறையாளன் அன்று. இங்கிலாந்து தேசத்துக்கு நான் அடைக்கலமாக வந்தேன். என் விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அறநெறியையும், சட்ட முறையையும், சமூகத் தர்மத்தையும் இழந்து அதர்மத்தில் இறங்கினர். அவர்களது நடவடிக்கை பிரிட்டிஷ் பெருமைக்கேற்றதா என்று நான் கேட்கிறேன். செண்ட் ஹெலினாவில் என்னை ஆயுள்வரையிலும் சிறை செய்தல் கொடுமையினும் கொடுமையாகும். அஃது கேவலம் அநாகரீகக் காரியமாகும். ஆங்கிலேயர்கள் இவ்வளவு கொடுமையாக என்னை நடத்துவார்கள் என்று நான் கனவிலும் கருதினேனில்லை. அத்தீவில் சிறை செய்தலைக் காட்டிலும் என்னைச் சுட்டுக் கொல்லுவதே சாலச்சிறந்ததாகும். ஆங்கிலேயர் எனக்கிழைத்த கொடுமையைத் தெய்வமும் சகிக்காது.”

இங்ஙனம் நெபோலியன் கூறியதைக்கேட்ட அன்னிய நாட்டு மந்திரி ஒன்றும் பேசாமல் வெளியே சென்றான். பிறகு நெபோலியன் பிராது ஒன்றைத் தயாரித்துப் பிரிட்டிஷ் அரசாங்கத்துக் கனுப்பினான். அப்பிராது பின் வருமாறு,

“எனது சுதந்தரத்தையும் உரிமையையுங் கவனியாது என்னைத் துன்பப் படுத்துவதைக் குறித்துக் கடவுளும், உலகோரும் அறியுமாறு நான் பிராது செய்கிறேன். பெல்லர்ஹாபன் என்னும் கப்பலுக்கு நானே யதேச்சையுடன் வந்தேன். நான் சிறையாளியன்று; ஆனால், விருந்தினன் ஆவேன். என்னையும் எனது நண்பர்களையும் வரவேற்று இங்கிலாந்துக்கு அழைத்து வருமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உத்தரவு அனுப்பியதாகப் பெல்லர்ஹாபன் கப்பற்றலைவன் எனக்குச் சொன்னமையால் அதை நம்பி நான் இங்கிலாந்துக்கு வந்தேன். இங்கிலாந்தின் சட்ட நீதியில் முழு நம்பிக்கைக் கொண்டு அதில் அடைக்கலம் புகுந்தேன். பெல்லர்ஹாபன் என்னும் கப்பலில் ஏறியவுடன் ஆங்கிலேயர்களது விருந்தினனாயினேன். என்னை ஏமாற்றி வலையிற் சிக்கச் செய்யும் மோசக்கருத்துடன் கப்பற்றலைவனுக்கு ஆங்கில் அரசாங்கத்தார் உத்தரவளித்திருப்பின் ஆங்கிலேயரது பெருமையும் கீர்த்தியும் இன்றோடழிந்தன. கப்பற்றலைவனுக்கு அத்தகைய உத்தரவு அனுப்பவில்லையெனின் ஆங்கில அரசாங்கத்தார் என்னை விருந்தினனாகக் கருதுதலே தருமமாகும். என்னைச் சிறைப்படுத்திச் செண்ட் ஹெலினாவுக்குக் கொண்டு போவரேல் ஆங்கிலேயரது சட்டங்களும், நீதிகளும், சுதந்தரமும் வீண் பேச்சுக்களேயாகும். உலக சரித்திரத்திற்கு நான் முறையிடுகின்றேன். இருபது வருடங்களாக இங்கிலாந்துடன் போர்புரிந்த நான் கால வித்தியாசத்தால் பகைமையை ஒழித்து இங்கிலாந்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து இங்கிலாந்தில் வாழ நிச்சயித்து அடைக்கலம் புகுந்தேன். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் எனக்கிருந்த நம்பிக்கையையும் நன்மதிப்பையும் வேறெங்ஙனம் நான் காட்டுதல் கூடும். ஆனால், இங்கிலாந்தோ நம்பி வந்த என்னைத் துன்புறுத்துகின்றது.”

சில ஆங்கிலேயர்கள் நெபோலியனைக் காப்பாற்றக் கருதிச் சில சூழ்ச்சிகள் புரிந்தனர். ஒரு வியாச்சியத்தில் நெபோலியனைச் சாட்சியாக நியமித்து அவனுக்குச் சம்மன் ஒன்றை அனுப்பினார்கள். அதனை வழங்கவிடாமற்படி கீத் என்பவன் தடுத்து விட்டான். நெபோலியனைத் தப்புவிக்க ஜனங்கள் பல வழியில் முயன்றும் முடியாமற் போயிற்று. நெபோலியனைப் பார்க்குமாறு ஜனங்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். இவையெல்லாங் கண்ணுற்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் சிறிது அச்சமுற்று நெபோலியனைச் செண்ட் ஹெலினுவுக்கு விரைவில் கொண்டு போமாறு உத்தரவிட்டனர்.

உடனே, நெபோலியனுடைய சாமான்கள் சகலமும் பரிசோதிக்கப்பட்டன. மூட்டைகள், உணவுப்பொருள்கள் உண்ணுந்தட்டுகள், வைரங்கள், நகைகள் முதலிய பலவும் பரிசோதிக்கப்பட்டு அன்னிய நாட்டு மந்திரியிடம் ஒப்புவிக்கப்பட்டன.

நெபோலியனுடைய நண்பர்களிடமிருந்த பட்டாக் கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டன. நெபோலியனும், அவனுடைய நண்பர்களும் "நார்த்தம்பர்லாந்து" என்னும் கப்பலுக்கு மாற்றப் பட்டனர். நெபோலியன் உடனே மெயித்லாந்து என்பவரை வரவழைத்து, "ஐயா, நான் பெல்லர்ஹாபன் கப்பலில் தங்கியிருந்த போது தாங்களும் தங்களது உதவியாளர்களும் என்னிடத்துக் காண்பித்த அன்பிற்காக நான் உமக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். எனது மனமார்ந்த வந்தனங்களைத் தயவு செய்து ஏற்றுக்கொள்வீராக உமது கப்பலிலுள்ள ஏனைய உத்தியோகஸ்தர்களுக்கும் எனது வந்தனத்தைத் தெரிவிக்க வேண்டுகின்றேன். இங்கிலாந்தின் பொது ஜனங்கள் என்னிடம் காட்டிய அன்பு என்றும் மறக்கற்பாலதன்று. நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாய் அவர்கள் என்னை வரவேற்றனர். ஓர் தேசத்து அரசாங்கத்தைக்கொண்டு அத்தேச ஜனங்களின் குணத்தைத் தீர்மானித்தல் தவறு என்பதை நான் இப்பொழுது தான் உணர்ந்தேன்." என்று கூறி விடை பெற்றான், கவுண்ட் மான்தலனும் அவனது மனைவியும், கவுண்ட் பர்டிரேண்டும் அவரது மனைவி மக்களும், கவுர்கார்டு பிரபுவும், லாஸ் காஸஸ் பிரபுவும், டாக்டர் ஓமிராவும் நெபோலியனுடன் செண்டு ஹெலினுவுக்குப் போக அனுமதிக்கப்பட்டனர். நெபோலியனுடன் போக உத்தரவு பெறாத மற்றவர்கள் தாயைப்பிரியும் சேய்களைப்போல் அழுதனர். நெபோலியனும் துக்கமிகுதியால் கண்ணீர் பெருக்கி அவர்களைத் தேற்றினான்.

1815-ம் வருடம், ஆகஸ்டு மாதம் 9 தேதி கப்பல் செண்ட் ஹெலினுவுக்குப் புறப்பட்டது. சிறிது நேரம் சென்ற பின்னர் நெபோலியன் எழுந்து நின்று பிரான்சு தேசத்தைக் கடைசியாக ஒரு முறை பார்க்குமாறு ஆவலோடிருந்தான். சிறிது நேரத்திற்குள் பிரான்சு கடற்கரை கண்ணுக்குப் புலனாயதும், "பிரான்சு! பிரான்சு !!" என்று உரக்கக்கத்தினான். தான் நீண்ட நாள் அரசாண்ட தேசத்தைச் சிறிது நேரம் உற்று நோக்கிய பின், "போர் வீரர் மலிந்த புண்ணிய தேசமே! உன்னை நமஸ்கரிக்கின்றேன். நான் போகிறேன். நான் போகிறேன்" என்று நெபோலியன் கதறினான். அதைக் கண்டு அனைவரும் துயருற்று மனங்கலங்கினார்கள். மக்களின் குறைகளையுணர்ந்து அரசாட்சி செய்துவந்த பிரான்சு தேசத்தின் அருந்தனமாகிய நெபோலியனை நார்த்தம்பர்லாந்து கப்பல் கொள்ளை கொண்டு நடுக் கடலிற் சென்றது.

---

# அத்தியாயம்—15

## செண்ட் ஹெலினா

1815-ம் வருடம் அக்டோபர் மாதம் 16-ம் தேதியன்று நார்த்தம்பர்லாந்து கப்பல் செண்ட் ஹெலினாவின் துறைமுகத்தை யடைந்தது. அன்றே நெபோலியனும் அவனது நண்பர்களும் அத்தீவில் இறங்கினார்கள்.

செண்ட் ஹெலினா, ஐரோப்பாவுக்கு ஆறாயிரம் மைல் தூரத்திலும் ஆபிரிக்காவுக்கு ஆயிரத்திருநூறு மைல் தூரத்திலு முள்ளது. இது, பத்து மைல் நீளமும் ஆறுமைல் அகலமுமுள்ள ஓர் தீவு. இதில் ஐந்நூறு வெள்ளையர்களும் மூந்நூறு அடிமைகளும் வசித்து வந்தனர். இதன் சீதோஷ்ண ஸ்திதி ஆரோக்ய மற்றதாயிருந்தமையால் இதில் வசித்து வந்த எவனும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டு உயிருடன் இருந்ததாகத் தெரியவில்லை.

இத்தீவில் ஜேம்ஸ்டவுன் என்ற ஓர் சிறிய கிராமம் இருந்தது. அவ்வூரிலுள்ள பழைய வீடொன்று நெபோலியனுக்குக் கொடுக்கப்பட்டது. நெபோலியன் அவ்வீட்டில் அன்றிரவு உறங்கினான். மறுநாள், நெபோலியன் குதிரைச் சவாரி செய்து திரும்பிவரும்போது ஜேம்ஸ் டவுனுக்குச் சிறிது தூரத்தில் தனித்துள்ள வீடொன்றைக் கண்ணுற்றான். பால்கோம்பு என்னும் ஒரு உத்தமர் அதில் வசித்து வந்தார். அவ்வீட்டின் ஓர் அறையில் தான் வசிக்க உத்தரவு கொடுக்குமாறு நெபோலியன் பால்கோம்பை வேண்டினான். பால்கோம்பு உடனே இணங்கவும் நெபோலியன் அன்று முதல் அவ்வீட்டில் வசித்து வந்தான். பால்கோம்புக்கு நான்கு மக்களிருந்தனர். அக்குழந்தைகளுடன் நெபோலியன் அளவளாவி இன்புற்று வந்தான். அக்குழந்தை



களும் நெபோலியனுடன் நட்புக்கொண்டு அவனுடன் நாடோறும் விளையாடி வந்தனர். நெபோலியன் படிப்பதிலும், தன் நண்பர்களுடன் பேசுவதிலும், தான் புரிந்த யுத்தங்களைப்பற்றி லாஸ்காஸுக்குச் சொல்லுவதிலும் காலத்தைக் கழித்து வந்தான். நெபோலியன் தப்பித்துக் கொண்டு போகாவண்ணம் சிப்பாய்கள் காவல் புரிந்து வந்தனர். நெபோலியன் ஓரிடத்தில் இரண்டு மணி நேரத்திற்குமேல் தங்கியிருக்கக் கூடாதென்றும், ஓர் குறிப்பிட்ட எல்லையைக் கடந்து செல்லலாகாதென்றும், கடற்கரையோரமாகப் போகக்கூடாதென்றும், அவ்வூரிலுள்ள அடிமைகளுடன் பேசக்கூடாதென்றும் நிபந்தனைகள் பிறந்தன. நெபோலியன் இந்நிபந்தனைகளனைத்தையும் சகித்துக்கொண்டு தன் துயரினை வெளிக்குக் காட்டாமல் தைரியத்துடனிருந்தான்.

நெபோலியன் சாதாரண உணவையே மிதமாக உண்டு வந்தான். மிதமாக உண்ணும் எவனும் பிணிவாய்ப் படான் என்பது அவனது கொள்கை. நோயுற்ற காலத்திலும் மருந்து சாப்பிடாமல் இயற்கைச் சிகிச்சையினையே கையாண்டுவந்தான். நெபோலியனுக்கு மருந்தில் நம்பிக்கையில்லை. ஆயினும் இரண வைத்தியர்கள் (Surgeons) இடத்தில் அவனுக்கு அதிக நம்பிக்கையும் மரியாதையும் உண்டு.

இவ்வாறு மாதங்கள் இரண்டு கழிந்தன. ஆயிரத்தைந்நூறு அடி உயரமுள்ள ஒரு கற்பாறையின் மீது இருந்த பழைய குடிசை யொன்று செப்பனிடப்பட்டது. அதற்கு லாங்வுட் விடுதி என்று பெயர். நெபோலியன் அவ்விடுதிக்கு அனுப்பப்பட்டான். நெபோலியன் லாங்வுட் சிறைக்குச் சென்றதும் அவனது நண்பர்களும் அவனுடன் வசிக்க விரும்பிக் குடும்பத்துடன் ஆங்குச் சென்றனர். லாங்வுட் சிறையைச் சுற்றிலும் சிறிய கூடாரங்கள் அமைத்து அவைகளில் நெபோலியனது நண்பர்கள் வசித்துவந்தனர்.

இந்நிலைமையில், சர் ஹட்சன் லோ என்பவன் செண்ட் ஹெலினாவுக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டான். அவன் அங்கு

சென்றதும் நெப்போலியனைக் காணச் சென்ருன். இருவரும் சிறிது நேரம் சம்பாஷித்தனர். சர் ஹட்சன் லோவைப் பார்த்தவுடன் நெப்போலியனுக்கு யாதொரு காரணமுமின்றி அருவருப்பு உண்டாயிற்று. துரதிர்ஷ்ட வசமாக இவ்வருவருப்பு நாளடைவில் அதிகப்பட்டுத் தீராத பகைமையில் முடிந்தது.

சில தினங்களுக்குள் லோ பல மாறுதல்களைச் செய்ய ஆரம்பித்தான். நெப்போலியனது நண்பர்கள் பிரியப்படின் ஐரோப்பாவுக்குத் திரும்பிப் போகலாமெனவும், இல்லையேல், நெப்போலியனைப் போலவே அவர்களும் எல்லா நிபந்தனைகட்கும் அடங்கியிருத்தல் வேண்டுமெனவும், நெப்போலியனைச் சேனபதி என்று அழைக்க வேண்டுமேயன்றிச் சக்கரவர்த்தி என்று அழைக்கக் கூடாதென்றும் இன்னோன்ன பல உத்தரவுகளை லோ பிறப்பித்தான். நெப்போலியனும் அவனது நண்பர்களும் தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு வசித்து வந்தனர்.

அத்தருணத்தில், ஹாப்ஹவுஸ் என்ற ஆங்கில ஆசிரியர் "சக்கரவர்த்தி நெப்போலியனது இறுதி ஆட்சி" என்ற புத்தகமொன்றை வெளியிட்டு, அதைச் சர் ஹட்சன் லோவுக்கு அனுப்பி அதனை நெப்போலியனிடம் சேர்க்குமாறு வேண்டினர். அப்புத்தகத்தின் பின்புறத்தில் "சக்கரவர்த்தி நெப்போலியனுக்கு" என்று எழுதியிருந்ததைக் கண்ணுற்ற லோ அதை நெப்போலியற்கு அனுப்ப மறுத்து விட்டான். இத்தகைய சங்கடங்களை விலக்கக் கருதித் தன் பெயரை மாற்றிக்கொள்ள அனுமதி கொடுக்குமாறு நெப்போலியன் கவர்னரைக் கேட்டான். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. இதைக்குறித்து நெப்போலியன், "என்னைச் சேனபதி நெப்போலியன் என்றே ஆங்கிலேயர்கள் பிடிவாதத்துடன் அழைக்கின்றார்கள். சேனபதி என்று அழைக்கப்படுவதால் எனக்கு அவமானம் ஒன்றுமில்லை. ஆனால், ஆங்கில அரசாங்கத்தாரால் அவ்வாறு அழைக்கப்படுவதுதான் எனக்கு அருவருப்பைத் தருகிறது. 'பிரான்சின் சக்கரவர்த்தி' என்று என்னை நான் சொல்லிக்கொள்ளவில்லை; ஆனால், 'சக்கரவர்த்தி நெப்போலியன்' என்றல்லவோ நான் சொல்லிக்கொள்ளுகின்றேன். இதில் ஆங்கிலேயருக்கு எவ்வித ஆட்சேபனையும் இருத்தல் நீதியன்று. இரண்டாவது ஜேம்ஸ், சார்லஸ் முதலிய மன்னர்கள் தங்கள் அரசுரிமையை யிழந்த பின்னரும் சக்கரவர்த்தி என்றே அழைக்கப்பட்டனர். அப்படியிருக்க, என்னை மாத்திரம் இங்ஙனம் நடத்துதல் எங்ஙனம் நீதியாகும்" என்று புகன்றனன்.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன. ஓர் நாள் லோ, நெப்போலியனிடம் சென்று, "ஐயா, உமது செலவையும், உமது சிப்பந்திகளின் செலவையும் குறைத்தல் அத்தியாவசியமாகும்" என்று சொன்னான். அம்மொழி கேட்ட நெப்போலியனுக்கு அளவிலாக் கோபம் பிறந்தது. இருவர்க்கும் பெருத்த விவாதம் நடந்தது. லண்டனிலாவது, பாரிஸிலாவது உள்ள ஏதேனும் ஒரு பாங்கிக்குத் தான் முத்திரையிட்ட கடிதங்களை அனுப்புதற்கும், அங்கிருந்துவரும் முத்திரைக் கடிதங்களைத் தான் பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்டால் தானே எல்லாச் செலவையும் ஏற்றுக்கொள்வதாக நெப்போலியன் தெரிவித்தான். மேலும், அக்கடிதங்கள் யாவும் பணவிஷயத்தைக் குறித்தே இருக்குமெனவும் உறுதி தந்தனன். எனினும், முத்திரையிட்ட எந்தத் தபாலும் லாங்வுட்டுக்கு வரக்கூடாதென்றும், ஆனால் செலவு மட்டும் விரைவில் குறைக்கப்படவேண்டுமென்றும் லோ வற்புறுத்தினான்.

நெப்போலியன் தனது செலவைக் குறைக்க ஆரம்பித்தான். தனது பணியாட்கள் அறுவரை வேலையினின்று நீக்கினான். உணவிலும், ஆடையிலும் சிக்கனத்தைக் கைக்கொண்டான். அப்படிச் செய்தும் மாதம் ஒன்றுக்கு எழாயிரத்தைந்நூறு பிராங்கு செலவாயிற்று. ஐயாயிரம் பிராங்குதான் கவர்னரால் கொடுக்கப்பட்டது. எஞ்சிய ஈராயிரத்தைந்நூறு பிராங்குக்கு என் செய்வான் நெப்போலியன்? எனவே, தன்னிடமிருந்த தங்கத் தட்டுகளை விற்றுச் செலவு செய்யலானான். மூன்று மாதங்கட்குள் தட்டுகள் அனைத்தும் விற்கப்பட்டன. கடைசியில், உண்ணுதற்குத் தங்கத் தட்டம் இன்றிக் கேவலம் பீங்கான் தட்டத்தில்

உன்ன வாரம்பித்தான். இதனையறிந்த [illegible] அனுதாபப்பட்டு "நெபோலியனிடம் ஏராளமான பணம் இருப்பதாக எண்ணியல்லவோ இவ்வாறு சோதனை செய்தேன். அவனிடத்தில் உண்மையில் பணமில்லாத விஷயம் முன்னரே எனக்குத் தெரிந்திருப்பின் தட்டங்களை விற்கவேண்டிய அவசியம் நெபோலியனுக்கு ஏற்பட்டிருக்காது" என்று புகன்றனன்.

வருடம் ஒன்று கழிந்தது. நெபோலியனது உடல் நலமும் குன்ற ஆரம்பித்தது. வெளியே உலாவச் செல்லவும், குதிரைச் சவாரி செய்யவும் நெபோலியனுக்கு முடியாமற் போயின. நிபந்தனைகள் அதிகரித்தன. காவல் முன்னிலும் கடுமையாயிற்று. தலைவலியாலும் ஜலதோஷத்தினாலும் நெபோலியன் அடிக்கடி துன்புற்றுவந்தான்.

இப்படியிருக்க, "போனபார்ட்டி நெபோலியனைப் போலவே எல்லா நிபந்தனைகட்கும் நாங்களும் உட்படுகிறோம்" என்ற யாதாஸ்தில் கையொப்பமிடுமாறு நெபோலியனது நண்பர்களை லோ வற்புறுத்தினான். நெபோலியனது நண்பர்கள் 'போனபார்ட்டி' என்னும் வார்த்தையைச் 'சக்கரவர்த்தி' என்று மாற்றிக் கையொப்பமிட்டுக் கவர்னருக்கு அனுப்பினர். அதைக் கண்ணுற்ற லோ பெரிதும் முனிவெய்தி அவர்களை உடனே நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope)-க்குப் போகுமாறு கட்டாயப்படுத்தினான். பிறகு நெபோலியனது நண்பர்கள் கவர்னரது விருப்பப்படியே யாதாஸ்தில் கையொப்பமிட்டனுப்பினர். இந்நிகழ்ச்சியைக் குறித்து நெபோலியன், "எனது நண்பர்கள் என்னைவிட்டுப் பிரிய மனமில்லாமல் அந்த யாதாஸ்தில் கையொப்பமிட்டனர். அவர்களது அன்பு பெரிதும் போற்றத்தக்கது. ஆங்கிலேயரால் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்த்தப்படுகின்றேனோ அவ்வளவுக்கவ்வளவு என் நண்பர்களால் நான் உயர்த்தப்படுகின்றேன். நான் அரசனாயிருந்த காலத்தில் கூட அவர்கள் என்னை இவ்வளவு அன்புடன் நடத்தவில்லை" என்று டாக்டர் ஓமிராவிடம் கூறினான்.

இவ்வளவிருந்தும், [illegible] ஆருயிர் நண்பனான லாஸ்காஸஸ் என்பவன் நெபோலியனது நிலைமையைக் குறித்து இங்கிலாந்திலிருந்த ஒரு சீமாட்டிக்குக் கடிதம் எழுதியதற்காகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறை செய்யப்பட்டான். இதையறிந்த நெபோலியன் பெரிதும் துயருற்று லாஸ்காஸஸுக்குக் கீழ்கண்ட நிருபத்தை வரைந்தனன்.

"என் ஆருயிர் நண்பீர்! நீர் சிறையிலிருந்து அனுபவிக்கும் துன்பம் என் மனதைப் புண்படுத்துகின்றது. எனது வாழ்விலும் தாழ்விலும் நீவிர் என்னிடம் உண்மையோடிருந்தீர். நான் நோயுற்றிருந்த காலங்களில் தாங்கள் கண்விழித்துக் கவலையுற்ற இரவுகள் பலவாம். தங்களுக்குப் பல வழிகளிலும் கடமைப்பட்டுள்ளேன். உம்மை இவ்விடத்திலிருந்து விரைவில் வெளியேற்றுவார்களென்பது திண்ணம். இத்தீவை விட்டு நீங்குமுன் என்னை ஒரு முறை பார்ப்பதற்கும் உமக்கு அனுமதியளிக்கமாட்டார்களாதலால் என் மனம் வெதும்புகின்றது.

"நீர் இங்கிலாந்துக்கோ அல்லது பிரான்சுக்கோ செல்வீரேல் செண்ட் ஹெலினாவில் எனக்காக நீர் அனுபவித்த இன்னல்களனைத்தையும் மறந்து நம்மிருவர்க்குமுள்ள நட்பினையும் அன்பினையும் என்றும் மறவாமல் இருப்பீராக! என் மனைவியையும் மைந்தனையும் சந்திக்க நேரின் எனது நிலைமையை அவர்களுக்குக் கூறுமின். என் நண்பர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துமின். என்னைப்பல விதத்திலும் லோ துன்புறுத்துகின்றான். இத்துன்பத்தை நீண்ட காலம் அனுபவிக்கா வண்ணம் இறைவன் திருவருள் புரிவாரென்றே நம்புகின்றேன். எனது மாறாத அன்பினை உமக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீடிய ஆயுளும், நாடிய பொருளும், நோயிலா வாழ்வும் இறைவன் உமக்கருள்வாராக!"

1816-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் தேதி செண்ட் ஹெலினாவிலிருந்து லாஸ்காஸஸ் வெளியேற்றப்பட்டான். நெபோலியனைக் கடைசியாக ஒரு முறை பார்க்க அனுமதி கேட்டும் மறுக்கப்பட்டது. லாஸ்காஸஸ் அதிகத்துயருடன் புறப்பட்டான்.

இதையறிந்த நெபோலியன் [illegible] வெளியே போவதையும் விடுத்துத் தனது அறையிலேயே [illegible]னிருந்தான்.

ஒரு நாள் ஜெர்மனி தேசத்துத் தாவர சாஸ்திரி ஒருவர் செண்ட் ஹெலினாவுக்கு வந்தனர். நெபோலியனது மனைவியையும் மைந்தனையும் சந்தித்துப் பேசியவராதலால் அவரைக் கண்டு பேச அனுமதி அளிக்குமாறு நெபோலியன் கவர்னரைக் கேட்டான். ஆனால், உத்தரவு மறுக்கப்பட்டது. அதைக்குறித்து நெபோலியன் மனங்கசிந்து டாக்டர் ஓமிராவிடம் சொன்னதாவது :—

"ஐயா, மனைவியையும் மைந்தனையும் பிரிந்து ஆயுள் பரியந்தம் நான் சிறைவாசஞ் செய்ய நேரிட்டது. அப்படியிருந்தும் அவர்களைக் கண்டு பேசிய ஒருவரிடம் சிறிது நேரம் சம்பாஷிக்கவும் எனக்கு அனுமதியளிக்கப்படவில்லை. கொலைத் தொழில் புரிந்து மரண தண்டனை விதிக்கப்பெற்றவர்களும் கழுவேற்றப்படுமுன் தமது மனைவி மக்களுடன் சிறிது நேரம் கொஞ்சிக்குலாவுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அநாகரீகமும், குரூரமும் வாய்ந்த நரபட்சணிகளும் தங்களுக்கு இரையாகக் கிடைத்த மனிதர்களுக்கு அத்தகைய அனுமதியளிக்கின்றனர். ஆனால், தாராள நோக்கத்தையுடைய ஆங்கிலேயரது பிரதிநிதியாகிய லோ என்பவனது செய்கையோ அறநெறிக்கு முற்றிலும் மாறுபட்டுளது."

நாளடைவில், லாங்வுட் விடுதி மனித சஞ்சாரத்திற்குத் தகுதியற்றதாயிற்று. எலிகள் அதிகமாயின. அவைகள் அங்குமிங்கும் ஓடி யுலாவின. எலிகளின் உபத்திரவத்தால் நெபோலியனுக்கு இரவில் தூக்கமே இல்லாமற் போயிற்று. இதுவுந் தவிர, மழைத்துளிகள் கூரையின் சந்துகளின் வழியாக அறையில் இறங்கியமையால் படுக்கையை அடிக்கடி இடம் மாற்றவேண்டியிருந்தது. நெபோலியனது உடல் நலமும் குறைந்து வந்தது. விலாவலி அவனைத் துன்புறுத்தியது. அவனது கால்களில் வீக்கம் கண்டது. தூக்கமின்மையும் மனோவேதனையும் அந்நோய்களை அதிகப்படுத்தின. இவ்வாறு, செண்ட் ஹெலினாவில் வருடங்கள் இரண்டு கழிந்தன.

நிற்க, நெபோலியனிடம் அதிக அன்புகொண்டிருந்த டாக்டர் ஓமிராவும் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறை செய்யப்பட்டார். இருபத்தேழு நாட்களுக்குப் பின்னர் ஜனங்களின் ஆரவாரத்தால் டாக்டர் விடுதலை செய்யப்பட்டார். சின்னாட்களுக்குப் பின்னர், அத்தீவிலிருந்து உடனே வெளியேறுமாறு டாக்டருக்கு உத்தரவு கிடைத்தது. டாக்டர் ஓமிரா உடனே நெபோலியனிடஞ் சென்று நிகழ்ந்ததை யுரைத்து விடையருள வேண்டினர். அதைக் கேட்ட நெபோலியன், "ஐயா, என்னை விட்டுப் பிரியப் போகிறீரா! என்னைத் துன்புறுத்துவதுமன்றி என்னிடத்தன்புகாட்டிய உம்மையுமா லோ துன்புறுத்தவேண்டும்! உம்முடைய உதவி எனக்கு இன்றியமையாததாயிருந்தது. உமது உதவியை யிழந்து நான் சீக்கிரம் உயிர் துறக்கவேண்டியிருக்கிறது. எனது அகால மரணத்தால் உமது தாய் நாடாகிய இங்கிலாந்துக்கு என்றும் தீராத பழியுண்டாவது திண்ணம். வைத்தியரே, நீர் ஐரோப்பா சென்று என் குடும்பத்தவர்களைக் கண்டு எனது மாறாத அன்பைத் தெரிவிக்க வேண்டுகிறேன். எனது மைந்தனைக் கண்ணுறின் அவனை மார்புறத்தழுவி அன்பு காட்டுமின். எனது மனைவியைக் கண்டால் எனது அன்பையும் நிலைமையையும் அவளுக்குக் கூறுக. ஓமிரா! போய் வாருங்கள். நாம் மறுபடியும் சந்திக்கமாட்டோம். நீர் என்றும் இன்புற்று வாழ்வீராக" என்று அழுத கண்ணுடன் விடை கொடுத்தான்.

டாக்டர் ஓமிரா ஐரோப்பாவுக்குச் சென்ற பின்னர் நெபோலியனது தேக நிலைமை கவலைக்கிடமாயிற்று. சிற்சில சமயங்களில் அதிக நோயுற்றுத் துன்பமெய்தினன். படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் பலமற்று இருந்தான். ஆங்கிலேய அரசாங்கத்தார் கடைசியில் ஆண்டோமார்க்கி என்னும் பிரஞ்சு டாக்டரைச் செண்ட் ஹெலினாவுக்கு அனுப்பினர். நெபோலியனது வேண்டுகோளின்படி இரண்டு பாதிரிமார்களும் டாக்டருடன் அனுப்பப்பட்டனர். இம்மூவரும் செண்ட் ஹெலினாவில்

இறங்கியவுடன் லாங்வுட்டுக்குச் சென்று நெபோலியனைக் கண்டு பேசினார்கள். மதவிஷயத்தில் தனக்குள்ள முழு நம்பிக்கையையும் பாதிரிமார்களுக்குத் தெரிவித்து, "ஐயன்மீர்! இனிமேலாவது நம் மதத்தில் குறித்துள்ளவாறு புண்ணிய தினங்களைக் கொண்டாட விழைகின்றேன்; எல்லா மதச் சடங்குகளையும் அநுட்டிக்க விரும்புகின்றேன். தங்களது சௌகரியத்துக்கேற்றதொரு நேரத்தில் தினந்தோறும் வேதபுத்தகத்தைப் படித்து முறைப்படி கடவுளைத் தொழுதுவருவோம்" என்று நெபோலியன் வணக்கத்துடன் உரைத்தான். டாக்டர் ஆண்டோமார்க்கியுடன் நெபோலியன் அதிக அன்புடன் வார்த்தையாடினன். டாக்டரும் நெபோலியனது உடல் நிலையைக் கண்டு பெரிதும் துயருற்றனர்.

ஒரு நாள், தூக்கமின்மையாலும் உடல் நலிவாலும் நெபோலியன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது புத்தகங்கள் நிறைந்த பல பெட்டிகள் வந்திறங்கின. அவற்றை நெபோலியன் ஆர்வத்துடன் உடைத்துப் பார்க்கும்போது தன் அருமைப் புதல்வனின் உருவப் படமொன்றைக் கண்ணுற்றான். அப்படத்தினைக் கையிலெடுத்து முத்தமிட்டு, மார்புறவணைத்து, உற்று நோக்கி, உவகை பூத்து, ஆனந்தமிகுதியால் கண்ணீர் சொரிந்தான். நெபோலியனது உள்ளத்தில் அப்பொழுது உதித்த உணர்ச்சியையும் எண்ணங்களையும் யாரே அறியக் கூடும்! "என் அருமைப் புதல்வன் எனது பெயரை நிலைநாட்டுவான்" என்று உவந்து கூறினன். பிறகு, அப்படத்தை மேரியா லூயிஸாவின் படத்திற்கு அருகில் வைத்தான். அவற்றின் இருபக்கங்களிலும் ஜோஸப்பைனது உருவப்படங்களிருந்தன. இப்படங்களை நெபோலியன் அதிகப் பிரியத்துடன் காப்பாற்றி வந்தான்.

டாக்டர் ஆண்டோமார்க்கி வந்தபின்னர் நெபோலியன் சிறிது சுகமெய்தினன். எனினும் அவனது தேகம் நாளுக்குநாள் மெலிவுற்றது. அதைக் கண்ட டாக்டர், "மண்வெட்டியைக் கையிலெடுத்துத் தோட்ட வேலை சிறிது செய்துவரின் தேகத்திற்கு நன்மையுண்டாகும்" என்று நெபோலியற்குச் சொன்னார்.

போலியனும் அதற்கு இணங்கினன். மறுநாட் காலையில், போலியன் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு தோட்ட வேலையை ஆரம்பிக்கத் தயாராயிருக்கையில் டாக்டரும் அங்கே வந்து சேர்ந்தார். நெபோலியன் டாக்டரைப் பார்த்து, "வைத்தியரே! உமது மாத்திரையைவிட இதுவே எனக்கு நன்றாயுளது. இனி வேறெந்த மருந்தும் எனக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைத் தொடங்கினன். பலமின்மையால் சிறிது நேரத்திற்குள் களைப்புற்று வேலையை நிறுத்தினன். இவ்வாறு சில நாட்கள் செய்து வந்தபின் நெபோலியனுக்குத் தோட்டவேலையில் அதிகப் பிரியமுண்டாயிற்று. மண்ணைப் பறித்துத் தானே அப்புறப்படுத்துவான். வீட்டைச்சுற்றி நிழல் தரக்கூடிய மரங்களை நட்டான். பட்டாணியும் அவரையும் விதைக்கப்பட்டன. ஒரு நாள் தான் விதைத்த அவரையொன்று வேரூன்றியிருந்ததைக் கண்ட நெபோலியன், முழுமுதற் கடவுளின் வியாபகத் தன்மையைக் குறித்து நீண்டதோர் பிரசங்கம் செய்தான். பிரசங்கம் முடிந்ததும் நெபோலியன் டாக்டரைப் பார்த்து, "வைத்தியரே! இவற்றையெல்லாம் நீர் நம்பவில்லை என்பதை உமது முகக்குறிப்பால் உணர்ந்தேன். இவற்றில் நம்பிக்கை கொண்டுள்ள எம்போன்றாரை அறிவீனர்களென்று நீங்கள் நினைக்கக்கூடும். மனிதனது உடலை நன்கு பரிசீலனை செய்துள்ள தாங்கள் ஆன்மா எந்த அவயவத்தில் இருக்கின்றதென்பதைச் சொல்லக்கூடுமா? கணிதநூல் வல்லுநர்கள் கடவுளிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அநேகமாக டாக்டர்களுக்கும் விஞ்ஞான நிபுணர்களுக்கும் கடவுளிடத்து நம்பிக்கை யிருப்பதில்லை" என்றியம்பினன்.

சில நாட்களுக்குள் நீர்த்தொட்டியொன்று தோட்டத்தில் கட்டப்பட்டது. அதில் நீரை நிரப்பி மீன்களை வளர்த்துவந்தான். நெபோலியன் அத்தொட்டியினருகே நாடோறும் சென்று மீன்களைப் பார்த்து மகிழ்ச்சியுற்று வந்தான். இவ்வாறு வருடங்கள் நான்கு கழிந்தன.

என்னும் இடத்திற்குச் சென்று, மலையினுச்சியில் ஏறித் தன
தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டுச் சுற்றிப்பார்த்தபின்
ம்பி வந்தான். இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற லோ கலக்க முற்றான். அவனது கவலையைப் பெருக்கக் கருதிய நெபோலியன் ஒரு தந்திரம் செய்தான். தனது ஆடையையும் தொப்பியையும் தரித்துக் கொண்டு தூரதிருஷ்டிக் கண்ணாடியுடன் குதிரைமேலேறித் துரிதமாய்ச் செல்லுமாறு தன்னிடமிருந்த பாதிரியைத் தூண்டினான். அவரும் அவ்வாறே செய்தனர். வேடமாறிய அப்பாதிரியாரை நெபோலியனென்றெண்ணிய காவலாளர் உடனே லோவுக்கு அறிவித்தனர். உடனே, லோ வேகமாய்ச் சென்று பார்வையிடலும் பாதிரியாரென்றறிந்து ஏமாற்றமுற்று வெட்கினின்றான். இதைக் கேட்ட நெபோலியன் விலாநோவச் சிரித்து, "அந்தோ! பாவம். அவனை அதிகமாய் ஏமாற்றிவிட்டேன்" என்று சொன்னான்.

சிலநாட்களுக்குப் பின்னர் நெபோலியனுக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. அதனால் அவன் அனுபவித்த வேதனைக்கு அளவேயில்லை. அவன் படுக்கையைவிட்டு எழுவதற்கும் பலமற்று இருந்தான். அப்பொழுது நெபோலியன் டாக்டர் ஆண்டோமார்க்கியைப் பார்த்து, "வைத்தியரே! எழுந்திருக்கவும் சக்தியற்ற நிலையில் நான் இருக்கிறேன். இப்படுக்கையே எனக்கு இன்றியமையாத துணையாகவுளது. உலகத்திலுள்ள சிம்மாதனங்களைப் பெறுவதாயிருப்பினும் இப்படுக்கையைவிட்டுப் பிரிய முடியாத நிலைமையிலிருக்கிறேன். எனக்கு நேர்ந்த மாறுதல்கள் என்னே! இடைவிடா ஊக்கத்துடனும் எல்லையிலா மனோவன்மையுடனுமிருந்த நான் இப்பொழுது கண்களைத் திறப்பதற்கும் பிரயாசப்படவேண்டியுளது. பல போர்களைப் புரிந்தேன். அநேக வெற்றிகளைப் பெற்றேன். பல பொன்முடிகளைத் தரித்தேன். பிரான்சு மக்களின் நன்மையைக் கருதி ஊணுறக்கமின்றி உழைத்தேன். அப்பொழுது ஆற்றல்கொண்ட நெபோலியனாயிருந்தேன். இப்பொழுதோ, செயலற்றுப் பிணம்போல் இருக்கின்றேன். என் பலமும் ஆற்றலும் பழைய கதைகளாயின" என்று மனங்கசிந்து உரைத்தான்.

தங்கை எலிஜாவின் மரணத்தை அறிந்ததும் அயர்வுற்றுப் படுக்கையிற் சாய்ந்தான். நெடுநேரம் ஒன்றும் பேசாமல் நிலத்தை நோக்குவதும் டாக்டரை நோக்குவதுமாக இருந்தான். பிறகு, டாக்டரைப் பார்த்து, "ஐயா! என் தங்கை வானுலகு சென்று என்னையும் எதிர்பார்க்கின்றாள். நானும் சீக்கிரத்தில் இறந்துவிடுவேன். என்னைக் காப்பாற்றப் பெரிதும் முயல்கின்றீர். எனினும் விதியினை யாவரே வெல்லும் நீர்மையர். எங்கள் குடும்பத்தில் எலிஜாவைத் தொடர்ந்து செல்பவன் நானே. இந்தச் சமயத்திலும் ஐரோப்பா என்னைக்கண்டு அஞ்சுகின்றது. ஆனால், நானோ நடைப்பிணமாக இருக்கின்றேன்" என்று புலம்பினான்.

ஆறுவது வருடத்தில் நெபோலியனுக்கு நோய் அதிகமாயிற்று. நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கிப் பல மருந்துகள் உண்டும் பயனில்லை. 1821-ம் வருடம் ஏப்ரல் மாதம் 15-ம் தேதியன்று நெபோலியன் தனது மரண சாஸனத்தை எழுதி முடித்தான். அஃது பின்வருமாறு :—

(1) நான் இறந்தபின்னர் எனது பிரேதம் சீன் நதிக் கரையில் பிரான்சு மக்களுக்குக் கிடையில் புதைக்கப்படவேண்டும்.

(2) என் மனைவி மேரியாலூயிஸாவை அன்புடன் நேசிக்கின்றேன். என் அருமைப் புதல்வனைப் பகைவர்களது வலையினின்றும் காப்பாற்றுமாறு அவளை வேண்டுகின்றேன்.

(3) தான் அரசிளங்குமரன் என்பதை என் புதல்வன் என்றும் மறக்கக்கூடாது. ஐரோப்பாவின் கொடுங்கோல் மன்னர்களின் கையில் அகப்படாதிருக்கக் கடவன். பிரான்சு மாந்தர்களுக்குத் தீங்கிழைக்கக்கூடிய எவ்விதச் செயலையும் அவன் செய்யலாகாது.

(4) இறந்துபட்ட என் அருமை நண்பர்களின் மனைவி மக்கட்கும், உயிருடனிருக்கும் ஏனைய நண்பர்களுக்கும் திரண்ட பொருள் தந்து உதவி செய்யுமாறு வேண்டுகின்றேன்.

குப் பின்னர்த் தனது அருமைப் புதல்வனுக்குச் சொல்லவேண்டிய சில அறிவுரைகளைக் குறிக்கலாயினான். அவை பின்வருமாறு:—

நான் இறந்தபின்பு பிரான்சு தேசத்தில் உள்நாட்டுக் குழப்பமொன்று ஏற்படும். அக்குழப்பத்தின் முடிவாக எனது புதல்வன் ஒருகால் அரசனாகக்கூடும்.

தற்காப்புக்கன்றி அவன் போரில் பிரவேசிக்கக்கூடாது. அனாவசியமாகவும் தக்க காரணமில்லாமலும் போர் செய்பவன் குரங்குக்குச் சமானன் என்பதை அவன் அறியக்கடவன். நான் அரைகுறையாய்ச் செய்தவற்றை அவன் பூரணமாக்கவேண்டும். ஐரோப்பியர்கள் உள்ளத்திலும் பிரான்சுமக்களின் இருதயத்திலும் புதிய உணர்ச்சிகளை உண்டாக்கியுள்ளேன். அவ்வுணர்ச்சியைப் பெருக்கி மக்களுக்கு நன்மையைச் செய்துவரின் அவன் ஒரு பெரிய அரசனாக விளங்குவான்.

என் குடும்பத்தார்களை என் மகன் காப்பாற்றக் கடவன். வயது முதிர்ந்த என் அருமைத் தாயார்க்குக் குற்றேவல் செய்து அவளை மகிழ்விப்பானாக. யூஜன், ஜோஸப் முதலியோர்களுடன் அன்பு காட்டுவானாக. ஹார்டன்ஸும் கரோலினும் நல்ல குணசாலிகள் ஆனமையால் அவர்களுடைய புத்திரிகளில் ஒருத்தியை மணம் செய்து கொள்வானாக.

சுயநலத்தைத் துறந்து, தேசத்தின் முன்னேற்றத்தையும் பொது ஜனங்களின் நன்மையையுமே என்றும் கருதக்கடவன். தாய்நாட்டுத் துரோகம் தவிர்த்த ஏனைய குற்றமிழைத்தாரை மன்னித்துக் குடிமக்களின் இடர்தவிர்த்து, அறிவுடையாரை ஆதரித்து, அறநெறி வழுவாது அரசாளக்கடவன்.

சட்டசபையில் பிரசங்க நிபுணர்களைக் கண்டு அவன் பயப்படக்கூடாது. அவர்கள் அறிவின்றிப் பிதற்றினும், தக்க சமாதானம் கூறி அவர்களைத் திருப்தி செய்வது அரசனது கடமையாகும். பிரான்சுதேசத்தில் அநேக மேதாவிகள் இருக்கின்றனர். ஆனால், அவர்களுடைய ஆற்றல்களெல்லாம் ஆதரவின்றி அழிந்து கிடக்கின்றன. மந்திரி பதவிக்கு யோக்கியதையுள்ளவன் ஏர் உழுகின்றான். ஏருழவேண்டியவன் மந்திரியாயிருக்கின்றான். ஆதலால், அறிவாளிகளை அரசன் என்றும் ஆதரிக்கவேண்டும். கேவலம் பிறப்பின் காரணமாக உயர்பதவி அளிக்கப்படும் வழக்கத்தை அடியோடு ஒழித்தல் வேண்டும். சிற்சில சமயங்களில் மேதாவிகள் எனக் கருதப்படுபவர்களும் அறிவற்ற தீர்மானங்களைக் கொண்டுவருவார்கள். அதைக்கண்டு கோபங் கொள்ளாமல் அவர்கள் சொல்வதையெல்லாம் செவிமடுத்துக் கேட்டுப் பின்னர் நியாயம் எதுவோ அதனையே அரசன் செய்யவேண்டும். அரசன் குடிகளிடத்துப் பட்சபாதமின்றி நடந்து கொள்ளவேண்டும்.

மதப்பற்றையும் கடவுள் நம்பிக்கையையும் தேசத்தில் பரப்பவேண்டும். ஏகாதிபத்தியத்தை ஒழிக்க நான் கங்கணம் கட்டியிருந்தேன். அதன் காரணமாகவே இத்தீவில் இப்போது இறக்கின்றேன். எனது புத்திரனும் எனது கொள்கையினைப் பின்பற்றக் கடவன். ஐரோப்பாவின் முடிமன்னர்கள் பொது ஜனங்களைக் கேவலம் மிருகங்களெனக் கருதி அவர்களை அடிமைகளாக்கி அகமகிழ்கின்றனர். இனிமேல், இஃது முடியாத காரியமென அவர்கள் அறிவார்களாக!

எனக்கு உதவி புரிந்துவந்த நண்பர்களை என் மகன் ஆதரிக்கவேண்டும். இப்பொழுது, உண்ண உணவற்றிருக்கும் எனது போர்வீரர்களையுங் காப்பாற்றக் கடவன். ஒவ்வொரு வருடத்திலும் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தல் வேண்டும். அவ்வெண்ணிக்கை அதிகப்படின் தேசம் நன்கு ஆளப்படவில்லை என்பது வெள்ளிடை. அவ்வெண்ணிக்கை குறைவுறின் அதுவே பொது ஜனங்களின் சுகவாழ்விற்கும், அரசாங்கத்தின் பெருமைக்கும் போதிய சான்றாகும்.

றிலுள்ள விஷயங்களை ஆழ்ந்து சிந்திப்பானாக. பண்டைக்காலத்துப் போர்வீரர்களின் சரிதையைப் படித்துப் போர்வல்லுனன் ஆகக் கடவன். அகத்தூய்மையும் புறத்தூய்மையும் பூண்டு, அறத்தின் வழிநின்று, "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்று உலகம் சொல்லுமாறு அரசு புரிவானாக.

சிலநாட்கள் சென்றபின், நெபோலியன் சிறிது சுகமெய்தினான். அவனது நண்பர்கள் அதைக் கண்டு தைரியமெய்திச் சந்தோஷமாயிருந்தனர். அப்பொழுது நெபோலியன் அவர்களைப் பார்த்து, "நண்பர்களே! இன்று சிறிது சுகமாயிருப்பினும் கூடிய சீக்கிரத்தில் நான் இறப்பேன் என்பது திண்ணம். நான் இறந்தபின்பு நீங்களெல்லாம் ஐரோப்பா சென்று உமது நண்பர்களையும் உறவின் முறையார்களையும் சந்திப்பீர்கள். நானும் விண்ணுலகு சென்று டேக், நே, கிளீபர் முதலிய நண்பர்களைச் சந்தித்து எனது அந்திமகாலத்தின் வரலாற்றை அவர்களுக்குச் சொல்லுவேன். தவிரவும், சீஸர், அலெக்ஸாந்தர், ஹானிபால் முதலிய பண்டைவீரர்களும் நாங்களும் ஒன்றுகூடிப் போர் முறைகளைப் பற்றிப் பேசி மகிழ்வுறுவோம். எங்கள் கூட்டத்தைக் கண்டு விண்ணுலகோர் திகில் கொள்ளாராகில் நாங்கள் அனுதினமும் கூடி ஆனந்தமடைவோம்" என்று புன்முறுவலுடன் புகன்றான்.

ஏப்ரல் மாதம் 28-ம் தேதி நெபோலியனது தேக நிலைமை மீண்டும் கவலைக்கிடமாயிற்று. அப்பொழுது நெபோலியன் தன் அன்பர்களை அருகே அழைத்து, "என் மரணத்திற்குப்பின் எனது உடலை அறுத்து, என் இருதயத்தை எடுத்து, என் மனைவி மேரியா லூயிஸாவுக்கு அனுப்புவதுமன்றி அவளை மரணபரியந்தம் நான் உள்ளன்புடன் நேசித்ததாகவும் தெரியப்படுத்துமின். எனது வயிற்றை நன்கு பரிசோதித்து அதைப்பற்றிக் குறிப்புகள் எழுதிவைத்து, அக்குறிப்புகளை என் புதல்வனிடம் சேர்ப்பீராக. நான் இடைவிடாது வாந்தி செய்வதைக் கொண்டு எனது தேகத்

யூகிக்கின்றேன். எனது தந்தையும் இப்பிணியினாலேயே இறந்தனர். என் மைந்தனுக்கும் இந்நோய் உண்டாகக்கூடுமாதலால் அதன் விபரங்களைப்பற்றியும், அதனை விலக்குதற்கேற்ற உபாயங்களைப் பற்றியும் அவனுக்கு உரைப்பீராக. நான் இறந்தபின் நீங்கள் ரோமாபுரி செல்வீரேல், எனது அருமைத் தாயினைக் கண்டு எனது முடிவினைக் கூறுக" என்றியம்பினான்.

மறுநாள் நெபோலியனுக்கு வேதனை அதிகமாயிற்று. வயிற்றுவலியின் மிகுதியால் நிறையத் தண்ணீரைக் குடித்தான். குடித்தவுடன் வலி சிறிது தணியவும், "கடவுள் அருளால் நான் பிழைத்துக்கொண்டால் எனக்குச் சுகமளித்த இந்நீரூற்றுக்கருகே ஞாபகார்த்தமாக ஓர் கட்டடம் எழுப்புவேன். இறந்துபடின், எனது பிரேதம் பிரான்சுதேசத்தில் புதைக்கப்பட உத்தரவு மறுக்கப்பட்டால் எனது பிறப்பிடமாகிய அஜேஷியாவில் புதைக்கப்படுவதாகுக. அதுவும் மறுக்கப்பட்டால், இந்த நீரூற்றுக்கருகே புதைக்கப்படவேண்டுமென்பதே எனது கோரிக்கை" என்று நெபோலியன் சொன்னான்.

மே மாதம் 2-ம் தேதி, நெபோலியன் இரவு முழுதும் பிதற்றிக்கொண்டிருந்தான். பிரான்சு, புதல்வன், சேனை ஆகிய இம்மூன்றே அவனது நினைவில் முனைந்து நின்றன. லாங்வுட்டில் இருந்த நண்பர்களனைவரும் நெபோலியனருகிருந்து கவனித்து வந்தனர். அவர்களது அன்பின் திறத்தையும் துக்கமிகுதியையும் கண்ட நெபோலியன் அவர்களிடத்தில் அதிக அன்புடன் வார்த்தையாடிய பிறகு, அவர்களனைவருக்கும் திரண்ட பொருள் தந்து கைம்மாறு புரியுமாறு தனது மரண சாஸனத்தில் எழுதிவைத்தான்.

மே மாதம் 4-ம் தேதி இரவு வானம் இருண்டது; மேகங்கள் கறுத்தன; மழை மிகுதியாய்ப் பெய்தது; புயல் காற்றுப் பலமாக வீசியது. நெபோலியனால் அன்புடன் வளர்க்கப்பட்டு நீண்டு ஓங்கிய மரங்களனைத்தும் அடி சாய்ந்து விழுந்தன ஆனால்

தான். நெபோலியனது மரணகாலம் நெருங்கியது. லாங்வுட்டில் வசித்து வந்த குழந்தைகளெல்லாம் நெபோலியனைக் கடைசியாகப் பார்க்குமாறு அவனது அறைக்குள் நுழைந்தனர். நெபோலியன் பெருமூச்செறிவதையும் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பதையும் கண்ட அக்குழந்தைகள் அழுத கண்ணோடு நெபோலியனருகிற் சென்று, அவனது கரங்களைப் பற்றி முத்தமிட்டனர். இக்காட்சியைக் கண்ணுற்ற அனைவரும் மனமுடைந்து கதறினர்.

1821-ம் ஆண்டு மே மாதம் 5-ம் தேதி பகல் முழுதும் நெபோலியன் மௌனமாயிருந்தான். அன்று நோயின் வேதனையும் அதிகமாய் இல்லை. அவனது முகம் அன்று மலர்ந்து இருந்தது. அகத்தின் அமைதியையும் பொறுமையையும் அது பளிங்குபோல் காட்டியது. பின்மாலை அந்திப்பொழுதும் மெல்ல நடந்தது. "பிரான்சு—ஜோஸப்பைன்" என்ற வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே நெபோலியன் உயிர் நீத்தான்.

நெபோலியன் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகு சேர்ந்தமை எங்கும் பரவியது. அவ்வூரிலுள்ளோர் அனைவரும் திரள்திரளாக நெபோலியனது பிரேதத்தைக் காணச் சென்றனர். லோவும் லாங்வுட் சென்று நெபோலியனது பிரேதத்தைக் கண்டவுடன் மனந்தளர்ந்து, "இங்கிலாந்துக்கும் எனக்கும் பெரியதோர் சத்துருவாயிருந்தான். எனினும், அவனை மன்னிக்கின்றேன்" என்றான்.

பிரேதத்தைப் பிரான்சுக்கு எடுத்துச்செல்ல அனுமதியருளுமாறு, நெபோலியனது நண்பர்கள் கவர்னரை வேண்டினர். ஆனால் உத்தரவு மறுக்கப்பட்டது. நெபோலியனது இருதயத்தையும் குடலையுமாவது கொண்டுபோக உத்தரவு கொடுக்குமாறு எல்லோரும் வேண்டினர். லோ அதற்கும் இணங்கவில்லை. எனவே, நெபோலியனது பிரேதத்தை ஹெலினாவிலேயே அடக்கம் செய்யத் தீர்மானித்தனர். நெபோலியன் முன்னரே அறிவித்திருந்தபடி எல்லாச் சடங்குகளும் செய்யப்பட்டன. நெபோலியன் ஆடைகள் பாதங்களின் மீது விரிக்கப்பட்டன. மார்பின் மீது வெள்ளிச்சிலுவை ஒன்று வைக்கப்பட்டது. பாதிரியார் அருகிருந்து தோத்திரம் செய்தனர்.

நான்கு குதிரைகளால் இழுக்கப்பட்ட ஓர் வண்டியில் பிரேதம் கல்லறைக்குக் கொண்டுபோகப்பட்டது. ஆங்கில இராணுவப் படையும் வழி நெடுக நின்று பிரேதத்துக்கு மரியாதை செலுத்தியது. வாத்தியங்கள் ஆங்காங்கு இயங்கின. கடைசியாக, பிரேதப்பெட்டியை வண்டியினின்றிறக்கிக் கல்லறையின் ஓரமாக வைத்தனர். பாதிரியாரால் கடவுள் வணக்கம் சொல்லப்பட்ட பிறகு, பிரேதப் பெட்டி கல்லறையில் வைக்கப்பட்டது. பீரங்கிகள் முழங்கின. அக்கல்லறையை மூடுதற்கு, "நெபோலியன் அஜேஷியாவில் 15—8—1769-ல் பிறந்து செண்ட் ஹெலினாவில் 5—5—1821-ல் இறந்தான்" என்று தீட்டப்பெற்ற ஓர் சமாதிக்கல் தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒன்றும் செய்யக்கூடாதென்றும், வேண்டுமானால் "சேனாபதி நெபோலியன்" என்று குறித்துள்ள ஓர் கல்லைக்கொண்டு கல்லறையை மூடிக்கொள்ளலாமென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உத்தரவிட்டிருப்பதாக லோ தெரிவித்தான். ஆதலால், ஒன்றும் தீட்டப்பெறாத வெறுங்கல்லினால் கல்லறை மூடப்பட்டது.

## முடிவு.

மூன்று வாரங்களுக்குப் பின்னர் நெபோலியனது நண்பர்களனைவரும் கல்லறைக்குச் சென்று தங்கள் மரியாதையைச் செலுத்திவிட்டு, மறு தினமே, தமது அருந்தனத்தைச் செண்ட் ஹெலினாவில் பறிகொடுத்த துக்கத்துடன் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார்கள். அவர்களில் சார்ஜண்டு ஹியூபர்ட்டு என்பவர் மட்டும் நெபோலியனது கல்லறையை விட்டுப் பிரிய மனமில்லாதவராய்ப் பத்தொன்பது வருடங்கள் அதனருகிலிருந்து அதைப் புஷ்பங்களால் அலங்கரித்துத் தன் அன்பைக் காட்டி வந்தார். நெபோலியனது பிரேதம் செண்ட் ஹெலினாவிலிருந்து பிரான்சுக்குக் கொண்டு போகப்பட்டபோது அவரும் அதனுடன் சென்றார்.

பெரிய மனிதர்களின் சரித்திரம் அநேகமாய் அவர்களது மரணத்துடன் முடிவுறும். ஆனால் நெபோலியனது சரித்திரமோ அவ்வாறில்லை. அவன் இறந்த ஒன்பது வருடங்களுக்குப் பிறகு பிரான்சுமாந்தர்களின் உள்ளத்தில் ஓர் மாறுதல் உண்டாயிற்று. ஆகவே, அவர்கள் ஒன்று கூடிப் போரபன் குடும்பத்தாரை 1830-ம் ஆண்டு ஜுலை மாதம் அரசினின்றும் நீக்கினர். இச்சம்பவம் நிகழ்ந்த இரண்டு மாதங்களுக்குள் பிரான்சு மாந்தர்கள், நெபோலியனது பிரேதத்தைப் பிரான்சுக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஆரவாரித்தனர். போரபன் வம்சத்தார் ஒழிந்ததும் பிரான்சு தேசத்தில் பிரஜைகளின் ஆதிக்கம் அதிகமாயிற்று. 1831-ம் ஆண்டு நெபோலியன் இயற்றிய சட்டதிட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. ஆர்லியன்ஸ் குடும்பத்தார்க்கு அரசுரிமை வழங்கப்பட்டது. 1832-ம் ஆண்டில் நெபோலியனது மைந்தனும் இருபத்தொன்றாம் வயதில் உயிர் துறந்தான். அவன் மரணத்தால் நெபோலியனுக்குப் பின் சந்ததி அற்றுப் போயிற்று.



னது உருவப்படங்கள் நீதிமன்றங்களிலும் ஆலோசனை சபைகளிலும் வைக்கப்பட்டன. நெபோலியனது பிரேதத்தைப் பிரான்சுக்குக் கொண்டுவர வேண்டுமென்று பிரஜைகள் ஆரவாரம் செய்தனர். எனவே, 1840-ம் ஆண்டு பிரான்சு அரசாங்கத்தார், நெபோலியனது பிரேதத்தைக் கொண்டுவர அனுமதிக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஒரு நிருபம் விடுத்தனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உடனே இணங்கியதுமன்றி, "சக்கரவர்த்தி நெபோலியன்" என்ற பட்டப் பெயரையும் அங்கீகரித்தனர்.

அனுமதி பெற்றதும், பிரான்சு இளவரசனான ஜாயின்வில் என்பவன் இரண்டு கப்பல்களுடன் புறப்பட்டுச் சென்று, 1840-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் தேதியன்று செண்ட் ஹெலினா சேர்ந்தான். அன்றிரவு, இளவரசனும் செண்ட் ஹெலினாவின் அரசப் பிரதிநிதியும் நெபோலியனது கல்லறைக்குச் சென்று பிரேதப் பெட்டியைத் தோண்டி எடுத்துத் தெய்வ வணக்கம் சொல்லியபின் அதனைத் திறந்து பார்த்தனர். வருடங்கள் பத்தொன்பதாகியும் நெபோலியனது பிரேதம் சிறிதும் கெடாமல் பதுமைபோலிருந்தது. இரண்டு நிமிடங்களுக்குள் மீண்டும் சவப் பெட்டி மூடப்பட்டுப் பாரிஸிலிருந்து கொண்டுவரப்பட்ட மற்றொரு பெட்டியில் வைக்கப்பட்டது. இப்பெட்டியைத் துறைமுகத்திற்குத் தூக்கிச்செல்லும்போது பிரளயமே வந்துற்றாலென இடியும், மின்னலும், மழையும், காற்றும் மிகுதியாய்த் தோன்றின. அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது செண்ட் ஹெலினா வாசிகளெல்லாம், கறுப்பாடை தரித்து வெறுந்தலையுடன் பிரேதப் பெட்டியைத் தொடர்ந்து சென்றனர்.

துறைமுகத்தை யடைந்ததும் செண்ட் ஹெலினாவின் அரசப் பிரதிநிதி இளவரசனிடம் பிரேதப் பெட்டியை ஒப்புவித்தான். உடனே, அது பிரான்சு தேசீயக்கொடியால் மூடப்பட்டுக் கப்பலுக்குக் கொண்டுபோகப்பட்டது. நெபோலியனுக்கு உரிய

முகத்தைவிட்டுப் புறப்பட்டன.

பிரான்சை யணுகியதும் பிரேதப் பெட்டி வேறொரு கப்பற்கு மாற்றப்பட்டது. அக்கப்பல் 1840-ம் ஆண்டு டிசம்பர் 9-ம் தேதி சீன் நதிவழியே சென்று கொண்டிருந்தது. ஜனங்கள் நதிக்கரையோரம் நின்று கண்ணீர்வடித்துக் கதறினார். பிரெஞ்சு மாந்தர்கள் துக்கம் கொண்டாடினர். துப்பாக்கி வெடிகள் எங்கனும் குமுறின. டிசம்பர் மாதம் 14-ம் தேதி கப்பல்கள் கூர்பிவாய் என்னும் கிராமத்தை யடைந்தன. அங்கே பிரேதப் பெட்டி கப்பலிலிருந்து கரைக்கு மாற்றப்பட்டது. நெபோலியனை எதிர்கொண்டு அழைப்பதேபோல் ஜோஸபைனது உருவச் சிலையொன்று அங்கு அமைக்கப்பட்டிருந்தது. பிரெஞ்சு அரசனை லூயி பிலிப் தன் பரிவாரங்களுடன் எதிர்கொண்டழைத்தான். அப்பொழுது இளவரசன் தன் தந்தையிடம் நெபோலியனது பிரேதப்பெட்டியை ஒப்புவித்தான். அரசனும் அதைப் பிரெஞ்சு மக்களின் சார்பாகப் பெற்றுக்கொண்டான். நெபோலியன் விரும்பிய வண்ணமே, அவனது பிரேதம் பிரெஞ்சுமாந்தர்க்கிடையே 1840-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதியன்று புதைக்கப்பட்டது. அதைச் சுற்றிலும் பெரியதொரு கட்டிடமும் எழுப்பப்பட்டது.

இந்நன்னாளை வருடந்தோறும் பிரான்சு தேசத்தில் ஜனங்கள் கொண்டாடுகிறார்கள். பிரான்சுக்குச் செல்பவர்கள் நெபோலியனது கல்லறைக்குச் சென்று அம்மகானுக்கு இன்றும் மரியாதை செலுத்துகின்றனர்.

முற்றிற்று.

77582